UNIVERSAL LIBRARY
OU_208161
UNIVERSAL LIBRARY

OUP—902—26-3-70—5,000

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. Tm 894.8113 T53R Accession No. Tm 969.

Author Thumilan.

Title Revathi.

This book should be returned on or before the date last mark

ரேவஸ்ரீ

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

இந்நூலின் முழு உரிமையும் இன்பநிலையத்தாருக்கு.

விலை ரூபாய் ஏழரை

பாரதம் அச்சகம், சென்னை-17.

1

"கந்தய்யா!" என்று கூப்பிட்டார் துரைசாமி.

பதிலில்லை.

"திரு கந்தய்யா!"

இதற்கும் பதிலில்லை.

"திருவாளர் கந்தய்யா அவர்களே!"

"இதோ வந்துகொண்டிருக்கிறேன்," என்று கூறிக்கொண்டே கந்தய்யா விரைந்து வந்தான். 'கொஞ்சம் கை வேலையாயிருந்தேன்,' என்று அவன் சமாதானம் கூறிய வண்ணம் அரிசி மாவுடன் இருந்த கைகளை முதுகுப் பக்கமாக வைத்துக் கொண்டான்.

"யஜமானுக்கு என்மேலே கோபமா?" என்று வருத்தந் தோன்றக் கேட்டான்.

"கோபமா! உன்மீதா! கந்தய்யா, நான் எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறேன், தெரியுமா? என் முகத்தைப் பார்!" என்று புன்னகை புரிந்தவண்ணமாகக் கூறினார்.

"உங்களைப் போலத் தங்கமான மனசு படைத்தவங்க சந்தோஷமாகத்தான் இருந்தாகணும்," என்றான் கந்தய்யா.

''எனக்கு வெகு நாளாக உன்னை மரியாதையாகக் கூப்பிட வேண்டுமென்ற ஆசை. அதற்காக அப்படிக் கூப்பிட்டுப் பார்த்தேன். ஆமாம், கந்தய்யா! நீ எத்தனை நாளாய் என்னிடம் இருக்கிறாய்?'' என்று துரைசாமி கேட்டார்.

''நான் இங்கே தவசுப் பிள்ளையாக வந்து பத்து வருஷமாயிற்று. ஏன், என் சமையல் ஏதாவது நன்றாய் இல்லையா?''

''ஆமாம்!''

''என்னது?'' என்று கந்தய்யா கவலையுடன் கேட்டான்.

''உன் சமையலைச் சாப்பிட்டு வயிறு கெட்டுப் போகிறது.''

''என்ன யஜமான்!''

''ஒரே அஜீரணம். ருசியா யிருக்கிறதனாலே அளவு தெரியாமல் நிறையச் சாப்பிட்டு விடுகிறேன்,'' என்று துரைசாமி சிரித்துக்கொண்டே கூறினார்.

கந்தய்யாவுக்கு உயிர் வந்தது.

''யார் யாருக்கோ என்னென்னமோ பட்டங்கள் கொடுக்கிறார்கள். பொன்னாடை போர்த்துகிறார்கள். நான் அடுத்த வாரம் உனக்கு ''அறுசுவை பாக சக்கரவர்த்தி'' என்ற பட்டமளித்துப் பொன்னாடை போர்த்துகிறேன். பொன்னாடை என்றால் அசல் பொன்னாடை.''

அவர் எதற்காக இந்தப் பீடிகை எல்லாம் போடுகிறாரென்று கந்தய்யாவால் ஊகிக்க முடியவில்லை.

''யஜமான் தமாஷ் பண்றீங்க!'' என்றான்.

''இல்லை. உண்மையாகவேதான் சொல்கிறேன், கந்தய்யா! நீ இதுவரையில் மிகவும் நன்றாகவே சமைத்து வந்திருக்கிறாய். ஆனால், இன்றைக்கு சமையல் இன்னும் உயர்ந்ததா யிருக்கவேண்டும். புதுசு, புதுசாய் இருக்க வேண்டும்.

''புரட்சிகரமாகவா?''

''ஆமாம். ஆனுல், புரட்சி நடிப்பு மாதிரி இருக்க வேண்டாம். நல்ல உயர்ந்த பாயசம் என்ன வைக்கிருய்?''

''பாதம் கீர் செய்கிறேனே?''

''அதுதான் அடிக்கடி சாப்பிடுகிருேமே?''

''நான் புதுவிதமாகச் செய்யப் போகிறேன். பாதாம் பருப்பைக் கொம்புத் தேனில் ஊறப்போட்டு வைத்திருக்கிறேன். அதை மேரு பன்னீர் விட்டறைத்து...''

''பேஷ்!''

''பசும்பாலும், பிஸ்தாப் பருப்புப் பாலும், சம அளவு விட்டுப் பாயசம் செய்கிறேன்.''

துரைசாமி இப்போதே அதை அனுபவிப்பவர்போல நாக்கைச் சப்பிட்டுக்கொண்டு, ''இந்தா கந்தய்யா, ஒரு சந்தேகம். இந்தப் புதுவித பாயசத்தைப் பற்றி ரேடியோவில் எந்தப் பெண்மணியும் சொல்லவில்லையே?'' என்று துரைசாமி கேட்டார்.

''இல்லை. ஒரு சமயம் ரேடியோவில் சொன்னபடி ஒரு பட்சணம் செய்து பார்த்தேன். அதில் ஏழாவது ருசி ஒன்று தெரிந்தது. அதிலிருந்து நான் அதன் கிட்டேயே போவதில்லை.''

''நல்லவேளை. நீ இலையில் பரிமாறுகிற வரை அம்மாவுக்கு ஒன்றுமே தெரியக்கூடாது,'' என்ருர் துரைசாமி.

''சரி!'' என்ருன் கந்தய்யா.

''—ஆனுல், நான் சொல்லிவிடுவேன்'' என்ற குரல் கேட்டுத் துரைசாமி திரும்பிப் பார்த்தார்.

அவர் பெண் ரேவதி சிரித்துக்கொண்டே வந்தாள்.

''நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு தானிருந்தேன். எதற்காக இந்தச் சூழ்ச்சி?'' என்ருள்.

"அம்மாவுக்கு இன்று பிறந்த நாள். மறந்தே போயிடுத்து, இப்போதுதான் திடீரென்று ஞாபகம் வந்தது," என்றார் துரைசாமி.

"ஆமாம், அப்பா! அப்படியானால் அம்மாவுக்குப் பிடிச்சதாக ஏதாவது பண்ணச் சொல்லணும்," என்று ரேவதி கூறிவிட்டு, "கந்தய்யா, இங்கே வா?" என்று கூப்பிட்டாள்.

அவன் கை விரல்களில் மாவு காய்ந்துபோய்க்கொண் டிருந்தது. அத்துடனேயே அவன் திரும்பி வந்தான்.

"உன்னிஷ்டப்படி எல்லாம் சமையல் பண்ணு. அத் துடன் வேப்பம்பூ துவையலும் அரைத்து வை. அம்மா வுக்கு அது ரொம்பப் பிடிக்கும்" என்று உத்தரவிட்டு அனுப்பினாள்.

பிறகு தன் தந்தையிடம் "அப்பா, என் அம்மா மாதிரி அவ்வளவு நல்லவள் வேறு யாராவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"அவள் தங்கக் கட்டி, அவளுக்கு ஈடு அவளேதான்," என்று துரைசாமி பெருமை பொங்கக் கூறினார்.

"என் சிநேகிதைகள் ஒவ்வொருத்தியும் தங்கள் அம்மாவைப் பற்றி ஏதாவது ஒரு குறை கூறாமலிருப்ப தில்லை. என் அம்மாவைப்பற்றி ஒரு குறை கற்பனை செய்து பார்த்தால்கூடத் தோன்றமாட்டேன் என் கிறது. அம்மா இல்லாமல் என்னால் ஒருநாள்கூட இருக்க முடியாது, அப்பா!"

"என்னால் அதைப்பற்றி நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை," என்றார் தந்தை.

"அப்பா, நீங்களும் அம்மா மாதிரியேதான்."

"போ கழுதை! நான் ஏதாவது நினைத்துக்கொள்ளப் போகிறேனே என்று உபசாரத்திற்காகப் புகழ்ந்து வைக் கிறாய்."

''அம்மாவை வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள். உங்களைப் பற்றி நல்ல சர்டிபிகேட் கொடுத்திருக்கிறேன்,'' என்று மகள் வேடிக்கையாகக் கூறினாள்.

பிறகு ரேவதி ஏதோ ஞாபகம் வந்தவள் போல ''அப்பா, நான் பூக் கடைக்குப் போய் நல்ல மாலையாக வாங்கிக்கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுக் கிளம்பிச் சென்றாள்.

தன் மகள் செல்வதையே பாசத்துடனும், பெருமையுடனும் துரைசாமி கவனித்துக்கொண்டிருந்தார்.

அவள், அவர் மனைவி மரகதத்தை அப்படியே உரித்துவைத்தது போலிருந்தாள். அவளைப் போன்றே மெலிந்த சிவப்பான உடல், குறு குறுப்பான ஆனால் சாந்தமும், பெருந்தன்மையும் நிறைந்த கண்கள். மந்த ஹாஸம் தவந்துகொண்டிருக்கும் உதடுகள், கன்னங் கரேரென்ற சுருட்டை மயிர், மரகதத்தை அவர் முதன் முதல் பெண் பார்க்கச் சென்றபோது அவள் இப்போது ரேவதி இருப்பதைப் போன்றே காட்சியளித்தது அவருக்கு ஞாபகம் வந்தது.

துரைசாமி மனச் சந்துஷ்டி அடைந்தவராய் தமது அறைக்குள் அங்குமிங்கும் உலவிக்கொண்டிருந்தார். அறை சுவர்களில் பெரிய பெரிய வர்ணப் போட்டோப் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அவை அவருடைய குடும்பத்தினரின் படங்கள்.

அவற்றைத் தவிர அங்குமிங்குமாகச் சிறிய படங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. ஆனால், அவற்றிற்கு மேலே இருந்த கண்ணாடிக்குப் பின் மனிதர் படங்கள் இல்லை; மிருகங்கள் படங்கள் இல்லை; மரஞ் செடி கொடிகளின் படங்களும் இல்லை; இயந்திரங்களின் படங்கள்கூட இல்லை.

அவற்றிற்குப் பதிலாகக் கொட்டை எழுத்துக்களில் அச்சிடப்பட்ட,

நன்றி மறவேல்.
செய்நன்றி கொல்லாதே.
நன்றி மறப்பது நன்றன்று.

என்பது போன்ற நீதி வாக்கியக் காகிதங்கள் வைக்கப் பட்டிருந்தது.

எல்லா நீதிவாக்கியங்களும் நன்றியறிதலையே குறிப் பிட்டன.

அறைக்குள் நடந்துகொண்டிருந்த துரைசாமியின் கண்களில் இந்தப் படங்கள் ஒரொரு சமயம் பட்டன. மரகதத்துடன் தாம் மணக் கோலத்திலிருந்த படத் தைப் பார்த்தவாறு அவர், அப்போதுதான் அவளுக்கு மாலையிடுவதுபோல் எண்ணிக்கொண்டு புளகாங்கித மடைந்தார்.

அவர் டெலிபோனிருந்த இடம் சென்று குழாயை எடுத்து ஒரு நம்பரைக் கூப்பிட்டார்.

"பன்னுலால், சுவர்ண மாளிகை" என்று அவர் கூப் பிட்ட இடத்திலிருந்து பதில் வந்தது.

"நான் துரைசாமி பேசுகிறேன்."

"வணக்கம்! நான்தான் பன்னுலால்!"

"வணக்கம். உயர்ந்ததாய் புதுரக நகை என்ன இருக்கிறது?" என்று துரைசாமி விசாரித்தார்.

"வைர முக்கோணப் பதக்கம். இதை முதுகுப் பக் கம் தொங்க விட்டுக்கொள்ளும்படி அமைத்திருக் கிறோம்."

"அப்புறம்!"

"தங்க மெட்டிகள் செய்திருக்கிறோம். பிரபல சினிமா நட்சத்திரம் பத்மஜாகுமாரி தன் திருமணத்திற் காக இதுமாதிரி செய்யச் சொல்லி வாங்கிக்கொண்டு போனுள்."

''தங்கம் காலில் போட்டுக்கொள்வது நல்லதல்ல என்று பெரியவர்கள் சொல்வார்கள். கடவுளர்களும், கடவுளுக்குச் சமமென்று கருதப்படும் அரசர்களது குடும்பப் பெண்களையுந் தவிர மற்றவர்கள் காலில் பொன்னுபரணங்களைத் தரிப்பது வழக்கமில்லை. சினிமா நட்சத்திரம் யாரும் உபயோகிக்காத மாதிரி ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்'' என்றார் துரைசாமி.

''வைரத்தைவிட உயர்ந்தது பிளாட்டினம் இருக்கிறதே. அதில் ஒரு டாலர் மாதிரி பரிட்சார்த்தமாகச் செய்து வைத்திருக்கிறோம்.''

''அந்த பிளாட்டினம் டாலரை உடனே அனுப்பி வையுங்கள்; ஆனால் என் மனைவிக்கு இது விஷயம் தெரிய வேண்டாம்'' என்று துரைசாமி மிகவும் மெதுவாக—ரகசியமாக டெலிபோனில் சொல்லிக்கொண்டிருந்தபோது அவருடைய கண்களை யாரோ கைகளால் பொத்தினார்கள்.

துரைசாமி அந்தக் கைகள் இரண்டையும் மெதுவாகத் தடவிவிட்டுக்கொண்டே ''கைகளை எடு!'' என்றார்.

''எந்தக் கைகளை?'' என்று கேட்டார் பன்னாலால், துரைசாமி கூறிக்கொண்டிருந்தது அவர் காதில் விழுந்துவிட்டது.

தன் கணவனுடைய கண்களைப் பொத்திய மரகதம், கைகளை எடுத்துவிட்டு சிரித்துக்கொண்டே துரைசாமியினிடமிருந்து டெலிபோனை வாங்கிக்கொண்டாள்.

''நான் மிஸ்ஸஸ் துரைசாமி பேசுகிறது. எங்க வீட்டுக்காரருக்கு புது மாதிரியில் ஒரு ஸெட் தங்கப் பொத்தான்களும், கைக்கு 'கப்' பொத்தான்களும் அனுப்பி வையுங்கள்,'' என்று கூறிவிட்டு குழாயை வைத்துப் பேச்சை முடித்தாள்.

''ஏன் மரகதம், அவர்கள் ஏதாவது தவறாக நினைத்துக்கொள்ளப் போகிறார்கள்,'' என்றார் துரைசாமி.

"நினைத்துக்கொள்ள மாட்டார்கள். நினைத்துக் கொண்டாலும் மரகதம்மாள் தன் சொந்தப் புருஷனோடே தமாஷ் செய்கிறாள் என்றுதானே புரளி செய்யப் போகிறார்கள். நன்றாகச் செய்யட்டும்," என்று மரகதம் வேடிக்கையாகக் கூறினாள்.

பிறகு அவள், துரைசாமியைக் கையைப் பிடித்து ஒரு ஸோபாவுக்கு இழுத்துவந்து அதில் உட்காரச் செய்து தானும் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

"அந்தப் பிளாட்டினம் டாலர் யாருக்கு? ரகசியமாக ஆர்டர் கொடுத்துக்கொண்டிருந்தீர்களே?" என்று விஷமச் சிரிப்புடன் கேட்டாள்.

"அது ஒரு பெண்ணுக்கு," என்றார் துரைசாமி.

மரகதம் "அந்தப் பெண்ணை எனக்கு ஒரு நாள் காண்பிக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"ஒரு நாளென்ன? இப்போதே அழைத்துக்கொண்டு போய்க் காண்பிக்கிறேன்" என்றார் துரைசாமி.

"தேவலையே! அவள் எங்கே இருக்கிறாளோ?"

"படுக்கை அறையில்தான் இருக்கிறாள். காண்பிக்கிறேன் வா!" என்று துரைசாமி கூறி அவளைப் படுக்கை அறைக்குக் கட்டியணைத்து அழைத்துச் சென்றார்.

அந்த அறையிலிருந்த பெரிய கண்ணாடிமுன் போய் நின்றுகொண்டு "அந்தப் பெண் இதோ இருக்கிறாள்" என்று கூறித் தம் மனைவியையே முன்னால் தள்ளி நிறுத்திவைத்துக் காண்பித்தார்.

"போங்கள்" என்றாள் மரகதம்.

"இன்றைக்கு உனக்குப் பிறந்த நாள். காலையில் தான் ஞாபகம் வந்தது.

"அதற்காக இப்படி அமர்க்களப்படுத்த வேண்டுமா?"

"எனக்கு அதைவிடப் பெரிய காரியம் வேறு என்ன இருக்கிறது?" என்றார் துரைசாமி.

"உங்களைப் போன்ற கணவனைப் பெறுவதற்கு நான் என்ன பாக்கியம் செய்திருக்கவேண்டும்?" என்றாள் மரகதம்.

"உன்னை மனைவியாகப் பெற நான் அதைவிடப் பெரிய பாக்கியம் செய்திருக்கவேண்டுமே!"

"கல்யாணமான தினத்தில் இருந்து என்னைச் சுக போகத்திலாழ்த்தி வைத்திருக்கிறீர்கள். எனக்குக் குறை என்பதே வைக்கவில்லை. ஏதாவது ஒன்றுவேண்டுமென்று மனத்தால் நினைப்பதற்குக் கூடப் பயமாயிருக்கிறது. என் முகத்திலிருந்து பார்த்தே ஊகித்துக்கொண்டு அந்த ஆசையை நிறைவேற்றி வைத்துவிடுகிறீர்கள்."

"நீ மட்டும்!நமக்குக் கல்யாணமாகி இருபது வருஷத்திற்கு மேலாயிற்றே! நீ விளையாட்டிற்குக்கூட முகஞ் சிணுங்கி நான் .பார்த்ததில்லை. ஆரம்பத்தில் நான் ஒரோரு சமயம் உன்னை அனுவசியமாகக் காரணமில்லாமல் கோபிப்பேன். அப்போதும் சிரித்துக்கொண்டே தான் பதில் சொல்லுவாய். எனக்கு அதுவேண்டும், இதுவேண்டும் என்று நீயாக இதுவரை ஒன்றும் கேட்டதில்லை. உன் இனிய பேச்சுக்கள் என்னை எப்போதுமே உற்சாகமுள்ளவனாக ஆக்கிவைத்திருக்கிறது. உனக்கு முப்பது வயது இருக்கும் இல்லையா?" ஆனால் நீ இன்னும் பதினாறு வயது மங்கைபோல்தான்..."

"போதுமே!" என்று மரகதம் கூறி தன் கணவன் வாயைப் பொத்தப்போனாள்.

"எனக்கு ஒரு பெண் ரத்தினத்தைப் பெற்றெடுத்துக் கொடுத்திருக்கிறாய். அது ஒன்றுக்கே நான் உனக்கு எத்தனையோ கடமைப்பட்டிருக்கிறேன்" என்றார் துரைசாமி.

மரகதம். ஆனந்தக் கண்ணீர் வடித்து நின்றாள்.

"மரகதம்! உனக்காக நான் எதைவேண்டுமானாலும் தியாகஞ் செய்யத் தயாராக இருக்கிறேன். நீ இல்லா விட்டால் எனக்கு அப்புறம் உலகமே இல்லை. என்னால் தனித்து உயிர்வாழ முடியாது. நீ ஆஸ்பத்திரியில்

பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டு பிராணபத்தான நிலைமையிலிருந்தபோது எனக்குப் பைத்தியமே பிடித்து விடும்போலிருந்தது. ஹிருதயமே நின்றுவிடும்போலிருந்தது. நல்லவேளை, ஆண்டவன் இன்னொரு குழந்தை பிறக்கச் செய்யவில்லை என்று சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறேன்'' என்று துரைசாமி வெறிபிடித்தவர்போலக் கூறினார்.

''நீங்கள் இவ்வளவு ஆசை காண்பித்தால் என்னால் தாங்க முடியாது,'' என்றாள் மரகதம்.

அப்போது பன்னலால் கடையிலிருந்து ஒரு குமாஸ்தா நகைப்பெட்டியுடன் வந்துவிடவே அவர்கள் பேச்சு நின்றது. சிறிது நேரத்திற்கெல்லாம் ரேவதியும் ஒரு பூமாலைக் கூடையுடன் வந்து சேர்ந்தாள்.

அன்று அவர்கள் எல்லோரும் சேர்ந்தாப்போல் உட்கார்ந்து சாப்பிட்டார்கள்.

மரகதம் புதுவிதப் பாயசத்தை நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு சாப்பிட்டதை கந்தய்யா பார்த்துப் பெருமை அடைந்தான். அவள் வேப்பம்பூத் துவையலை அல்வாவைப்போல எடுத்து விழுங்கியதை ரேவதி பார்த்து அனுபவித்தாள்.

2

உணவுக்குப் பிறகு ரேவதி பூக்கூடையைத் திறந்து ஒரு மாலையை எடுத்து வந்து தன் தந்தையினிடம் கொடுத்து அதைத் தன் தாயின் கழுத்தில் போடச் சொன்னாள். பிறகு இன்னொரு மாலையை எடுத்துத் தன் தாயினிடம் கொடுத்துத் தன் தந்தையின் கழுத்திலிடச் செய்தாள்.

தாய் அப்படி மாலையிட்டபோது, அவள் கைதட்டிச் சிரித்தாள், ''அம்மாவுக்குப் பிறந்த நாள்'' என்று

ஆரம்பிக்கும் தான் கற்பனை செய்துவைத்திருந்த பாட்டைப் பாடினாள். பிறகு டாலரைத் தன் கையால் தாயின் கழுத்திலிருந்த சங்கிலியில் கோத்தாள்.

துரைசாமி, தம் மனைவியையும் மகளையும் மாறி மாறிப் பார்த்து மகிழ்ச்சிக் கடலிலாழ்ந்திருந்தார்.

"இன்று சாயங்காலம் நம்ப எல்லோருமாக எங்கே யாவது போய் வரலாமே" என்றார்.

"அப்பா!" என்றாள் ரேவதி.

"கட்டாயம் போகவேண்டும். எங்கே போகலாம் சொல்லு!" என்று துரைசாமி கேட்டார்.

"வெளியூருக்கு எங்கேயாவது போவோமா?."

"ஓ!"

"அம்மா ஒன்றும் சொல்லவில்லையே" என்றார் துரை சாமி.

"நீங்கள் எங்கே அழைத்துக்கொண்டு போனாலும் வருகிறேன். ஆனால்..." என்றாள் மரகதம்.

"ஆனால், என்ன?" என்று துரைசாமியும் ரேவதியும் ஒரே சமயத்தில் கேட்டனர்.

"இன்று கம்பெனி வருடாந்தரக் கூட்டம் இருக்கிறது என்று நீங்கள் சொன்னதாக ஞாபகம்."

"ஆமாம்! அதற்குப் போகாவிட்டால் ஒன்றும் தலை போய்விடாது. என் தலைமைப் பிரசங்கம் அச்சடிக்கப் பட்டு தயாராக இருக்கிறது. அதை உதவித் தலைவர் படித்துவிட்டுப் போகிறார்!" என்று துரைசாமி மிகவும் அலட்சியமாகக் கூறினார்.

"தலைவரவர்கள் எதிர்பாராத சந்தர்ப்பங்களினால் வரமுடியாமையினால், என்று ஒரு பீடிகை போட்டுக் கொண்டு பிரசங்கத்தைப் படித்துவிட்டுப் போகிறார்கள்" என்றாள் ரேவதி.

''அந்த எதிர்பாராத சந்தர்ப்பங்கள் என்னவாம்?'' என்று மரகதம் கேட்டாள்.

''திருத் தலைவரவர்களின் திரு மனைவியார், திருப் பிறந்த நாளை முன்னிட்டு திருப் பிரயாணம் செய்ய விருப்பது,'' என்று ரேவதி கூறவே எல்லோரும் சிரித்தார்கள்.

''நீங்கள் எனக்காகப் போகாதிருக்கக் கூடாது. போகாதிருப்பது நன்றாயுமிராது. இத்தனை வயது கழித்துப் பிறந்த நாள் கொண்டாடுகிறதே விளையாட்டுத் தனம். அதற்காகக் கம்பெனியின் முக்கியமான கூட்டத்துக்குப் போகாமலிருப்பது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை,'' என்றாள் மரகதம்.

''அப்பா! அம்மாவைப் போய்க் கேட்டால் இதற்கெல்லாம் ஒப்புக்கொள்வாளா?'' என்றாள் ரேவதி.

''அம்மா சொல்வதும் சரிதான். ஆனால், நாளைக்கு எல்லாருமாக எங்கேயாவது கட்டாயம் போய்விட்டு வரணும்'' என்று துரைசாமி கூறினார்.

''சரி!'' என்று மரகதம் ஒப்புக்கொண்டாள்.

''ஏன், அம்மா! நாமிரண்டு பேரும் மட்டும் இன்றைக்கு எங்காவது போய்விட்டு வருவோமே!'' என்று ரேவதி கூறினாள்.

''அது நல்ல யோசனை!'' என்றார் துரைசாமி. பிறகு தன் மனைவியைப் பார்த்து, ''என்ன மரகதம்?'' என்று கேட்டார்.

அவள் சற்று யோசனை செய்துவிட்டு ''சரி!'' என்றாள்.

''எங்கே அம்மா, பீச்சுக்குப் போவோமா?'' என்று ரேவதி கேட்டாள்.

''பீச்சுக்கா! அதற்குத்தான் அடிக்கடி போகிறோமே?'' என்றாள் மரகதம்.

''சினிமாவுக்கு!''

"போனவாரம் இருபதினாயிரம் அடி நீளப் படம் ஒன்று பார்த்துவிட்டு வந்தோமே. அதைப் பார்த்த தலைவலியும், மனோவேதனையும் போக இன்னும் ஆறு மாசம் பிடிக்கும்."

"மாதர் சங்கத்திற்கு," என்றார் துரைசாமி.

"அலுத்துப் போச்சு. புதுசா எங்கேயாவது போக வேண்டு மென்றிருக்கிறது."

"அப்பா! அம்மாவே ஏதோ பிடிக்குமென்கிறாள். இந்த சந்தர்ப்பத்தை விட்டுவிடாதேயுங்கள்," என்று ரேவதி பரிகசித்தாள்.

"மரகதம், எங்கே போகணும், எதைப் பார்க்க வேண்டுமென்று சொல்லு," என்று துரைசாமி கேட்டார்.

"வருஷம் முந்நூற்று அறுபதுநாளும் திரும்பத் திரும்ப இந்தப் பட்டணத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்," என்றாள் மரகதம்.

"பம்பாய் போகணுமா? கல்கத்தாவுக்கா? காஷ்மீருக்கா? ஸிம்லாவுக்கா? எங்கே போகணும் சொல்லு! இப்போதே டெலிபோன் செய்து விமானத்தில் இடம் ரிஸர்வ் செய்கிறேன்," என்று கூறிக்கொண்டே துரைசாமி டெலிபோனிருந்த பக்கம் செல்லலானார்.

"அப்பா, அப்பா! அப்புறம் டெலிபோன் செய்து கொள்ளலாம். அம்மாவும், நானும் இன்றைக்கு அல்லவா, அதுவும் இன்னும் ஒரு மணி நேரத்துக்கெல்லாம் கிளம்பப் போகிறோம். அதற்கேற்ற இடமாகப் பார்க்கணும். ஏன் அம்மா எங்கே போகணும்?" என்று ரேவதி தன் தாயைக் கேட்டாள்.

"எங்கேயாவது பக்கத்திலே இருக்கிற ஊருக்குப் போனால் போச்சு," என்றாள் மரகதம்.

"வில்லிவாக்கம் போகலாமா?" என்று ரேவதி கேட்டாள்.

மரகதம் மறுத்து தலையை ஆட்டினாள்.

''அடுத்தாப்போல் உள்ள கொரட்டூர்.''

''ஊஹூம்!''

''அதற்கும் அடுத்தாப்போல் அம்பத்தூர்.''

''எத்தனை தூரம் இருக்கும்?''என்று மரகதம் விசாரித்தாள்.

''கிட்டத்தட்டப் பதினைந்து மைல் இருக்கும்.''

''அங்கே போய்விட்டு வரலாம்,'' என்றாள் மரகதம்.

''அப்பாடா! அம்மா ஒரு முடிவு செய்தாள்,''என்று ரேவதி ஒரு பெருமூச்சு விட்டாள்.

அப்போது டெலிபோன் சமீபம் சென்றுகொண்டிருந்த தன் கணவனைப் பார்த்து மரகதம், ''யாருக்குப் போன் செய்யப் போகிறீர்கள்?'' என்றாள்.

''என் சிநேகிதன் அண்ணாமலை அங்கேதான் இருக்கிறான். உன்னைச் சாலையில் வந்து சந்திக்கச் சொல்லுகிறேன்,'' என்றார் துரைசாமி.

''சாலையிலா?'' என்று மரகதம் கேட்டாள்.

''ஆமாம்! நீ வண்டியில்தானே போகப் போகிறாய்? ப்யூக் எடுத்துக்கொண்டு போகிறாயா? இல்லை என் பிளிமத் வண்டியைக் கொடுக்கட்டுமா?''

மரகதம் சிரித்துக்கொண்டே, ''ஒரு வண்டியும் வேண்டியது இல்லை. எனக்கு ரயிலில் போகவேண்டும் என்றிருக்கிறது,'' என்றாள்.

''உன்னிஷ்டப்படி செய். குமாஸ்தா கண்ணப்பனையும் பியூன் குப்புசாமியையும் அழைத்துக் கொண்டு போ!''

''ஒருத்தரும் வேண்டாம். நானும் ரேவதியும் மட்டும் தனியாகப் போய்விட்டு வருகிறோமே!''

"காரியஸ்தன் டிக்கெட்டு வாங்கி ரயிலில் ஏற்றி விட்டு வந்தால் போதும் என்கிறுயாக்கும்?" என்று துரைசாமி கேட்டார்.

"அதுவும் வேண்டாம். நாங்களாகவே போய் நாங்களாகவே டிக்கட் வாங்கிக் கொள்கிறேம்," என்று தம் மனைவி கூறியதைக் கேட்டுத் துரைசாமி ஆச்சரிய மடைந்தார்.

"அம்மா! புத்தம் புதிதான யோசனை—முதல் தர மான யோசனை. எனக்குக்கூட நானே காரியம் செய்ய வேண்டும் போலிருக்கிறது," என்று ரேவதி சந்தோஷத் துடன் கூறினுள்.

"எந்த வண்டியில் திரும்பி வருவீர்கள்? எதற்கு வருவதாயிருந்தாலும் சரிதான். ஒரு வண்டியை ஸ்டேஷனிலேயே காத்துக் கொண்டிருக்கச் சொல்கி றேன். ஒவ்வொரு டிரெயின் வந்ததும் பிளாட்பாரத் தில் வந்து உங்களைப் பார்க்கச் சொல்கிறேன்," என்றுர். துரைசாமி.

"மற்ற சாதாரண மனிதர்களைப்போலப் போய்ச் சுற்றிப் பார்த்துவிட்டு வரனும் போலிருக்கிறது, வண்டியே வேண்டியதில்லை."

"பின்னே ஸ்டேஷனுக்கு எப்படிப் போவீர்கள்? அங்கே இருந்து எப்படித் திரும்பி வருவீர்கள்?"

"பஸ் இருக்கிறதே!" என்று மரகதம் கேட்டபோது, துரைசாமி ஒருகணம் திகைத்துப் போய் நின்றுர். "நீ பஸ்ஸில் ஏறிப் போனதில்லை. தனியாகவும் போன தில்லையே!" என்று வருத்தந் தோன்றக் கூறினுர்.

"ஆகையினுலே ஒரு தரம் மட்டும் போய்விட்டு வந்துவிடுகிறேம், அப்பா," என்று ரேவதி கெஞ்சினுள்.

"சரி! நான் ஸ்டேஷனுக்கு வந்து உங்களை ரயிலில் ஏற்றி விடுகிறேனே?"

"வேண்டாம், அப்பா! நாங்களாகவே அப்படிப் பிரயாணம் போகும் தமாஷ் இராது அப்பா!" என்றாள் ரேவதி.

"உங்கள் ஆசையை நான் கெடுக்கவில்லை. ஜாக்கிரதையாகப் போய்விட்டு வாருங்கள்," என்று துரைசாமி கூறினார். பிறகு, 'இந்தாருங்கள் செலவுக்கு' என்று இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து நீட்டினார்.

மரகதமும் ரேவதியும் வாய்விட்டுச் சிரித்தனர்.

"இத்தனை எதற்கப்பா! என்னிடம் சில்லறை நோட்டாக இருக்கிறது. இருபது முப்பது இருந்தால் போதாதா?" என்று கேட்டாள் ரேவதி.

"பத்து ரூபாய் இருந்தால்கூட போதும். ரயிலில் மூன்றாம் வகுப்பு டிக்கெட் போகவர இரண்டு ரூபாய்க்கு மேல் ஆகப்போகிறது இல்லை!" என்று மரகதம் கூறிய போது துரைசாமி பிரமித்து நின்றார்.

"மூன்றாம் வகுப்பிலா?" என்ற வார்த்தைகளை அவர் வாய் முணுமுணுத்தன.

மரகதம், "ஒரு மாறுதலுக்காக," என்று சமாதானம் கூறினாள்.

"அப்பா! நாங்களிருவரும் அம்பத்தூர் வரையில் போய்விட்டு வருகிறோம். நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள்," என்று ரேவதி தமாஷாகக் கூறித் தந்தையினிடம் விடை பெற்றுக்கொண்டாள்.

துரைசாமி தமது காரியாலயத்திற்குப் புறப்பட்டார். வண்டியில் சென்றவர் திரும்பி வந்து "ஜாக்கிரதையாகப் போய் வாருங்கள். சந்தர்ப்பம் நேர்ந்தால் என் சிநேகிதர் வீட்டுக்குப் போங்கள்," என்று கூறி ஒரு விலாசத்தைக் கொடுத்துச் சென்றார்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு மரகதமும், ரேவதியும் தங்கள் பங்களாவை விட்டுக் கிளம்பினர்.

அவர்கள் இருவரும் இடுப்பில் சாதாரண மில் புடவை தரித்திருந்தனர். ஏதோ சில சாதாரண ஆபரணங்களை அணிந்து கொண்டிருந்தனர். ரேவதி தன் தோளில் ஒரு பிளாஸ்டிக் பை மாட்டிக் கொண்டிருந்தாள்.

பிரபல சைக்கிள் கம்பெனியான துரை கம்பெனியின் மானேஜிங் டைரக்டரும், லட்சாதிபதியுமான திரு. துரைசாமியின் மனைவியும் ஒரே மகள் ரேவதியும் ஒரு பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தனர்.

3

''அம்மா' என் பின்னாலேயே வா!'' என்று தன் தாயினிடம் சொன்னாள் ரேவதி.

''பின்னாலேயேதான் வந்து கொண்டிருக்கிறேன். சற்றுத் தவறிப்போய் நின்றுவிட்டால் எனக்குப் பின்னாலிருக்கிறவர் இடித்துத் தள்ளிக்கொண்டு வருவார் போலிருக்கிறது!'' என்று மரகதம் மெதுவாகக் கூறினாள்.

''ஆபீஸுக்கும், காலேஜுக்கும் போகிறவர்கள் தினமும் இப்படித்தான் இடிபட்டுக்கொண்டு போகணும்,'' என்றாள் ரேவதி.

தாயும், மகளும் பஸ்ஸில் ஏறுவதற்காகக் காத்துக் கொண்டிருந்த ஒரு க்யூ வரிசைக்குள் மாட்டிக்கொண்டிருந்தனர்.

பஸ் வண்டி வந்துவிட்டது. வரிசையில் நின்றவர்கள் விரைந்து சென்று பஸ்ஸில் ஏறினர். ரேவதியும், அவள் தாயும் சிரமப்பட்டு பஸ்ஸுக்குள் ஏறி இடம் பிடித்து நின்றனர்.

பஸ் சென்றுகொண்டிருந்தபோது கண்டக்டர் அவர்கள் போகுமிடத்தைக் கேட்டான்.

''ஸென்ட்ரல் ஸ்டேஷன்'' என்ருள் ரேவதி.

''இந்த வண்டி எழும்பூருக்கல்லவா போகிறது! எழும்பூர், எழும்பூர் என்று கத்தினேனே, தெரியாவிட்டால் கேட்டுக்கொண்டல்லவா ஏறணும். இப்போது நான் நடுவில் வண்டியை எங்கே நிறுத்துகிறது? இது பெரிய 'லாச்சார்' ஆகப் போச்சு...என்று'' கண்டக்டர் பிரசங்கம் செய்து கொண்டே போஞர்.

இதைக்கேட்ட மரகதத்திற்கு அவமானமாக இருந்தது.

''எழும்பூருக்கே இரண்டு டிக்கெட் கொடு!'' என்று கூறிப் பணத்தைக் கொடுத்து டிக்கெட்டுகளை வாங்கிக் கொண்டாள்.

''ஏன் அம்மா?'' என்று ரேவதி கேட்டாள்.

''எங்கேயாவது போகணும். அவ்வளவுதானே?'' என்ருள் மரகதம்.

எழும்பூர் ஸ்டேஷன் வாசலில் இறங்கியதும்,ரேவதி 'அம்மா! நாம் தவறிப்போய் இந்தப் பஸ்ஸில் ஏறியதும் ஒரு விதத்தில் நல்லதாய்ப் போச்சு. மின்சார ரயிலில் ஏறிப் போய்விட்டு வரலாம்,'' என்ருள்.

''சரி! எந்த ஊருக்குப் போகலாம்?''என்று தாயார் கேட்டாள்.

''பல்லாவரம் போவோமே?'' என்று ரேவதி கூறிச் சென்று அந்த ஸ்டேஷனுக்கு மூன்ருவது வகுப்பு டிக்கெட்டுகள் இரண்டு வாங்கி வந்தாள். வண்டி வந்ததும் அதிலேறிக் கொண்டார்கள். குளிர்ப்பதன வசதியுள்ள வகுப்பு, முதல் வகுப்பு இவற்றைத் தவிர மற்றெதிலும் ஏறி அறியாத அவர்களுக்கு மூன்ரும் வகுப்பில் பிரயாணம் செய்வது வேடிக்கையா யிருந்தது; மனக்கிளர்ச்சியை உண்டுபண்ணுவதாயும் இருந்தது.

"அப்பாவைக்கூட இதுமாதிரி ஒருநாள் அழைத்துக் கொண்டு வரணும். அவருக்கும் ஒரு மாறுதலாயிருக்கும்" என்றாள் ரேவதி.

"அதையே நானும் நினைத்துக் கொண்டிருந்தேன்" என்று தாயார் கூறினாள்.

அவர்கள் பேசிக்கொண்டே வந்தபோது எந்த எந்த ஸ்டேஷன்களில் வண்டி நின்றது என்பதைக்கூடக் கவனிக்கவில்லை. குரோம்பேட்டை ஸ்டேஷனில் வண்டி சற்றுத் தாமதித்து நின்றபோதுதான் "அம்மா! பல்லாவரம் ஸ்டேஷன் போய்விட்டது. அதைத் தாண்டி வந்து விட்டோம்," என்றாள். "அடடா!" என்று கூறி மரகதம் எழுந்திருந்தாள்.

"அதிகப்படி டிக்கெட் கட்டணத்தைக் கொடுத்து விட்டால் போகிறது!" என்றாள் ரேவதி.

இருவரும் டிக்கெட் வசூலிப்பவர் நின்றிருந்த இடம் வந்தபோது ரேவதி, "ஸார்! நாங்கள் பல்லாவரத்தில் இறங்க வேண்டியவர்கள். வண்டி அங்கே நின்றதைக் கவனிக்கவில்லை," என்று கூறினாள்.

"அப்படிக் கொஞ்சம் நின்று கொண்டிருங்கள், வருகிறேன்," என்று அவர் கூறிவிட்டு மற்ற பிரயாணிகளிடமிருந்து டிக்கெட்டுகளை வாங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது அங்கே ஒரு சிறிய கூட்டம் கூடிவிட்டது. அந்தக் கூட்டத்தில் ஒன்றிரண்டு பெரிய மனிதர்கள், இரண்டு காலாடிகள், பிச்சைக்காரர்கள் முதலியவர்கள் இருந்தனர்.

தாயும், மகளும் அன்று சர்வ சாதாரணமான மில் புடவைகளே தரித்திருந்தனர். ஆபரணங்களும் அதிகம் அணியவில்லை. இருந்தும் அவர்களை நின்றிருந்த பக்கம் சென்ற ஆண்கள் அவர்களை ஒரு தினுசாக விழித்துப் பார்த்துக்கொண்டே சென்றனர். அப்போதுதான் மரகதத்திற்கு ஏன் அப்படி வந்தோம் என்று தோன்றிற்று.

டிக்கெட் வசூலிப்பவர் தன்வேலை முடிந்ததும் அவர்களிடமிருந்து அதிகக் கட்டணம் வசூலித்து, அதற்கான ரசீதைக் கொடுத்தார்.

பிறகு அவ்விருவரும் அந்தக் குரோம்பேட்டை ஸ்டேஷனின் மாடிவழியாக ஏறி மற்றொரு பக்கம் இறங்கிச் சென்றனர்.

"அப்புறம்?" என்றாள் மரகதம்.

"இந்த ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பி விடலாமே!" என்றாள் ரேவதி.

இருவரும் அந்த ஊர்க்கடைத் தெருவழியாக நடந்து சென்று தோப்புந்துரவுமாய் இருந்த ஒரு பகுதிப் பக்கம் வந்தனர்.

"என்ன நாற்றம் நாறுகிறது?" என்று ரேவதி கூறித் தன் மூக்கைப் பிடித்துக் கொண்டாள்.

அவர்கள் பக்கத்தில் வந்து கொண்டிருந்த ஒரு கிழக் குடியானவன் "இங்கே தோல் பதனிடும் பெரிய ஆலை இருக்கிறது. அதுதான் இந்த நாற்றம்" என்று தெரிவித்தான்.

அவர்கள் அந்தத் தோப்பு வழியாகச் சென்றார்கள். கிழவனும் உடன் வந்து கொண்டிருந்தான்.

"அம்மா அதோ மாங்காய் மரம்" என்று ரேவதி கூறினாள்.

"அது மா மரங்க!" என்று கிழவன் தெரிவித்தான்.

"அம்மா, அதிலே நிறைய மாங்காய்க் குட்டி இருக்கு," என்று ரேவதி ஆச்சரியத்துடன் கூறினாள்.

அவள் அப்படிச் சொல்வதைக் கேட்டுக் கிழவன் அவளைவிட ஆச்சரியமடைந்தான்.

"அதற்கு மாவடு என்று சொல்கிறது" என்றான்.

பள்ளிக்கூடத்திலும், காலேஜிலும் எல்லாப் பரிட்சைகளிலும் முதல் மார்க்குகள் வாங்கி வந்த தன் பெண்

ணுக்கு உலக ஞானம் எவ்வளவு குறைவாயிருக்கிறதென்பதை மரகதம் அப்போதுதான் உணர்ந்தாள். ஆனால், அதற்காகப் பெண்ணின் மீது குறை சொல்வதற்கில்லை. ரேவதி கிறிஸ்தவப் பாதிரிகள் நடத்தும் கான்வெண்ட் பள்ளிக்கூடத்திலேயே முழுக்க முழுக்க ஆங்கிலத்தின் மூலமாகவே எல்லாம் கற்றவள். வீட்டில்தான் அவளுக்குத் தமிழ் போதித்து வந்தார்கள். தன் பெண் மாவடுவை 'மாங்காய்க் குஞ்சு' என்று சொல்லவில்லையே என்று தாய் மகிழ்ச்சியுற்றிருந்தாள்.

கிழவன் அந்த ஊரைப்பற்றிய வரலாறுகளைச் சொல்லிக் கொண்டேபோனான். வழியில் ஒரு புதரை ரேவதி பார்த்தபோது 'அது என்ன?' என்று அவனை விசாரித்தாள்.

''சப்பாத்துக் கள்ளி!'' என்று கிழவன் தெரிவித்தான்.

''கோதுமையால் சப்பாத்து ரொட்டி தட்டுகிறார்களே, அது மாதிரி வட்டமாக இருக்கிறதற்காகச் சப்பாத்து என்று பெயர் ஏற்பட்டதா?'' என்று கேட்டாள்.

''இல்லை. இது நம்ப ஊர்ச் செடியே இல்லை. வெள்ளைக்காரன் கொண்டு வந்தது,'' என்றான் கிழவன்.

தன் பெண்ணை அடிக்கடி வெளியூர்களுக்கெல்லாம் அழைத்துச் சென்று நாலு விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளச் செய்ய வேண்டுமென்று மரகதம் விரும்பினாள்.

''அம்மா! தாகமாயிருக்கிறது!'' என்றாள் ரேவதி.

''பக்கத்திலே தண்ணீர்ப் பந்தல் இருக்கிறது,'' என்று கூறி அந்தக் கிழவன் அவர்களை ஒரு சிறிய வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

அந்த வீட்டு வாசலில் 'தண்ணீர்ப் பந்தல்' என்று எழுதப் பட்டிருந்த ஒரு பலகை தொங்கவிடப்பட்டிருந்தது. தாயும் மகளும் கதவுக்கு வெளியில் நின்று உட்பக்கம் எட்டிப் பார்த்தார்கள்.

அங்கே மூன்று நான்கு பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. அவற்றிற்கப்பால் ஒரு கோணித் திரை தொங்கவிடப்பட்டிருந்தது.

''வாங்கோ!'' என்று உள்ளிருந்து வந்த ஒருவர் உபசரித்தார்,

''தாகத்திற்கு வாட்டர் வேண்டும்!'' என்று கேட்டாள் ரேவதி.

''கொடுக்கிறேன். ஏதாவது சாப்பிடுகிறீர்களா? புளியஞ் சாதம், தயிர் சாதம், மசாலவடை, பட்டாணிச் சுண்டல் எல்லாம் இருக்கிறது,'' என்ருர் அந்த ஆள்.

''இது ஹோட்டலா?'' என்று ரேவதி ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

''ஆமாம். இது மாதிரி சின்ன ஓட்டலைத் தண்ணீர்ப் பந்தல் என்றுதான் சொல்கிற வழக்கம்'' என்று அவர்களுடன் வந்திருந்த கிழவன் தெரிவித்தான்.

அவர்கள் வேண்டும், வேண்டாம் என்று பதிலளிப்பதற்கு முன்னுலேயே தண்ணீர்ப் பந்தல்காரர் புளியஞ் சாதம் வகையரு இரண்டு பேருக்கும் கொண்டு வந்து பெஞ்சியில் வைத்து விட்டார்.

''என்ன, அம்மா!'' என்ருள் ரேவதி.

''சாப்பிட்டுத்தான் பார்க்கலாமே,'' என்று மரகதம் கூறிவிட்டு ஹோட்டல்காரரிடம் அந்தக் கிழவனுக்கும் எல்லாம் கொடுக்கச் சொன்னுள்.

நல்ல வழவழப்பான சுத்தமான தரையின் மீது உயர்தர மரத்தாலான புதுவிதச் சாப்பாட்டு மேஜையில் நாற்காலியில் உட்கார்ந்து சாப்பிட்டுப் பழக்கமான மரகதமும், ரேவதியும், அழுக்கடைந்து கால்கள் ஒடிந்திருந்த அந்த முரட்டுப் பெஞ்சியில் உட்கார்ந்து சாத வகைகளைப் பரிட்சை பார்த்தார்கள்.

அவர்களுக்கு இந்த அனுபவம் முற்றிலும் புதிதாயிருந்தது. அந்தச் சூழ்நிலையை அவர்கள் முழுக்க

முழுக்க அனுபவித்தார்கள். அவர்கள் ஏதோ பேருக்குக் கொஞ்சம் சாப்பிட்டு விட்டுத் தண்ணீர் குடித்துவிட்டு எழுந்தார்கள். தண்ணீர்ப் பந்தல்காரருக்குச் சேர வேண்டியதைக் கொடுத்து விட்டுக் கிளம்பினார்கள். கிழவனும் உடன் புறப்பட்டான்.

"இந்த ஊரில் பார்ப்பதற்கு என்ன விசேஷமாக இருக்கிறது?" என்று மரகதம் கிழவனை விசாரித்தாள்.

"தோல் பதனிடும் தொழிற்சாலை இருக்கிறது. பிரசித்தி பெற்ற பழைய காலக் கோயில் ஒன்றிருக்கிறது.

"ரொம்ப தூரம் போகணுமோ?" என்று ரேவதி கேட்டாள்.

"இல்லை. அதோ இருக்கிறது. என் வீடு அப்பாலே தான். நான் உங்களுக்கு கோவிலைக் காண்பித்து விட்டுப் போகிறேன்."

"ஏன் ரேவதி! அதைப் பார்ப்போமா?" என்று தாயார் கேட்டாள்.

"ஓ! நான் தயார்!" என்றாள் பெண்.

மூவரும் கோவிலிருந்த பக்கம் நடந்து சென்று அதை அடைந்தார்கள்.

4

கோவில், ஒரு கோவிலாக இல்லை...அது பாழடைந்திருந்தது. அதன் மதிற் சுவர்கள் பல இடங்களில் இடிந்து விழுந்திருந்தன. அதன் சிறிய கோபுரத்தின் மீது செடி கொடிகள் மண்டி வளர்ந்திருந்தன. சந்நிதிக்கெதிரே சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய குளம் இருந்தது.

அந்தக் குளத்துத் தண்ணீரைக் கவனித்த ரேவதி, "இதிலிருந்துதான் பச்சைவர்ண பெயிண்ட் தயாரிக்கிறார்களா?" என்று கிழவனைக் கேட்டாள்.

"இது புண்ணிய நீர். இதைப் பற்றி அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்," என்ற பதிலைக் கேட்டுத் தாயும் மகளும் திரும்பிப் பார்த்தார்கள்.

ஏனென்றால், அவர்களுக்குப் பதிலளித்தது அந்தக் கிழவன் அல்ல. புதிய மனிதர்கள் இருவர். அவர்கள் பின்னால் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் நாகரிகமாக உடை அணிந்திருந்தனர். அவர்களைக் கண்டதும் தாயும் மகளும் சற்று அப்பால் சென்று நின்றனர்.

"அண்ணாமலை! உனக்கு இந்த ஊர்ப் புராணம் எல்லாம் அற்றுபடியாயிற்றே. கோவில் மகாத்மியத்தை அவர்களுக்குச் சொல்லேன்," என்றான். ஆனால் அவர் மற்றவரைப் பார்த்தார்.

"சொல்கிறேன், முத்து, ஆனால், அவர்களுக்கு இந்தக் கதை எல்லாம் பிடிக்குமோ பிடிக்காதோ!" என்று மற்றவர் கூறினார்.

"சொல்லுங்கள் கேட்கிறோம்" என்றாள் ரேவதி.

அண்ணாமலை சொல்லலானார்:—

ஒரு சமயம் தேவலோகத்திற்கு இந்திரனைப் பார்ப்பதற்காகத் தூர்வாச மகரிஷி சென்றிருந்தார். அப்போது ஊர்வசி, மேனகை, ரம்பை ஆகியவர்களின் நடனத்தைப் பார்த்து விட்டு வந்திருந்த இந்திரன் சற்றுக் கண்ணை மூடினான்.

அவன் அந்த மூன்று பேரையும்பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தபோது துர்வாசர் அவனைக் கூப்பிட்டார். இந்திரன் உடனே எழுந்திருந்து வரவில்லை. ரிஷிக்கு வழக்கத்தைவிட அதிகமான கோபம் வந்து விட்டது. உடனே அவர் தமது தாடியை உருவி விட்டுக்கொண்டு பல்லைக் கடித்துக் கொண்டார். தாம் நின்ற இடத்திலேயே பலமுறை எகிறிக் குதித்தார். பிறகு,

'ஏ இந்திரனே! நடன மாதர்களின் பாதங்களைப் பற்றிக் கனவுகாணும் நீ பூவுலகத்தில் பிறப்பாயாக. உன்

பாதங்கள் தேய்ந்து கொண்டே போவதாக' என்று சாபம் கொடுத்தார்.

அந்தக் கொடிய சாபத்தைக் கேட்ட மாத்திரத்தில் இந்திராணியும் மற்ற மனைவிமாரும் ஓடோடியும் வந்து அவர் காலில் விழுந்தார்கள்.

'ரிஷிகள் திலகமே! அவருக்குச் சாப விமோசனத்திற்கான வழியைச் சொல்லுங்கள்!' என்று தங்கள் கண்ணீரால் அவர் பாதங்களை நனைத்தனர்.

ரிஷியின் கோபம் குறையத் தொடங்கியது. அவர் 'ஏ மாதர்காள்! சென்னையம்பதிக்குப் பக்கத்திலுள்ள பல்லாவரம், தாம்பரமென்ற இரு திவ்விய க்ஷேத்திரங்களுக்கிடையே ஓரிடத்தில் சிவபெருமான் திருக்கோவில் கொண்டிருக்கிறான். அந்தக் கோவிலுக்கெதிரில் ஒரு புண்ணிய தீர்த்தமுள்ளது. அதில் மூன்று முறை மூழ்கி எழுந்த மாத்திரத்தில் சாப விமோசனம் பெறுவான்.' என்று தூர்வாசர் இப்படிக்கூறி மறைந்ததும், இந்திரன் வானத்தினின்று கிடுகிடு என்று கீழே இறங்கிப் பூவுலகத்திற்கு வந்தான்.

அவன் பல க்ஷேத்திரங்களுக்கு நடந்து சென்று பல குளங்களில் மூழ்கிப் பார்த்தான். ரிஷி கூறிய, குறிப்பிட்ட குளம் எதுவென்று அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை.

பல இடங்களுக்கு நடந்து நடந்து அவன் உள்ளங்கால்கள் தேய்ந்து போயின. அவை பாதங்களாய் சதை பிடித்திராமல் காகிதம் போன்று அவ்வளவு மெல்லியதாய் இருந்தன.

இந்திரன் மனம் நொந்தவனாய் குளத்தைத் தேடிய வண்ணம் இருந்தான். கடைசியில் இந்தக் குளத்தில்வந்து மூழ்கியதும் அவன் பாதங்கள் இரண்டும் சதை பிடித்து முன்போல் பருத்து விட்டன. பிறகு அவன் கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்கியதும் மறுபடியும் இந்திரன் ஆனான்.

அண்ணுமலை இந்தப் புராணக் கதையைச் சொல்லி வந்தபோது தாயும் மகளும் அதைக் கவனமாகவும், ஆச்சரியத்துடனும் கேட்டு வந்தனர்.

முத்துவின் முகத்திலோ அவர்களடைந்திருந்ததை விட அதிகம் ஆச்சரியம் காணப்பட்டது. கிழவன் வாயைப் பிளந்தவண்ணம் நின்றிருந்தான்.

''ஆகையினுலேதான் இந்தத் திருக் கோவிலி லுள்ள லிங்கத்திற்கு குரோமேசுவரர் என்று பெயர் ஏற்பட்டது. இந்தக் குளத்தையும் குரோமோ தீர்த்தம் என்கிறும்'' என்று முத்து தன் நண்பன் கூறிவந்த கதையை முடித்தான்.

''எதற்காக குரோமோ என்று பெயர்?'' என்று ரேவதி கேட்டாள.

''தேய்ந்து போன உள்ளங் காலில் சதை வளர்ந்ததனுல். அதனுல்தான் இங்கே செருப்புக்கடியில் உபயோகிக்கப்படும் குரோம் தோல் அட்டைகளைத் தயாரிக்கிருர்கள்,'' என்றுன் அண்ணுமலை.

''நான் இந்த ஊரிலே பிறந்து, இந்த ஊரிலேலேயே வளர்ந்தவன், இது மாதிரிக் கதையைக் கேட்டதே இல்லீங்க,'' என்றுன் கிழவன்.

''உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு போடா! உனக்கென்னடா தெரியும்?'' என்று அண்ணுமலை அதட்டிக் கூறவே கிழவன் தன் வழியே சென்றுன்.

''நீங்கள் இதில் இறங்கி முழுகிவிட்டுப் போகலாம்...'' என்று முத்து சொன்னுன்.

முழுகப் பிடிக்கவில்லை என்றுல் குளத்திலிறங்கிக் கொஞ்சம் தண்ணீரையாவது தலைமீது தெளித்துக் கொண்டு போங்கள். மிகவும் புண்ணியமுண்டு'' என்று அண்ணுமலை கூறினுன்.

பிறகு அவர்களிருவரும் அந்தக் கிழவன் சென்ற வழியே செல்லத் தொடங்கினுர்கள்.

"இவர்களை எங்கேயாவது இதற்குமுன்னே பார்த்திருக்கிறோமோ?" என்று ரேவதி கேட்டாள்.

"எனக்கு ஞாபகமில்லை, ஏன்?" என்றாள் மரகதம்.

"எங்கேயோ பார்த்தாப் போலிருக்கிறது. ஆனால் எங்கே என்று சட்டென்று நினைவுக்கு வரவில்லை. ஸ்டேஷனில் இருக்குமோ" என்று ரேவதி கூறிவிட்டு "ஏன் அம்மா! இதில் முழுகப் போகிறோமா?" என்று கேட்டாள்.

"முழுகலாம்! ஆனால் வேறு துணி ஒன்றும் கொண்டு வரவில்லை. அவர்கள் சொன்னபடி கொஞ்சம் தண்ணீரையாவது தலைமீது தெளித்துக்கொண்டு போகலாம்," என்று மரகதம் கூறினாள்.

தாயும், மகளும் குளத்தின் படிக்கட்டுகளில் ஜாக்கிரதையாகவும் மெதுவாகவும் இறங்கிச் சென்றார்கள்.

"அம்மா! இதுமாதிரி இங்கே இன்று வரப்போகிறோமென்று நாம் சொப்பனங்கூடக் கண்டிருக்கமாட்டோம். இப்படி வந்தது புதுசாக, வேடிக்கையாக இல்லை?" என்று ரேவதி கேட்டாள். அவள் ஒரு சிறுமியைப்போல மகிழ்ச்சியும், ஆச்சரியமும் அடைந்திருந்தாள்.

இருவரும் தண்ணீர்க் கரையை அடைந்து முதற் படியில் காலை வைத்தனர்.

பிறகு இரண்டாவது படியில் காலை வைத்தனர். படி சற்று வழுக்கியதால் தாயும் மகளும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டனர்.

அவர்களிருவரும் மூன்றாவது படியில் காலை வைக்க இருந்தனர். அப்போது "பாம்பு பாம்பு," என்று யாரோ கத்தும் சத்தம் கேட்கவே அவர்களுக்கு உடல் நடுக்கமெடுத்தது.

திரும்பிப் பார்த்தபோது அவர்களுக்குப் பின்னால் படியில் ஒரு பாம்பு நெளிந்துகொண்டு இறங்கி வந்துகொண்டிருக்கக் கண்டனர்.

"அம்மா, பாம்பு, பாம்பு!" என்று ரேவதி அலறினாள்.

மறுகணம் அவர்களிருவரும் தங்களையறியாமலே அந்தக் குளத்துத் தண்ணீருக்குள் பாய்ந்தனர்!

5

ரேவதிதான் முதலில் தண்ணீரில் பாய்ந்து விழுந்தாள். அவளுக்கு நீந்துவது என்றால் எப்படி என்று தெரியும். கார்ப்பொரேஷன் நீச்சல்குட்டையில் ஒருமாதகாலம் பயின்றிருக்கிறாள். அவளுக்கும் பாம்பென்றால் எப்போதுமே பயமாதலால் அவள் கை மாற்றுப் போட்டுச் சற்று தூரம் நீந்திச் சென்றாள்.

பெண் எங்கே அமிழ்ந்துவிடப்போகிறாளோ என்று மரகதத்திற்குப் பயம். அவளுக்கு நீந்தத் தெரியாது. பெரிய நீர்நிலையைக் கண்டாலே நடுங்குபவள். ஆனால் தாயல்லவா? அவளது உடல், அது பெற்றெடுத்த குழந்தையைக் காப்பாற்றுவதற்காக அவளையும் மீறி அந்தக் குழந்தையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

ஆனால் நாலடி போவதற்கு முன்னரே அவளுடைய கால்கள் அவளைக் கீழே இழுக்கத் தொடங்கின. அவள் தன் கைகளால் தண்ணீர்மீது அடித்துக்கொண்டிருந்தாள்.

அவள் ஒரு வாய் தண்ணீர் குடித்தாள். அவள் சிரமப்பட்டு மேலே வர முயன்றாள். ''ரேவதி'' என்று கத்தப் பார்த்தாள்; முடியவில்லை.

இன்னொரு வாய் தண்ணீர் உள்ளே போயிற்று. பிறகு மூன்றாவது வாயும் போயிற்று. அவ்ள் உடல் தண்ணீருக்குள் இறங்கத் தொடங்கியது, மரகதம் மூழ்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது ஒரு பலமான கை அவள் இடுப்பைப் பிடித்துத் தூக்கிற்று. அவள் கழுத்துத் தண்ணீர் மட்டத்

துக்கு மேலே வந்தது. அவள் திணறிக்கொண்டு மூர்ச்சை யாகி விட்டாள்.

"பேசாமல் இரு! கையைக் காலை உதைத்துக்கொள் ளாதே!" என்று ஒரு குரல் நிதானமாகக் கூறியது அவள் காதில் விழுந்தது.

"என் குழந்தை!"

"அவளையும் கொண்டுவருகிறேன். பயப்படாதே!" என்று அவளைத் தூக்கிய மனிதன் கூறினன்.

அவன், அவள் தலையைத் தன் கைகளாலே தூக்கிப் பிடித்துக்கொண்டே தன் கால்களை உதைத்துக்கொண்டு நீந்தினன்.

மரகதம் மயக்கம் அடைந்திருந்ததால் அவள் உடல் அசையவில்லை. அந்த மனிதன் அவளை மிகச் சுலபமாகத் தூக்கிக்கொண்டு குளக்கரையை அடைந்தான்.

அப்போது குளக்கரையில் வழிப்போக்கர்கள் சிலர் கூடியிருந்தனர். அந்த மனிதன் மரகதத்தைப் படிகளின் மீது தூக்கிக்கொண்டுவந்து கீழே தரையில் படுக்க வைத் தான். அங்கிருந்தவர்களிடம் "பார்த்துக்கொள்ளுங் கள்" என்று கூறிவிட்டு மறுபடியும் தண்ணீருக்குள் பாய்ந்தான்.

ரேவதி தனக்குத் தெரிந்த மட்டும்—தன்னல் முடிந்த மட்டும் கைகளையும், கால்களையும் உதைத்து நீந் துவதுபோல் செய்துகொண்டு தண்ணீருக்குள் முழுகா மல் சமாளித்துக்கொண்டிருந்தாள்.

அப்போது அவளுக்குச் சற்று தூரத்தில் பாம்பின் தலை தெரியவே அவள் பதறிப்போனள். அவளுக்கு அதற்கு மேல் நீந்த முடியவில்லை. அவள் தண்ணீருக்குள் மூழ்கவிருந்தாள்.

அந்தச் சமயம் இரண்டாம் முறையாகத் தண்ணீ ருக்குள் பாய்ந்து நீந்திச் சென்ற அந்த மனிதன் அவள் பக்கம் வந்துவிட்டான். அவளை ஒரு குழந்தையைப் போல் அலாக்காகத் தூக்கினன். பிறகு அவளைத் தன்

கைகளால் அணைத்திழுத்துக்கொண்டு கால்களை உதைத்து நீந்திக் குளக்கரையை அடைந்தான்.

ரேவதி மயக்கமடைந்துவிடவில்லை. தன் தாய் தரையில் புல்தரையில் படுத்துக் கிடப்பதைக் கண்டதும் "அம்மா, அம்மா," என்று ஓடினாள்.

"இந்தா பேசாதிரு! அவளுக்கு ஒன்றுமில்லை" என்று அந்த மனிதன் கூறினான்.

பிறகு மரகதத்தை தன்னிரு கைகளாலும் எடுத்து தூக்கித் தலைக்குமேல் வைத்துக்கொண்டு தட்டாமாலை சுற்றுவதுபோல் நாலைந்துமுறை சுற்றினான். மரகதம் குடித்திருந்த தண்ணீர் வாய் வழியே வெளியாயிற்று.

அந்த மனிதன் பிறகு அவளை மறுபடியும் கீழே படுக்க வைத்தான். அங்கே கூடியிருந்தவர்களுள் இரண்டு பெண்களிருந்தார்கள். அவர்கள் மரகதத்தின் உடலையும் தலை மயிரையும் துடைத்துவிட்டார்கள். அவள் இடுப்புப் புடவைத் தண்ணீரைப் பிழிந்துவிட்டார்கள். பிறகு அவர்கள் ரேவதிக்கும் அப்படியே செய்தார்கள்.

அந்த மனிதன் அங்கே நின்றிருந்த ஒரு பையனிடம் "இந்தா இரண்டு கப் காப்பி வாங்கிக்கொண்டு வா" என்று கூறி காசு கொடுத்தனுப்பினான்.

ரேவதி தன் தாயின் பக்கத்தில் மண்டியிட்டு அவள் முகத்தைக் கவலையுடன் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் மரகதம் கண்களை விழித்துக்கொண்டு நாலாபுறமும் பார்த்தாள், ரேவதி அவளை அணைத்துக்கொண்டு "அம்மா, அம்மா" என்று அழுதாள். "கண்ணே நீ இருக்கிறாயா?" என்று மரகதம் கேட்டு மகளை இறுகத் தழுவிக்கொண்டாள்.

அவர்களிருவரும் தாங்கள் குளத்துத் தண்ணீருக்குள் மூழ்கிவிடவில்லை. உயிரோடு தானிருக்கிறோம் என்று சந்தேகத்துக்கு இடமில்லால் உணர்ந்த பிறகு தான் அவர்களுக்குத் தங்களைக் காப்பாற்றியவரைப் பற்றிய ஞாபகம் வந்தது.

''அவர் எங்கே?'' என்று கேட்டு மரகதம் எழுந்து உட்கார்ந்தாள்.

''இந்தக் காப்பியைச் சாப்பிடுங்கள்'' என்று கூறிக் கொண்டே அந்த மனிதன் அவர்களிடம் வந்து இருவருக்கும் காப்பியைக் கொடுத்தான்.

''உங்களுக்கு நான்......''என்ற மரகதம் ஆரம்பித்ததும் அந்த மனிதன் ''முதலில் காப்பியைச் சாப்பிடுங்கள்!'' என்று கேட்டுக்கொண்டான்.

அவர்கள் அதைக் குடித்த வண்ணம் அந்த மனிதனை இப்பொழுது நன்ருகக் கவனித்தனர். வாட்ட சாட்டமாகவும் பலசாலியாயுமிருந்தான். அழகு என்று சொல்வதற்கில்லை.

''உங்களுக்கு நான் எப்படி நன்றி கூறுவதென்று தெரியவில்லை,'' என்ருள் மரகதம்.

''உங்களால்தான் என் அம்மா பிழைத்தாள். உங்களுக்கு நான் அதற்காக எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன்,'' என்று ரேவதி கூறினுள்.

''என் குழந்தையை எனக்குக் காப்பாற்றிக் கொடுத்தீர்கள். இதற்கு என்ன வந்தனங்கள் சொன்னுலும் போதாது,'' என்ருள் மரகதம்.

''நான் ஒன்றும் பிரமாதமாகச் செய்துவிடவில்லை. தற்செயலாக இந்தப் பக்கம் வந்தேன். உங்களைப் பார்த்ததும் தண்ணீரில் குதித்தேன் அவ்வளவுதான்.''

''என்ன அவ்வளவுதான் என்கிறீர்கள்? உங்கள் உயிரையும் லட்சியம் செய்யாமல் எங்களைத் தூக்கிக் கொண்டு வந்தீர்களே. நானே என் கலவரத்தில் உங்களையும் என்னேடு இழுத்துக்கொண்டு போயிருக்கலாமல்லவா?'' என்ருள் மரகதம்.

''ஆமாம்! ஆனுல், நீங்கள் பேசாதிருந்தீர்கள். பாப்பா, அது கொஞ்சம் நீஞ்சிப் பார்த்தது, தைரியமான பெண். அதனுல்தான் முதலில் உங்களை எடுத்

துக்கொண்டு வந்துவிட்டு அப்புறம் அவளிடம் போனேன்.''

''அம்மா! பாம்பு தண்ணீரில்கூட என்னைத் துரத்திக்கொண்டே வந்தது!'' என்று ரேவதி கூறியபோது அவள் உடல் நடுங்கியது,

''அது ஏதோ தண்ணீர்ப் பாம்பு. ஒன்றுமே செய்யாது,'' என்று அந்த மனிதன் கூறிச் சிரித்தான்.

''நீங்கள் சொல்கிறீர்கள்.எனக்கு அந்த வார்த்தையே பயமாயிருக்கிறது'' என்றாள் ரேவதி.

''ஆமாம். நீங்கள் மிகவும் களைத்துப்போயிருக்கிறீர்களே, உங்களுக்கு ஒன்றுமில்லையே!'' என்று மரகதம் கவலையுடன் அந்த மனிதனை விசாரித்தாள்.

''எனக்கா?'' என்று அந்த மனிதன் கேட்டுவிட்டுப் பதில் சொல்லத் தயங்குவதுபோலிருந்தான். பிறகு அவன் தன் தலையின் பின் பக்கத்தைத் தடவிவிட்டுக் கொண்டே ''கொஞ்சம் அடிபட்டாப்போலிருக்கிறது.'' என்றான்.

மரகதம் தன்னையுமறியாமல் அடிபட்ட அந்த இடத்தைத் தன் கையால் தொட்டுப் பார்க்கக் கிளம்பியவள் தன்னை அடக்கிக்கொண்டாள்.

''தண்ணீருக்குள்ளே ஏதோ பாறையுமிருக்கும் போலிருக்கு. அதில் கொஞ்சம் மண்டை மோதியிருக்கும் வேறொன்றும் இல்லை,'' என்று அவன் மிக அலட்சியமாகச் சொன்னான்.

''வேறொன்றுமில்லையாவது! வலிக்கவில்லையா? எங்களாலே உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்! அதை நாங்கள் ஒரு நாளும் மறக்கமாட்டோம். உங்கள் பெயர் என்னவோ?'' என்று மரகதம் கேட்டாள்.

''அவசியம் தெரியவேண்டுமா?''

''அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள். கடவுள்மாதிரி வந்து எங்களைக் காப்பாற்றி இருக்கிறீர்கள். பெயரைச் சொல்லக்கூடாதா?''

''என் பெயர் கேசவன்.''

''அப்படியா? நாங்கள் வந்து...'' என்று மரகதம் தங்களைப் பற்றித் தெரிவித்துக்கொள்ள ஆரம்பித்தபோது,

கேசவன் தன் தலையையாட்டி ''எனக்குத் தெரிவிக்க வேண்டாம்,'' என்று கெஞ்சும் பாவனையில் கேட்டுக் கொண்டான்.

''ஏன்?'' என்று மரகதம் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''நான் இந்த விஷயத்தை இத்துடன் இந்த இடத்திலேயே மறந்துவிட விரும்புகிறேன்,'' என்ருன்.

''உங்களை யார் மறக்கவிடப்போகிருர்கள்? இவள் என் அம்மா மரகதம், நான் ரேவதி. என் அப்பா துரைசாமி, பட்டணத்திலே துரைசாமி சைக்கிள் கம்பெனியின் சொந்தக்காரர். நாங்கள் மந்தவெளிப்பாக்கத்தில் எட்டாம் நம்பர் தெருவில் இருக்கிருேம்.

கேசவன் புன்னகை புரிந்தவண்ணம் இந்த விவரங்களைக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு ''நான் அந்தப் பக்கம் வந்தால் உங்கள் வீட்டிற்கு வருகிறேன்,'' என்ருன்.

''அவர் உங்களை விடவே மாட்டார். தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடுவார். தாங்கள் செய்த இந்தப் பெரிய உதவிக்கு...'' என்ருள் மரகதம்.

''பெரிய தியாகத்திற்கு...'' என்ருள் ரேவதி.

''இந்த வார்த்தைகளைத் தவிர வேறு ஏதாவது சொல்லுங்கள்'' என்ருன் கேசவன் தன் காதுகளிரண்டையும் பொத்திக்கொண்டு. ''தியாகமாம், உதவியாம்!'' என்று வெறுப்புடன் கூறினுன்.

அப்போது அந்த வழியாகச் சென்றுகொண்டிருந்த ஒரு ஜட்கா வண்டியைக் கவனித்தான். அது காலியாகச்

செல்வதைக் கண்டதும் கைதட்டி அதைக் கூப்பிட்டான்.

"இந்தப் பக்கத்தில் வேறு வண்டி ஒன்றும் கிடைக்காது. இதில் ஏறிக்கொண்டு ரயில்வே ஸ்டேஷன் செல்லுங்கள். நானே உங்களுடன் வந்து உங்களை ரயிலேற்றிவிட்டு வருவதுதான் மரியாதை; கடமையும்கூட...ஆனால் வழியில் எனக்குத் தெரிந்தவர்கள் யாராவது பார்த்தால் என்னுடன் பேச்சுக்கொடுப்பார்கள். விஷயம் அடிபடும்."

"நீங்கள் உதவி செய்தது நாலு பேருக்குத் தெரியட்டுமே, தெரிய வேண்டியதுதானே!" என்றாள் மரகதம்.

அதெல்லாம் எனக்குப் பிடிப்பதில்லை. யாராவது என்னைப் புகழ்ந்தாலே எனக்கு என்னமோ போலிருக்கும். தவிர நான் நீங்கள் நினைக்கிறபடி பெரிதாக ஒன்றும் செய்துவிடவில்லையே!"

"அப்படி மட்டும் சொல்லாதீர்கள். உங்களுக்கு அது பெரிதாக இல்லாதிருக்கலாம். ஆனால் நாங்கள் இரண்டு பேரும் இங்கே நின்று பேசிக்கொண்டிருப்பது உங்களால்தான். இவள் அப்பா உங்களை ஏன் அழைத்து வரவில்லை என்று என்னைக் கோபிப்பார்," என்றாள் மரகதம்.

"என்னைக் கேட்டால் அவரிடம் இந்தச் சம்பவத்தைப் பற்றி சொல்லவே கூடாதென்பேன். அவருக்கு அநாவசியமான மனக்கவலையை உண்டுபண்ணுதீர்கள்."

கேசவன் இப்படிக் கூறிக்கொண்டிருக்கும்போது ஜட்கா வண்டி வந்து நின்றது.

"ஏறிக்கொள்ளுங்கள்!" என்று கேசவன் கேட்டுக்கொண்டான்.

தாயும் மகளும் அப்படியே செய்தார்கள். கேசவன் அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு பையனைக் கூப்பிட்டு "தம்பி! இவர்களோடு ரயில்வே ஸ்டேஷன்வரை போய்

விட்டுவா!'' என்று கூறினன். அந்தப் பையனுக்குத் தன்னிடமிருந்து எட்டணு சில்லரை எடுத்துக்கொடுத் தான்.

பிறகு ''ஆமாம்! உங்கள் பணப் பை'' என்று அவன் கேட்டு, அது அங்கே கீழே கிடந்ததை எடுத்து அவர் களிடம் கொடுத்தான். ''பணம் சரியாக இருக்கிறதா பாருங்கள்!'' என்றுன்.

ரேவதி அதைத் திறந்து பார்த்து ''பணம் அப்படியே இருக்கிறது'' என்ருள்.

வண்டி கிளம்பவிருந்தபோது தாயும், மகளும் அவ னுக்குப் பெரிய கும்பிடுபோட்டு ''தாங்கள் கட்டாயம் வரணும்'' என்று கேட்டுக்கொண்டார்கள்.

''திடீரென்று ஒரு நாளைக்கு நாஞக வந்து நிற் பேன். அப்புறம் இவன் எங்கேயடா வந்து தொலைந் தான், என்று உங்களுக்கு ஆகிவிடும்'' என்று கேசவன் சிரித்துக்கொண்டே கூறினன்.

வண்டி கிளம்பிச் சென்றது. அது ஸ்டேஷனுக்குப் போய்க்கொண்டிருந்தபோது தாயும் மகளும் அந்தக் கேசவனைப் பற்றியே புகழ்ந்து பேசிக்கொண்டு போயி னர்.

''இவ்வளவு தன்னலமற்ற மனிதனை நான் பார்த் ததே இல்லை!'' என்ருள் மரகதம்.

''கதைகள், சினிமாப் படங்களில்தான் இப்படி சேவை செய்கிறவர்கள் வருகிருர்கள்,'' என்ருள் ரேவதி.

''அப்பாவினிடம் சொல்லி அவரைத் தேடிப் பிடித்து அழைத்துக்கொண்டும் வரச்சொல்லணும்,' என்ருள் மரகதம்.

வண்டி ஸ்டேஷனை அடைந்ததும் அவர்கள் ஜட்கா வுக்குக் கூலி கொடுத்தனுப்பிவிட்டார்கள். தங்களுடன் வந்த பையனுக்கு ரேவதி ஓர் எட்டணுவைக் கொடுத்து-

"அந்தக் கேசவன் என்கிறது யார்? எங்கே இருக்கிறார் தெரியுமா?'' என்று விசாரித்தாள்,

"தெரியாதுங்க'' என்று அவன் கூறிவிட்டுச் சென்றான்.

ரேவதி டிக்கெட் வாங்கச்சென்றவள், வண்டி கடைசியாகப்போய் நிற்கும் பீச் ஸ்டேஷனுக்கே டிக்கெட்டுகள் வாங்கினாள். அவர்கள் இறங்கவேண்டியது எழும்பூரில் தான். இருந்தாலும் முன்போல் தவறிப்போய் அதற்கப்பாலுள்ள ஸ்டேஷனில் இறங்கினால் என்ன செய்வதென்று முன் ஜாக்கிரதையாக அப்படிச் செய்தாள்! இப்போது அவள் டிக்கெட் வாங்கியது முதல் வகுப்பிற்கு!

தாயும், மகளும் பெண்களுக்கான ரயில் பெட்டியில் ஏறினர். அதில் அவர்களைத் தவிர வேறு யாருமில்லை. வண்டி புறப்பட்டதும் அவர்கள் அதுவரை அடக்கிவைத்துக்கொண்டிருந்த துக்கம் பீறிட்டுக்கொண்டு கிளம்பியது.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு வாய்விட்டழுதார்கள். பிறகுதான் அவர்களுக்கிருந்த படபடப்பு அடங்கி நிம்மதி ஏற்பட்டது.

"அம்மா! இன்று பிழைத்தோம்!'' என்றாள் ரேவதி.

"ஆமாம் என் கண்ணே! நீ கொஞ்சம் நீந்துவாயே?'' என்று தாயார் கேட்டாள்.

"நீந்திப் பார்த்தேன். ஆனால் அந்தப் பாம்பு பக்கத்தில் வந்துவிட்டது!''

"நல்ல வேளை அது தண்ணீர் பாம்பாம்!''

"எதுவாயிருந்தாலென்ன?''

"அது எப்படி அங்கே வந்தது?''

"பக்கத்துத் தோப்பிலிருந்து வந்திருக்கும். இல்லை அது குளத்தங்கரைப் படியிலேயே படுத்துக்கொண்டிருந்ததோ என்னமோ?''

''அம்மா நாம் ஒருநாளுமில்லாமல் இப்படித் தனியாக வந்ததே பிசகு.''

''மோட்டார் வண்டியிலே போய் ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அப்போது என்ன செய்திருப்போம்? ஏதோ கடவுள் நம்மைக் காப்பாற்றிவிட்டார். என்ருள் மரகதம்.

''ஏன் அம்மா! அப்பாவினிடம் இதை எல்லாம் எப்படிச் சொல்கிறது? அவர் ஏற்கெனவே நம்மைத் தனியாக அனுப்பிவிட்டுக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார் அந்தக் கேசவன் சொன்னபடி அப்பாவினிடம் ஒன்றுமே தெரிவிக்காமலிருந்துவிடலாமா?'' என்ருள்.

இதைக் கேட்டபோது தாயின் முகத்தில் அதிருப்திக் குறி தோன்றியது.

''என்ன ரேவதி! நாம் அப்பாவிடம் இதுவரை எந்த விஷயத்தையாவது ஒளித்ததுண்டா'' என்று கேட்டாள்.

''இல்லை. நான் இந்த யோசனை சொன்னது தப்புத்தான் அம்மா,'' என்ருள் பெண்.

மரகதம் சற்றுயோசனை செய்த வண்ணமிருந்தாள். ஒரு மூன்ருவது மனிதன் தன்னைத் தண்ணீரில் இறுகக் கட்டிப் பிடித்துத்தூக்கி வந்ததைப்பற்றிச் சொன்னுல் தன் கணவன் என்ன நினைப்பாரோ என்று எண்ணி சிறிது கவலைப்பட்டாள்.

உயிரைக் காப்பாற்றுவதற்காக அப்படிச் செய்தாலும் எந்தக் கணவனும் பிறகு சாவகாசமாக அதைப் பற்றி நினைத்துப் பார்க்கும்போது அருவருப் படையக் கூடும் என்று அவளுக்குத் தோன்றிற்று. ஆனுல், தன் கணவன் அப்படி எல்லாம் நினைக்கக் கூடிய மட்டமான மனப்பான்மை உடையவரல்ல என்றெண்ணித் தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டாள்.

''ஏன், அம்மா! அப்பாவிடம் யார் சொல்கிறது?'' என்று ரேவதி கேட்டாள்.

''நான் சொல்கிறேன்'' என்றாள் தாயார்.

''நான் முதலில் ஆரம்பிக்கிறேன். அப்புறம் நீ சொல்லு!''

''சரி!''

'' இங்கிருந்து போகும்போதே ஆரம்பித்து விடக்கூடாது''

''ஆமாம்!''

''சாவகாசமாகச் சாப்பிட்ட பிறகு சொல்லலாம்.''

''சரி!'' என்றாள் தாயார்.

''அம்மா! நீ உன் முகத்தைச் சந்தோஷமாக வைத்துக்கொள்ளணும்!''

''சரி!''

''உனக்கு வெளிக்கு வேஷம் போடத் தெரியாதே. வெளியில் இஷ்டப்படி ஜாலியாகப் போய்விட்டு சந்தோஷமாகத் திரும்பி வருவதுபோல் முகத்தை வைத்துக் கொள்ளணும்''

''பார்க்கிறேன்!''

''என்ன பார்க்கிறாய்? அதோ உன் கண்ணில் இப்பொழுதுநீர் அரும்புகிறதே!'' என்று ரேவதி கூறித் தன் தாயின் கண்களைத் துடைத்து விட்டாள்.

''அம்மா! விசிறியைப் போடுகிறேன். துணியை நன்றாகக் காய வைத்துக் கொண்டு விடுவோம்'' என்று ரேவதி கூறி பெட்டிக்குள்ளிருந்த மூன்று மின்சார விசிறிகளையும் போட்டாள்.

''அம்மா! வீட்டிலிருந்து கிளம்பும்போது பௌடர் போட்டுக் கொண்டு நெற்றியில் குங்குமம் இட்டுக்

கொண்டு வந்தோம். இப்போது நெற்றியில் ஒன்றும் இல்லையே!''

''வழியில் ஏதாவது ஒரு கோவிலுக்குப் போய் கடவுள் தரிசனஞ்செய்து பிரசாதம்வாங்கி இட்டுக்கொண்டு போவோமே!'' என்றாள் தாயார்.

''அது நல்ல யோசனை. இன்னொரு அம்மாவாயிருந்தால் கடையில் வாங்கி இட்டுக் கொண்டு போவோமே என்று சொல்லுவாள்'' என்று ரேவதிகூறித் தன் தாயை அணைத்துக் கொண்டாள்.

''அம்மா! நாமிரண்டுபேரும் இருக்கிறோம்!'' என்றாள் ரேவதி.

''ஆமாண்டா கண்ணு!''

''நம்ப அப்பாவுக்காக இருக்கிறோம். நாம் அவருக்காக இருந்தாக வேண்டும்,'' என்று மரகதம் கூறிய போது அவள் குரல் தழு தழுத்தது.

''அம்மா! அசோக சக்கரவர்த்தி எந்த வருடம் துறந்தார். அவருக்கு எத்தனை மனைவிகள்? மனைவிகள் இல்லாவிட்டால் ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை? மனைவிகள் இருந்தால் ஏன் அவர்களைக் கல்யாணம் செய்து கொண்டார்? இதற்கெல்லாம் பதில் நூறு வார்த்தைகளில் மூன்று நிமிஷத்தில் சொல்லவேண்டும்!'' என்று ரேவதி பரிட்சைக் கேள்வி கேட்டாள்.

மரகதம் சிரித்தாள்.

''அம்மா! வீட்டுக்குப் போய்ச் சேருகிற வரையில் குரோமேசுவரர் குளத்தைப் பற்றிய பேச்சையே எடுக்கக் கூடாது. நான் உனக்குக் கதை சொல்கிறேன். கேட்டுக் கொண்டு வா!'' என்று கூறித் தான் படித்த ஒரு நாவல் கதையைச் சொல்லி வந்தாள்.

வண்டி எழும்பூர் ஸ்டேஷன் வந்ததும் அதிலிறங்கினார்கள். ஒரு டாக்ஸி பிடித்து ஏறி மயிலை கபாலீஸ்வரர்

கோவிலுக்குச் சென்ருர்கள். தங்களை ஒரு தண்ணீர்க் கண்டத்தினின்றும் தப்புவிக்கச் செய்ததற்காக ஆண்டவனை உள்ளம் உருகப் பிரார்த்தித்து வணங்கி விட்டுத் தங்கள் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

அங்கே பங்களா வாசலிலே துரைசாமி நின்று வீதியின் இரு புறங்களையும் மாறி மாறிக் கவலையுடன் பார்த்துக் கொண்டு நின்றிருக்கக் கண்டார்கள்.

7

வண்டியிலிருந்து இறங்கியதும் ரேவதி "வந்து விட்டோம். நாங்கள் பத்திரமாக, அப்பா!" என்று கூறிக்கொண்டே தன் தந்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

மரகதம் அவரைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள்.

"ஏன் இங்கே வந்து நிற்கிறீர்கள்?" என்று ரேவதி கேட்டாள்.

"ஏனு? சென்ட்ரல் ஸ்டேஷனுக்கும் வேறு வண்டி அனுப்பி இருக்கிறேன். மணி ஏழுக்குமேல் ஆகிவிட்டதே என்று எனக்குக் கவலையாயிருந்தது," என்ருர் துரைசாமி.

"பாவம், எங்களை எதிர்பார்த்துப் பார்த்து முகமெல்லாம் கன்றிப் போய் இருக்கிறது," என்று ரேவதி பரிதாபப்பட்டாள்.

"இன்னும் பத்து நிமிஷங்கள் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அம்பத்தூரிலுள்ள என் சிநேகிதனுக்கு டெலிபோன் செய்வதாக இருந்தேன்."

"நல்லவேளை, அதற்குள் நாங்கள் வந்துவிட்டோம். இன்னொரு பத்து நிமிஷம் கூட ஆனுல் எல்லாப் போலீஸ்

ஸ்டேஷன்களுக்கும் டெலிபோன் செய்து விடுவீர்கள்,'' என்று ரேவதி பரிகசித்தாள்.

''ஆமாம்!'' என்றார் தந்தை.

''எத்தனை சாமிக்கு எத்தனை எத்தனை தேங்காய் உடைக்கிறதாக வேண்டிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று ரேவதி கேட்டாள்.

''அது ஒரு ஆயிரத்துக்கு மேலே போகிறது,'' என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

''இது என்ன அப்பாவோ?'' என்று ரேவதி அவர் கையை அமுக்கித் தன் அன்பைத் தெரிவித்துக் கொண்டாள்.

''உன் மேல் அவ்வளவு ஆசை!'' என்றாள் மரகதம்.

''இல்லை. உன் மேல்தான்'' என்றாள் ரேவதி.

''இரண்டுபேர் மீதுந்தான்'' என்றார் துரைசாமி.

அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டே வீட்டிற்குள் சென்றார்கள்.

''எங்கெங்கே போனீர்கள்?'' என்று துரைசாமி கேட்டார்.

''அப்பா! வெளியிலேயிருந்து வந்ததுமா இதெல்லாம் கேட்பார்கள்? சாப்பிட்ட பிறகு சாவகாசமாகச் சொல்லுகிறோம்,'' என்றாள் ரேவதி.

அவள் தன் தாயைப் பார்த்தபோது அவள் அழத் தயாராக இருந்ததைக் கவனித்தாள்.

உடனே தலையை ஆட்டி சைகை செய்தாள். ''இந்த அம்மாவுக்கு ஒருநாள் வெளியில் போய்விட்டு வருகிறதற்குள்ளே மூஞ்சி அடியோடு வாறிவிட்டது. அலைந்த சிரமம் கண்ணெல்லாம் சிவந்து போச்சு!'' என்றாள்.

''அதற்குத்தான் இரண்டு வண்டிகளை எடுத்துக் கொண்டு போகச் சொன்னேன்'' என்றார் துரைசாமி.

அவர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது இடையே அவர்களது பிரயாணத்தைப் பற்றிய பேச்சு வரத்தான் செய்தது.

''வெளியில் ஏதாவது சாப்பிட்டீர்களா?'' என்று துரைசாமி விசாரித்தார்.

''முதல்தரமான டிபன். தலைகீழே நின்றாலும் அது மாதிரி இந்த ஊரில் கிடைக்காது'' என்றாள் ரேவதி.

''என்னென்ன பட்சணம்?''

''புளியோதரை, தயிர் சாதம், மோர்க்குழம்பு வடை.''

''தேவலையே! குடிக்கிறதற்கு?''

''காப்பி சாப்பிட்டோம். அதுவும் ஒரு குளத்தங் கரையிலே. ஜோராகப் பிக்னிக்மாதிரி!'' என்றாள் ரேவதி. அவள் தன் தாயாரைப் பார்த்துவிட்டு ''அம்மாவின் கண்ணில் ஜலம் வருகிறது பார்த்தீர்களா? புளியோதரையிலிருந்த இரண்டு மிளகாய்ப் பழத்தை விழுங்கி விட்டாள்'' என்றாள்.

தன் மகள் இப்படி சாமர்த்தியமாகப் பேசுவதைக் கேட்டதும் மரகதம் தன் துக்கத்தை மறந்து வாய்விட்டுச் சிரித்தாள்.

''இதெல்லாம் அம்பத்தூரிலேயா?''

''இல்லை. குரோம் பேட்டையில்.''

''என்னது! அம்பத்தூருக்குப் போகவில்லையா?''

''அங்கே போகிறதாகத் தானிருந்தோம். ஆனால் திட்டம் மாறிப் போய்விட்டது. ஏன் மாறிவிட்டது என்று சொல்லிக் கொண்டிருந்தால், இப்போது சாப்பாடு ஓடாது'' என்றாள் ரேவதி.

பிறகு அவர்கள் சாப்பாட்டை முடித்துக்கொண்டு மாடிக்குப் போய் உட்கார்ந்து கொண்டதும் துரைசாமி அவர்களைப் பிடித்துக்கொண்டார்.

''நீ இங்கேயிருந்து கிளம்பினாய்! அப்புறம் நடந்ததை எல்லாம் வரிசையாகச் சொல்லு'' என்று கேட்டார்.

''இங்கிருந்து கிளம்பினோமா?'' என்று ரேவதி ஆரம்பித்தாள்.

தவறான பஸ்ஸில் ஏறியதைக் கேட்டு துரைசாமி சிரித்தார். இறங்க வேண்டிய பல்லாவரம் ஸ்டேஷனைத் தாண்டி குரோம்பேட்டைக்குச் சென்று விட்டதைப் பற்றிக் கூறியபோது எல்லோருமே சிரித்தார்கள்.

''நல்லவேளை கன்னியாகுமரிக்குப் போய்விடவில்லையே!'' என்றார் துரைசாமி

பிறகு குளம், கோவில் இவற்றைப் பற்றிய புராணக் கதையைக் கேட்டு துரைசாமி ஆச்சரியமடைந்தார்.

''இந்திரனாவது? பாதம் தேய்கிறதாவது? குரோம் நாதராவது! எவனோ கதை கட்டியிருக்கிறான். கிட்டதட்ட நூறு வருஷத்திற்கு முன்புதானே 'குரோம்' என்பது ஏற்பட்டது. வெள்ளைக்காரர் கம்பெனி ஒன்று அங்கு இருக்கிறது'' என்றார் துரைசாமி.

''அது என்னமோ! அங்கிருந்த ஒருத்தர் சொன்ன கதை அது. அம்மாவும், நானும் அந்தக் குளத்துத் தண்ணீரைத் தலையில் தெளித்துக் கொள்ளப் போனோம் அப்போ அங்கே ஒரு பாம்பு...!''

''பாம்பா!'' என்று துரைசாமி கேட்டுப் பதறினார்.

''அது ஒன்றும் செய்யவில்லை. அது பாட்டில் போய் விட்டது'' என்று ரேவதி கூறினாள். பிறகு தன் தாய் பக்கம் திரும்பிப் ''பாக்கியைக் கூறு அம்மா!'' என்று சொல்லிவிட்டு ரேவதி எழுந்து சற்று அப்பால் சென்றாள்.

மரகதம் வாயைத் திறந்தாள். ஆனால் நா எழவில்லை. வார்த்தைகள் கிளம்பவில்லை. அவள் உடல் நடுங்கியது; உதடுகள் துடித்தன.

''என்ன!'' என்று துரைசாமி பதறிப் போனார்.

''ரேவதி ரேவதி!'' என்ற வார்த்தைகள் அவள் வாயில் இருந்து கிளம்பின.

''என்ன அம்மா!'' என்று அவள் ஓடோடியும் வந்தாள்.

''எங்களை அணைத்துக் கொள்ளுங்கள்!'' என்று கூறி கணவன் மீது சாய்ந்தாள்.

துரைசாமி தன் பெண்ணையும் மகளையும் இறுக அணைத்துக் கொண்டார்.

''நாங்களிருவரும் உயிர் தப்பி வந்தோம். குளத்தில் விழுந்து விட்டோம்!'' என்று மரகதம் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே கூறினாள்.

துரைசாமியின் தலை சுழன்றது. பிறகு சமாளித்துக் கொண்டு, ''நல்ல வேளை இதோ இருக்கிறீர்கள்!'' என்று அவர்களிருவரையும் தடவிக் கொடுத்துக் கொண்டே கூறினார்.

''நாம் இனி இப்படிச் சேர்ந்திருக்கப் போகிறோமா என்று இருந்தது. தண்ணீருக்குள் மூழ்கிய அந்த ஒரு கணத்தில் என்னென்னமோ எல்லாம் எண்ணிவிட்டேன்,'' என்றாள் மரகதம்.

ரேவதி சென்று அறைக் கதவைச் சாத்தி விட்டுத் திரும்பி வந்தாள்.

''உட்காருங்கள் அப்பா... நடந்ததைச் சொல்லுகிறேன்,'' என்று தாங்களிருவரும் தண்ணீரில் விழுந்தது முதல், வீட்டு வாசலுக்கு வந்து டாக்ஸியில் இறங்கிய வரை நடந்த விஷயங்களை விவரமாகக் கூறினாள்.

துரைசாமி பதுமைபோல் உட்கார்ந்தவாறு கேட்டுக் கொண்டிருந்து விட்டு ஒரு பெருமூச்சுவிட்டார். மனைவியும், மகளும் எதிரே உயிருடன் இருப்பதைக் கண்கொட்டாமல் கவனித்துத் திருப்தியடைந்தார்.

"இதைப் பற்றிக் கேட்கவே எனக்குப் பயமாயிருக்கிறதே," என்ருர். பிறகு "உங்களைக் காப்பாற்றிய அந்த மகராஜன் பெயர் என்ன என்று சொன்னீர்கள்?" என்று கேட்டார்.

"கேசவன்!" என்ருள் மரகதம்.

"தன் ஊர் விலாசம் கூடக் கொடுக்க இஷ்டப்படவில்லை" என்ருள் மரகதம்.

"அவரை நாங்கள் எவ்வளவு வற்புறுத்திக் கூப்பிட்டும் வரமாட்டேன் என்று சொல்லி விட்டார்" என்ருள் ரேவதி.

"அவர் எங்களைக் காப்பாற்றியதாகக் கூடச் சொல்லக் கூடாதாம். தாம் அந்தப் பக்கம் தற்செயலாக வந்தவர் எங்களைத் தண்ணீரிலிருந்து எடுத்து விட்டாராம். அவ்வளவு தானும்."

துரைசாமி ஆச்சரியமடைந்து "என்ஞல் நம்பவே முடியவில்லை. இந்தக் காலத்தில் மனிதன் இவரைப் போலப் பெருமைக்கோ பணத்திற்கோ, ஆசைப்படாமலிருக்கிறது அபூர்வம்," என்ருர்.

"அவரை எப்படியாவது கண்டுபிடித்து அவருக்கு நீங்கள் நன்றி தெரிவிக்க வேண்டும்," என்று மரகதம் கேட்டுக் கொண்டாள்.

"அதைப் பற்றி நீ எனக்குச் சொல்லணுமா, மரகதம்?...நன்றி மறக்காதிருக்கிறதென்பது எனது கொள்கையாயிற்றே. அதைப் பற்றின நீதி வாக்கியங்களை அறைகளில் படம்போட்டு மாட்டியிருப்பதை நீங்கள் கூடப் பரிகாசம் செய்கிறது உண்டே" என்ருர். பிறகு "அவர் எப்படி இருப்பார்?" என்று விசாரித்தார்.

"நல்ல உயரமாய்ப் பலசாலியாயிருக்கிருர்," என்ருள் மரகதம். "என்ன வயசிருக்கும்?"

"முப்பத்தைந்து அல்லது நாற்பது இருக்கலாம்" என்று ரேவதி கூறிஞள்.

"நாட்டுப்புறத்து ஆசாமியா?"

"அப்படித் தெரியவில்லை. பேசுகிறது, நடந்து கொள்கிறதெல்லாம் நாகரிகமாக இருக்கு. எங்களோடு பேசுகிறபோது அவர் தலையைக்கூட நிமிரவில்லை. அத்தனை வெட்கமும் யோக்கியதையும்" என்று மரகதம் சேவகனைப் புகழ்ந்து உற்சாகமாகப் பேசினாள்.

"என் கண்ணின் இரண்டு மணிகளையும் எனக்குக் காப்பாற்றிக் கொடுத்த அவருக்கு நான் அடிமையா யிருக்கவும் தயாராயிருக்கிறேன். அவர் என்ன விரும்பி னாலும் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று தமது நன்றி உணர்ச்சி பொங்கக் கூறினார்.

"எல்லாவற்றையும் மறந்து தூங்குவோம் அப்பா. நாளைக்குப் பாக்கியைப் பேசிக் கொள்ளலாம்" என்று ரேவதி பேச்சை முடித்தாள்.

மறுநாள் காலையிலேயே துரைசாமியும், மரகதமும் அந்தக் கேசவனைத் தேடுவதற்காகப் புறப்பட்டு விட்டார்கள். அவர்கள் மோட்டார் வண்டியில் குரோம் பேட்டையிலுள்ள அந்தப் பாழடைந்த கோவிலுக்குச் சென்றார்கள்.

அந்தக் குளத்தைப் பார்க்கவும் மரகதத்திற்குப் பய மாயிருந்தது. தங்களுக்கு நேர்ந்த விபத்தைப் பற்றிய நினைவு வந்து அவளைக் கதி கலங்கச் செய்தது. அவள் தன் கணவன் பக்கத்தில் நெருங்கி அவர் மீது இடித்துக் கொண்டு நடந்து சென்றாள்.

துரைசாமி அந்தப் பகுதியில் குடியிருந்தவர்களைக் கண்டு கேசவனைப் பற்றி விசாரித்தார். யாருக்கும் அவ னைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. அந்த ஊரில் பல இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு வீடு திரும்பி னார்கள்.

மறுநாளும் இதேபோன்று கணவனும், மனைவியும் குரோம்பேட்டையில் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

அவர்கள் அப்படிச் சுற்றுவதைக் கவனித்த சிலர் அவர்கள் அந்த ஊரில் நிறைய வீடுகள் வாங்கிப் போடுவதற்காக முயற்சி செய்கிறார்கள் என்று புரளி செய்தார்கள்.

மூன்றாவது நாள் துரைசாமிமட்டும் தனியாகக் கிளம்பிச் சென்றார். அவர், கோவிலையடுத்த தோப்பின் பக்கம் ஓர் உயரமான பலமான ஆசாமி சென்று கொண்டிருப்பதைக் கண்டார். அவன் நடை உடை பாவனைகள் எல்லாம், மரகதமும், ரேவதியும் அந்தக் கேசவனைப் பற்றிக் கூறியது போலவே இருந்தன.

அந்த ஆள் சற்றுத் தூரத்தில் வண்டி ஒன்று வேகமாக வந்துகொண்டிருப்பதைக் கண்டான். அவன் சென்று கொண்டிருந்த தெரு மிகவும் குறுகியதாதலால், அவன் பக்கத்திலிருந்த சந்து ஒன்றில் புகுந்து சென்றான்.

அவன் மறைந்து விட்டால் என்ன செய்கிறதென்று பயந்து துரைசாமி வண்டியை முன்னிலும் வேகமாய் ஓட்டிச் சந்துக்குள் போகச் சொன்னார்.

சந்தின் மற்றொரு கோடியில் சென்று கொண்டிருந்த ஆசாமி வண்டி தன்னைத் தொடர்ந்து வருவதைக் கண்டதும் ஒரே ஓட்டமாய் ஓடலானான்.

வண்டியும் பின் சென்றது.

அவன் மற்றொரு சந்தில் புகுந்தான்.

வண்டியும் பின் தொடர்ந்தது. அந்த ஆள் திடீரென்று கீழே விழுந்து விட்டான்.

துரைசாமியின் வண்டி நின்றது. உடனே அவர் கீழிறங்கி ஓடோடியுஞ் சென்று கீழே விழுந்த அந்த மனிதனைத் தூக்கி எடுத்தார்.

''ஏன் அய்யா? என்னைத் துரத்திக் கொண்டு வருகிறீர்?'' என்று அவன் பயந் தோன்றக் கேட்டான்.

"உன் பெயர் கேசவன்தானே?" என்று துரைசாமி விசாரித்தார்.

"இல்லை. நான் பழனிசாமி. நான் ஒன்றும் உங்களுக்குக் கெடுதல் செய்யவில்லையே? என்மேல் எதற்காக வண்டியை ஏற்றுவதற்காகத் துரத்துகிறீர்கள்?" என்று அவன் அழுதுகொண்டே கேட்டான். தான் தவறான மனிதனைத் தேடிப்பிடித்ததை துரைசாமி உணர்ந்தார்.

"எனக்குப் பழக்கமான கேசவன் மாதிரி இருந்தது. பார்த்துப் பேச வந்தேன். கோபித்துக்கொள்ளாதே" என்று அவனிடம் ஒரு பத்து ரூபாய் நோட்டைஎடுத்துக் கொடுத்துவிட்டுப் போனார்.

இதற்குப் பிறகு அவர் தாம் நேரே சென்று தேடும் முயற்சியைக் கைவிட்டார்.

ஆனால் அவர் அதற்காகச் சும்மா இருந்துவிடவில்லை. அந்த நன்றியறிதல் உணர்ச்சி அவரைத் தூண்டிவிட்டுக் கொண்டே இருந்தது. அந்தக் கேசவனைக் கண்டுபிடித்துத் தமது நன்றியைச் சரியானபடி தெரிவித்துக் கொண்டாலன்றி அவருக்குத் தூக்கம் பிடிக்காது போலிருந்தது.

அவர் பத்திரிகைகளில் எல்லாம் பின் வருமாறு விளம்பரஞ் செய்தார்.

> இந்த மாதம் முதல் தேதியன்று குரோம் பேட்டை மாந்தோப்பு கோயிலின் குளத்தருகில், இரண்டு பெண்மணிகளைக் காப்பாற்றிய கேசவனைச் சந்திக்க விருப்பம். அவரது முகவரியைத் தெரிவிப்பவர்களுக்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும்.

அவர் தமது பெயரைத் தெரிவித்துக்கொள்ள விரும்பாமல் அந்தப் பத்திரிகைகளின் ஒரு தபாற்பெட்டி எண்ணின் முகவரியைக் கொடுத்திருந்தார்.

இந்த விளம்பரம் வெளியான சில தினங்களுக்கெல்லாம் நாலைந்து கடிதங்கள் வந்தன. அவற்றிலிருந்து ஒரு தகவலும் தெரியவில்லை.

இரண்டு ஆசாமிகள் தாங்கள்தான் அந்தக் கேசவன் என்றுக் கூறிக்கொண்டு வந்தார்கள். உடலமைப்பிலேயே அவர்களுக்கும் கேசவனுக்கும் எத்தனையோ வித்தியாசம். துரைசாமி அவர்களிருவரும் ஆள் மாறாட்டஞ் செய்வதாகப் போலீஸுக்குத் தெரிவிக்கப் போவதாகக் கூறவே அவர்கள் மெதுவாக நழுவிச்சென்றனர்.

அவர்கள் சென்ற பிறகு மூன்றாவதாக ஒருவர் வந்தார். அப்போதுதான் இரண்டு பேரைத் துரத்தியடித்துவிட்டு உட்கார்ந்திருந்த துரைசாமி அந்த ஆசாமியுடன் பேச மறுத்துவிட்டார்.

ஆனால், அவர் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதன் மீது "நீர் யார் கேசவனா?" என்று கேட்டு வைத்தார்.

"இல்லை, மாதவன்" என்று அந்த மனிதர் சொன்னான்.

"என்ன விசேஷம்?"

"எனக்கு அந்தக் கேசவனைத் தெரியும்!"

"எப்படி?"

"அவர் எனது நண்பர்."

"சமீபத்தில் எப்போது பார்த்தீர்?"

"இன்று காலையிலேயே."

"என்னது?"

"ஆமாம்! அவர் உங்கள் மனைவியையும், பெண்ணையும் குளத்திலிருந்து எடுத்து விட்டதைப் பற்றிக்கூடச் சொன்னார்."

இதைக் கேட்டதும் அவர் எழுந்திருந்து மாதவன் கைகளைப் பிடித்துக்கொண்டார்.

"அவர் எங்கே இருக்கிறார்? என்னை அழைத்துப் போங்கள். கிளம்புங்கள்!" என்றார். பிறகு உட்பக்கம் போய் 'மரகதம்! கேசவன் இருக்கிறாராம்' என்று மனைவியினிடம் தெரிவித்துவிட்டு வந்தார்.

"யாரது! டிரைவரை வண்டி கொண்டுவரச் சொல்லு" என்று வேலைக்காரனிடம் கூறினார்.

மாதவன் சிரித்துக்கொண்டே "அவசரப்படாதீர்கள். நீங்கள் அவரைப் பார்க்கக் கிளம்பிவிட்டால் போதுமா? அவர் உங்களைப் பார்க்கத் தயாராய் இருக்க வேண்டாமா?" என்றான்.

அப்போது அங்கே வந்த மரகதமும், ரேவதியும் "அவர் ஒரு தினுசுபோலிருக்கிறது" என்றார்கள்.

"ஏதாவது கோளாறு உண்டோ?"

"அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்?" என்றான் மாதவன்.

"பின்னே ஒரு மனிதன் இவ்வளவு உபகாரஞ்செய்துவிட்டு ஒளிந்துகொண்டா இருப்பார்? அவர் உதவி செய்யாவிட்டால் இவர்கள் இரண்டு பேரும் இப்போது இங்கே இருக்கமாட்டார்கள் தெரியுமா?"

"தெரியும். அவர் சுபாவம் அப்படி. தனக்குப் பிரதியுபகாரம் செய்ய விரும்புகிறார்கள் என்றால் பயப்படுகிறார்."

"அப்படியானால் நான் அவருக்கு பதிலுக்கு ஒன்றுஞ் செய்யவில்லை. அவரைப் பார்த்துவிட்டு மட்டும் வந்துவிடுகிறேன்."

"தாங்க்ஸ்!" என்று மட்டும் சொல்லிவிடுங்கள் என்றாள் ரேவதி.

"அவர் விலாசம் என்ன? சொல்லுங்கள்" என்று துரைசாமி துடித்தார்.

"நானே உங்களை அவர் இருக்குமிடத்திற்கு அழைத்துப் போகிறேனே" என்றான் மாதவன்.

"மிகவும் நல்லதாகப் போச்சு," என்று துரைசாமி கூறி மரகதத்தையும் அழைத்துக் கொண்டு உடனேயே கிளம்பினார். ரேவதி அவர்களுடன் செல்ல அவ்வளவாக இஷ்டப்படவில்லை. மரகதமும் அவளை வரும்படி வற்புறுத்தவில்லை.

அவர்கள் அறையை விட்டுப் புறப்படவிருந்தபோது மாதவன். "நான் பத்திரிகைகளில் தாங்கள் விளம்பரஞ் செய்திருந்ததைப் பார்த்து விட்டு வந்தேன்" என்றான்.

அவர் சன்மானத்தைப் பற்றி ஞாபகப்படுத்துகிறார் என்பதைப் புரிந்து கொண்ட துரைசாமி, "செக் புத்தகத்தை எடுத்து, ஐந்நூறு ரூபாய் கொடுக்கிறேன்" என்றார்.

"அவ்வளவுதானா?" என்றான் மாதவன்.

"அறுநூறு ரூபாய் என்று துரைசாமி கூறிக் கொண்டே அந்தத் தொகையை அதில் எழுதினார். பிறகு இன்றைக்கு என்ன தேதி ஏழா? எட்டாந் தேதிபோடுகிறேன். நீர் அழைத்துப்போகும் இடத்தில் எங்களுக்குத் தெரிந்த அந்தக் கேசவன் இருந்தால்தான் இதை நாளைக்கு நீர் மாற்றிக் கொள்ள முடியும்," என்று கூறி செக்கை அவரிடம் கொடுத்தார்.

பிறகு துரைசாமி, அவர் மனைவி, மாதவன் மூவரும் வண்டியில் ஏறிக் கொண்டு சென்றார்கள்.

8

சென்னை மாநகரத்தின் ஒரு பகுதியில் களி நிறைந்த ஒற்றையடிப்பாதைகள், அங்குமிங்குமாக அரை குறையாகக் கட்டப்பட்டுள்ள வீடுகள், எருமை மாடுகள், கோழிகள், பன்றிகள் முதலியன தென்பட்டால் அந்தப்

பகுதி பழைய மாம்பலம் என்று பிரசித்தி பெற்ற இட மாகத் தானிருக்க வேண்டும். அந்தப் பழைய மாம்பலத் தில் வயலோரம் இருந்த ஒரு வீட்டின் பக்கம் ஒரு வண்டிப்பாதை வழியாக இரண்டு புத்தம் புதிய மோட் டார் வண்டிகள் சென்று கொண்டிருந்தன. அவை மேட் டிலும், பள்ளத்திலும் இறங்கிச் சென்றபோது அவற்றை ஓட்டிய டிரைவர்கள் தங்கள் வண்டிகளின் ஸ்பிரிங்குகள் பழுதாய்விடுமே, வண்டிகள் அழுக்காகி விடுமே என்று கவலைப்பட்ட வண்ணமிருந்தனர்.

முன்னுல் சென்ற வண்டியில் துரைசாமியும் அவர் மனைவி மரகதமுமிருந்தனர். முன்பக்க ஆசனத்தில் மாத வன் அமர்ந்திருந்தான். கேசவனது நண்பனும் அவனது விலாசத்தை அறிந்தவனுமான அதே மாதவன் தான். பின்னுல் வந்த வண்டி காலியாக இருந்தது. வண்டியை வீட்டிற்குச் சற்று தூரத்திலேயே நிறுத்திவிட்டு எல் லோரும் இறங்கிச் சென்றனர்.

அந்த வீட்டுவாசலில் ஒரு சைக்கிள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.

''டாக்டர் வந்திருக்கிருப் போலிருக்கிறது'' என்று மாதவன் கூறிக் கொண்டே சைக்கிளை வழியிலிருந்து அப்பால் நகர்த்தி வைத்தான்.

''டாக்டரா! எதற்காக? என்ன உடம்பு?'' என்று துரைசாமி கவலையுடன் விசாரித்தார்.

அதற்கு மாதவன் பதிலளிக்காமல் ''நீங்கள் கொஞ்சம் இப்படியே இருங்கள், பார்த்து விட்டு வந்து விடுகிறேன்'' என்று கூறிச் சென்ருன்.

சற்று உருக்களித்து வைக்கப்பட்டிருந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தான். பிறகு சைகை காட்டி யாருடனே பேசிவிட்டு வெளியே வந் தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவனைப்பின்தொடர்ந்து ஒருவர் வந்தார். அவர் முகத்தில் கவலை படர்ந்திருந்தது. ஒரு பயில்வான் மாதிரித் தோற்றமளித்த அவர் தமது

கையில் வைத்திருந்த தோற்பையைக் கொண்டு அவர் தான் டாக்டர் என்று துரைசாமி ஊகித்தார்.

''எப்படியிருக்கிறது?'' என்று மாதவன் கவலையுடன் விசாரித்தான்.

''ஜுரம் ஒன்றுமில்லை. சோர்வுதான் அதிகமாயிருக் கிறது'' என்றார் டாக்டர்.

''ஆபத்து ஒன்றுமில்லையே?'' என்று மரகதம் கேட் டாள்.

''இல்லை··· நீங்கள்...வந்து...''

''இந்த அம்மாதான் தண்ணீரில் தவறி விழுந்தது. அது இவர் புருஷன்'' என்று மாதவன் துரைசாமியை யும், அவர் மனைவியையும் டாக்டருக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

டாக்டர், துரைசாமியின் கைகளைப் பிடித்துக் குலுக்கி ''நல்ல வேளையாகக் கேசவன் அந்தக் குளத்துப் பக்கம் வந்தான். வேறு யாராயிருந்தாலும் சமாளித் திருக்க முடியாது. அந்தக் குளத்தின் அடியில் ஒரு சுரங்க மிருக்கிறது. அடியில் சுழல் வேறு இருக்கிறது. அந்தப் பக்கம் வந்த பேரை உள்ளே இழுத்துக் கொண்டு போயிருக்கும்'' என்றார்.

''அதுதான் என்னையும் இழுத்திருக்கிறது'' என்றாள் மரகதம்.

''அவருக்கு என்ன உடம்பு? என்ன செய்யணும்? விவரமாய்ச் சொல்லுங்கள்'' என்று துரைசாமி கேட் டார்.

''தலையில் எங்கேயாவது அடிபட்டிருக்குமோ என்று ஒரு சந்தேகம். அதைத் தவிர உடல் அதிர்ச்சிதான். கொஞ்ச காலம் ஓய்வு எடுத்துக் கொள்ளச் செய்ய வேண்டும். அதற்கு யாராவது பொறுப் பெடுத்துக் கொண்டு சரியாகக் கவனித்து வந்தால் போதும்.''

"நாங்கள் கவனித்துக்கொள்கிறோம்," என்று மரகதமும், துரைசாமியும் சேர்ந்தாப்போல் சொன்னார்கள்.

"ஆனால் அவன் அதற்கு ஒப்புக் கொள்ளணுமே? என்னைப்போன்ற நண்பர்கள் வீட்டிற்கே அவன் வருவது இல்லை. அவன் சுபாவமே அலாதி. இல்லாவிட்டால் இப்படி ஒரு தனி இடத்தில் வந்து படுத்துக் கொண்டிருப்பானா? நான் தற்செயலாகப் பார்த்து டாக்டரை அழைத்துக் கொண்டு வந்தேன்" என்று மாதவன் கூறினான்.

"டாக்டர்..." என்று ஆரம்பித்தார் துரைசாமி.

"என் பெயர் மார்த்தாண்டம்" என்று டாக்டர் தமது பெயரைத் தெரிவித்துக் கொண்டார்.

"டாக்டர் மார்த்தாண்டம், நாங்கள் இவருக்கு எவ்வளவு கடமைப் பட்டிருக்கிறோம் என்று சொல்ல வேண்டியதில்லை."

"அவருக்காக உயிரையே கூடக் கொடுக்கலாம்."

"நாங்கள் அதற்கும் தயாராயிருக்கிறோம். அவரை எங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லத்தான் வந்திருக்கிறோம்" என்றார் துரைசாமி.

"போய்ப் பார்க்கலாமா?" என்றாள் மரகதம்.

"வாருங்கள்!" என்று கூறி டாக்டர் முன்னால் சென்றார்.

"நான் வரவில்லை இங்கேயே இருக்கிறேன் என்றான் மாதவன்.

மூவரும் சப்தமிடாமல் மெதுவாக நடந்து உள்ளே சென்றார்கள். அங்கே ஒரு இருண்ட ஹாலில் ஒரு கயிற்றுக் கட்டிலில் ஒருவர் படுத்திருந்தார். அவர் மேலே போர்வை போர்த்தியிருந்தார். அவர் கண்களைப் பாதி மூடிய வண்ணம் தூங்கிக் கொண்டிருந்தார்.

"மரகதமும், துரைசாமியும் அவர் முகத்தைப்பார்த்தார்கள், மரகதம் கண்களை நன்றாக விரித்துக் கொண்டு

கூர்ந்து கவனித்தாள். அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதைக் கேட்கத் துரைசாமி ஆவலாயிருந்தார். ஏனென்றால் அவர் வேறு ஆளாயிருந்தாலும் இருக்கலாமோ என்ற சந்தேகம் அவருக்கு.

மரகதத்தின் முகத்தில் அவரை அடையாளம் கண்டு கொண்டதற்கேற்ற பாவம்தோன்றிற்று. அவள், ''இவர் தான்'' என்று மெதுவாகக் கூறித் தலையையும் ஆட்டினாள்.

''கேசவன்!'' என்று டாக்டர் அவரை எழுப்பினார்.

''கேசவன் கண்ணைச் சற்று விழித்து டாக்டரை மட்டும் பார்த்தான்.

''உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்'' என்று டாக்டர் தெரிவித்தார்.

''சரிதான்.''

''அவர்கள் இதோ இருக்கிறார்கள்.''

''இருக்கட்டும்.''

''அவர்கள் யார் தெரியுமா? நீ குளத்திலிருந்து காப்பாற்றினயே அந்த அம்மாளும், அவர் கணவன் மிஸ்டர் துரைசாமியும்.''

''காப்பாற்றினேன்! உஹூம் குளத்தில் விழுந்தவர்களை எடுத்துவிட்டால் அதற்குக் காப்பாற்றுகிறது என்று பெயர்?''

''அதற்காக உனக்கு நன்றி செலுத்த வந்திருக்கிறார்கள்.''

''நன்றி! நன்றி! ஒருத்தர் செய்கிறதாம்; அதற்குப் பதில் செலுத்துகிறதாம். நல்ல வேடிக்கை'' என்று கேசவன் பல்லைக் கடித்துக் கொண்டு கூறினான்.

''அதென்ன, அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே மரகதம் அவனெதிரில் சமீபமாகப் போய் நின்றாள்.

கேசவன் அவளைப் பார்க்க விரும்பாததுபோல் கையால் கண்களைப் பொத்திக் கொண்டான்.

''நீங்கள் ஒன்றல்ல; இரண்டு உயிர்களையல்லவா எனக்காகக் காப்பாற்றித் தந்திருக்கிறீர்கள்!'' என்றார் துரைசாமி.

''டாக்டர்'' என்றான் கேசவன். ''நான் இங்கிருப்பது ஒருவருக்கும் தெரியவேண்டாம் என்றிருந்தேனே, யார் அவர்களுக்குச் சொன்னது?'' என்று கேட்டான்.

''நான் தான்!'' என்று கூறிக் கொண்டே மாதவன் வந்தான்.

''இனி நீ என் முகத்திலே விழிக்காதே!'' என்று கேசவன் அவனைக் கோபித்தான். அவன் தன் கண்கள்மீது வைத்திருந்த கையை இன்னும் எடுக்காமலேயே பேசி வந்தான்.

''கேசவன், நான்தான் தெரிவிக்கச் சொன்னேன்'' என்று டாக்டர் அதிகார தோரணையில் கூறினார். ''பிறகு நீ இப்படி கேட்பாரற்றுத் தனியாக இருந்தால் உடம்பு எதற்கு ஆகும்? கண்ணைத் திறந்து பார்!'' என்று அவன் கண்கள் மீதிருந்து அவன் கையை எடுத்தார்.

கேசவன் கண்களைத் திறந்து பார்த்தான். அசட்டுச் சிரிப்பு சிரித்தான். மரகதத்தையும் துரைசாமியையும் பார்த்துக் கும்பிடு போட்டான். ''நிற்கிறீர்களே?'' என்று கூறி எழுந்திருக்க முயன்றான்.

''பாதகமில்லை,'' என்று கூறித் துரைசாமி அவனைப் படுக்கச் செய்தார்.

''மாதவன் ஒரு மூலையில் இருந்த இரண்டு முக்காலிகளைக் கொண்டுவந்து போட்டான். அவனைக் கண்டதும் கேசவன் ''டேய்!'' என்று கோபித்தான்.

மரகதமும், துரைசாமியும் முக்காலிகளில் அமர்ந்தார்கள். டாக்டர் ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

"இவன் ஒரு அரைப் பைத்தியம். சேவை, தியாகம் என்றெல்லாம் உளறிக் கொண்டிருப்பான்" என்று டாக்டர் பரிகசித்தார்.

"நீங்கள் சிரமப்பட்டு இங்கே வந்திருக்கவேண்டாம். சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேன்" என்முன் கேசவன்.

"நேரே வந்திருக்கும்போதே பார்க்க மாட்டேன் என்று சொல்லி விட்டீர்களே!" என்முள் மரகதம்.

கேசவன் வெட்கப்படுவதுபோல் தலை குனிந்து கொண்டான். அவன் தன் தலையின் பின் பக்கத்தைத் தடவிக் கொண்டே "ஆமாம் அந்தக் குழந்தை," என்று கவலை தோன்ற துரைசாமியைக் கேட்டான்.

"ரேவதியைச் சொல்கிமுர்," என்முள் மரகதம்.

"சௌக்கியமாயிருக்கிமுள்," என்று துரைசாமி கூறிஞர்.

"சந்தோஷம்!" என்று கேசவன் கூறிய வண்ணம் தன் கண்களை மூடிக் கொண்டு சற்று நேரம் அப்படியே இருந்தான்.

"பாவம்! அந்த அதிர்ச்சியும், களைப்பும் இன்னும் போகவில்லை" என்று மரகதம் பரிதாபப் பட்டாள்.

கேசவன் மறுபடியும் கண்திறந்தபோது "மாதவன்! அவர்களுக்குக் குடிக்கக் காப்பி வாங்கிக் கொண்டு வா!" என்முன்.

"நன்முயிருக்கிறது, இந்த உபசாரமெல்லாம் இப்போது தானு? உங்களை அழைத்துக் கொண்டு போக வந்திருக்கிமேும்," என்முர் துரைசாமி.

"என்னை எதற்காக எங்கே அழைத்துக் கொண்டு போகிறதாம்!" என்று கேசவன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"எங்கள் வீட்டிற்குத்தான்," என்முள் மரகதம்.

"நான் உங்களை என்னென்னவோ சொல்லி என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள விருந்தேன். ஆனால், அதைப் பற்றிய பிரஸ்தாபமே உங்களுக்குப் பிடிக்காதென்று தெரிந்ததும் பல்லைக் கடித்துக்கொண்டு ஒன்றுஞ் சொல்லாதிருக்கிறேன்," என்றார் துரைசாமி.

"டாக்டர் ஸார்! நீங்கள் கொஞ்சம் சொல்லுங்கள். எங்கள் வீட்டில் வந்திருந்து உடம்பைப் பார்த்துக் கொண்டு போகட்டும். நாங்கள் அவருக்குப் பிரதி உப காரம் ஒன்றும்செய்யவில்லை!"என்று மரகதம் வேடிக்கை யாகக் கூறினாள்.

"அப்படியானால் வருகிறேன்," என்றான் கேசவன்.

"என் பெயர் துரைசாமி. சைக்கிள் கம்பெனி..." என்று துரைசாமி ஆரம்பித்த போது, "ஞாபகம் வருகிறது. அம்மா சொன்னார்கள். அதுமுதல் நான் சைக்கிள் கம்பெனிகள் இருக்கும் வாசற்பக்கமே போவ தில்லை," என்று கேசவன் கூறியபோது எல்லோரும் சிரித் தார்கள்.

டாக்டர், "நான் அரைப் பைத்தியம் என்று சொன் னது சரியாய்ப் போய் விட்டது பார்த்தீர்களா! அவன் மேல் வஞ்சனை இல்லை. அவன் பெரிய காந்தி பக்தன். போதாததற்கு புத்தரிடமும் பிரேமை உண்டு" என்றார் டாக்டர்.

"ஆமாம்! உங்களைக் குளத்திலிருந்து எடுத்துவிட்ட அந்த ஆள் நான் இல்லையென்று சொல்கிறேன். அப் போது என்ன சொல்லுவீர்கள்?" என்று கேசவன் மரகதத்தைக் கேட்டான்.

இந்தக் கேள்வி கணவனையும் மனைவியையும், தூக் கிப் போடத்தான் செய்தது.

"மரகதம், தன்னையறியாமலேயே அவன் முகத்தை உற்றுக் கவனித்துவிட்டு 'அதோ இடது கண் பக்கம் வெட்டுக் காயம் இருக்கிறதே' அந்த அடையாளம் ஒன்றே போதும்" என்றாள் மரகதம்.

''நீங்கள் அவனை அழைத்துக்கொண்டு போகாதிருப்பதற்காக இப்படி எல்லாம் சொல்கிறான்.'' என்றார் டாக்டர். பிறகு அவர், துரைசாமியைப் பார்த்து 'நாம் வெளியில் சென்றிருக்கலாம். அவர் உடம்பை சுத்தஞ் செய்து கொண்டு சட்டை போட்டுக் கொண்டு தயாராகட்டும்'' என்று கூறவே எல்லோரும் வெளியில் வந்தார்கள்.

மாதவன் மட்டும் தங்கியிருந்தான். ''பின் பக்கம் வழியாகத் தப்பிக் கொண்டு ஓடப் பார்க்காதே, நான் அந்தப் பக்கம் கவனித்துக் கொண்டிருப்பேன்'' என்று தமாஷாகக் கூறினான் அவன்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் கேசவன், மாதவனுடன் வந்தான். மாதவன் அவனை ஒரு பக்கம் தன் கையால் பிடித்துக் கொண்டு நடத்தியழைத்து வந்தான்,

''நான் விடை பெற்றுக் கொள்கிறேன்'' என்றார் டாக்டர் மார்த்தாண்டம்.

''அப்புறம் அவரைப் பார்க்க எப்போது வருகிறீர்கள்?'' என்று துரைசாமி கேட்டார்.

''ஏன் உங்கள் டாக்டரை விட்டுப் பார்க்கச் சொல்லலாமே. நீங்கள் அப்படிச் செய்வதில் எனக்கு ஆட்சேபமே இல்லை'' என்றார் மார்த்தாண்டம்.

''நீங்களே வந்து பாருங்கள். அப்போதுதான் அவருக்குப் பாந்தமாயிருக்கும்!'' என்று மரகதம் வற்புறுத்திக் கூறினாள்.

மார்த்தாண்டம் அரை மனதுடன் வர ஒப்புக் கொண்டார்.

துரைசாமி, கேசவன், மாதவன் ஆகிய மூவரும் ஒரு வண்டியிலும், மரகதம் மட்டும் இன்னொரு வண்டியிலும் ஏறிக் கொள்ள அவர்கள் அந்த வீட்டை விட்டுக் கிளம்பினார்கள்.

கால்மணிநேரத்திற்கெல்லாம் அந்த வண்டிகள் மந்த வெளிப்பாக்கத்தில் துரைசாமியின் பங்களாவை அடைந்தன.

வண்டிகள் போர்டிகோவில் வந்து நிற்கும் சப்தம் கேட்டதும் மாடியிலிருந்த ரேவதி வேகமாகக் கீழிறங்கி வந்தாள்.

கேசவனைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு பெரிய கும்பிடுபோட்டாள்.

''சௌக்கியமா? உடம்பு என்னமோ போலிருக்கிறீர்களே?'' என்று பரிவுடன் விசாரித்தாள்.

''ஒன்றுமில்லை குழந்தை. நீ சௌக்கியந்தானே?'' என்று கேசவன் கேட்டான்.

''உங்களால் நான் சௌக்கியமாகத்தானிருக்கிறேன்'' என்று தன் நன்றியறிதலைத் தெரிவித்துவிட்டு, 'ஆமாம் நீங்கள் எங்கே ஒளிந்து கொண்டிருந்தீர்கள்? உங்களை எங்கே எல்லாம் தேடுகிறது?'' என்றாள்.

''கடைசியில் பிடித்துக்கொண்டு வந்துவிட்டோம்'' என்றாள் மரகதம்.

''நாம் பத்திரிகையிலே விளம்பரம்போட்டு, மாதவன் வந்து...'' என்று ரேவதி ஆரம்பித்தபோது, மாதவன், அவள் மேலே ஒன்றும் சொல்ல வேண்டாமென்று சைகை செய்தான்.

''என்ன, என்ன?'' என்று கேசவன் கேட்டான். 'ஒன்றுமில்லை' என்றார் துரைசாமி.

எல்லோரும் மாடிக்குச் சென்றனர்.

''மரகதம், அவருக்கு எந்த அறை சௌகரியமாயிருக்கும்?'' என்று துரைசாமி கேட்டார்.

''கடைசியில் பின்பக்கமாக இருக்கிறதே அது வசதியாயிருக்கும். அந்தப் பக்கம் யாரும் அதிகம் போகிறதில்லை. முதலில் அங்கிருக்கட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்றாள்.

'மாதவனும், துரைசாமியும் கேசவனை அந்த அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அது நெருங்கிய உறவினர்களான விருந்தாளிக்கென்று ஒதுக்கப்பட்டி

ருந்த அறை. அதில் கட்டில், சோபா, ஸ்நான அறை, மின்சார விசிறிகள், ரேடியோ முதலிய எல்லா வசதிகளும் அமைந்து ஒரு முதல் தர ஹோட்டல் அறையைப் போல இருந்தது.

கேசவன் சற்றுத் தள்ளாடிய வண்ணம் நடந்து சென்று கட்டிலில் படுத்தான்; கண்களை மூடினான். மறு கணம் குறட்டை விட்டுக்கொண்டு தூங்கலானான்.

"பாவம் அசதி!" என்றாள் மரகதம்.

"ஏதோ, பெரிய மனசு பண்ணி வந்தாரே, நாம் கொடுத்து வைத்தவர்கள்தான்" என்றார் துரைசாமி.

அவர் கதவை மெதுவாகச் சப்தப்படாமல் சாத்திக் கொண்டு மரகதத்துடன் சென்றார். மாதவனும் பின் தொடர்ந்தான்.

"நான் போய்வருகிறேன்" என்று அவன் கூறினான்.

"அடிக்கடி வந்து பார்த்துக்கொள்ளுங்கள். அவர் இருந்த இடத்தைத் தெரிவித்ததற்காக உங்களுக்கும் நாங்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். நான் சந்தேகப்பட்டு செக்கை நாளைத் தேதி போட்டுக் கொடுத்ததற்கு மன்னிக்கணும்" என்று கேட்டுக்கொண்டார்.

"நீங்கள் அப்படி முன் ஜாக்கிரதையாக இருப்பது நல்லதுதான். அதைப்பற்றி நான் ஒன்றும் தவறாக நினைக்கவே இல்லை" என்று மாதவன் கூறிவிட்டு விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

வீட்டில் வேலைக்காரர்கள் பலர் இருந்தாலும், துரைசாமி தாமே கேசவனை நேரில் கவனித்துப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார்.

அவர் சற்று நேரத்திற்கொருதரம், கேசவன் அறைக்குச் சென்று கதவை மெதுவாகத் திறந்து பார்த்து அவன் விழித்துக்கொண்டானா என்று கவனித்து வந்தார்.

இரவு ஒன்பது மணிக்குத் தான் அவன் கண் விழித்தான். துரைசாமி அவனுக்கு அந்த அறையிலேயே சாப்பாடு கொண்டுவரச் சொல்லி சாப்பாட்டு மேஜையில் சாப்பிடச் செய்தார்.

பிறகு மரகதமும் வந்தாள். எல்லோரும் பேசிக்கொண்டிருந்தபோது கேசவன் "எனக்கு எதற்காக இந்த உபசாரம் எல்லாம்?" என்று மன வருத்தத்துடன் கேட்டான்.

"மறுபடியும் ஆரம்பித்துவிட்டீர்களே!" என்றாள் மரகதம்.

முதலில் நான் யாரு என்று உங்களுக்குத் தெரியாது!"

"தெரியவேண்டிய அவசியமில்லை. நீங்கள் செய்தது ஒன்றே போதும்" என்று துரைசாமி கூறியதைக்கேட்டு கேசவன் முகத்தைச் சிணுங்கிக்கொண்டான்.

"வீட்டில் இதுமாதிரி ஓர் அறையில் கொண்டுவந்து வைப்பதற்கு முன் அவன் யார்,எப்படிப்பட்டவன்என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் பெருந்தன்மையான குணமுள்ளவர்கள்,என்னை ஒன்றும் கேட்கமாட்டீர்கள். ஆகையால் நானே என்னைப்பற்றிச் சொல்லிக் கொள்ளப் போகிறேன். உங்களுக்கு ஆட்சேபமில்லையே!" என்று கேசவன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

"சரி, சொல்லுங்கள்" என்றார் துரைசாமி.

கேசவன் சொன்னான்: அவன் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவனென்றும், அவனது பெற்றோர்கள் அரியலூர் ரயில் விபத்தில் மாட்டிக்கொண்டு இறந்துவிட்டார்கள் என்றும் தெரிய வந்தது.ஏதோ கொஞ்சம் சொத்து இருப்பதை வைத்துக்கொண்டு சமூக சேவை செய்து காலங் கழிப்பதாயும் தெரிவித்தான். தனக்கு இன்னும் கல்யாணமாகவில்லை என்பதையும் மறைமுகமாகத்தெரிவித்தான்.

அவன் தன்னைப் பற்றிய விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தபோது யாரும் அவனைக் குறுக்குக் கேள்விகள் கேட்கவில்லை.

பிறகு சற்றுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு எல்லாரும் அறையைவிட்டுச் சென்றூர்கள். கடைசியாக வந்த மரகதம் அவன் அறைக் கதவைச்சாத்திக்கொண்டு உட்பக்கம் திரும்பிப்பார்த்தாள். அவள் திடுக்கிட்டாள்.

9

கேசவனது இந்தச் சேஷ்டைகளைக் கவனித்துவிட்ட மரகதத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது. அவளுக்குத் தன் கண்களையோ, சிந்தனு சக்தியையோ நம்ப முடியவில்லை.

தன்னுடன் பேசும்போதெல்லாம் முகத்தை நோக்காமல் எங்கேயோ பார்த்துக்கொண்டு சங்கோஜத்துடன் பேசும் அந்தக் கேசவனு கண்ணடித்தான்! அவனு விரசந் தோன்றப் புன்னகை புரிந்தான்? அதுவும் தன் வீட்டிற்கு வந்த சில மணி நேரத்திற்குள்?

மரகதத்திற்குத் தான் தவருகக் கவனித்துத் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கவேண்டுமென்று தோன்றிற்று. அது அப்படித் தானிருக்க வேண்டுமென்று அவள் விரும்பினுள்.

அவள் இதைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டு வந்ததில் பக்கத்தில் கணவன் வருவதைக்கூட மறந்து அவர் மீது தடுக்கிக் கொண்டு விழப் போனுள்.

"என்ன மரகதம்! பலமாக யோசனைசெய்துகொண்டு வருகிருயே?'' என்று துரைசாமி கேட்டார்.

''ஒன்றுமில்லை. விஷயம் எதிலேயோ ஆரம்பித்து எப்படியோ போகிறதே என்று நினைத்துக்கொண்டே வந்தேன்'' என்ருள்.

''எப்படிப்போகிறது?''

''விஷயம் ஏதோ கதை சொல்வார்களே, அது மாதிரி இல்லையா?''

''நாம் பிறந்தநாள் கொண்டாடப் போக, நான் என்னிஷ்டப்படி தனியாக வெளியூர் சென்று வரத் தீர்மானிக்க அதனால் ஆபத்து நேர, அதன் காரணமாக வீட்டில் மூன்றாவது மனிதர் ஒருவரைக் கொண்டு வைத்தும் கொள்ளும்படி நேர்ந்திருக்கிறதே, இதை எல்லாக் நினைத்துப் பார்த்தால் வேடிக்கையாயிருக்கிறது.''

''மரகதம் எல்லாம் நல்ல படியாக முடிந்த பிறகு பழசை நினைத்துக் கொள்ளாதே. கேசவன் மிகவும் நல்லவராயிருக்கிறார். பணம், காசு, பேர்—புகழ் ஒன்றுக்கும் ஆசைப்படவில்லை. பேச்சு, நடவடிக்கை எல்லாம் மிகவும் உயர்ந்த தரம். அவரை எனக்கு மிகவும்பிடித்திருக்கிறது. அவர் வேறு விதமா இருந்தால் கூட அவரை எனக்குப் பிடித்திருக்கும்.''

''எல்லாம் உங்களுக்கு என்மேல் இருக்கிற அளவற்ற ஆசையினாலே வருகிற ஆபத்துக்கள். அது குறையச் செய்யணும்'' என்று மரகதம் பெருமையுடன் கூறினாள்.

''செய்து பாரேன். உன்னால் முடியாது!'' என்று துரைசாமி சவால் விட்டார்.

அவர்களிருவரும் இவ்வாறு பேசிக் கொண்டே தங்கள் அறைக்குச் சென்றார்கள்.

மறுநாட்காலை மரகதம் அவனைப் பார்ப்பதற்காக அவன் அறைக்குச் சென்றபோது கேசவன் அறையில் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தான்.

மரகதம் சற்றுதயக்கத்துடனேயே அவனிடம் பேசத் தொடங்கினாள்.

''அதற்குள் எழுந்து விட்டீர்களே, நடக்கவும் ஆரம்பித்து விட்டீர்களே?'' என்று கேட்டாள்.

''எனக்கு இந்த வீட்டில் காலடி எடுதது வைத்த போதே பாதிக் குணமாகி விட்டது. நீங்கள் எல்லோரும் என்மீது காட்டும் அன்பினுல் முழுதும குணமாகிவிடும்'' என்று கேசவன் மிகவும் மரியாதையுடன் கூறினுன்.

அவன் தன்னை எப்படிக் கவனிக்கிருன் என்றுதான் அவனைக் கவனிக்க வேண்டும் என்று ஒரு பெண்ணுன அந்த மரகதம் விரும்பினுள். அப்படியே கவனித்தாள். கேசவனே மிகவும் சர்வசாதாரணமாகப் பேசினுன். அவன் அவளிடமிருந்து சிறிது தூரத்திற் கப்பாலேயே நின்று கொண்டு பேசினுன். அவன் கண்களில் எந்த விதமானஅயோக்கியத்தனமான பார்வையுமில்லை. தவிர அவன் அவளை நேருக்கு நேர் நோக்கியே பேசவில்லை.

அவன் ''உட்காருங்கள்'' என்று ஸோபாவைக் காட்டி விட்டுத் தான் ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

''எனக்கு எல்லாம் ஒரு கனவு போலிருக்கிறது. நடு இரவில் விழித்துக் கொண்டு பார்த்தபோது, இந்த அறை இதிலுள்ள சாமான்கள் எல்லாம் எனக்குப் புதிதாக இருந்தது. தவறிப் போய் யார் வீட்டிற்குள்ளோ நுழைந்து விட்டோம் என்று எண்ணியபோது உடல் நடுங்கியது. அப்புறம் எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. காலையில் பெரியவரைப் பார்த்துச் சொல்லி விட்டுக் கிளம்பி விட வேண்டு மென்று தீர்மானித்திருந்தேன்'' என்ருன்.

''அப்படி எல்லாம் சொல்லாதீர்கள். உங்களைக்கண்டு பிடிக்க எத்தனையோ சிரமப்பட்டோம். அவரிடம் போவதைப் பற்றிச் சொன்னுல் மிகவும் மனது கஷ்டப்படுவார். எனக்கோ இப்போதே துக்கம் தொண்டையை அடைத்துக் கொள்கிறது'' என்ருள் மரகதம்.

அவள் மரியாதைக்காக இப்படிச் சொல்லவில்லை. உண்மையிலேயே வருத்தப் பட்டாள். கேசவனிடம் பேசிய அந்தச் சிறிது நேரத்திற்குள், அவன் மிகவும் யோக்கியமானவனென்றும் அவள் மனத்தில் பட்டுவிட்டது. முதல் நாளிரவு அவனைப் பற்றித் தான் தப்பாக

எண்ணிக் கொண்டதற்காக அவள் தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

"டாக்டர் இன்றைக்கு எப்போது வருவார்?" என்று அவள் கேசவனை விசாரித்தாள்.

"சாயங்காலம் வரலாம். ஆனால் அவர் வரவேண்டும் என்ற அவசியங்கூட இல்லை"

"ஏன் இல்லை?" என்று கேட்டுக் கொண்டே துரைசாமி வந்தார்.

"அம்மா வந்தபோது என்ன செய்து கொண்டிருந்தேன்! கேளுங்கள். நன்றாக அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தேன்."

"இருந்தாலும்..."

"என் உடம்புக்கு ஒன்றுமே இல்லை" என்று கேசவன் கூறி எழுந்து நின்றான்.

அவன் தன் கைச் சட்டையைத் தோள்பட்டைவரை மடித்து விட்டுக் கொண்டான். பிறகு தன் வலது கையை நீட்டி மடக்கித் தன் முண்டாவைக் காண்பித்தான். அது கல்போல இருந்தது. இடது கையையும் அது மாதிரி செய்து காண்பித்தான்.

அப்போது அங்கேவந்த ரேவதி "இதென்ன சர்க்கஸ் வித்தையா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"எனக்கு உடம்பு ஒன்றுமே இல்லை என்றால் அப்பாவும் அம்மாவும் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள். டாக்டரிடம் காண்பிக்க வேண்டுமென்கிறார்கள். பலமாயிருக்கிறேன் என்று நிரூபிப்பதற்காக இப்படிச்செய்து காட்ட வேண்டியதாயிற்று" என்று கேசவனும் சிரித்துக் கொண்டே சொன்னான்.

அவனது தேகக் கட்டைப் பார்த்து ரேவதி வியந்து நின்றாள். அவனது அவயவங்கள் ஆண்கள் அழகுப் போட்டியில் முதற் பரிசு பெற்றவனுடையதைப் போன்றிருந்தன.

அவன் அங்கிருந்த ஒரு பெரியகனமான செந்தேக்கு நாற்காலியைத் தன் இடது கையாலேயே தூக்கி தன் தலைக்கு மேல் சுற்றிக் காட்டினான்.

ரேவதி அந்த வித்தையைப் பார்த்துத் தன் கைகளைக் கொட்டி! ''சபாஷ்!'' என்றாள்.

மரகதம் ஆச்சரியத்துடனும், அதே சமயத்தில் இன் னது என்று விவரிக்க முடியாத வெறுப்புடனும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

துரைசாமிக்கு அவன் அரைப் பைத்தியந்தானோ என்று தோன்றிற்று. அவன் தன் பலத்தைப்பற்றிய காட்சிகளைக் காண்பிக்க வேண்டியதில்லை என்று அவர் எண்ணினார்.

''இதெல்லாம் இப்போது எதற்கு? உடம்பு நெகிழ்ந்து விடும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்றார்.

கேசவன், வெட்கப்பட்டவன்போல முகத்தை வைத் துக் கொண்டு மறுபடியும் நாற்காலியில் அமர்ந்தான்.

''உங்களுக்கு இத்தனை பலமிருப்பதனால்தான் எங் களை மிகவும் சுலபமாகத் தூக்கிக் கொண்டு வந்தீர்கள்!'' என்று ரேவதி கூறினாள்.

ஆண்மையை அவளால் மெச்சாதிருக்க முடியவில்லை. ஆனால் தன் பெண் இப்படிக் கூறியது மரகதத்திற்குச் சிறிது கூடப் பிடிக்கவே இல்லை.

''உங்கள் உடம்பு மிகவும் பலமாக இருக்கலாம். ஆனால் அந்தக் குளத்தில் அடிபட்டது என்று சொன்னீர் களே, அதற்கு வைத்தியம் செய்து கொள்ள வேண் டாமா? எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால் நல்லது!'' என்றார் துரைசாமி.

''எனக்கு அவசியமில்லை என்று தோன்றுகிறது. அப் புறம் உங்களிஷ்டம்'' என்று கேசவன் பணிவாகக் கூறி னான்.

பிறகு அவர்கள் சிறிது நேரம் பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். கேசவனது பார்வையிலோ, பாவனையிலோ, பேச்சிலோ மரகதத்தினால் ஒரு குறை கூடக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஏன்? கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.

ஸ்திரீகள் விஷயத்தில் அவன் முற்றுந் துறந்த ஒரு யோக்கியமான முனிவரைப் போல நடந்து கொள்வதை அவள் உணர்ந்தாள். தன்னையும், தன் மகளையும் தன் உயிரையே கொடுத்துக் காப்பாற்றியவனைப் பற்றித் தான் தவருக எண்ணியது பெரிய பாவம் என்று அவளுக்குத் தோன்றிற்று. இனி அவன் என்ன பேசினாலும், எப்படி நடந்து கொண்டாலும், அவன் மனத்தில் கல்மிஷமற்றே நடந்து கொள்கிருனென்று கருத வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள்.

அவர்கள் சிறிதுபேசிக் கொண்டிருந்தனர். பிறகு அவர்கள் புறப்பட்டபோது "படிப்பதற்கு ஏதாவது புத்தகம் வேண்டும். இருக்குமா?" என்று கேட்டான்.

"என்ன மாதிரிப் புத்தகங்கள் பிடிக்கும்?" என்று ரேவதி விசாரித்தாள்.

"புத்தர் ஜாதகக் கதைகள், வேதாந்த நூல்கள், பர்ட்டிரண்டு ரஸ்ஸிதா, மாக்ஸ் முல்பர் முதலியவர்களின் புத்தகங்கள்...இப்படி ஏதாவது?"

அவன் கூறிய புத்தக ஜாபிதாவைக் கேட்டு ரேவதி சிரித்தாள். "என்னிடம் காலேஜ் புத்தகங்கள் இருக்கு. துப்பறியும் நாவல்கள் இருக்கு" என்ருள்.

கேசவன் தன் காதுகளைக் கைகளால் பொத்திக் கொண்டு "துப்பறியும் நாவல்கள், கொலை, கொள்ளை நாவல்கள் இதெல்லாம் நான் என் கையால் தொட்டதே இல்லை" என்ருன்.

"கண்ணுல் பார்ப்பீர்களா?" என்று ரேவதி பரிகசித்தாள்.

"அதுகூடப் பார்க்கிறதில்லை,"

"தாயுமான சுவாமி, பாடல் இருக்கு,வேண்டுமா?" என்று ரேவதி கேட்டு வைத்தாள்.

"கொண்டாயேன், இராமலிங்க சுவாமிகள் பாடல் எனக்கு ரொம்பப் பிடிக்கும்!" என்றான் கேசவன்.

பிறகு எல்லாரும் அறையை விட்டு வெளியே சென் ருர்கள்.

ரேவதி தன் தந்தையின் அறைக்குச் சென்று தாயு மான சுவாமி பாடல் புத்தகத்தை எடுத்துக்கொண்டு கேசவன் அறைக்கு மறுபடியும் திரும்பிவந்தாள். புத்த கத்தை அவள் அவனிடம் கொடுத்தபோது அவனுடைய கைகள் அவள் கைகள் மீது நன்ருகப் பட்டன. ஏன், அவள் கைகளைப் பிடித்துக் கொண்டதுபோலக்கூட ரேவதிக்குத் தோன்றியது.

அவன் "உஸ்...ஸா...ரி" என்று கூறி கைகள் பட்ட தற்காகத் தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண் டான்.

ரேவதி சிரித்து "பாதகமில்லை" என்று மெதுவாகக் கூறினுள்.

அவன் அந்தப் புத்தகத்தை இரண்டு கைகளிலும் வைத்துக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டே கும்பிடு போட்டுத் தலைவணங்கினுன். பிறகு அதைத் திறந்தான். அந்தப் பக்கத்திலிருந்த,

பொன்னை மாதரைப் பூமியை நாடிடே
  னென்னை நாடிய என்னுயிர் நாதனே
யுன்னை நாடுவன் உன்னருட் டுவொளி
  தன்னை நாடுவன் தன்னந் தனியனே

என்ற பாட்டை ஹரிகாம்போதி ராகத்தில் மெது வாகப் பாடலானுன்.

அவன் கண்களை அடிக்கடி மூடிக்கொண்டும், தலை யைப் பாவ பூர்வமாக அசைத்துக் கொண்டும் தன்னை

மறந்து பாடிக் கொண்டிருந்ததை ரேவதி கேட்டு அனு பவித்துக் கொண்டிருந்தாள்.

பிறகு கேசவன் இன்னொரு பக்கத்தைப் புரட்டினுன். அவன் ரேவதியைப் பார்க்கவே இல்லை. அந்தப் பக்கத்தில் இருந்த பாட்டைப் பாடலானுன்.

"கண்ணே கருத்தேயென்
கற்பகமே
கண்ணிறைந்த...

என்று ஆரம்பித்த போது "நான் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்" என்று ரேவதி கூறவே,

"கண்ணிறைந்த...ரேவதியா,

"அடடா! நீ இங்கே இருக்கிறதை நான் மறந்தே போய் விட்டேன். குழந்தை! மன்னிக்கணும்" என்று கூறிப் புத்தகத்தை அப்பால் வைத்தான்.

"நன்ருகப் பாடுகிறீர்களே!" என்ருள் ரேவதி.

"நான் இன்னொரு பாட்டுப் பாடிவிடுவேன்" என்று கேசவன் பயமுறுத்துவது போல வேடிக்கையாகக் கூறினுன்.

"நான் அப்புறம் கேட்டு விடுவேன்" என்று ரேவதியும் தமாஷாகவே பதிலளித்தாள்.

"நான் என்னமோ தேவாரம் ஓதுகிறது போல் சொல்லுகிறேன். அது பாட்டில் சேர்ந்ததில்லை. உனக்குப் பாடத் தெரிந்திருக்கணும்" என்ருன் கேசவன்.

"யார் சொன்னுர்கள்?"

"உன் இனிமையான குரல் சொல்லுகிறது. உனக்கு டான்ஸ் கூடத் தெரியும்."

"யார் சொன்னுர்கள்?" என்று ரேவதி கிளிப் பிள்ளைபோல் கேட்டாள்.

"உன் உடல் சொல்கிறது. உன் உடல் நடனத்துக் கேற்றது" என்று கேசவன் கூறிப் புகழ்ந்தான்.

"எனக்கு எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் தெரியும்" என்றாள் ரேவதி.

"உன் கல்யாணம் எப்போது?" என்று கேசவன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"அது எப்போதோ?" என்று கூறிவிட்டு ரேவதி அவன் அறையைவிட்டுக் கிளம்பினாள்.

அவள் கதவண்டை போய்த் திரும்பிப் பார்த்தாள்.

கேசவன் தன்னையே கண் கொட்டாது உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவன் சிரித்த வண்ணம் தன் கைகளை ஆட்டி அவளுக்கு 'டாட்டா' கூறினான்.

அன்று பகல் துரைசாமியைப் பார்க்க வந்திருந்த சில நண்பர்கள் அவரது மனைவி மரகதத்திற்கும் பெண் ரேவதிக்கும் ஏற்பட்ட விபத்தையும், அவர்களைக் கேசவன் காப்பாற்றியதையும் கேள்விப்பட்டபோது அவனைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினர்.

துரைசாமி அவர்களது விருப்பத்தைக் கேசவனுக்குத் தெரிவித்தபோது அவன் சற்றுக்கோபமாகவே பதிலளித்தான்.

"இதற்காகத்தான் நான் இங்கே எல்லாம் வரமாட்டேன் என்றது" என்றான்.

"அவர்கள் எல்லோரும் பெரிய மனிதர்கள்; பணக்காரர்கள். எனக்கு உதவி செய்தீர்களென்பதில் உங்களைப் பார்க்கவேண்டுமென்ற அவா!"

"நான் என்ன கண் காட்சிச்சாலை மிருகமா?" என்று கேசவன் முனங்கினான். "பிறகு அழைத்து வாருங்கள். ஆனால் நான் ஒருவருடனும் பேசமாட்டேன்" என்று கண்டித்துக் கூறினான்.

துரைசாமி தன் நண்பர்களை அழைத்து வந்தபோது கேசவன் படுக்கையில் போர்வையைக் கழுத்து வரை

இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தான். அவன் சீக்காளரைப்போல் தலையிலிருந்து தொண்டையைச் சுற்றி ஒரு சவுக்கத்தைக் கட்டிக் கொண்டிருந்தான்.

வந்தவர்கள் அவனுக்குக் கும்பிடு போட்டபோது அவன் முக்கி முனங்கிக்கொண்டு தன் கைகளைத் தூக்கி வணங்கினான்.

அவர்கள் அவன் செய்த உதவிக்காகப் புகழ்ந்து விட்டு அவனைப்பற்றிய விபரங்களைக் கேட்கத் தொடங்கினார்கள்.

கேசவன் தன் தலைக் கட்டையும் வாயையும் காண்பித்துத் தன்னால் பேச முடியவில்லை என்று சைகை செய்தான்.

துரைசாமி அவனைப் பற்றித் தமக்குத் தெரிந்த விவரங்களைக் கூறினார். பிறகு வந்தவர்கள் அவனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்று விட்டார்கள்.

துரைசாமி, அவன் திடீரென்று தலையில் கட்டுப் போட்டுக் கொண்டிருந்ததையும், பேச முடியாதது போல் பாவனை செய்ததையும் பற்றித் தமக்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார். அவன் அப்படி செய்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என்றும் அவருக்குத் தோன்றிற்று.

ஆனால், அவன் தான் ஒரு விதமான மனிதனாயிற்றே சன்மானத்தையோ, தன்னைப் பிறர் புகழ்வதையோ விரும்பாதவனாயிற்றே. ஆகையால் பிறருடன் தவறியும் தன்னை மீறிப் பேசாதிருக்க வேண்டுமென்பதற்காக முன் ஜாக்கிரதையாக அப்படிச் செய்திருக்கக் கூடுமென்று எண்ணித் தம் மனத்தைச் சமாதானம் செய்து கொண்டார்.

அவர் தம்முடைய நண்பர்கள் சென்ற பிறகு கேசவனைப் பார்ப்பதற்காக வந்தார். அப்போது அவன் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கவில்லை. அறைக்குள்

அங்கும் இங்கும் வேகமாக உலாவிக் கொண்டிருந்தான். அவன் தலையில் கட்டு எதுவுமில்லை.

அவன் துரைசாமியைக் கண்டதும் அவரிடம் வந்து "தாங்கள் என் விஷயத்தில் இத்தனை சிரத்தை எடுத்துக் கொண்டதற்கு வந்தனம். நான் போய் வருகிறேன். எல்லாரிடமும் சொல்லி விடுங்கள்" என்று கூறிக் கொண்டே வெளியேறத் தயாரானான்.

"மிகவும் அழகாயிருக்கிறது!" என்று கூறிய வண்ணம் மரகதம் வந்தாள்.

கேசவன் அவளைக் கண்டதும் வெட்கப்பட்டவன் போல் தலையைக் குனிந்துகொண்டு தயங்கி நின்றான்.

"இங்கு இருக்கப் போவதில்லையாம், போகிறாராம்" என்று துரைசாமி துக்கம் நெஞ்சை அடைக்கச் சொன்னார்.

"நான் என்னமோ பிரமாதமாகச் செய்து விட்டேனே. ஊரிலிருக்கிறவர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு வந்து காண்பித்தால் எனக்கு எப்படியிருக்கும்?" என்று கேசவன் கேட்டான்.

"நானா அவர்களை வரச் சொன்னேன்? அவர்களுக்கு உங்களிடம் அவ்வளவு மதிப்பு, பார்த்துவிட்டுப் போக வேண்டுமென்று பிடிவாதமாயிருந்தார்கள்" என்று துரைசாமி சமாதானம் கூறினார்.

"இதுதானா? என்னமோ என்று பார்த்தேன்" என்று மரகதம் பரிகசித்தாள்.

"நீங்கள் சொல்வீர்கள், எனக்கென்னமோ இதெல்லாம் பெரிய தண்டனை போல் இருக்கிறது. அதற்காகத் தான் உங்கள் கண்களில் படாமல் ஒளிந்து கொண்டிருந்தேன்" என்று கேசவன் கூறிக் கொண்டிருந்தபோது, ஒரு ஆள் வந்து யாரோ துரைசாமியையும்,அவர் மனைவியையும் பார்க்க வந்திருப்பதாகக் கூறினான்.

துரைசாமி, கேசவனிடம் "பேசாமல் படுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

மரகதமும், "உங்களுக்கு எங்களைப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. அதுதான் இப்படிக் கிளம்பிக் கொண்டே இருக்கிறீர்கள்" என்று மன வருத்தந் தோன்றக் கூறினாள்.

பிறகு அவளும் புறப்பட்டாள். அவள் கதவண்டை சென்றிருப்பாள். 'உங்களைப் பிடிக்காமலா! அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள், மரகதம்!' என்று அவன் கூறியது வாசற்படியைத் தாண்டியபோது அவள் காதில் விழுந்தது.

அதைக் கேட்டு மரகதம் திடுக்கிட்டாள்.

கேசவனா தன்னை 'மரகதம்' என்று கூப்பிட்டான்.

10

மரகதத்திற்கும் கோபத்திற்கும் வெகுதூரம். வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் மன்னிக்கமுடியாத தவறு செய்தால்கூடக் கோபிப்பதுபோலப் பாவனைசெய்வாளே அன்றி உண்மையில் அவளுக்கு அந்தக் கோப உணர்ச்சி வராது.

அத்தகைய மரகதத்திற்கு அந்தக் கேசவன் என்பவன் தன் பெயரைச் சொல்லி, தன்னிடம் பேசியது அடக்கமுடியாத ஆத்திரத்தை உண்டு பண்ணியது. அவளுக்கு உடனே அந்தப் பக்கம் திரும்பி "நீ யாரடா! என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறது. போடா வெளியிலே!" என்று கத்தவேண்டும்போல் தோன்றிற்று. அவள் உடல் பதறியது. உதடுகள் துடித்தன.

அவளுக்குமுன்னால் சற்று தூரத்தில் சென்றுகொண்டிருந்த துரைசாமி திரும்பிப் பார்த்து "மரகதம் வரவில்லையா?" என்று கூப்பிட்டபோதுதான் அவள் கேசவனைக் கண்டித்துக் கூறும் யோசனையைக் கைவிட்டு விரைந்து சென்றாள்.

"மரகதம்!" என்று தன்னைத் தொட்டுத் தாலி கட்டிய தன் கணவன் அழைக்கிறார். தனக்குப் பரிச்சய

மாகி இருபத்தி நான்கு மணி நேரம் ஆகாத எவனோ ஒருத்தனும் தன்னை அந்தப் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறானே?

இந்த விபரீதமான நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பற்றி அவள் யோசனை செய்த வண்ணம் தன் கணவனருகில் நடந்து சென்றாள்.

அந்த ஆசாமி தானாகவே போய்விடுகிறேன் என்று ஓயாமல் சொல்லிக் கொண்டு இருக்கிறானே, அவனை "வெளியில் போடா!" என்று சொல்லத் துடிப்பதில் அர்த்தம் இல்லை என்று எண்ணினாள்.

"என்ன பலத்த யோசனை செய்கிறாய்?" என்று துரைசாமி கேட்டார். கேசவனது அறைக்குள் நுழைந்த போது கலகலப்பாகச் சிரித்த முகத்துடனிருந்த தன் மனைவியின் முகம் கவலை தோய்ந்திருப்பதை அவர் கவனித்தார்.

"ஒன்றுமில்லை. அந்த மனிதர் இப்படி வேடிக்கையாக நடந்து கொள்கிறாரே, என்று தான்" என மரகதம் கூறிவைத்தாள்.

"பாவம், மண்டையிலடிப்பட்டதனால் அவர் மூளை கலங்கி இருக்க வேண்டும். அதனால்தான் ஒரொரு சமயம் ஒரொரு விதமாகப் பேசுகிறார் என்று நினைக்கிறேன். அவரை ஒரு நல்ல டாக்டரிடம் காண்பிக்க வேண்டும்!"

"ஏதாவது சட்டுப்புட்டென்று செய்யுங்கள்."

"எதற்காக அவசரப்படணும்?"

"வளர்த்திக் கொண்டே போனால் அப்புறம் வியாதி முற்றிப் போய்விடுமே என்பதற்காகச் சொன்னேன்" என்றாள் மரகதம்.

"நீ சொல்கிறது சரிதான். ஆனால் வந்து இரண்டு நாள் கூட ஆகவில்லை. கொஞ்சம் ஒய்வு எடுத்துக் கொள்ளட்டும். அவருக்கும் போய்த் தங்குவதற்கு உற்றான், உறவு முறையான் என்று ஒருத்தரும் இல்லை போலிருக்கிறது. நம்மால்தானே அவருக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது?"

"ஆமாம். அவர் நமக்கு உதவி செய்ததற்குப் புதிய உதவி ஏதாவது செய்தாக வேண்டும். அதைச் சீக்கிரம் செய்து விடுவோமே?" என்று மரகதம் வற்புறுத்திக் கூறினுள்.

"அவர் தான் புதிய உதவி என்கிற பேச்சையே எடுக்கக் கூடாதென்கிருரே?"

"நீங்கள் தனியாகப் பேச்சுக் கொடுத்துப் பாருங்கள். ஒருவேளை தானே சொல்வதற்கு சங்கோஜப்படலாம். விடாப்பிடியாகக் கேட்டுப் பாருங்கள். அவர் அதற்கும் பிடிகொடுத்துப் பேசாவிட்டால் பிறகு நமக்குத் தோன்றியபடி நாம் ஏதாவது செய்து விடலாம்."

"அவர் உடம்பு இருப்பதைப் பார்த்துக் கொண்டு சாவகாசமாகப் பேசுகிறேன். அவருக்குப் பதிலுபகாரம் செய்வதற்கு நீ என்னை விட அதிகம் துடித்துக் கொண்டிருக்கிருய். அதுதான் புருஷனுக்கு ஏற்ற மனைவி என்பது" என்று துரைசாமி மரகதத்தைப் புகழ்ந்தார்.

அவள் தன் மனம் வருந்தியே பேசுகிருளென்பதை அவரால் ஊகிக்க முடியவில்லை.

அன்றெல்லாம் மரகதம் அந்தக் கேசவனைப் பற்றியேதான் சிந்தித்துக் கொண்டிருந்தாள். முதல் நாள், கண்டிப்பும் சிரிப்பும். இரண்டாவது நாள் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது. அயோக்கியத்தனம் சிறிது சிறிதாக வளர்ந்து வருகிறதென்று அவளுக்குத் தோன்றிற்று. ஒரு வேளை அவன் வேறு ஏதாவது வார்த்தை சொல்ல முயன்று அது தவறிப்போய் "மரகதம்" என்று வந்திருக்குமோ, அல்லது தான், அவன் கூறியதைக் கவனித்துக் கேட்கவில்லையோ என்றும் எண்ணிப் பார்த்தாள். ஆனுல், அவளுடைய காதுகளிரண்டும் 'சந்தேகத்துக் கிடமில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தன. அவை தாம் கிரகித்துக் கொண்ட 'மரகதம்' என்ற அந்த வார்த்தையை மறக்கவே இல்லை.

மரகதம், தன் பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்த போது கேசவனைப் பற்றிய பேச்செழுந்தது.

''கேசவன் உன்னை ஏதோ புத்தகம் கேட்டுக் கொண்டிருந்தார் போலிருக்கு!'' என்றாள் மரகதம்.

''ஆமாம்!'' என்றாள் ரேவதி.

''ஏதாவது கொடுத்தனுப்பினாயா?''

''நானே ஒருபுத்தகம் எடுத்துக்கொண்டுபோனேன் அம்மா!''

''என்ன புத்தகம்?''

''தாயுமான சுவாமி பாடல்தான் அகப்பட்டது. அதை எடுத்துக் கொண்டு போனேன்''

''அதையெல்லாம் கூடப் படிக்கிறாரா?''

''படிக்கிறாராவது? அதில் இருந்து பாட்டுக்கள்கூடப் பாடுகிறார்'' என்று ரேவதி சிரித்துக் கொண்டே கூறினாள்.

''ஊஹூம்!''

''ராகம் போட்டு நன்றாகவே பாடுகிறார்.''

''ஒரு நாளைக்கு பாடச் சொல்லிக் கேட்கணும்!'' என்றாள் மரகதம்.

''அது ஒரு கிராக். நாம் கேட்கும்போது பாட மாட்டேன் என்று பிடிவாதம் செய்யும்'' என்று ரேவதி பரிகசித்தாள்.

''அவர் உடம்பை நன்றாகப் பார்க்கச் சொல்லணும்!'' என்று மரகதம் கூறிவிட்டுத் தன் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நீ அவரோடு என்ன பேசிக் கொண்டிருந்தாய்?'' என்று மரகதம் விசாரித்தாள்.

''புத்தகத்தைக் கொடுத்ததும் அதைப் படித்துப் பார்த்தார். அந்தப் பக்கத்திலே இருந்த பாட்டைப்பாட ஆரம்பித்துவிட்டார். நான் அதை கேட்டுக் கொண்டு பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தேன். பிறகு சாமிக்குக் கும்பிடு போட்டார்.''

"அவ்வளவுதானா?"

"எனக்குப் பாடத் தெரியுமா, நடனம் ஆடத் தெரியுமா, என்றெல்லாம் விசாரித்தார்."

"அப்புறம்?"

"என்ன அம்மா? விசாரணை செய்வதுபோல் கேள்விகள் கேட்கிறாயே?" என்றாள் ரேவதி.

"அவருக்கு மூளை இருக்கிற பக்கம் அடிபட்டது என்கிறாரே. அதனால் பேசுவது பழகுவது எல்லாம் எப்படிப் பாதிக்கப் பட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ளத் தான். அதற்கு தகுந்தாற் போலத்தானே வைத்தியத்துக்கு ஏற்பாடு செய்யணும்!"

"ஏன், அம்மா! அவரை ஒரு நல்ல நர்ஸிங் ஹோமில் சேர்த்து விட்டால் என்ன?"

"செய்யலாம். ஆனால் முதலில் அவர் அதற்கு சம்மதிக்கணும். அப்புறம் உன் அப்பா ஒப்புக் கொள்ளணும். வெளியிலனுப்பினால் கௌரவம் குறைந்து போய்விடும், நன்றி காண்பிப்பது குறைந்து போய்விடும் என்பார்."

"அப்புறம் அந்த டாக்டர் மார்த்தாண்டத்தைத் தவிர வேறு யாரும் வைத்தியம் செய்யக் கூடாது என்பார்" என்றாள் ரேவதி.

"ஆமாம்! அந்த ஆட்சேபம் வேறு இருக்கிறது" என்றாள் மரகதம்.

கேசவன், தனக்குக் கல்யாணமாகி விட்டதா என்று விசாரித்ததைப் பற்றியும் தன்னிடம் கொஞ்சம் தமாஷாய்ப் பழக முயன்றதைப் பற்றியும் ரேவதிக்குத் தன் தாயினிடம் சொல்ல வேண்டுமென்பது; சொல்லவும் விரும்பவில்லை.

"ஏன் அம்மா! நீ அவரைப்பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று ரேவதி தன் தாயைக் கேட்டாள்.

இந்தக் கேள்வி மரகதத்தை தூக்கிவாரிப்போட்டது. ஏனென்றால் ரேவதி தன் மனத்திலிருப்பதை ஊகிக்க அப்படிக் கேட்கிறாள் என்று அவளுக்குத் தோன்றிற்று.

''நான் நினைக்கிறதற்குத் தனியாக ஒன்றுமில்லை. அவர் நமக்கு உதவி செய்தார். உதவி என்றால் மிகவும் சாதாரணமான உதவியல்ல. உயிரையே காப்பாற்றி யிருக்கிறார். அதற்குப் பதில் என்ன செய்தாலும் அப்பா வுக்குத் திருப்தி ஏற்படாது. ஆனால் அந்தக் கேசவனோ ஒன்றுமே வேண்டாம் என்கிறார். இதுதான் நிலைமை'' என்றாள்.

''அப்பா என்ன சொல்கிறார்?''

''நன்றியறிதல் விஷயத்தைப் பற்றி அப்பாவிடம் வாயைத் திறக்கமுடியுமா?''

''நான் பேசுகிறேன்!''

''அவசியமில்லை. நாங்களே அதைப்பற்றிப் பேசிக் கொண்டு இருந்தோம். கேசவன் மரியாதையை உத் தேசித்து ஒன்றுமே வேண்டாம் என்று வெளிக்குச் சொல்லலாம். அதைப் பற்றிப் பச்சையாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு விடச் சொல்லியிருக்கிறேன்.''

''அப்படி கேட்கச் சொல்லவேண்டுமென்று உனக்கு ஏன் தோன்றிற்று? ஏன் அவ்வளவு அவரசம்?'' என்று ரேவதி கேட்டாள்.

இதற்கு மரகதம் உடனே பதில் சொல்லமுடியாமல் சற்றுத் தயங்கினாள். பிறகு, ''அவர் என்ன இருந்தாலும் மூன்றாவது மனிதர், முன்பின் தெரியாதவர். அவரை வீட்டிற்குள்ளே எத்தனை நாள் வைத்துக்கொண்டிருக்க முடியும்? ஆகையால் அவரைப் பற்றி ஏதாவது ஒரு முடிவான ஏற்பாடு செய்கிறது எல்லோருக்கும் நல்லது என்று தோன்றிற்று.''

''எனக்கும் அப்படியேதான் தோன்றிற்று அம்மா!'' என்றாள் ரேவதி.

தன் பெண் மனதிலும் அந்த எண்ணம் ஏன் ஏற்பட்டது, என்று மரகதம் கேட்க விரும்பவில்லை. ஒரு வேளை அந்தக் கேசவன் தன் பெண்ணிடமும் அவள் வித்தியாசமாக எண்ணிக் கொள்ளும் முறையில் ஏதாவது பேசியிருப்பானோ என்று சந்தேகப்பட்டாள்.

பிறகு தங்களைக் காப்பாற்றியவரைப் பற்றி அப்படி எல்லாம் சந்தேகப்படுவது நியாயமில்லை, மகாபாவம் என்று கூட எண்ணினாள். அவன் உண்மையாகவே முறை தவறிப்பேசி நடந்து கொண்டிருந்தாலும்கூட அது அவன் வியாதிக் கோளாறு காரணமாகவே இருக்க வேண்டும் என்று சமாதானம் கூறிக்கொண்டாள்.

"மொத்தத்தில் அப்பாவுக்குத்தான் தொந்தரவு" என்று ரேவதி கூறித் தன் தந்தைக்காக பரிதாபப் பட்டாள்.

"ஆமாம்!" என்றுமரகதமும் தலையை அசைத்தாள்.

அப்போது துரைசாமி தங்களை நோக்கி மிக வேகமாக நடந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டு தாயும் மகளும் ஆச்சரியமும் கவலையுமடைந்தனர். ஏனென்றால் துரைசாமி எப்போதுமே மெதுவாகவும் நிதானமாகவும் நடப்பது வழக்கம்.

அவர் தங்கள் சமீபம் வந்ததும் 'ஏன் அப்பா! கேசவனுக்கு ஒன்றுமில்லையே?' என்று ரேவதி விசாரித்தாள்.

"அதையே தான் நானும் கேட்க வேண்டுமென்றிருந்தேன்" என்றாள் மரகதம்.

"நீங்களும் என்னைப் போலவே அவரைப் பற்றியே யோசனைசெய்து கொண்டிருக்கிறீர்கள். மிகவும் சந்தோஷம். நமக்கு உதவி செய்தவர்கள் விஷயத்தில் நாம் அப்படித்தான் அக்கறை கொண்டிருக்கவேண்டும். நான் வந்தது இப்போது அவர் விஷயமாக அல்ல!" என்றார் துரைசாமி.

"நல்ல வேளை" என்று மரகதம் தன்னையறியாமலேயே கூறிவிட்டாள்.

''வேறு என்ன விஷயம்? இவ்வளவு அவசரமாக வந்தீர்களே! நடைப் போட்டிப் பந்தயம் வைத்தால் நீங்கள்தான் முதலில் வருவீர்கள்?'' என்று ரேவதி வேடிக்கையாகக் கூறினுள்.

''சீக்கிரம் வா! நன்முக அலங்கரித்துக்கொள்!'' என்று துரைசாமி அவளைத் துரிதப் படுத்தினுர்.

''நான் மட்டுமா? அம்மா!''

''உன்னைப் பெண் பார்க்க வரப்போகிமுர்கள்! ஆகையால் நீ மட்டுந்தான்!'' என்று துரைசாமி கூறவே எல்லோரும் சிரித்தார்கள்.

''யார் வரப் போகிமுர்கள்?'' என்று மரகதம் விசாரித்தாள்.

''சொல்லுகிறேன், வா!'' என்று அவர்களைத் தன் அறைக்கு அழைத்துச் சென்முர்.

''டெல்லியில் என் சிநேகிதர் நமசிவாயம் இருக்கிருரே, அவர் இப்போது டிரங் போன் செய்தார். அவருக்கு உறவினரான சிதம்பரம் தன் பிள்ளைக்கு ஒரு நல்ல பெண்ணைகப் பார்த்துச் சொல்லச் சொன்னுராம். அவர் உடனே ரேவதியைப் பற்றிப் பிரஸ்தாபித்தாராம். அந்தச் சிதம்பரம் இன்று பம்பாயிலிருந்து இங்கே தம் மனைவியுடன் வந்திருக்கிருராம். ரேவதியைப் பார்க்க விரும்புகிருராம். சிதம்பரமும் தாம் இங்கே வருவதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருப்பதாக இப்போதுதான் டெலிபோனில் தெரிவித்தார்'' என்று துரைசாமி விவரங் கூறினுர்.

''பிள்ளை?'' என்று கேட்டாள் மரகதம்.

''அவர் டில்லியிலிருக்கிருர். இவர்கள் பார்த்து விட்டுப் போய்த் தகவல் தெரிவித்த பிறகு அவர் வருவாராம்.''

''இவர்கள் என்னைப்பற்றி முதலில் 'சர்ட்டிபிகேட்' கொடுக்கவேண்டும் போல் இருக்கு'' என்று ரேவதி கேட்டாள்.

“அப்படியில்லை. அந்தப் பையனுக்கு லீவு கிடைக்கவில்லையாம். வராததற்கு அதுவும் ஒரு காரணம்.”

“பையனுக்கு என்ன வேலையாம்?” என்று மரகதம் விசாரித்தாள்.

“ஜப்பானிய தூதராலயத்தில் பெரிய ஆபீஸர் வேலையாம்!”

“பெயர்?”

“வசந்தன் என்று சொன்னதாக ஞாபகம்!” என்றார் துரைசாமி.

“வசந்தனா? சி. வசந்தன்” என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள் ரேவதி.

“போ அம்மா! நன்றாக டிரெஸ் செய்துகொள்” என்று துரைசாமி அவளைத் துரிதப் படுத்தினார்.

“எந்தப் புடவையை அப்பா கட்டிக் கொள்ளட்டும்?” என்று ரேவதி வேடிக்கையாகக் கேட்டுக் கொண்டே எழுந்து தன் தாயுடன் சென்றாள்.

ஒருமணி நேரத்திற்கெல்லாம் சிதம்பரம் தம் மனைவி மங்களத்துடன் வந்து விட்டார். துரைசாமியும், மரகதமும் அவர்களைப் பலமாக வரவேற்று உபசரித்தனர்.

குடும்பங்களுக்கிடையே சம்பந்தம் ஏற்படுவதற்கு அடிப்படையான அம்சம் ஒன்று உண்டு. அது பெண்ணைப் பிள்ளை வீட்டுக்காரருக்கோ, அல்லது பிள்ளையைப் பெண்வீட்டுக் காரருக்கோ பிடிப்பதல்ல; பெண்ணும் பிள்ளையும் ஒருவரை ஒருவர் காதலிப்பது மட்டும்கூட அல்ல.

இரண்டு குடும்பத்தினருக்கும் ஒருவருக்கொருவர் பிடித்துப் போய்விட்டால், மற்ற விஷயங்கள் சுலபமாக முடிந்து விடும்.

துரைசாமியைப் பார்த்த மாத்திரத்தில் சிதம்பரம் அவருடைய அருமை நண்பராகி விட்டார். மரகதமும்,

மங்களமுமோ பொருமை இல்லாத அக்காள் தங்கை போலப் பழகலாயினர்.

“ரேவதி தன் அறையில் நன்ருக அலங்கரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு இந்தக் கல்யாணப் பேச்சு எதிர்பாராமல் திடீரென்று ஏற்பட்டது மிகவும் வேடிக்கையாயிருந்தது.

“அந்த வசந்தன் யார்? தமக்குத் தெரிந்த அந்த வசந்தன் தாஞ? அதே வசந்தஞயிருந்தால்...! இப்படி அவள் எண்ணி அந்தப் பெயரைத் தன் வாய்க்குள்ளாகவே அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள். அப்படிச் செய்வதிலேயே அவள் ஒரு தனி இன்பத்தை அனுபவித்தாள்.

“குழந்தை!” என்று மங்களம் ஆரம்பித்தாள்.

“இதோ அழைத்துக் கொண்டு வருகிறேன்” என்று மங்களமும் கூடப் புறப்பட்டாள்.

“நானுந்தான் வருகிறேனே” என்ருர் சிதம்பரம் சிரித்துக் கொண்டே, பிறகு “எதிர் பாராமல் போய் அவள் முன் நின்ருல் பயந்துபோய் விடுவாள். இங்கேயே அழைத்துக் கொண்டு வந்து விடட்டும்!” என்று வேடிக்கையாகக் கூறித் தம் மனைவியையும் உட்காரச் செய்தார்.

சில நிமிடங்களுக்கெல்லாம் ரேவதி வந்தாள். அவள் தூரத்தில் வந்து கொண்டிருக்கும் போதே அவளைப் பார்த்த மங்களத்துக்கு அவளைப் பிடித்து விட்டது; சிதம்பரத்துக்குந்தான்.

ரேவதி அவர்கள் பக்கத்தில் வந்து இருவரையும் வணங்கி நின்ருள்.

“அப்பா அம்மாவுக்கு!” என்று சிதம்பரம் கூறிஞர்.

ரேவதி அவர்களையும் வணங்கிஞள்.

மங்களம் அவளை இழுத்து சோபாவில் தன் பக்கத்திலேயே உட்கார வைத்துக் கொண்டாள். அவளைக் கண்குளிரப் பார்த்தாள்.

மங்களம் ரேவதியின் படிப்பைப் பற்றியோ, பாட்டைப் பற்றியோ ஒன்றும் விசாரிக்கவில்லை.

''பிள்ளையிடம் ஒரு வார்த்தை சொல்லவேண்டும். அவன் வந்து பார்க்க வேண்டும். அவ்வளவுதான்'' என்றாள் மங்களம்.

''பார்க்க வேண்டும் என்றால் என்ன! அவனைப் பற்றியவரை ஒன்றுமிராது. நீ பார்ப்பதைப் பற்றித்தான் சொல்லுகிறாள்'' என்று ரேவதியைப் பார்த்து சிதம்பரம் கூறினார்.

''அவருக்கு வர சௌகரியப் படாவிட்டால் நாம் எல்லோருமே டில்லிக்குப் போய் விட்டு வந்தால் போச்சு!'' என்றார் துரைசாமி.

''அவனே சீக்கிரம் லீவு எடுத்துக்கொண்டு வருவதாக எழுதியிருக்கிறான்'' என்றார் சிதம்பரம்.

''பம்பாயிலேயேதான் படித்தாராக்கும்?'' என்று துரைசாமி விசாரித்தார்.

''இல்லை. நாங்கள் மட்டுந்தான் பம்பாயில் இருந்தோம். அவன் இங்கேதான் ஹாஸ்டலில் இருந்து கொண்டு காலேஜில் படித்து வந்தான்.''

''எந்தக் காலேஜில்!'' என்று ரேவதி மரியாதையாக மெதுவான குரலில் விசாரித்தாள்.

''அப்படிக் கேளு!'' என்று சிதம்பரம் மகிழ்ச்சியுடன் கூறி 'பிரஸிடென்ஸி கல்லூரியில்' என்று தெரிவித்தார்.

''எந்த வருஷம்?''

''போன வருஷம் தான் ஹானர்ஸ் படிப்பு முடிந்தது.''

''நான் கூட அந்தக் கல்லூரியில்தான் படித்தேன்.''

''நீ சொல்லுகிறதைப் பார்த்தால் வசந்தனைத் தெரிந்திருக்கும் போலிருக்கு.''

''ஒரே ஒரு தரம் பார்த்து...''

''பேசிக்கூட இருக்கிறேன்'' என்று ரேவதி முடித்த போது சிதம்பரம் வாயெல்லாம் பல்லாகத் தெரிந்தது.

''அப்போ உனக்கு அவனை...'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

''இந்தாருங்கள்! குழந்தையைப் போய் எல்லோர் எதிரிலும் இப்படிக் கேட்டால் அவள் சொல்வாளா?'' என்று மங்களம் பரிகசித்தாள்.

வசந்தன் வந்து பார்த்த பிறகு முகூர்த்தம் வைத்துக் கொள்வதென்று முடிவு செய்தனர். பிறகு சிதம்பரமும், அவர் மனைவியும் விடை பெற்றுக்கொண்டு சென்றனர்!

பிறகு, தாயும் மகளும் தனியே பேசிக் கொண்டிருந்தபோது மரகதம் ''வசந்தன் எப்படியிருப்பார்?''

''நன்றாகவே இருப்பார்!'' என்று ரேவதி கூறிய போது அவள் அவனை நினைத்துப் பார்த்தே சந்தோஷ மடைந்திருக்கிறாள் என்று மரகதம் ஊகித்தாள்.

''நூற்றைந்து!''

''நூற்றாறு''

''நூற்றேழு!''

''நூற்றெட்டு!''

இப்படி வசந்தன் தன் மனத்திற்குள்ளேயே எண் களைச் சொல்லிக்கொண்டு தான் போட்டுக் கொண்டிருந்த தண்டால்களை எண்ணி வந்தான்.

நூற்றெட்டு முடிந்ததும் எழுந்து நின்று மூச்சை வெளியே விட்டான். மெதுவாக அங்குமிங்கும் நடந்து மூச்சு விடுவதை நிதானப் படுத்திக் கொண்டான். பிறகு சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு பெரிய கண்ணாடியின் முன் போய் நின்றான்.

'சே!' என்ற அதிருப்தி தோன்றக் கூறிவிட்டு ஒரு சோபாவில் அமர்ந்து சிரம பரிகாரஞ் செய்து கொண்டான்.

சாதாரணமாக வாலிபர்கள் தங்களைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டு 'சே'! என்றோ, 'சே, சே!' என்றோ கூறிக் கொள்வது தங்கள் அழகை, முக்கியமாக முகத்தின் அழகைப் பற்றியதாய் இருக்கும்.

ஆனால், வசந்தன் அலுத்துக் கொண்டது தன் முகத்தைப் பற்றியது அல்ல. ஏனென்றால், அது அழகாய் இருந்தது; மிகவும் அழகாய் இருந்தது. பூரணச் சந்திரனைப் போல வட்டமாய், குறுகுறுப்பான இரண்டு அழகான கண்களுடன் இருந்தது. தலைமயிர் கன்னங்கரேலென்று சுருட்டை சுருட்டையாய் இருந்தது.

அவனுக்குத் திருப்தியை அளிக்காதது பொதுவாக அவன் உடல்தான்.

ஒருவன் போலீஸ் இலாகாவில் சேர்வதற்கு இத்தனை அங்குலம் மார்பு சுற்றளவு, இத்தனை பவுண்டு கனம் இருக்க வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள். இராணுவத்திலும் சேர இதேபோன்ற அங்க அளவுகள் இருந்தாக வேண்டும்.

வசந்தனுக்குத் தான் ஒரு பெரிய போலீஸ் அதிகாரியாகவோ அல்லது இராணுவ மேஜராகவோ வேலை பார்க்க வேண்டுமென்று ஆசை. ஆனால், அவன் உடல் அமைப்பு அந்த இலாக்காக்களில் சேர இடங் கொடுக்கவில்லை.

அவன் உயரம் கிட்டத்தட்ட ஐந்தடிதான்; மார்பும் குறுகியிருந்தது; உடல் கனமும் அதிகமில்லை.

போலீஸ், ராணுவ இலாக்காக்களில் நிராகரிக்கப்பட்டபோதுதான் அவனுக்குத் தன்னைப் பற்றிய குறை தெரியவந்தது. அது என்னமோ பெரிய குறையில்லை. ஆனால் வசந்தன் அதைப் பற்றி எண்ணியெண்ணித் தனக்குள்ளாகவே புழுங்கினான். தன்னைவிட உயரமானவர்களையும், பருமனானவர்களையும், பலமானவர்களையும்

பார்க்கும் போதெல்லாம் அவன் தன்னைப் பற்றி இளம் பமாக நினைத்துக் கொள்வான். பிறகு அவனுக்கு அன்று வேறு வேலையே ஓடாது.

அவன் தந்தை சிதம்பரம் பம்பாயில் ஒரு ஜப்பானியக் கம்பெனியின் மேனேஜராக இருந்து வந்தார். அவருடைய சிபாரிசின்மீது அவனுக்கு டில்லியிலுள்ள ஜப்பானிய கான்ஸல் ஜெனரல் காரியாலயத்தில் உதவிக் காரியதரிசி வேலை கிடைத்தது. அவன் ஒரு பெரிய அறை வாடகைக்கு எடுத்துக்கொண்டு வசித்துவந்தான். சாப்பாடு ஒரு ஹோட்டலில்.

தனியே பிரம்மசாரியாக வசித்து வந்ததால் அவனுக்கு சாவகாசம் நிறைய இருந்தது. தன் உடலமைப்பிலுள்ள, தான் குறையென்று கருதும் அம்சங்களை எடுத்துக் காட்டாதிருக்கும் முறையில் பலசாலியாக முயன்ருன்.

அதற்காகத் தினமும் காலையில் தண்டால், பஸ்கி முதலிய தேகப்பயிற்சிகள் செய்துவந்தான். எப்பொழுது பார்த்தாலும் உடலைப் பற்றிய நினைவுதான். அதற்காக அறையில் சாதாரணமாக நடந்து கொண்டிருக்கும் போதேகூட உயரே எழும்பிக் குதித்துக் குதித்துச் செல்வான். உடல் பருப்பதற்கான சத்துக்கள் நிறைந்திருப்பதாகக் கருதப்படும் உருளைக் கிழங்கு, பட்டாணி, வேர்க்கடலை, ரஸகுல்லா முதலியவற்றை அளவுக்கு மீறியே புசித்து வந்தான்.

ஆனுல், அவனது உடல் அத்தனையும் சீரணித்துக் கொண்டு எப்போதும் போலவே மெல்லியதாய் இருந்தது. தேகப் பயிற்சியினுலும் உடல் பருமனுகவில்லை. உடல் நரம்புகள் உரம் பெற்றதாக வெளிக்குத் தோன்றவில்லை. அவன் கை கால்கள் பிரபல ராமமூர்த்தி சாண்டோவினுடையதைப் போன்று பார்ப்பதற்கு மென்மையாய்த் தோற்றமளித்தன.

ஆனுல், அவன் உடல் எடை சில பவுண்டுகள் அதிகரித்திருந்தது. அவனுக்கு உள்ளூரப் பல உணர்ச்சிகள் ஊடுருவிச் சென்று கொண்டிருப்பதையும் உணர்ந்தான்.

ஜப்பானியர்களோடு பழகத் தெரிந்த அவனுக்கு அவர்கள் அநேகமாகக் குள்ளர்களாய் இருந்த போதிலும் நல்ல பலசாலிகளாயிருப்பதைக் கவனித்தான். அவன் அவர்களுடைய உணவு, பழக்க வழக்கங்களை எல்லாவற்றையும் பற்றிய விவரங்களை விசாரித்தான். அவர்களைப் போலத் தானும் எல்லாவித அசைவ உணவுகளையும் உட்கொள்ள விரும்பவில்லை.

ஒருநாள் அவன் தன் காரியாலய சகாவும் நண்பருமான கிராட்டோவின் பங்களாவிற்குச் சென்றிருந்தான். அவன் போன சமயம் அவர் தமது மேஜை யருகில் உடற்கூற்று நூல் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தார். எதிரில் மனித உடலின் எலும்புக்கூடு, நரம்புகள், தசை, நார்கள் முதலியவற்றைக் காண்பிக்கும் படங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

''நீங்கள் என்ன வைத்தியப் பரீட்சைக்குப் படிக்கிறீர்களா?'' என்று வசந்தன் கேட்டான்.

''குஸ்திப் பரீட்சைக்கு என்றார்'' கிராட்டோ.

''இல்லை. தமாஷ் செய்கிறீர்கள்?'' என்று வசந்தன் சொன்னான்.

''உண்மையாகவே குஸ்திக்காகத்தான்.''

''நீங்கள் என் மாதிரியே குள்ளமாய் உடம்பு மெலிந்து இருக்கிறீர்களே குஸ்தி போட முடியுமா?''

''உன் மாதிரியும், என் மாதிரியும் இருக்கிறவர்களுக்காகத்தான் இந்தக் குஸ்தி முறை!''

வசந்தன் இதைக் கேட்டு அவரை ஆச்சரியத்துடன் நோக்கினான்.

''ஜூயு ஜிட்ஸு, என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?'' என்று கிராட்டோ விசாரித்தார்.

''கேள்விப்பட்டிருக்கிறேன். குஸ்திச் சண்டை போட்டோ படங்களைக்கூடப் பார்த்திருக்கிறேன்.

குஸ்தியிலீடுபடுபவர் எல்லாம் பயில்வான்கள் மாதிரி அல்லவா இருக்கிறார்கள்?'' என்று வசந்தன் கேட்டான்.

''அப்படியிருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படியிருப்பவர்களிடமிருந்து நம்மைப் போன்றவர்கள் தற்காத்துக்கொள்ள இந்த ஜுயூ ஜிட்ஸு மிகவும் உபயோகப்படும்'' என்று கிராட்டோ கூறியதும் வசந்தன் எழுந்திருந்து அவர் கைகளிரண்டையும் பிடித்துக் கொண்டான்.

''எனக்கு இந்தக் குஸ்தியைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான்.

''சரி!'' என்று கிராட்டோ ஒப்புக் கொண்டார்.

''மிகவும் கஷ்டமாயிருக்குமோ!''

''அப்படி ஒன்றும் கஷ்டமானதல்ல. அதைப் பற்றிய அடிப்படையான விஷயங்களை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். சில தந்திரங்கள், பிடிகள் எல்லாம் இருக்கின்றன.''

வசந்தன் மேஜை மீதிருந்த உடற்கூறுப் படங்களைக் காண்பித்து 'இதெல்லாம் எதற்காக? குஸ்திக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? என்று விசாரித்தான்.

''இந்த முறையில் இதைப் பற்றிய அறிவுதான் அவசியம். உடலிலுள்ள ஒவ்வொரு நரம்பும், எங்கெங்கே இருக்கிறது. அவை என்ன என்ன வேலை செய்கின்றன, அவை சரிவர இல்லாவிட்டால் இரத்த ஓட்டம் உடல் நிலைமை முதலியன எப்படிப் பாதிக்கப்படும் என்பதைப் பற்றிய விவரங்களை நன்றாகச் சந்தேகத்துக்கிடமில்லாமல் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.''

வசந்தன் தலையை அசைத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். கிராட்டோ மேலும் சொல்லலானார்:

''ஒரு பலசாலியான எதிரி இருக்கிறான். அவனுக்குச் சரி சமமாகப் பலமில்லாதவர் என்ன செய்வது? பலத்துக்குப் பதில் பலத்தை உபயோகிப்பதற்கில்லை. ஆகை

யால், எதிரியின் ஜீவ நாடிகளைத் தாக்க முயற்சிக்க வேண்டும்.''

''ஜீவநாடிகள் என்றால்?'' என்று வசந்தன் கேட்டான்.

''எந்தெந்தப் பாகத்தைப் பிடித்தால் எதிரி சிரமப் படக்கூடுமோ அத்தகைய பாகங்கள் மணிக்கட்டு, கணுக் கால், கைகள், தோள்பட்டை, முழங்கைகள், வயிறு முதலிய இடங்கள். இவை எல்லாம் பழகப் பழகத் தெரியவரும். இந்த இடங்களிலுள்ள நரம்புகளை ஒரு குறிப்பிட்ட முறையில் கையால் அடிப்பதனாலும், விரல் களால் பிடித்து அமுக்குவதனாலும் எதிரி துடி துடித்துப் போவான். அவனால் வலி தாங்க முடியாது. தாக்கப் பட்ட நரம்புகளில் இரத்த ஓட்டம் தற்காலிகமாக நின்று போய் அவை மரத்துப்போய்விடும். சில சமயம் ஹிருதயத் திலிருந்து செல்லும் ரத்தக் குழாய்களையும் கைவிரல் களால் தட்டி இரத்த ஓட்டம் தற்காலிகமாக நின்று விடும்படி செய்து விடலாம். எதிரி மயக்கம் போட்டுக் கீழே விழுந்து விடுவான்...,'

கிராட்டோ கூறி வந்த இந்த விவரங்களை வசந்தன் வாயைப் பிளந்த வண்ணம் கேட்டு வந்தான்.

''ஆமாம்! இதே போன்ற முறைகளை எதிரியும் கையாளலாமல்லவா?'' என்று கேட்டான்.

''ஆமாம். அவனும் நம்மை அதே மாதிரி தாக்கு வான். ஆனால், அவன் எத்தனைக்கெத்தனை உயரமாயும் பருமனாகவும் இருக்கிறானோ அத்தனைக்கத்தனை அவனுக்கு ஆபத்து!''

''அதெப்படி?''

''அவன் பலமே அவனுக்குக் கெடுதலாக அமையும். அவன் தன் பலங்கொண்ட மட்டும் கிளம்பி நம்மீது பாய்ந்து வரும்போது நாம் லாவகமாகச் சற்று அப்பால் நகர்ந்தால் அவன் கீழே விழுவான். அல்லது காலைத் தட்டியோ, வேறு விதமாகவோ கீழே விழும்படி செய்து விடலாம். கனமான உடலுள்ளவன் நம்மைப்போல்

உடனே தரையைவிட்டு எழுந்து மறுபடியும் தாக்க முடியாது.''

''நாம் கீழே விழுந்து அவன் நம்மீது ஏறிக் கொண்டால் அப்புறம் நாம் கிளம்ப முடியாதே. நாம் கூடிய வரை கீழே விழாதிருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இதற்கு அவசியமான பயிற்சிகள் இருக்கின்றன. கீழே விழுந்த பிறகும் எதிரிகளின் நரம்புகளை அடிக்கவோ, அழுத்தவோ முயற்சி செய்யலாமல்லவா?''

''நரம்புகளை எப்படிக் கையால் அடிப்பது'' என்று வசந்தன் கேட்டான்.

கிராட்டோ தமது வலது கையை வசந்தனிடம் நீட்டினார். உள்ளங்கைக்குக் கீழே சுண்டுவிரல் பக்கத்திலுள்ள இடத்தைக் காண்பித்தார்.

வசந்தன் அந்தப் பாகத்தைத் தொட்டுப் பார்த்தான். கருங்கல் மாதிரி கடினமாயிருந்தது.

''இதனால் ஒரு தேங்காயைக்கூடத் தட்டி உடைத்துவிடலாம்!'' எனறு கிராட்டோ தெரிவித்தார்.

''இந்த இடம் இப்படியாவதற்கு என்ன செய்கிறீர்கள்?'' என்று வசந்தன் கேட்டான்.

கிராட்டோ எழுந்திருந்து எதிர்த்தார்ப் போலிருந்த ஜன்னலிடம் சென்றார். அதன் கம்பி மீது தன் உள்ளங்கையின் அடிப்பாகத்தினால் 'பட், பட்' என்று வேகமாகப் பலமுறை அடித்துக் காண்பித்தார்.

''இப்படித்தான்!'' என்றார்.

வசந்தனும் தன் கை உள்ளங்கையை அவர் மாதிரியே ஜன்னல் கம்பியில் அடித்துப் பார்த்தான்.

''வலிக்கும் போலிருக்கிறதே'' என்றான்.

''முதலில் எல்லாம் நன்றாகவே வலிக்கும். இரத்தங் கட்டிக் காய்ச்சிப் போகணும்!'' என்றார் கிராட்டோ.

அன்றே வசந்தன் அவரிடம் ஜுயூ ஜிட்ஸு குஸ்தி கற்கும் சீடன் ஆனான்.

தான் மென்மையான ஒரு ஸ்திரியைப் போன்ற உடலமைப்புள்ளவனு யிருக்கிறேமே என்று ஏங்கி வந்த அவனுக்கு இந்தக் குஸ்திப் பயிற்சி உற்சாகத்தையும் தன்னம்பிக்கையையும் அளித்து வந்தது.

ஒரு நாள் அவன் தன் அறை ஜன்னலண்டை நின்று தனது உள்ளங்கை கீழ்ப்புறத்தைக் கம்பியில் வேகமாக அடித்துக் கொண்டிருந்தபோது வேலைக்காரன் அப்போது தபால் கொண்டு வந்து ஒரு கவரைக் கொடுத்து விட்டுப் போனான்.

உறை மேலிருந்த எழுத்தைப் பார்த்ததுமே அது தன் தந்தையிடமிருந்து வந்திருக்கிறதென்று தெரிந்து கொண்டான். அன்றைக்கு முதல் நாளன்றுதான் அவரிடம் இருந்து ஒரு கடிதம் வந்திருந்ததால், அவர் மறுபடியும் உடனே எழுதும்படியான அத்தனை முக்கிய மான அவசரமான விஷயம் என்ன இருக்கக்கூடும் என்று யோசனை செய்த வண்ணம் உறையைப் பார்த்தான்.

கடிதத்திலிருந்ததை ஒருமுறை படித்தான். அவன் உதடுகளில் புன்னகை அரும்பியது; மனத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது. இன்னொரு முறையும் படித்தான். அவன் தந்தை சிதம்பரம் எழுதியிருந்தார்.

''என்னருமை வசந்தனுக்கு!

உடல் நலம் என்று நம்புகிறேன்.

முந்தாநாள் நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அது கிடைத்திருக்கக்கூடும்.'

நீ உன் கல்யாணத்தைப் பற்றிய பேச்சையே எடுக்கக் கூடாதென்று சொல்லியிருப்பதால் நான் இது வரையில் பேசாதிருந்து வந்திருக்கிறேன்.

ஆனால், நேற்று நமசிவாயம் டில்லியிலிருந்து போன் செய்து சென்னையிலுள்ள துரைசாமி என்பவரின் பெண்ணைப் பார்த்துவிட்டு வரச் சொன்னார். உன்னிடமும் இதைப்பற்றிக் கூறுவதாகத் தெரிவித்தார். நண்பரின் வார்த்தையை தட்டக்

கூடாதென்பதற்காக நானும் அம்மாவுமாகப் போய்ப் பார்த்தோம்.

பெண் ரேவதி என்ற பெயராம்.

பிரஸிடென்ஸி காலேஜில் படித்தாளாம்.'

உன்னோடு ஒரு முறை பேசியிருக்கிறாளாம்.

"உனக்கு அந்தப் பெண்ணைப் பார்க்கலா மென்று தோன்றினல் வந்து பார்த்துவிட்டுப் போ!

நான் இங்கே இன்னும் ஒரு மாதம் தங்கி இருக்கப் போகிறேன்.

அம்மாவின் ஆசீர்வாதங்கள்."

உன்

சிதம்பரம்.

கடிதத்தை மூன்றாவது முறையாகப் படித்து முடித்ததும் டெலிபோனை எடுத்துத் தந்தி ஆபீஸைக் கூப்பிட்டான். தன் தந்தைக்குப் பின்வரும் தந்தியை அடித்தான்'—

லீவு கிடைத்த தினமே புறப்பட்டு வருகிறேன்.

பிறகு அவன் அந்த அறையில் நடனமாடிக் கொண்டே நடந்து சென்றான்.

"ரேவதி!"

11

துரைசாமி, மனைவி மரகதம் விரும்பியபடி, கேசவனோடு பேசுவதற்காக அவன் அறையை நோக்கிச் சென்றார். போய்க்கொண்டிருந்தபோது அவருக்கு அவன் தன் குடும்பத்துக்குச் செய்த உபகாரம்

எத்தன்மையது என்று எண்ணிப் பார்த்து அவனைக் கண் கண்ட தெய்வம் என்று மதிக்கலானார். அவர் இது போன்று அவன், தன் மனைவியும், மகளையும் காப்பாற்றிக் கொடுத்ததைப்பற்றி எத்தனை முறைகள் எண்ணிப் பார்க்கிறார்.

அவர், அவனிருந்த அறை வாசலை அடைந்தபோது சப்தமிடாமல் நடந்து சென்றார். கேசவன் தூங்கிக் கொண்டிருந்ததால் அவன் தூக்கத்தைக் கலைக்கக் கூடாதென்பதற்காக அவர் கதவை மெதுவாகத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தார்.

கேசவன் படுக்கையில் படுத்துப் புரண்ட வண்ணம் 'அப்பா, அப்பா' என்று முணகிக் கொண்டிருந்தது அவர் காதில் விழுந்தது. அன்று காலைதான் அதே அறையில் கூண்டுக்குள் அடைக்கப்பட்ட புலிபோல் அங்குமிங்கும் பாய்ந்து பாய்ந்து உலவிக் கொண்டிருந்த அந்தக் கேசவன் முணங்குவது அவருக்குப் பரிதாபத்தை உண்டாக்கிற்று. அத்துடன் ஆச்சர்யத்தையு மளித்தது.

அவர் அவன் பக்கத்தில் போய் நின்று என்ன செய் கிறது? என்று கேட்டு அவன் தலையைத் தடவிக் கொடுக்கப் போனார்.

"தொடாதேயுங்கள். தலைக்குப்பின்னால் என்னமோ சலாகை போட்டுக் குத்துகிறது போலிருக்கு" என்று கண்களில் நீர் ததும்பக் கூறினான்.

"துரைசாமி, எங்க டாக்டருக்கு டெலிபோன் செய்து வரச் சொல்கிறேன் என்று, துரைசாமி அறையை விட்டுக் கிளம்பினார். வேண்டாம் மார்த்தாண்டம் வரட்டும்" என்றான் கேசவன்.

"நீங்கள் இப்படிக் கஷ்டப்படுவதை பார்த்து என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. மார்த்தாண்டம் வருகிறபடி வரட்டும். இப்போது சாந்தியாக எங்க டாக்டர் பார்த்து ஏதாவது செய் யட்டும்!? என்று கூறிய வண்ணம் துரைசாமி விரைந்து அறைக்கு வெளியே சென்று விட்டார்.

அவர் சிறிது தூரம் சென்றிருப்பார். திடீரென்று இரண்டு பலமான கைகள் அவர் தோற்களைப் பற்றின.

''வேண்டியதில்லை ஸார்! தலைவலி நின்றுபோய் விட்டது. இப்போது எனக்கு ஒன்றுமில்லை!'' என்று கேசவன் கூறி, அவரைப் பிடித்துத் தன் அறைக்கு அழைத்துச் சென்றான்.

''இந்தக் காலத்தில் உதவி செய்வதே ஆபத்து'' என்று கேசவன் கூறினான்.

''ஏன் நான் என்ன தவறாக நடந்துகொண்டு விட்டேன்'' என்று துரைசாமி கவலையுடன் கேட்டார்.

''இன்னும் என்ன தவறு செய்யணும்? என்னை டாக்டரிடம் காண்பித்து உடம்பைக் குணப்படுத்த வேண்டும் என்று துடிக்கிறீர்களே, அது ஒன்றே போதாதா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டான்.

அப்போதுதான் துரைசாமிக்கு அவன் வேடிக்கையாகப் பேசுவது தெரிந்தது. பின்னே நீங்கள் அசிரத்தையாயிருந்தால் நான் கட்டாயப்படுத்தி வைத்தியஞ் செய்யச் சொல்ல வேண்டியதுதான் என்றார்.

''நீங்கள் இந்த வீட்டில் எனக்கு முதல் தரமான அறையைக் கொடுத்திருக்கிறீர்கள். வேளா வேளைக்குச் சாப்பாடு, அடிக்கடி நீங்களும், உங்கள் மனைவியும், குழந்தையும் வந்து என்னைக் கவனித்துக் கொள்கிறீர்கள். என்னை உங்கள் குடும்பத்தில் ஒருவனாகவே பாவித்து நடத்துகிறார்கள். இதனால் எல்லாம் ஏற்பட்ட மகிழ்ச்சியினாலே எனக்குப் பழைய பலம் வந்து விட்டது'' என்று கேசவன் கூறி துரைசாமியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''உங்கள் முகத்தைப் பார்த்தால் நான் சொல்வதை நம்பவில்லை போலிருக்கிறது. இன்னும் சந்தேகம் இருக்கிறது போலிருக்கிறது'' என்று கேசவன் கூறிக்கொண்டே துரைசாமியைத் தன்னிரண்டு கைகளாலும் உயரத் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றிவிட்டுக் கீழே இறக்

கிறுன். தான் படுத்திருந்த கட்டிலின்மீது உட்கார வைத்தான்.

துரைசாமி, அவன் தன்னைத் தூக்கியபோது பதறிப் போனுர். சுற்றியபோதோ, அவன் எங்கே கீழே தன்னை வீசி எறிந்து விடுவானே என்று பயந்து வாய்விட்டுக் கூவவிருந்தார். தான் அவனுக்கு நன்றியறிதல் காண்பிப்பதற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று விரும்புவதை வெறுத்து அதற்காகத் தன்மீது கோபங் கொண்டே அப்படிச் செய்கிருனே என்று அவருக்குத் தோன்றிற்று.

கேசவன், அவர் பக்கத்தில் அமர்ந்து அவரை அணைத்துக்கொண்டு "பாவம் பயந்து போய்விட்டீர்கள். எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. செக்குலக்கை மாதிரி இருக்கிறேன் என்று சந்தேகத்துக்கிடமில்லாமல் உங்களுக்கு நிரூபிப்பதற்காகவே அப்படிச் செய்தேன். அன்றைக்கு அம்மாவின் உடம்பிலிருந்து தண்ணீர் வெளி வருவதற்காகக்கூட இப்படித்தான் உயரத் தூக்கி சுற்றினேன்! சுற்றும்படியாயிற்று" என்ருன்.

துரைசாமி தாம் வந்த சந்தர்ப்பம் சரியாயில்லை என்று கருதி நான் போய் வருகிறேன் என்று எழுந்தார்.

"இப்பொழுதுதான் வந்தீர்கள். அதற்குள்ளேயா? என்ருன். பிறகு 'அம்மா என்ன செய்கிருள். ரேவதி என்ன பண்ணுகிருள்?" என்று கேட்டான்.

"இரண்டுபேரும் வெளியில் போயிருக்கிருர்கள்" என்று துரைசாமி தெரிவித்தார்.

அவர், அவனிடம் தாம் பேச வந்த விஷயத்தைப் பற்றி எப்படி ஆரம்பிப்பதென்ற யோசனை செய்து கொண்டிருந்தார். கேசவன் அவரைக் கடைக்கண்ணுல் கவனித்துக் கொண்டிருந்தான்.

ஒருவேளை நான் அடுத்த வாரம் எதிர்பாராமல் வெளியூர் செல்லும்படியாயிருக்கலாம் என்று துரைசாமி பீடிகை போட்டுக்கொண்டார்.

''போங்களேன்'' என்ருன் கேசவன்.

''அதற்கு முன்ஞல் ஏதாவது தங்களுக்கு ஏற்பாடு செய்துவிட்டுச் செல்லவேண்டும்'' என்ருர் துரைசாமி. கேசவன் இதைக் கேட்டு நையாண்டிச் சிரிப்புச் சிரித் தான். ஏற்பாடா? எனக்கா? என்ருன்.

''ஆமாம்! முதலில் உங்கள் உடம்பு விஷயம் கவ னிக்க வேண்டும், அப்புறம்...''

''மிஸ்டர் துரைசாமி நீங்கள் மனத்திற்குள் எதையோ வைத்துக்கொண்டு மென்று முழுங்குகிறீர்கள். உங்களுக்கு எந்த விதச் சிரமமும் வைக்காது நானே சொல்கிறேன். முதலில் நாஞக இங்கே வரவில்லை என்பதை மறந்து விடாதீர்கள்...''

''என்ன கேசவன்'' இப்படிப் பேசுகிறீர்கள்'' நான் கூறியதைத் தப்பர்த்தம் செய்து கொண்டு விட்டீர் கள்...

''இல்லை. சரியாகத்தான் அர்த்தம் செய்துகொண் டிருக்கிறேன். டாக்டர் மார்த்தாண்டம் இப்பொழுது வருவதாகச் சொன்ஞர். வந்ததும் அவரிடம் ஒரு வார்த்தை கூறி விட்டு நான் இந்த இடத்தை விட்டுச் சென்றுவிடப் போகிறேன்.''

துரைசாமி, கேசவனது கைகளைப்பிடித்துக்கொண்டு ''நான் உங்களை இங்கேயே என் குடும்ப மனுஷஞக இருக் கச் சொல்லி வற்புறுத்துவதற்காக வந்தேன். அத் துடன்...''

''ஊம்''

''நீங்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது.''

''உங்களுக்கு ஏதாவது...''

''ஊம்''

''பொருளிஞல் உதவி செய்ய...''

''ஊம்! சொல்லுங்கள்!!

"நீங்கள் கோபித்துக்கொள்ளமாட்டீர்களே!"

"இல்லை"

"உங்களுக்கு எந்த ஸ்தாபனத்திலாவது சிரத்தை உண்டா!"

"அப்படி என்றால்?"

"உங்களுக்கு ஒரு சேவை என்றால் உயிர் என்று எனக்குத் தெரியும். அனாதைஆசிரமங்கள், மாஜிக் கைதிகள், சங்கம், பிரசவ வைத்தியசாலைகள் இதுமாதிரி?"

"இவற்றில் சிரத்தை இருந்தால்?"

"நீங்கள் எந்த ஸ்தாபனத்தைக் குறிப்பிடுகிறீர்களோ அதற்கு உங்கள் பேரால் நன்கொடையாக ஏதாவது கொடுக்கிறேன். நீங்கள்தான் உங்களுக்காக ஒன்றும் வாங்கிக்கொள்ள மாட்டீர்கள்?" என்றார் துரைசாமி.

கேசவன், கண்களை மூடிச் சற்று யோசனை செய்துவிட்டு "நீங்கள் என்னைப் பற்றி நன்றாக அறிந்துகொண்டிருக்கிறீர்கள். நீங்கள் கூறிய இந்த நன்கொடை யோசனை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்றான்.

இதைக் கேட்டுத் துரைசாமி மகிழ்ச்சியடைந்தார். "கேசவன் உங்கள் பதில் என் வயிற்றில் பாலை வார்த்தது போலிருக்கிறது. நீங்கள் எங்கே மறுதளித்து விடுவீர்களோ என்று திகில்பட்டுக் கொண்டிருந்தேன். எந்த ஸ்தாபனத்துக்கு என்று சொல்லுங்கள்."

"சொல்கிறேன். அதற்கு முதலில் நீங்கள் என்ன செய்யலாமென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிய வேண்டும்."

"நீங்கள் செய்த உதவியை மதிப்பிட முடியாது. அதற்கு என் உயிரையே கொடுக்கலாம். ஏதோ என்னாலானதைக் கொடுக்கிறேன். நீங்கள் என்ன, இத்தனை தான் கொடுத்தாக வேண்டும் என்று என்னைக் கட்டாயப் படுத்தப் போகிறீர்களா? அது என்ன ஸ்தாபனம்?"

"அரியலூர் ரயில் விபத்துக் காளானோர் சங்கம்."

"அப்படியென்று ஒன்று இருக்கிறதா?"

"எனது நண்பர்கள் சிலர் ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள்!"

"என்ன தொகை கொடுத்தால் கணிசமாயிருக்கும்?"

"உங்களைப்போல பெரிய லட்சாதிபதிகள் எத்தனை வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால் நான் அதிகம் கேட்கமாட்டேன். நீங்கள் ஒரே ஒரு லட்சம் கொடுங்கள் போதும்" என்று கேசவன் மிகவும் நிதானமாகக் கூறினான்.

"ஒரு லட்சமா?" என்ற வார்த்தைகள் துரைசாமி வாயினின்றும் ஆச்சர்யத்துடன் கிளம்பின.

"ஆமாம்! இப்போதைக்கு அது போதும்."

துரைசாமி 'பதிலளிக்கத் தோன்றாதவராய்த் திகைத்துப் போயிருந்தார்.

அவர் மௌனஞ் சாதித்திருப்பதைக் கண்ட கேசவன் "எனக்கு அப்போதே தெரியும். நீங்கள் மரியாதைக்காகச் சொல்கிறீர்களென்று. இருந்தாலும் நீங்கள் பெரிய மனுஷன்,கண்ணியமானவர் என்று நம்பிக்கேட்டு விட்டேன் தப்பு; தப்பு. நீங்கள் என்னை அவமானப் படுத்துவதற்காகவே இப்படிச் செய்தீர்கள்" என்று ஆத்திரத்துடன் கூறினான். அவன் கண்களிலிருந்து நீர் கூடப் பெருகிற்று.

துரைசாமிக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாகப் போய்விட்டது. அவன் பெரிய தொகை கேட்டதில் அவன்மீது தவறில்லை என்று நினைத்தார்.

"நான் இல்லையென்றோ, முடியாதென்றோ,சொல்லவில்லையே அதற்குள் ஏன் இப்படி வருத்தப்படுகிறீர்கள்?" என்றார்.

நான் குறிப்பாக இந்த ஸ்தாபனத்திற்குக் கொடுக்கும்படி ஏன் கேட்டேன், தெரியுமா? என்றான் கேசவன். துரைசாமி தெரியாதென்று தலையை அசைத்தார்.

"அந்த அரியலூர் விபத்தில் தண்ணீருக்குள் மூழ்கி இறந்தார்களே, அது மாதிரி, உமது மனைவிக்கும் மகளுக்கும் பெண்ணுக்கும் ஏற்படாமல் கடவுள் காப்பாற்றினாரே அதை உத்தேசித்துத்தான்" என்று கேசவன் தான் செய்த உதவி அவர் மனத்தில் படும்படி இடித்துக் கூறினான்.

"கொடுக்கிறேன்; கொஞ்சம் சாவகாசம் கொடுங்கள். மரகதத்தினிடம் சொல்லி யோசனை செய்கிறேன் என்று துரைசாமி கூறினார்.

அப்போது டாக்டர் மார்த்தாண்டம் அறைக்குள் நுழையவிருந்தார். அவர் பின்னால் ஒரு ஸ்திரீ வருவது போலிருந்தது.

கேசவன் தன் படுக்கையினின்றும் தாவி எழுந்து கீழே நின்றான். துரைசாமிக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் போய் நின்று கொண்டான், இடுப்பில் தன் கைகளை வைத்துக்கொண்டு அவரை வெறித்துப் பார்த்தான். துரைசாமி அவன் எங்கே தன்னைத் தாக்கப் போகிறானோ என்று பயந்து போய்விட்டார். எழுந்திருந்து அப்பால் சென்று நின்றார்.

"மிஸ்டர் துரைசாமி, நீங்கள் மிகவும் மெதுவாக யோசனை செய்யுங்கள். செய்துவிட்டு இல்லை என்று சொல்லுங்கள். நீங்களென்னை அவமானப் படுத்துவதற்காக வேண்டுமென்றே இப்படிப் பேசுகிறீர்கள். நன்றி, நன்றியாம். உமது பணம் ஒரு நயா பைசா அந்த ஸ்தாபனத்துக்கு வேண்டியதில்லை; இங்கே நானாக வரவில்லை என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தெய்வமே என்று இருந்தவனை கட்டிப் பிடித்திழுத்து வந்தீர்கள். உங்கள் உதவும் குணத்தை உங்கள் நண்பர்களிடம் காண்பித்துக் கொள்வதற்காக! இந்த

மட்டில் நான் இனி ஒரு நிமிடம் தாமதித்து நிற்கமாட்டேன்'' என்ற கேசவன் ஆவேசம் வந்தவன்போல் கூறி விட்டு வெளியில் போகக் கிளம்பினான்.

''நீங்கள் போகக்கூடாது'' என்று துரைசாமி கெஞ்சினார்.

சப்தம் கேட்டு அங்கே வந்த மரகதமும், ரேவதியும் அவன் போகக்கூடாதென்று வழிமறித்து நின்றார்கள்.

''என்ன கேசவன், இப்படி எல்லாம் பேசுகிறீர்கள்?'' என்று டாக்டர் மார்த்தாண்டம் சற்றுக் கோபமாகக் கேட்டார்.

''நான் இங்கே ஒரு நிமிடம்கூட இருக்க மாட்டேன்'' என்று கேசவன் உரக்கக் கத்தினான்.

''அப்படிச் சொல்லக்கூடாது!'' என்று மரகதம் கெஞ்சினாள்.

''அவர் என்னை அவமானப் படுத்தி விட்டார். நான் பதில் உபகாரத்தை எதிர்பார்க்கும் அற்பன் என்று மதித்து ஏசிவிட்டார். நான் இங்கே வரமாட்டேன் என்றவனை வலுக் கட்டாயப்படுத்தி அழைத்து வந்து இப்படி என் மனம் புண்ணாகும்படி பேசுகிறார். நான் இந்த வீட்டை விட்டு உடனே வெளிச் சென்றாக வேண்டும்'' என்று கேசவன் கூறிய வண்ணம் கதவை நோக்கி வேகமாகச் சென்றான்.

வழியில் நின்றிருந்த துரைசாமி ''என்னை மன்னித்து விடுங்கள் என்றார். பிறகு உங்களை யார் போகவிடப் போகிறார்கள்? நன்றி கெட்டவன் என்ற பழி எனக்கு ஏற்படக்கூடாது'' என்று கூறிக் கேசவன் கைகளைப் பிடித்து இழுத்து நிறுத்த முயற்சித்தார்.

மறுகணம் கேசவன் தரையில் பொத்தென்று விழுந்தான்.

''அப்பா'' என்று புலம்பினான்.

12

கேசவன் கீழே விழுந்ததைக் கண்டு துரைசாமி திகைத்துப்போய் விட்டார். விழுந்தவன் உடனே எழுந்திருப்பதை எதிர்பார்த்து அவனிடம் மன்னிப்புக் கேட்கக் தயாராயிருந்தார். ஆனுல், கேசவனது உடல் சிறிதுகூட அசைந்து கொடுக்கவில்லே. மரக்கட்டை மாதிரி கிடந்தது. அதைக் கண்டு துரைசாமி திடுக் கிட்டார்.

டாக்டர் மார்த்தாண்டம் அவனருகில் வந்து மண்டி இட்டு உட்கார்ந்து அவன் கையை மெதுவாகத் தட்டிக் ''கேசவன்'' என்று கூப்பிட்டார்.

அவன் பதில் சொல்லவில்லே; கண்களேயே திறந்து பார்க்கவில்லே. டாக்டர் அவன் உடலே அசைத்துப் பார்த்தார். அவர் அசைத்தபோது மட்டும் அசைந்ததே யன்றி அது தானுக அசையவில்லே. அவர் அவன் மூக்கில் விரலே வைத்துப் பார்த்துவிட்டு அவன் நாடியை யும் இருதயத்தையும் பரிசோதனே செய்தார்.

இதை எல்லாம் கவலேயுடன் கவனித்துக் கொண்டு இருந்த துரைசாமியின் உடல் வெலவெலத்துப் போய் விட்டது. டாக்டர் என்ன சொல்லப் போகிருரோ என்று அவர் வாயையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஆபத்து ஒன்றுமில்லே. கீழே எதிர்பாராமல் விழுந் ததில் எக்கச்சக்கமாக அடிபட்டிருக்கும். மண்டையில் முன் அடிபட்ட அதே இடத்தில் மறுபடியும் அடிபட் டிருக்கும் போலிருக்கிறது'' என்று மார்த்தாண்டம் கூறிவிட்டு ''ராதாபாய்! போய்க் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா!'' என்று தம்முடன் வந்திருந்த ஒரு ஸ்திரியைப் பார்த்துக் கூறினுர்.

''இங்கேயே இருக்கிறது'' என்று துரைசாமி கூறி ஓடிப்போய் அறையின் ஒரு மூலேயில் வைத்திருந்த மிக

நவீன மண் கூஜாவிலிருந்து ஒரு கண்ணாடி தம்ளரில் தண்ணீர் பிடித்துக்கொண்டு வந்து கொடுத்தார்.

டாக்டர் மார்த்தாண்டம் கேசவன் முகத்தில் சிறிது தண்ணீர் தெளித்துத் தமது கைக்குட்டையால் அவன் முகத்தில் விசிறினார்! 'என்ன கேசவன், இது! எழுந்திரு!'' என்றார். அவர் கூறிய விதம் அவனை அதட்டி அதிகாரஞ் செய்வது போலிருந்தது. அதைக் கேட்ட துரைசாமி ஆச்சரியப்பட்டார்.

கேசவனது கண்கள் சற்றுத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தன; மறுபடியும் மூடிக்கொண்டன.

மாடி அறையில் இருந்து வந்த உரத்த பேச்சுச் சப்தத்தைக் கேட்டு கீழே இருந்து மரகதமும், ரேவதியும் படிகளிலேறி விரைந்து வந்தனர்.

கேசவன் தரையில் மரக்கட்டை போலப் படுத்திருப்பதையும், துரைசாமி அவனைப் பார்த்துக்கொண்டே பிரமித்த வண்ணம் நின்றிருப்பதையும் கண்டு தாயும் மகளும் திடுக்கிட்டுப் போயினர். ரேவதி தன் தந்தையினிடம் சென்று "என்ன அப்பா?'' என்று கேட்டாள். அவர் பதிலளிக்காமல் பித்துப் பிடித்தவரைப் போலிருந்த தால் மார்த்தண்டமே தமக்குத் தெரிந்த மட்டில் விஷயங்களைக் கூறினார்.

"என்னால்தான் விழுந்து விட்டார். என்னால்தான் விழுந்து விட்டார்'' என்று துரைசாமி மந்திரம் ஜபிப்பது போல் மெதுவாகத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தார்.

ரேவதி தன் தந்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டு "ஏதோ தவறிப்போய் விழுந்து விட்டார். இப்போது எழுந்து உட்கார்ந்து விடுவார். பாருங்கள்'' என்று அவருக்குத் தைரியம் கூறினாள்.

ஏதாவது மருந்து கொடுக்கிறீர்களா? என்று மரகதம் கேட்டாள்.

நான் போய்க் கொடுத்தனுப்புகிறேன். நன்ருகத் தூங்கினுல் சரியாகப் போய்விடும்'' என்ருர் மார்த்தாண்டம்.

''எதிர்பாராது விழுந்து விட்டதிலே மயக்கமாகி விட்டார்'' என்று டாக்டருடன்கூட வந்திருந்த ஸ்திரீ சொன்னுள்.

மரகதமும் ரேவதியும் அறைக்குள் நுழையும்போதே அவனைப் பார்த்தார்களாயினும் இப்பொழுதுதான் நன்ருகக் கவனித்தார்கள்.

பாவம். கீழே தரையில் படுத்திருக்கிருரே. தண்ணீர் பட்டு தலை, சட்டையெல்லாம் நனைந்திருக்கு. படுக்கையில் தூக்கிப் போடுங்களேன்'' என்று துரைசாமி தவித்தார்.

''எந்தப் படுக்கையில்?'' என்று மார்த்தாண்டம் கேட்டார்.

துரைசாமி பதில் சொல்வதற்குள் மரகதம் குறுக்கிட்டு''அவருக்கென்றுதான் ஓர் அறை விட்டிருக்கிறதே. அங்கேயே அழைத்துக்கொண்டு போனுல் அவருக்குச் சௌகரியமாயிருக்கும்'' என்ருள்.

அப்போது சற்றுக் கண் விழித்துக்கொண்ட கேசவன், தனது வலது காலை நீட்ட முயன்ருன். மறு கணம் 'ஆ, அப்பா!' என்று பல்லைக் கடித்துக்கொண்டு, முகத்தைக் கோரமாக வைத்துக்கொண்டு கத்தின அவன் கண்களில் நீர் அரும்பியிருந்தது.

''ஏன்! ஏன்!'' என்று மார்த்தாண்டமும், துரைசாமியும் விசாரித்தார்கள்.

''நீட்ட முடியவில்லையே!'' என்று கேசவன் ஓலமிட்டான். அவன் தன்னெதிரில் சிறிது தூரத்தில் நின்றிருந்த மரகதத்தையும், ரேவதியையும் பார்க்க முடியவுமில்லை. பார்க்க முயலவுமில்லை.

டாக்டர் அவன் காலைத் தொட்டு அமுக்கிப் பார்த்தார்.

''வலி தாங்கவில்லையே. தொடாதீர்கள்!'' என்று கேசவன் கூறி அவர் கைகளை எடுத்தெறிந்தான்.

''அந்தக் காலை நீட்டிப் பாருங்கள்,''

''ஊஹூம்!''

டாக்டர் யோசனை செய்த வண்ணமிருந்துவிட்டு ''ஏதாவது ஒன்று மாற்றி ஒன்று நேருகிறதே'' என்று கவலையுடன் கூறினார்.

''என்ன?'' என்று துரைசாமி வருத்தந் தோன்ற விசாரித்தார்.

''சப்பை நழுவியிருக்கும் போலிருக்கிறது!'' என்று டாக்டர் கூறியபோது அந்த அறையில் நிசப்தம் நிலவியது. எல்லோரும் கவலையுடனிருந்தனர்.

''எந்த வேளையில்'' குரோம்பேட்டை கோவில் குளத்துக்குப் போனேனோ! எனக்கு இப்படி எல்லாமா வரணும்?'' என்று கேசவன் புலம்பிய வண்ணம் கண்ணை மூடினான்.

''அவரால் எழுந்திருக்க முடியாது. தூக்கிக் கொண்டு போய்த்தான் போட்டாக வேண்டும். சற்று ஒய்வாக இந்த அறையில் இருக்கட்டுமா?'' என்று டாக்டர் துரைசாமியைக் கேட்டார்.

''இருக்கட்டுமே! அந்தப் படுக்கையில் படுக்க வையுங்கள்'' என்று துரைசாமி தாம் படுத்துக் கொள்ளும் கட்டிலைக் காண்பித்தார்.

இதைக் கேட்டபோது மரகதத்தின் முகம் சுண்டிப் போயிற்று. தாயும் மகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''கொஞ்சம் உதவி செய்கிறீர்களா? நான் ஒரு பக்கம் பிடித்துக் கொள்கிறேன். நீங்கள் ஒரு பக்கம் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று மார்த்தாண்டம் கேட்டுக் கொண்டார். பிறகு ''ராதாபாய் நீயும் கொஞ்

சம் ஒத்தாசை செய்!'' என்று தம்முடன் வந்த ஸ்திரீயி னிடம் சொன்னார்.

இப்படியாகக் கேசவனை மூன்றுபேருமாகத் தூக்கிக் கட்டிலில் கிடத்தினார்கள்.

டாக்டர் மார்த்தாண்டம் தமது தோற்பையைத் திறந்து அதிலிருந்து ஒரு பாட்டிலில் இருந்து இரண்டு மாத்திரைகளை எடுத்து ராதாபாயின் இடம் கொடுத் தார். இதை அவர் வாயில் போட்டுக் கொஞ்சம் தண்ணீ ரும் குடிக்கச் செய்'' என்றார்.

அவள் அப்படியே செய்து கொண்டிருந்தபோது மரகதமும், ரேவதியும் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''இவள் எங்கிருந்து வந்தாள்! கேசவனைக் கையால் தொட்டுத் தூக்கிச் சென்றாளே?'' என்று அவர்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தனர்.

அவர்கள் மனத்திலிருந்ததை ஊகித்த மார்த்தாண் டம் ''இவள் என் சிநேகிதை ராதாபாய். நர்ஸ். என் பின்னோடு வந்தாள். இங்கே அவளை வேலை பிடித்துக் கொண்டது'' என்றார்.

''இது ஒரு வேலையா? இது மாதிரி செய்வது எங்கள் கடமையாயிற்றே!'' என்று ராதாபாய் கூறினாள்.

''ரொம்ப தாங்க்ஸ்'' என்றாள் ரேவதி.

''இவளுக்கு வடக்கே நாகப்பூர் சொந்த ஊர். இந்தப் பக்கம் வந்து தங்கிவிட்டாள். தமிழ் ஒரு தினு சாயிருக்கும்!'' என்றார் மார்த்தாண்டம்.

''இல்லையே. நன்றாகத்தானே பேசுகிறார்'' என்றாள் ரேவதி.

''அப்புறம்?'' என்று மரகதம் டாக்டரைப் பார்த் துக் கேட்டாள். அவள் முகத்தில் தாங்க முடியாத கவலை குடிகொண்டிருந்தது. தான் கேசவன் விஷயத் தைச் சீக்கிரமாக முடித்துவிட முயற்சி செய்துகொண்

டிருந்தபோது, அது மேலும் சிக்கலாகப் போய்க்கொண் டிருப்பதைக் கண்டு மனம் குழம்பியிருந்தாள்.

"இப்போது கொடுத்திருக்கும் மருந்து நன்றாகத் தூக்கம் வரும். நாளைக் காலையில் வந்து பார்க் கிறேன்."

அவர்கள் இப்போது அன்னாருக்கு வெளியில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

"கால் என்ன ஆகியிருக்குமென்று நினைக்கிறீர்கள்!" என்று மரகதம் விசாரித்தாள்.

"முன்னே சொன்னேன் நரம்பு பிசகிக் கொண்டி ருக்கலாம்".

"நரம்புகள் உடைந்து போயிருக்காதே!" என்று துரைசாமி கவலையுடன் கேட்டார்.

"அது எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால்தான் தெரியும்."

"அவர் நல்ல பலசாலியாயிற்றே. கீழே விழுந்த துமா நரம்பு பிசகிப் போயிருக்கும்!" என்று ரேவதி கேட்டாள்.

டாக்டர் அவளை ஒரு தினுசாகப் பார்த்துக் கொண்டே "கனமான உடம்பல்லவா? அத்தனை கனத் தையும் கால்தானே தாங்கியிருக்கும்! தவிர உன் அப்பா வேகமாகப் பிடித்திழுத்து நிறுத்திய போது காலை மடக் கிக்கொண்டு விழுந்து விட்டார்" என்றார்.

"எங்கப்பாவுக்கு அவரை நிறுத்தும்படியாக அவ் வளவு பலம் கிடையாதே."

"ஓர் உற்சாகம், வெறியோடு செய்யும்போது பலம் எங்கிருந்தோ வந்துவிடும்" என்றார் டாக்டர்.

"அதென்னமோ?" என்று ரேவதி தான் அவர் கூறு வதை நம்பாதவள்போல் பதிலளித்தாள்.

"எப்படி நேர்ந்திருந்தால் என்ன? அவருக்கு உடம்பு குணமாகணும். கால் சரியாகணும். அப்போத்

தான் எனக்கு இராத் தூக்கம் வரும். வேறு வேலை ஓடும். என்னுலே அவருக்கு இந்த ஆபத்து நேர்ந்திருக்க வேண்டாம்!'' என்று துரைசாமி தனது வழக்கமான பல்லவியைப் பாடினுர்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை அப்பா!'' என்று ரேவதி சற்றுக் கோபமாகவே கூறினுள்.

மரகதத்திற்கு ரேவதி இப்படி எல்லாம் பேசியது மிகவும் பிடித்திருந்தது. அவள் ரேவதியைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''பக்கத்தில் யாராவது இருந்தால் நல்லது'' என்று டாக்டர் துரைசாமியினிடம் கூறினுர். அவர் ரேவதியோடு தொடர்ந்து தர்க்கம் செய்து கொண்டிருக்க விரும்பவில்லை.

''எனக்கு அவகாசமிருந்தால் நானே கூடப் பார்த்துக் கொள்வேன்''...என்று துரைசாமி கூறியபோது, ரேவதி ''ஏன் அப்பா உங்களுக்கு எத்தனையோ வேலை இருக்கிறது. இதெல்லாம் முடியுமா?'' என்றுள்.

''நீ சொல்கிறது சரிதான் ரேவதி. உங்களுக்கு ஆட்சேபமில்லை என்றுல் நான் நர்ஸுக்கு ஏற்பாடு செய்து அனுப்புகிறேன்'' என்றுர் மார்த்தாண்டம்.

''ஆட்சேபம் என்ன? ஏன் இந்த அம்மாளையே...'' என்று துரைசாமி ராதாபாயைப் பார்த்துக் கூறினுர்.

''ராதாபாயைச் சொல்கிறீர்களா!''

''ஆமாம்!''

ராதாபாய், சிரித்துக் கொண்டு உடலைக் குலுக்கிக் கொண்டு நான் காட்டூர் ஜமீந்தாரிணி பங்களாவுக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறேன். நான் இன்று சாயங்காலம் அங்கே கட்டாயம் இருந்தாக வேண்டும்'' என்றுள் ராதாபாய்.

''அந்த இடத்திற்கு டாக்டர் வேறு யாரையாவது ஏற்பாடு செய்யட்டும். நீங்கள் இங்கேயே இருந்து விடுங்களேன் என்று துரைசாமி கெஞ்சினுர்.

''ஏன், ராதாபாய்! பெரியவர் இப்படிக் கேட்டுக் கொள்கிருரே. அவர் சொல்கிறபடி செய்யேன். நீ இருந்தால் எனக்கும் வைத்தியம் செய்ய உதவியாயிருக் கும்'' என்ருர் மார்த்தாண்டம்.

''சரி! நீங்கள் எல்லோரும் இப்படிச் சொல்லும் போது நான் எப்படித் தட்டுகிறது!' ஜமீன்தாரிணி வீட் டிற்கு யாரை அனுப்புகிறீர்கள்?'' என்று ராதாபாய் டாக்டரைக் கேட்டாள்.

''கிளப்வாலாவை அனுப்பலாம் என்றிருக்கிறேன்.''

சரியான ஆசாமி. காட்டூர் ஜமீன்தாரிணியினிடம் நான் திடீரென்று நாக்பூர் கிளம்பிப் போகும்படிநேர்ந்து விட்டது என்று சொல்லச் சொல்லுங்கள். ஆனுல் உங் கள் சிநேகிதருக்குக் குணமான அடுத்த நாளே என்னை அனுப்பிவிட வேண்டும்.''

''அடுத்தநாள் என்ன? அடுத்த நிமிஷமே!'' என்று டாக்டர் சிரித்துக்கொண்டே சொன்ஞர்.

''உங்களுடைய இந்த உதவிக்கு நான் என்ன கைம் மாறு செய்யப் போகிறேன்!'' என்று துரைசாமி நாக் குழறக் கூறினுர்.

மரகதமும், ரேவதியும் ஒருவரையொருவர் பார்த்து விழித்துக்கொண்டு நின்றனர். துரைசாமி இந்தக் கைம்மாறு செய்வதைப் பற்றி ஓயாமல் படித்தவர் போல் கூறிக்கொண்டிருப்பது அவர்களுக்குச் சிறிது கூடப் பிடிக்கவே இல்லை. அந்த அவரது குணுதிசயம் தங்களைத் தொடர்ந்து மற்றவர்களிடம் சிக்க வைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

''நான் டாக்டருடன் போய் என் துணிமணிகளை எடுத்துக்கொண்டு வந்து விடுகிறேன்'' என்ருள் ராதா பாய்.

''இல்லை, புதிதாகவே வாங்கிவரச் சொல்லி விடுகிறேனே, என்னென்ன வேண்டும்? ஒரு ஜாப்தா கொடுங்கள்! என்று துரைசாமி அவளைக் கேட்டார்.

பாதகமில்லை. நானே போய் எடுத்துக்கொண்டு வந்து விடுகிறேன் என்றாள் அந்த நர்ஸ்.

ஏன் டாக்டர், கேசவன் பெட்டி படுக்கை ஒன்றும் எடுத்துக்கொண்டு வரவில்லை. அதை எங்கே வைத்திருக்கிறார்? என்றார் துரைசாமி.

எனக்குத் தெரியாது. அவர் ஒரு நாடோடி மாதிரி. ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொன்று வைத்திருப்பார்? என்றார் டாக்டர்.

''டாக்டர். நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா? கேசவனுக்கு ஒரு டஜன் பனியன், ஷர்ட், பாண்ட்ஸ் எல்லாம் வேண்டும். வேஷ்டியும் வேண்டும். நீங்கள் வாங்கி வர ஏற்பாடு செய்ய முடியுமா?

''இதென்ன பிரமாத காரியம்! கேசவனும் கிட்டத்தட்ட என் மாதிரித்தான் இருக்கிறார். என் அளவு சரியாக இருக்குமென்று நினைக்கிறேன்.

பிறகு டாக்டரும், ராதாபாயும் புறப்பட்டார்கள். போய்க் கொண்டிருக்கும்போது டாக்டர், ''துரைசாமியினிடம் 'துணிமணிகளையும் மருந்தையும் இப்பொழுதே வாங்கி ராதாபாயினிடம் அனுப்பி வைக்கிறேன்'' என்றார்.

துரைசாமி அவர் அப்படிக் கூறியதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு தன் பணப்பையைத் திறந்து ஐந்நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்துக் கொடுத்தார்.

''டாக்டர் அவற்றை வாங்கிக்கொண்டு நான் அவரை ஒரு வாரமாகப் பார்த்துக்கொண்டு வருகிறேன். அவர் எப்பொழுது எழுந்திருக்கப் போகிறாரோ! எனக்கு என்ன செய்யப்போகிறாரோ?'' என்றார்.

''அவருக்காக என்ன வைத்தியச் செலவானாலும் என் பொறுப்பு. அதைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்

கள். நாளைக்கு நீங்கள் வரும்போது உங்கள் பீஸுக்கு ஒரு செக் கொடுக்கிறேன்'' என்றார் துரைசாமி.

டாக்டர் சிரித்துக்கொண்டு நான் ஏதோ சொல்லப் போக நீங்கள் ஏதோ நினைத்துக்கொண்டீர்கள். அதுவும் ஒரு விதத்தில் நல்லதாகப்போச்சு. ரொக்கப் பணமாகவே கொடுத்து விடுங்கள் என்றார் டாக்டர்.

''தங்கள் விலாசம்?''

நான் இந்த ஊருக்கு சொந்தக் காரியமாக வந்தேன். ஒரு ஹோட்டலில் தங்கியிருக்கிறேன். வேறு ஹோட்டலுக்குப் போகப் போகிறேன். அந்த விலாசம் கொடுக்கிறேனே. நான்தான் தினமும் வந்து கொண்டிருக்கிறேனே!''

''அப்போ சரி!'' என்றார் துரைசாமி.

அவர் ரேவதியினிடமும் மரகதத்தினிடமும் விடை பெற்றுக்கொண்டபொழுது ரேவதி ''அவசியமானால் நல்லநர்ஸிங் ஹோமுக்குஅழைத்துக்கொண்டுபோகலாம் என்றாள்.

''என்னது?'' என்று டாக்டர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''இல்லை. நரம்பு சிகிச்சை செய்யும் வைத்திய நிபுணரைக் கொண்டு வேண்டுமானாலும் பார்க்கச் சொல்லலாம்'' என்று ரேவதி மேலும் கூறினாள்.

''அது நல்ல யோசனைதான். நாளைக்குப் பார்த்துவிட்டு சொல்கிறேன் என்று டாக்டர் மார்த்தாண்டன் கூறிவிட்டுப் புறப்பட்டார்.

ராதாபாய் எல்லாரிடமும் விடைபெற்றுக்கொண்டு அவரைப் பின் தொடர்ந்து சென்றாள்.

பிறகு துரைசாமி தன் மனைவியுடனும் மகளுடனும் இந்தச் சம்பவத்தைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார். அவர் பேச்சில் வழக்கம்போல் நன்றி மறவாமை என்ற வார்த்தைகள் அடிபட்டன.

மரகதமும், ரேவதியும் அவர் கேசவனுக்கு குணப் படுத்தவேண்டியதைப் பற்றி கூறியதை எல்லாம் மௌனமாகக் கேட்டு வந்தனர். அவர் அப்போதிருந்த மனோ நிலைமையில் ரேவதி ஏதாவது கூறியிருந்தால் அவர் "எல்லாம் உங்களால்தானே ஆரம்பம் ஆயிற்று" என்று தங்கள்மீது திரும்பிக்கொள்வாரோ என்ற பயம்.

அன்று மாலை மாதவன் வந்தபொழுது கேசவன் படுத்த படுக்கையாய் இருப்பதைக் கண்டு திடுக்கிட் டான். அதுவும் அவன் தன் அறையிலில்லாமல் துரை சாமியின் அறையில் அவரும் அவர் மனைவியும் உபயோ கிக்கும் கட்டிலின்மீது படுத்திருந்தது அவன் ஆச்சர்யத் தைக் கிளப்பிற்று.

"என்ன கேசவன்!" என்று கேட்டு அவன் படுக்கை யருகில் நின்று கொண்டு அழத் தொடங்கினான்.—

துரைசாமி, அவனுக்கு ஒன்றும் ஆபத்தில்லை என்று கூறி நடந்த விஷயங்களைத் தெரிவித்தார்.

"நீங்கள் என்னைக் காட்டிலும் அவன் விஷயத்தில் அதிக சிரத்தை கொண்டவர்கள். உங்களுக்கில்லாத கவலை எனக்கு என்ன?" என்று மாதவன் கூறினான். இதைக் கேட்டு துரைசாமி பெருமையுற்றார்.

"கேசவன் ரொம்ப நல்ல சுபாவமுள்ளவன். ஒரு வேளை அவன் கால் ஊனமானதற்காக நஷ்டஈடு கேட் பானோ என்று பயப்பட்டுக் கொண்டிருக்கக்கூடும். அந் தக் கவலை உங்களுக்கு வேண்டியதில்லை. அவன் அதற் காகக் கட்டாயம் கோர்ட்டுக்குப் போகமாட்டான். ஏன் உங்களை நேரில்கூட ஒரு தம்பிடி கேட்கமாட்டான் என்றான்.

மாதவனது இந்தப் பேச்சைக் கேட்டு துரைசாமி திகைப்புற்றார். மாதவன் கூறியதுபோல் தன்னால் கால் ஊனமானதற்காக நஷ்டஈடு கோரக்கூடிய சந்தர்ப் பமும் இருக்கிறது என்பது அவருக்குப் புலனாயிற்று. மாதவன் அந்த அம்சத்தை ஏன் எடுத்துக்கூற வேண்டு மென்று எண்ணினார்.

''நான் பேச்சுக்குச் சொன்னேன். முதலில் கால் சரியாகப் போய்விடும். போகாவிட்டாலும் கேசவன் தகராறு செய்யக்கூடிய மனிதன் அல்ல என்று உங்களுக்குத் தைரியம் சொல்லி வைத்தேன்'' என்றான்.

துரைசாமி அறையை விட்டுச் சென்ற பிறகு மாதவன், கேசவன் பக்கத்தில் அமர்ந்தான். அவனும் உடனே கண்விழித்துக் கொண்டு மாதவன் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தான்.

அவர்களிருவரும் பேசிக் கொண்டிருந்தபோது ரேவதி வந்தாள்.

உடனே மாதவன் படுக்கையை விட்டிறங்கி ''இப்போது தான் விழித்துக்கொண்டான். நாலு வார்த்தை பேசினான்'' என்றான்.

''அப்படியா சந்தோஷம்!'' என்று ரேவதி கூறிவிட்டு ''கால் எப்படியிருக்கிறது!'' என்று கேட்டாள்.

''கொஞ்சம் நீட்டிப் பார்த்தேன். முன் மாதிரி அவ்வளவு வலி இல்லை!'' என்று கேசவன் கூறினான்.

இப்போது மாதவன் அறைக்கு வெளியே சென்றான்.

கேசவன் ரேவதியையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

''நான் இரண்டொரு நாளில் எழுந்து விடுவேன். நீ என்னைப் பற்றிக் கவலைப்படாதே ரேவதி'' என்று புன்னகை புரிந்து கொண்டே கூறினான்.

தன் கை ஒன்றையும் நீட்டினான் அவள் கையைப் பிடிப்பதற்காக. ரேவதி விர்ரென்று அறையைவிட்டு வெளிச் சென்றாள்.

13

அன்று இரவு நர்ஸ் ராதாபாய், மருந்துகள், பாண்டேஜ்கள், துணிமணிகள் முதலியவற்றுடன் திரும்பி விட்டாள். அவள் கேசவனுக்கு ஆகாரம் கொடுத்தாள். குழந்தைகளுக்குக் கொடுப்பதும்பால ஊட்டினுள் என்றே சொல்ல வேண்டும். காலுக்கு ஒத்தடம் கொடுத்தாள். தலையணைகளைச் சரியாக வைத்து, படுக்கச் செய்தாள். அவள் அறைக்கு வெளியே வராந்தாவில் ஒரு நாடா கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

மறுநாள் காலை மார்த்தாண்டம் வந்தபோது துரைசாமியும் அவருடன் கேசவனை பார்க்க அவன் அறைக்குச் சென்ருர். "வாருங்கள்" என்று கேசவன் அவர்களை வரவேற்ருன்.

"உடம்பு எப்படியிருக்கிறது?" என்று மார்த்தாண்டனிடம் விசாரித்தார்.

"எனக்கு என்ன உடம்பு?" என்று அவன் ஆச்சரியப் பட்டவன் போலக் கேட்டான்.

"இராத்திரி நன்ருகத் தூங்கினீர்களா?" என்று துரைசாமி விசாரித்தார்.

அப்பொழுது அங்கே வந்த நர்ஸ் "நன்ருகக் குறட்டை விட்டுக்கொண்டு தூங்கினுர். நான் நடு நடுவே வந்து பார்த்துவிட்டுப் போனேன்" என்ருள்.

"கால்வலி எப்படி இருக்கிறது?" என்று மார்த்தாண்டம் கேட்டார்.

"கொஞ்சம் தேவலை" என்ருன் கேசவன்.

"என்ன ராதாபாய்? கால்களை நன்ருகப் பார்ப்போமா?" என்று மார்த்தாண்டம் அவளைக் கேட்டார்.

அவள் தலையை ஆட்டவே, துரைசாமியைப் பார்த்துக் "கொஞ்சம் வெளியே இருக்கிறீர்களா?" என்று கேட்டு அவரை அறையை விட்டுப் போகச் செய்து கதவைச் சாத்திக் கொண்டார்.

துரைசாமி தெய்வமே என்று வராந்தாவில் நின்று கொண்டும், உலவிக் கொண்டும் பொழுது போக்கினார். டாக்டர் என்ன சொல்லப் போகிறாரோ? கால் நரம்பு முறியவில்லை என்று சொல்ல வேண்டுமே என்றெல்லாம் எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது மரகதமும், ரேவதியும் வந்தார்கள்.

"என்னவாம்?" என்று ரேவதி தன் தந்தையைக் கேட்டாள்.

அவர் பதில் சொல்வதற்குள் அறைக் கதவு திறந்தது. ராதாபாய் வெளியே தலையை நீட்டி எல்லோரையும் பார்த்து "வாருங்களேன்" என்றாள்.

துரைசாமியும், ரேவதியும் உள்ளே சென்றார்கள். கேசவன் சிரித்த வண்ணம் படுத்திருந்தான். ரேவதியைப் பார்த்ததும் "வா, அம்மா" என்றான்.

"அப்பாடா" என்று துரைசாமி கூறி ஒரு பெருமூச்சு விட்டார். "நீங்கள் இப்படிப் பேசப் போகிறீர்களா? என்று இருந்தது" என்று மேலும் சொன்னார்.

"பயப்படுவதற்கொன்றும் இல்லை. நன்றாகப் பரிசோதித்துப் பார்த்து விட்டேன். நரம்புதான் சரியாயில்லை. அந்த இடத்தில் 'மாஸாஜ்' செய்தே சரிப்படுத்தி விடலாம். ஆனால், எழுந்து நடமாட முடியாது. கால்களை நன்றாக நீட்ட முடியாது. ஒரு வாரத்துக்குப் படுத்த படுக்கையாகத் தானிருக்கும்படியாயிருக்கும்" என்று டாக்டர் தெரிவித்தார்.

"ஒரு வாரமென்ன? ஒரு மாதமென்றாலும் படுத்துக் கொண்டிருக்கட்டும்" என்று துரைசாமி கூறினார்.

"நன்றாயிருக்கிறது. அவர் நாளைக்கே எழுந்திருந்து விட மாட்டாரா? அவருக்கு இப்படி எல்லாம் படுத்துக் கொண்டிருந்தால் இருப்புக் கொள்ளுமா?" ரேவதி விஷமத் தனமாகக் கூறினாள்.

கேசவன் அவளைப் பார்த்துச் சிரித்து "நான் படுத்துக்கொண்டிருப்பதைக் காண அவளுக்கு மனக் கஷ்டப் படும். என் மீது அவ்வளவு பாசம். அதனால்தான் அப்படிச் சொல்கிறாள்?" என்று அதே தோரணையில் பதிலளித்தான்.

"பெரியம்மா வந்தார்களே. எங்கே காணோம்?" என்று ராதாபாய் கேட்கவே, துரைசாமி அறைக்கு வெளியே வந்தார். "ஏன் மரகதம் இங்கேயே நிற்கிறே, வா" என்று தம் மனைவியைப் பார்த்துக் கூப்பிட்டார்.

மரகதம் தயங்கிக்கொண்டே முகத்தில் வெறுப்புத் தோன்ற அறைக்குள் வந்தாள்.

கேசவன் அவளைப் பார்த்ததும் இரண்டு கைகளையும் தூக்கிப் பொய்க் கும்பிடு போட்டான்.

"பயப்படும்படியாய் ஒன்றுமில்லை. ஒரு வாரத்தில் எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்று மார்த்தாண்டம் அவளிடம் கூறினார்.

"நேற்றெல்லாம் என் நினைவு எனக்கு இல்லை. தலைக்குள்ளே என்னமோ நடனமாடுகிறது போலிருந்தது. ஏதாவது உளறியிருப்பேன்" என்று கேசவன் மரகதத்தை உற்றுப் பார்த்துச் சொன்னான்.

"என்ன உளறினீர்கள்?" என்று ரேவதி வேடிக்கையாகக் கேட்பதுபோல் கேட்டாள்.

"உளறினால் எனக்குத் தெரிந்திருக்குமா?'; என்றான் கேசவன். பிறகு மரகதத்தைப் பார்த்து 'நீங்கள் எனக்கு ஒரு சகோதரி மாதிரி. கால் சரியானதும் கிளம்பிப் போய் விடுகிறேன்" என்று துக்கம் தொண்டையடைக்கக் கூறினான்.

''மரகதமும், ஆச்சர்யத்துடனும், அவநம்பிக்கை தோன்றவும் அவனைப் பார்த்துவிட்டு ''சௌகரியப்படி செய்யுங்கள்'' என்று சொல்லி வைத்தாள்.

பிறகு ராதாபாயைத் தவிர மற்றவர்களெல்லாம் சென்று விட்டார்கள்.

கேசவன் உற்சாகத்துடனும் சந்தோஷத்துடனு மிருந்தான். ராதாபாய் கொண்டு வந்து கொடுத்த அன்றைய பத்திரிகையை வாசிக்கலானான். அதில் 'வெள்ள நிவாரண நிதி, துரைசாமியின் நன்கொடை' என்று கொட்டை எழுத்துக்களில் ஒரு தலைப்பு இருந்தது. அதன் கீழிருந்த செய்தியைப் படித்தான்:

'' துரைசாமி அவர்களின் உதவிக் குணம் எல்லோ ரும் நன்கறிந்ததே. வெள்ளத்தினால் மக்கள் கஷ்டப் படுகிறார்கள் என்று செய்தி வெளியான மாத்திரத் தில் அவர் பதினாயிரம் ரூபாயை முதன் மந்திரிக்கு அனுப்பி வைத்து அதை நிவாரணத்துக்கு உப யோகிக்கும்படிக் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவரைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம். அவர் செல்வந் தர். தெய்வபக்தியுள்ளவர்," நற்குண நற்சீலர், எந்த விதமான வம்பு தும்புகளிலும் அவர் பெயர் அடிபடு வதில்லை. நாலு பேர் அவரைப் பற்றிக் கெடுதலாகப் பேசக்கூடிய காரியம் எதிலும் அவர் ஈடுபட்டதில்லை. அவரைப்போன்ற கனவான்கள் தற்கால சமூகத்தில் மிகவும் அபூர்வம்.''

கேசவன் துரைசாமியைப் பற்றிய இந்தத் தகவல்களைப் படித்து மிக்க மகிழ்ச்சியுற்றான். அவன் கண்களை மூடிக் கொண்டு என்னவெல்லாமோ கற் பனைகள் செய்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது துரைசாமி உள்ளே வரவே அவர் காலடிச் சப்தம்கேட்டுக் கண்களைத் திறந்தான். அறைக்கு வெளியே நாலைந்து ஆட்கள் நின்று கொண்டிருப்பதைக் கண்டான்.

"ஒரு சின்ன விஷயம்" என்று துரைசாமி ஆரம்பித்தார்.

"என்ன?" என்று கேசவன் கேட்டான்.

"உங்களுக்குத் தொந்தரவா இராதே?"

"சொல்லுங்கள்."

"அந்தக் கோடியில் இருக்கிற இரும்பு பீரோவை எடுத்துக் கொண்டு போகச் சொல்கிறேன். நான் அடிக்கடி வந்து திறக்கிறது உங்களுக்குத் தொந்தரவாயிருக்கும்" என்று துரைசாமி கூறினார்.

இதைக் கேட்ட கேசவன் முகத்தில் கோபம் பொங்கிற்று.

மிஸ்டர் துரைசாமி நீங்கள் என்னை நம்பவில்லை என்றால் சொல்லிவிடுங்கள். அதற்காக இப்படிச் சுற்றி வளைத்துக் கொண்டு காரணங்கள் தெரிவிக்க வேண்டியதில்லை" என்றான்.

நான் அப்படி எல்லாம் ஒன்றும் நினைக்கவில்லையே...

"பின்னே உங்கள் வீட்டில் உங்கள் அறையில், உங்கள் கட்டிலில், உங்கள் படுக்கையில் படுக்க வைத்திருக்கிறீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் உங்கள் பீரோவைத் திறக்க வருவதை நான் தொந்தரவு என்று கருதினால் நான் எவ்வளவு கேவலமான மனிதனாயிருக்க வேண்டும்" என்று கூறிக் கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

"நான் அப்படித் தப்பாக நினைக்கவில்லை கேசவன்."

"நான் இந்த அறையில் வேண்டுமென்றா வந்து படுத்துக் கொண்டிருக்கிறேன்? வேறு வழியில்லை. நீங்கள் என்னைப் பிடித்திழுத்துக் கீழே விழச் செய்திராவிட்டால் நான் இப்போது காசியில் இருப்பேனாக்கும். உங்களால் தான் நான் உங்கள் இரும்பு பீரோ இருக்கும் அறையில் இருக்கும்படி நேர்ந்திருக்கிறது. நீங்கள் என்னவென்றால்......

என் மனைவியையும் குழந்தையையும் காப்பாற்றிய உங்களைப் பற்றி சந்தேகப் பட்டால் எனக்கு நல்ல கதி கிடைக்காது என்று துரைசாமி கூறவே கேசவன் சமாதான மடைந்தான்.

துரைசாமி அறை வாசலுக்குச் சென்று அங்கு காத்துக்கொண்டிருந்த ஆட்களைப் போகச் சொல்லிவிட்டார். அப்போது டெலிபோன் மணி அடிக்கவே துரைசாமி குழாயை எடுத்துக் கேட்டார். கேசவன் அவர் பேசுவதைக் கவனிக்க விரும்பாதவன்போல் தலையை வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். அவன் காதில் துரைசாமி பேசியது மட்டும் விழுந்தது.

....

யாரு ஷண்முகமா? சௌக்கியமா? ரொம்ப நாளாச்சுப் பார்த்து.

....

எல்லாம் சௌக்கியம். ரேவதி சும்மாத்தானிருக்கிறாள்.

....

நான் இப்போது கல்யாணம் செய்கிறதாய் இல்லை. இரண்டு வருஷம் போகட்டுமென்றிருந்தேன். ஆனால் சீக்கிரம் நடந்துவிடும் போலிருக்கு...

....

சிதம்பரம் என்று பெயர்.

....

அதே சிதம்பரம் தான்.

....

டில்லியிலே ஜப்பானிய தூதராலயத்திலே வேலை பார்க்கிறானாம்......

....

இன்னும் பையனைப் பார்க்கவில்லை.

....

அவனுக்கு லீவு கிடைக்க வில்லையாம். கிடைத்ததும் வந்து பார்ப்பான்.

....

வீட்டில் ஒரு சிநேகிதர் வந்திருக்கிறார். அவருக்குக் கொஞ்சம் உடம்பு சரியாய் இல்லை.

....

தேவை இல்லை. அவருக்குச் சொந்த டாக்டரே வந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்.

....

அவசியம் வருகிறேன்.

டெலிபோனில் பேசி முடித்துவிட்டு துரைசாமி கேசவனிடம் வந்தார். "கொஞ்சம் வேலை இருக்கு நான் போய் வருகிறேன்" என்றார்.

போய் வாருங்களேன். என்னிடம் சொல்லிக் கொள் வானேன்?" என்றான் கேசவன்.

"அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்?"

"பின்னே நான் என்ன மனிதனில் சேர்த்தியா?"

"ஏன், நான் என் சினேகிதன் என்று இப்போது கூடச் சொல்லிக் கொண்டிருந்தேனே?"

"நீங்கள் யாரோடு இப்போது பேசிக் கொண்டிருந்தீர்கள்?"

"ஷண்முகம் என்ற நண்பருடன்."

"என்ன சொல்லிக் கொண்டிருந்தீர்கள்?"

"உங்களுக்கு உடம்பு சரியாய் இல்லை என்று சொன்னேன். அது ஒன்றும் தப்பில்லையே.

இதுவரை துரைசாமியைப் பார்க்காமல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டிருந்த கேசவன் இப்போது தலையைத் திருப்பி அவரைக் கோபமாகப் பார்த்தான். "இதுமாதிரி சின்னவிஷயங்களுக்கெல்லாம் தப்புக் கண்டுபிடிக்கிறவன் என்றுதானே நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"இப்படி நினைப்பேனு?"

"நீங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டபோது என் மனது சந்தோஷப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் எவ்வளவு வேதனைப்பட்டது தெரியுமா?"

துரைசாமி அவன் எதைக் குறிப்பிட்டுப் பேசுகிறுனென்று தெரியாமல் விழித்தார்.

"குழந்தையின் கல்யாணத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தீர்களே. என்னிடம் அதை ஒரு வார்த்தை சொன்னீர்களா?" என்று கேசவன் சீறினான்.

"உடம்பு நன்றுகக் குணமான பிறகு சொல்லலாமென்றிருந்தோம்."

"பிள்ளை வீட்டுக்காரர்கூடப் பார்த்துவிட்டுப் போயிருக்கிறுர்கள். அதைப்பற்றியும் சொல்லவில்லை."

"அப்போது நீங்கள் ஒரே மயக்கமாய்ப் படுத்திருந்தீர்கள்."

"ரேவதியை நான் காப்பாற்றினேன் தெரியுமா?"

"ஆமாம்..."

"அவள் விஷயத்தில் எனக்கும் சிரத்தை உண்டு."

"ஆமாம்"

"பையன் தகப்பனுர் யார்?"

"சிதம்பரம் என்கிறவர். என் நண்பர்."

"நல்ல குடும்பமா?"

''முதல்தரமான குடும்பம். அவர் பாட்டனர் ஏதோ சமஸ்தானத்தில் திவானுக இருந்திருக்கிருராம்.''

''ரொம்ப சந்தோஷம். சொத்து?''

நிறைய இருக்கிறது.''

பையன் எப்படி?''

''எம். ஏ. படித்திருக்கிருனும். டில்லியில் வேலையி லிருக்கிருனும். எழுநூறு ரூபாய் சம்பளமாம்.''

''கேசவன் தலையையாட்டி விட்டு ''நான் அவனைப் பார்க்க வேண்டும். அவன் வந்தால் நான் இங்கே இல்லாமற் போனுலும் எனக்குக் கட்டாயம் சொல்லி அனுப்புங்கள்.

''நன்றுயிருக்கிறது. உங்களுக்குச் சொல்லாமலா?''

''அந்தப் பையன் விலாசம் என்ன?'' என்று கேசவன் விசாரித்தான்.''

துரைசாமி தமக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தை காண் பித்துக் கொள்ளாமல் அவன் விலாசத்தைக் கொடுத் தார்.

கேசவன் அதை வாங்கிப் பார்த்துக் கொண்டே ''எனக்கு டில்லியில் பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் சிநேகிதம், பையனைப் பற்றி விசாரிக்கச் சொல்கிறேன். பையன் ஒழுங்காக இருக்கிருனு. குடி முதலியகெட்ட வழக்கங்கள் இல்லையா என்று தெரிந்து கொள்ளவேண் டியது அவசியம். இந்தக் காலத்தில் உலக அனுபவமில் லாத பையன்களுக்கு முதலிலேயே ஒரு ஆபீஸர் அந்தஸ் தில் உத்தியோகமும் நூற்றுக்கணக்கில் சம்பளமும் கிடைத்தால் அவர்களுக்கு ஒன்றும் தலை கால் புரிகிற தில்லை. போதாதற்கு பெண் குமாஸ்தாக்கள் பழக்கம் வேறு...

''ஆமாம், ஆமாம்.''

''பையன் ஜாதகமிருக்கிறதா?'' என்று கேசவன் கேட்டான்.

''இருக்கிறது என்று கூறி துரைசாமி சாவியால் மேஜை டிராயர் ஒன்றைத் திறந்து வசந்தனின் ஜாதகத்தை எடுத்துக் கொடுத்தார்.

''குழந்தையின் ஜாதகம்?''

''துரைசாமி அதையும் எடுத்துக் கொடுத்தார்.

''எனக்குக் கொஞ்சம் ஜாதகம் வரும். சும்மா தானே படுத்துக்கொண்டிருக்கிறேன். பொழுது போகிறதற்கு அதைப் பார்த்து வைக்கிறேன் என்று கேசவன் சிரித்துக்கொண்டே கூறினான்.

''பாருங்களேன்'' என்றார் துரைசாமி.

''உற்சாகமாகச் சொல்லவில்லை. இந்தக் கேசவன் இதிலெல்லாம் ஏன் தலையிடுகிறான்? சொந்தத் தந்தைக்கில்லாத கவலையும் பொறுப்பும் இவனுக்கெங்கிருந்து வந்தது என்று நினைக்கிறீர்களா?'' என்று வருத்தம் தோன்றக் கேட்டான்.

''இல்லையே! நீங்கள் இவ்வளவு உடம்போடுகூட அவள் விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்வதில் எனக்கு எத்தனையோ சந்தோஷம்.''

''அப்படிச் சொல்லுங்கள். நான் அவள் உயிரைக் காப்பாற்றினேன். அதனால்தான் அவள் இன்று உயிரோடு இருந்து கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாள். நான் அவளுக்கு இரண்டாவது தந்தையாக்கும்'' என்றான் கேசவன்.

''ஆமாம், ஆமாம்! என்று துரைசாமி கூறினார். பிறகு அவனிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றார்.

கேசவன் தன் பெண்ணுக்குக் கல்யாணம் செய்து வைக்கக் கிளம்பியதைக் கேட்டு அவர் ஆச்சரியமும் திகிலும் அடைந்திருந்தார்.

14

டில்லியில் வசந்தனது குஸ்திப் பயிற்சிகள் முடிவடைந்து விட்டன. அவன் உடல் சம்பந்தமாக வேறு என்ன செய்யலாம் என்பதைப் பற்றித் தீவிரமாக யோசனை செய்து கொண்டிருந்தான், ஆராய்ச்சிகள் கூடச் செய்யலானான். பல தேசத்து மலைவாசிகளும் பல எஸ்கிமோக்களும் தாங்கள் உடலை உரமுள்ளதாகச் செய்ய என்னென்ன பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கிறார்களென்பதைப் பற்றிய புத்தகங்களை மும்முரமாகப் படிக்கலானான்.

இந்தச் சமயத்தில்தான் அவனுக்குத் தன் தந்தை இடமிருந்து அவன் கல்யாணத்தைப் பற்றிய கடிதம் வந்தது. இதைப் படித்ததும் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் மூன்று நான்கு வருடங்கள் கழித்துத்தான் தன் வேலையில் நன்றாக நிலையானபிறகு அதைப் பற்றி யோசித்துக்கொள்ளலாம் என்றிருந்தான். அவன் தந்தை எழுதிய கடிதத்திலோ பெண்ணைத் தானும் அவன் தாயாரும் பார்த்துவிட்டு வந்து விட்டதாகவும், இரண்டு பேருக்குமே பெண்ணை மிகவும் பிடித்திருப்பதாகவும். தாயார் சீக்கிரமே கல்யாணத் தேதி நிச்சயிக்கவேண்டும் என்று விரும்புவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஒரு பெண்ணைப் பெரியவர்களுக்குப் பிடித்துப்போய் விடுவது வேறு. விவாகஞ் செய்துகொள்கிறவனுக்குப் பிடிப்பது வேறு என்று அவனுக்குத் தெரியும். பெண் ஓரளவு அழகாய், அடக்க ஒடுக்கமாய், தாம் தூமென்றில்லாமல், சற்றுப் பயந்த சுபாவமுள்ளவளாய், குடித்தனப் பாங்குடன் இருந்தால் அவள் மிகவும் உத்தமமான பெண் என்று அவர்கள் மனத்தில் பட்டுவிடும். வாலிபனோ தன் கண்களுக்கும் மனத்திற்கும் உகந்தவளையே விரும்புவான். தான் ஆட்சேபித்தால் தன் பெற்றோர்கள் அவளையே கல்யாணம் செய்துகொள்ளும்படி

வற்புறுத்த மாட்டார்கள், என்பதையும் அவன் அறி வான். ஆனால் அவன் அத்தகைய நிலைமை ஏற்படு வதை விரும்பவில்லை.

அவன் இதைப் பற்றிச் சிந்தித்தவனாய்க் கடிதத் தைக் கையில் பிடித்து முகத்தின் பக்கம் விசிறிக் கொண்டே இருந்தபோது பின் பக்கத்தில் ஏதோ எழுதி யிருந்தது அவன் கண்ணில் பட்டது. அதைப் படித்த போது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவு இல்லை. அவன் தந்தை ஒன்று சொல்ல மறந்துவிட்டேன் ரேவதி நீ படித்த காலேஜில்தாம் படித்தாளாம்'' என்று ஒரு குறிப்பு எழுதியிருந்தார்.

வசந்தன், ''இதை ஏன் முதலில் படிக்கவில்லை?'' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு தலையை ஒரு குட்டு குட்டிக்கொண்டான். பிறகு ''நீ என்னிடம் அகப் பட்டுக்கெகண்டாயா?'' என்று கேட்டுச் சிரித்துக் கொண்டான்.

ரேவதியை அவன் பலமுறைகள் கல்லூரியில் பார்த் திருக்கிறான். ஏதோ இரண்டொரு முறை சாதாரண மாகப் பேசியிருக்கிறான். அதைத் தவிர நெருங்கிய பழக்கம் கிடையாது. ரேவதி சிரித்துக்கொண்டோ, கொஞ்சியோ நீண்ட நேரமோ பேசி தான் அவன் விஷ யத்தில் சிரத்தை கொண்டிருப்பதாகக் காண்பித்துக் கொள்ளவில்லை.

ஆனால் வசந்தனுக்கு என்னமோ அவள் மீது கண்ட தும் காதல் ஏற்பட்டது. அதற்குப் பிறகு அவள் அறியா மலேயே அவளைப் பல முறை பார்த்திருக்கிறான். ஏதாவது 'சாக்கு' வைத்துக்கொண்டு அவளுடன் வலியப் பேச்சுக் கொடுத்து பழக முயலவேண்டுமென்று துடிப்பான். ஆனால்அத்தகைய மாணவ சேஷ்டைகளைச் செய்யத் தயங் குவான். 'ஏனென்றால் அவளைப் பார்த்தாலே, அவ ளுக்கு அதுபோன்ற காரியங்கள் பிடிக்காது. கோபித்து வெறுப்பாள் என்று தோன்றும். கல்லூரியில் எத்த னையோ பெண்கள் இருக்கிறார்கள். விதம் விதமான

அழகு, குணதிசயங்கள் உள்ளவர்கள். அந்தப் பெண் களைப்பார்த்து ஆசைப்படுவது, அல்லது காதலிப்பது கட்டுபடியாகாது என்று விட்டுவிடுவான். ஆனால் ரேவ தியை அவனால் மறக்க முடியவே இல்லை.

தன் தந்தை 'ரேவதி' என்று எழுதியிருந்த குறிப் பைப்'பார்த்துக்கொண்டு, அவளைப் பற்றி எண்ணி எண்ணி மனதே இன்பமனுபவித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரம் இப்படிச் சென்ற பிறகு பெட்டி படுக்கை களை எல்லாம் பிரயாணத்திற்குச் சித்தமாக எடுத்து வைக்கத் தொடங்கினான். தான் இப்படிச் செய்வது அவனுக்குச் சிரிப்பாக இருந்தது.

அன்று காரியாலயத்தில் அவன் வழக்கத்தைவிட அதிக உற்சாகமாக் இருந்தான். மேலதிகாரியை லீவு கேட்டபோது, அவர் ஏன்? எதற்காக என்று விசாரித் துக் கொண்டிராமல் உடனேயே லீவு அளித்துவிட்டார். ஆனால் ஒரு வாரம் கழித்துப் போகச் சொன்னார்.

வசந்தன் பெற்றோர்கள் பம்பாயிலிருந்ததால் அவன் தான் பம்பாய்க்குச் சென்று தன் தாயாரை அழைத்துக் கொண்டு சென்னைக்குச் சென்று ரேவதியைப் பார்த்துவரத் திட்டம் போட்டான். அதைப்பற்றித் தன் தந்தைக்கும் கடிதம் எழுத வேண்டும் என்று நினைத்தபோது ரேவதிக்கும் ஒரு கடிதம் எழுதினால் என்ன என்று தோன்றிற்று.

''என்...ரேவதி'' என்று ஆரம்பித்தான்.

நடுவில் என்ன வார்த்தை போடுவது? அன்பார்ந்த என்றா, அருமை என்றா, கண்மணி என்றா, ஆருயிரே என்றா? இதைப் பற்றித் தீவிரமாக யோசனை செய்து பார்த்துக்கொண்டிருந்தபோதுதான் அவளுக்குக் கடிதம் எழுதுவதா, முறையாகுமா என்ற பயம் தோன்றத் தொடங்கியது. அதையடுத்து அந்த ரேவதி தனக்குத் தெரிந்த ரேவதியில்லாது வேறு யாரா வதாக இருந்தால்? கல்லூரியில் தனக்குப் பழக்கமில்

பாத, தன்னை மட்டுமறிந்து கொண்டிருக்கும் இன்னும் ஒரு ரேவதி ஏன் இருக்கக்கூடாது? என்ற ஒரு சந்தேகம் புதிதாகக் கிளம்பியது. அந்தப் பெண் யாராயிருந்தாலும் சரி, அவளுக்குக் கடிதம் எழுதுவது பைத்தியக்காரத் தனம் என்று தோன்றியது.

அவன் இது மாதிரி எல்லாம் காதலால் ஏற்பட்ட மனக் கிளர்ச்சியினால் குழம்பிக் கொண்டிருந்தபோது அவனுக்குத் தபாலில் ஒரு கடிதம் வந்தது. அது ஒரு ரிஜிஸ்தர் கடிதம். தபால் ரசீதில் கையெழுத்துப் போட்டு அதைப் பெற்றுக் கொண்டான்.

உறையின் மீது விலாசங்கள் டைப் அடிக்கப்பட்டிருந்தன. அனுப்பியவர் விலாசம், பழனியப்பன், சாலை வீதி, மந்தைவெளிப்பாக்கம் என்றிருந்தது. பழனியப்பன் என்ற பெயருள்ள யாருமே வசந்தனுக்கு பழக்கமில்லை. ஆதலால் அது யாராயிருக்கக் கூடுமென்று யோசனை செய்து பார்த்தான். ரிஜிஸ்தர் மூலம் தனக்குக் கடிதம் அனுப்ப வேண்டுமென்றால் அந்தப் பழனியப்பனுக்குத் தான் ஏதாவது பணம் பாக்கி கொடுக்க வேண்டுமோ என்று கூட நினைத்தான். அவனோ கல்லூரியில் படித்தபோது யாரிடமும் கடன் வாங்கியதில்லை. எந்தக் கடையிலும் கணக்கும் வைத்துக் கொண்டதில்லை. கடிதத்தைப் பார்க்காமலேயே எதற்காக இப்படி அநாவசியமாகத் தன்னைத் தொந்தரவு செய்து கொள்ள வேண்டுமென்றெண்ணி உறையைப் பிரித்துக் கடிதத்தைப் படித்தான். அவன் தலையில் பெரிய சம்மட்டியால் அடித்தது போலிருந்தது. விழித்த கண் விழித்தபடி கடிதத்திலுள்ள எழுத்துக்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது:

"திருவாளர் வசந்தன் அவர்களுக்கு, தாங்கள் சௌக்கியமென்று நம்புகிறேன். தங்களுக்குத் தங்கள் பெற்றோர்கள் கல்யாணஞ் செய்விக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கேட்க மகிழ்ச்சி அடைகிறேன். ரேவதி என்ற ஒரு

பெண்ணைப் பார்த்திருக்கிறார்களாமே. ஐயோ பாவம் உங்களுக்காகப் பரிதாபப் படுகிறேன்.

உங்கள் பெற்றோர்களுக்கு வேறு பெண் கிடைக்கவில்லையா? இந்தக் காலத்தில் பணம்தானே பெரிது. பணம் நிறையக் கிடைத்தால் பெண் எப்படியிருந்தால் என்ன என்று நினைக்கிறாப் போலிருக்கிறது. தங்களுக்கு என் மனமார்ந்த அனுதாபங்கள்.

தங்கள்,
பழனியப்பன்.''

வசந்தன் பிரமை பிடித்தவன் போலிருந்தான். சில நிமிடங்களுக்கு முன்னர்தான் எந்தப் பெண்ணின் பெயரை மட்டும் பார்த்தே இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தானோ, அந்தப் பெண்ணைப்பற்றி இத் தகைய செய்தியைப் படிக்க நேருமென்று எப்படி எதிர் பார்த்திருப்பான்!

அக்கப்போர் கடிதங்களினால் ஒரு விளைவு நிச்சயம். அதிலடங்கியுள்ள விஷயங்கள் மெய்யோ, பொய்யோ அவற்றைப் படிப்பவர் மனத்தில் அவை சந்தேகத்தை உண்டு பண்ணத்தான் செய்யும்.

ஆனால், வசந்தன் மனது இதற்கு விதி விலக்கா யிருந்தது. அவனால், ரேவதியைப் பற்றித் தவறாகவே நினைக்க முடியவில்லை. கடிதத்தில் குறிப்பிட்ட ரேவதி, தனக்குப் பரிச்சயமில்லாத வேறு யாராவதாகவோ இருக்கக் கூடுமென்றெண்ணினான். ஒருவேளை தன் ரேவதியாயிருந்தாலும், அவளைத் தனக்கு விவாகஞ் செய்து கொடுக்கவில்லையென்று அவள் அத்தை மகனோ, அல்லது மாமன் மகனோ அல்லது வேறெந்தப் பையனோ பழி வாங்குவதற்காக விஷமத்தனமாக எழுதி யிருக்க வேண்டுமென்று நினைத்தான். இதைப்பற்றி சிந்திக்க, சிந்திக்க அவனுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. காரியாலய தஸ்தாவேஜி

கட்டுக்களை எடுத்துப் போட்டுக்கொண்டு வேலையில் மனத்தைச் செலுத்த முயன்முன். அவன் அன்று தன் தந்தைக்குத் தான் புறப்படுவதைப் பற்றிக் கடிதம் எழுதவில்லை.

இரண்டு தினங்கள் கழிந்தன. அவன் ஊருக்குச் செல்வதைப்பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை. மூன்றும் நாள் அவன் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. தனக்குக் கடிதம் வந்திருக்கிறது என்று திகிலடைந்து போயிருந்தான். ஆனல், இது ரிஜிஸ்தரில் வரவில்லை. உறையின் மீது விலாசம் டைப் அடிக்கவும் இல்லை. கையால் எழுதப்பட்டிருந்தது. யாரோ சிநேகிதர்கள் எழுதிய கடிதமாயிருக்கும் என்று தைரியப்படுத்திக் கொண்டு அதைப் பிரித்துப் படிக்கலானுன். முதல் வாக்கியமே அது என்ன என்று ஊகிக்கப் போதுமானதா யிருந்தது. அவன் அதைத் தொடர்ந்து மேலே படிக்க விரும்பவில்லை. ஆனல், மனித சுபாவம் மனிதனை அப்படித் தப்ப விடுவதில்லை. படிக்கும்படிதான் செய்து விடும். அதில் எழுதியிருந்தது:—

"ரேவதியைப் பற்றிய என்னுடைய முந்தைய கடிதம் கிடைத்திருக்குமென்று நம்புகிறேன். தாங்கள் அதைப்பற்றித் தப்பர்த்தம் செய்து கொள்ளப் போகிறீர்கள் என்று பயந்து இதை எழுதுகிறேன். தங்கள் ரேவதி ஒரு சமூக சேவகி. இப்போது அவள் வீட்டில் அவள் தந்தை அறையில் கேசவன் என்பவர் வந்து தங்கியிருக்கிருர். அவரைக் கவனித்துக்கொண்டு அவருக்கு வேண்டிய பணி விடைகள் எல்லாம் செய்து வருகிருள். அவருக்கு அவள் தன் உடல், பொருள், ஆவி மூன்றையும தியாகஞ் செய்யக் கடமைப்பட்டவள்.

தங்கள்
பழனியப்பன்"

"இப்படித் தொடர்ந்து, அந்தப் பழனியப்பன் என்கிறவன் எதற்காக எழுத வேண்டும்?" தான் அவனை

விவாகஞ் செய்து கொள்ளக்கூடாது. ஏன் அவளைப் பார்க்கவேகூட வரக்கூடாது என்பதற்காகத்தானிருக்க வேண்டும் என்று வசந்தனுக்கு நிச்சயமாயிற்று. "பழனியப்பன்" என்ற பெயரும் பொய்யான பெயர் என்பதிலும் அவனுக்குச் சந்தேகமே இல்லை. உண்மை யான பெயருடன் ஒரு பெண்ணின் நடத்தையைப் பற்றிக் கடிதத்தில் எழுதி மாட்டிக் கொள்ளத் துணிய மாட்டானல்லவா?

அது எப்படியிருந்த போதிலுஞ் சரி, இந்த இரண் டாவது கடிதம் வசந்தனது மன அமைதியைப் பின்னும் நிலை குலைக்கத்தான் செய்தது. முன்பெல்லாம் அவன் யாரோ விஷமத்தனமாக எழுதியிருப்பானென்று மட்டும் எண்ணிக்கொண்டு பேசாதிருக்க அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. அந்த ரேவதியை ஏதோ இரண்டு முறை சந்தித்துப் பேசிப் பழக்கம் அவ்வளவுதான். இத்தகைய கடிதங்கள் வரும்போது தன் வருங்கால வாழ்க்கையைச் சோதனைக்குள்ளாக்கிக் கொள்ளக் கூடா தென்று அவனுக்குத் தோன்றிற்று.

பின்னும் இரண்டு தினங்கள் கழிந்தன. அவன் காரியாலயத்தில் தன் வேலையைத் தன் உதவியாளரிடம் ஒப்புவித்து விட்டுப் புறப்பட வேண்டிய தினம் வந்தது.

அவன் தன் லீவை ரத்து செய்துவிட்டு, ஊருக்குச் செல்வதை ஒத்தி போட்டுவிட வேண்டுமென்ற தீர்மா னத்துடன் காரியாலயத்திற்குச் சென்றான்.

அன்று சற்று நேரங் கழித்தே அவன் சென்றான் அங்கே மேஜைமீது அவனுக்காக ஒரு கடிதம் காத் திருந்தது. இதுவரை வந்தவை ஆங்கிலத்தில் டைப் அடிக்கப்பட்டு இருந்தன. இது தமிழில் முத்து முத்தாய் எழுதப்பட்டிருந்தது. பெண் பிள்ளையின் கையெழுத்துப் போலவும் தோன்றிற்று. அது ரேவதியைப் பற்றித் தானிருக்கும். அதைப் படித்து மனத்தைப் புண் படுத்திக்கொள்ள வேண்டாமென்று நினைத்தான். ஆனால், விஷயத்தை அறிய வேண்டுமென்ற ஆவல் அதை அவனைப் படிக்கச் செய்தது. கடிதம் வருமாறு:

"மாப்பிள்ளையாகப் போகிறவரே!

அடிக்கிறதுபோல் அடிக்கிறேன், அழுகிறது போல் அழு என்ற கதை மாதிரி நடந்திருக்கிறது. ரேவதி படித்தவளல்ல. நல்ல கெட்டிக்காரி! ஒரு நாள் ஜாலியாகக் குளம் குட்டைக்கு தன் காதலன் கேசவன் என்பவனுடன் சென்றாள். அங்கே ஒரேயடியாய்க் குளத்தின் பக்கம் சென்றவாறு வேண்டுமென்றே குளத்தில் குதித்தாள். மூழ்கி விடுவதைப் போல் பாசாங்கு செய்தாள். உடனே அவள் காதலன் நீந்திச் சென்று அவளைக் கட்டியணைத்துத் தூக்கிக்கொண்டு வந்து காப்பாற்றினான்.

ரேவதியின் அப்பன் ஒரு அப்பாவி! அவன் அந்தக் கேசவன்தான் தன் பெண்ணின் உயிரைக் காப்பாற்றினான் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறான். அந்தக் கேசவனுக்கு என்னமோ மண்டையில் பலத்த அடி பட்டுவிட்டது. கால் வேறு ஒடிந்துபோய் விட்டது. இப்போது அவன் ரேவதி வீட்டிலேயே தங்கிச் சிகிச்சை பெற்று வருகிறான். ரேவதி அவனை நன்றாகக் கவனித்துக்கொண்டு வருகிறாள். இந்த விபரங்கள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்குமென்று நம்புகிறேன்.

தங்கள்,
பழனியப்பன்"

வசந்தன் ஒரு பத்து நிமிஷ நேரம் யோசனை செய்து பார்த்து ஒரு முடிவுக்கு வந்தான். தன் உதவியாளனிடம் வேலையை ஒப்படைத்துவிட்டு மேலதிகாரியினிடம் ஊருக்குப் போவதாகச் சொல்லி விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான்.

தற்செயலாக அன்று இரவு விமானத்திலேயே இடம் கிடைத்ததால் அதிலேறி மறுநாள் காலை சென்னையை அடைந்தான்.

அவன் ஒரு ஹோட்டலில் அறை எடுத்துக்கொண்டு தங்கினான். அவன் ஒரு நிமிஷம்கூட வீணாகப் போவதை

விரும்பவில்லை. உடனே மந்தவெளிப் பாக்கத்துக்குத் துரைசாமியின் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்ருன். அவன் தந்தை அவனுக்கு எழுதிய கடிதத்தில் ரேவதியின் வீட்டு விலாசம் கொடுத்திருந்தார்.

அவன் ரேவதி வீட்டு வாசற்பக்கம் சென்ருன். அப்போது அவளே பங்களா தோட்டத்திலிருந்து வாசற் கேட்டுப் பக்கம் வந்து கொண்டிருந்தாள்.

அவள் அவனுடைய அந்தப் பழைய ரேவதியே தான்.

அவள் அவனைக் கண்டதும் ஆச்சரியப்பட்டாள். அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். அவனும் சிரித்துக்கொண்டே அவளை நோக்கிச் சென்ருன்.

பங்களா உள் வாசற்படியிலிருந்து யாரோ வந்து கொண்டிருந்தார்கள். ரேவதி வசந்தனைப் பார்த்து ''பங்களாவிற்குள் வரவேண்டாம். நேரே போங்கள். நான் வருகிறேன்'' என்று வாயால் சொல்லாமல் கைகளாலும் முகத்தாலும் சைகைகள் காட்டிஞள்.

வசந்தன் அதைக் கண்டு திகைத்து நின்ருன்.

வசந்தனுக்கு, ரேவதி தன்னை இப்படி—இப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று கூறிய விதம் வேடிக் கையாயுமிருந்தது. ஆச்சரியமளித்தது. ஒரு கொலை காரன் தன்னை முன்னே போகச் சொல்லிக் கட்டாயப் படுத்திப் பின்ஞல் ஒரு துப்பாக்கியைத் தன் முதுகுக்கு நேரே நீட்டிக்கொண்டு வந்துகொண்டிருப்பது போலும் இருந்தது.

அவன், அவள் விரும்பியபடி ஒரு சிப்பாயைப்போல் நேராகப், பின்ஞலும் அக்கம் பக்கம் கவனிக்காமலும் நேரே விறைப்பாக நடந்து சென்ருன். ஆஞல் தெருக் கோடிக்குச் சென்றதும் எந்தப் பக்கம் திரும்புவதென் றும் தெரியவில்லை. ஏனென்ருல், அங்கே ஒரு நாற்சந்தி இருந்தது. அவன் வேறு வழியின்றித் திரும்பிப்

பார்த்தபோது ரேவதி இடது பக்கம் செல்லும்படி தன் கையைக் காட்டித் தலையை அசைத்துத் தெரிவித்தாள்.

அவன் அவ்வாறே சென்று கொண்டிருக்கும்போது அவனுக்கு அவளைப்பற்றி திடீரென்று ஒரு சந்தேகம் தோன்றிற்று. அவளுக்கு இப்படி எல்லாம் தன் பெற்றோர்களுக்குத் தெரியாமல் தன் நண்பர்களைச் சந்தித்து பழக்கமோ என்று. இந்த எண்ணம் தோன்றவே தனக்கு வந்த கடிதங்களில் இருந்த விஷயங்கள் எல்லாம் உண்மையாகவும் இருக்கக்கூடும் என்று நினைத்தான். அவளைப் பற்றிய இந்த அபிப்பிராயம் தோன்றவே அவனுக்கு ஆத்திரம் உண்டாகி வேகமாக நடக்கலானான். அப்படியே டில்லிக்குத் திரும்பிப் போய்விடலாமே என்று கூட அவனுக்குத் தோன்றிற்று. மறுபடியும் ஒரு நாற் சந்தி குறுக்கிடவே, சற்று நின்று திரும்பிப் பார்த்தான். ரேவதி மிக வேகமாக வந்துகொண்டிருப்பதைக் கவனித்தான். அவள் ஓடி வருகிறாளோ என்றுகூடத் தோன்றிற்று. அவள் தன் கையைக் காட்டி அவனை நிற்கச் சொன்னாள். அவளைப் பார்த்ததும் அவன் மனத்தில் அதுவரை குமுறிக்கொண்டிருந்த சந்தேக உணர்ச்சிகள் எல்லாம் எங்கேயோ போய்விட்டன.

அவன், அவள் விரைந்து நடப்பதற்காகப் பரிதாபப் பட்டு அவளை நோக்கித் திரும்பி நடந்து சென்றான். ரேவதி, புன்னகை புரிந்த வண்ணம் அவன் பக்கத்தில் வந்து நின்றாள். அவளுக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. அவளைப் பார்த்து மகிழ்ச்சி பொங்க நின்றிருந்தான். ரேவதி சற்று நிதானமடைந்ததும் ''இப்படியா வேகமாகப் போவார்கள்?'' என்று கடிந்தாள்.

''இல்லையே'' என்றான் வசந்தன்.

''திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே!''

''கூடாது என்று உத்தரவாயிற்றே''

''நான் ஒருதரம் கைதட்டிக்கூப்பிட்டேன்'' என்ருள் ரேவதி.

''என்ன சொல்லிக் கூப்பிட்டாய்?''என்று வசந்தன் விஷமத்தனமாகக் கேட்டான்.

''போங்கள்'' என்று ரேவதி கூறி வெட்கந்தோன்ற அவனைக் கோபித்துக் கொண்டாள்.

அப்போது வசந்தனுக்குத் தன் மனைவியோடு சல்லாபம் செய்து கொண்டிருப்பது போலிருந்தது.

''இனிமேல் உன்னுடன் வரும்போதெல்லாம் மெதுவாகவே நடந்து வருகிறேன். நாளடைவில் தானுகப் பழக்கமாகி விடுகிறது'' என்று கூறினுன்.

ரேவதி அவன் கூறியது தன் காதில் விழாததுபோல் வேறு பக்கம் திரும்பிப் புன்னகை புரிந்து கொண்டு ''அதோ பார்க்குப் பக்கம் போகலாமா?'' என்றுகேட்டு சற்றுத் தூரத்தில் எதிர்த்தாற் போலிருந்த ஒரு சிறிய பார்க்கைக் காண்பித்தாள்.

வசந்தன் தலையை ஆட்டவே இருவரும் அதை நோக்கிச் சென்ருர்கள். போய்க்கொண்டிருக்கும்போது வசந்தனுக்கு அவளைப் பற்றிய அநாமதேயக் கடிதங்கள் ஞாபகத்திற்கு வந்துவிட்டன.

''இது அவள் வழக்கமாகத் தன் நண்பர்களைச் சந்திக்க வரும் இடமே'' என்று எண்ணத் தோன்றிற்று. அவர்கள் பார்க்கில் ஒரு மூலைப் பக்கம் வெயில் படாத இடத்திற்குச் சென்றனர்.

ரேவதி ஒரு புதருக்குப் பக்கத்தில் போய் நின்று ''இப்படி உட்காருவோமா'' என்று கேட்டதும், வசந்தன், நீ எங்கே என்று சொல்கிருயோ அங்கே என்று கூறிக் கீழே உட்கார்ந்தான்.

ரேவதி அவனுக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் அமர்ந்தாள். அவளுக்கும் தனக்கும் இடையே ஏழடி தூரமிருக்கும் என்று வசந்தன் கணக்கிட்டான்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் மௌனஞ் சாதித்திருந்தனர். நடு நடுவே புன்னகை புரிந்து கொண்டனர். ஒவ்வொருவரும் பேச வாயெடுத்துப் பிறகு நிறுத்திக்கொண்டனர். யார் முதலில் பேசுவது என்ன பேசுவது என்ற யோசனை அவர்களுக்கு. வசந்தன் அவளைப் பற்றி வந்த கடிதங்களின் ஞாபகமிருந்து கொண்டேயிருந்ததால் சரளமாகப் பேச நா எழவில்லை. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு "இரண்டு வருஷத்துக்கு முன்னால் பார்த்தது" என்றான்.

"ஆமாம்" என்றாள் ரேவதி.

"பள்ளிக்கூடக் கொண்டாட்டத் தினமன்று."

"ஆமாம்"

"அன்று நீ ஒரு நாடகத்தில் நடித்தாய்"

"ஆமாம்"

"கதாநாயகியின் தங்கையாக"

"ஆமாம்"

"தாமரைப் பூ வர்ணப் புடவை கட்டியிருந்தாய்"

"ஆமாம்"

"அதில் உடலில் மல்லி மொக்கு போட்டிருந்தது"

"ஆமாம்"

"பச்சை உடலில் ஊதாக் கோடு போட்ட சோளி அணிந்திருந்தாய்."

"ஆமாம்"

"உன் அழகிய கண்கள் என்னையே அடிக்கடி கவனித்துக் கொண்டிருந்தன."

"ஆமாம்" என்று ரேவதி முன்போல் பதில்சொல்லி விட்டாள். பிறகுதான் அதைப்பற்றி உணர்ந்து தலை குனிந்தாள். இல்லை என்று மறுப்பதுபோல் தலையை ஆட்டினாள்.

''அடிக்கடி பார்க்கவில்லை. ஒரே ஒரு தரம் பார்த்தாய். ஆனால் உன்னைத் தவிர வேறு யாருமே என் கண்ணில் படவில்லை. நீ திரைக்குப் பின்னால் சென்றபிறகு மறுபடியும் எப்போது வருவாய் என்று ஆவலுடன் கவனித்துக் கொண்டே இருந்தேன் ரேவதி'' என்றான் வசந்தன்.

ரேவதி குனிந்த தலை நிமிரவே இல்லை. வெட்கத்தினாலும், அளவற்ற மகிழ்ச்சியினாலும் ஒன்றுஞ் சொல்லத் தோன்றாமல் தரை மண்ணை விரலால் கீறி விட்டாள். கீழே முளைத்திருந்த புல்லைப் பிடுங்கினாள்.

''தோட்டக் காவற்காரன் சண்டைக்கு வந்துவிடப் போகிறான்'' என்று வசந்தன் பரிகசித்தான்.

ரேவதி வாய்விட்டுச் சிரித்துத் தலை நிமிர்ந்தாள்.

''நான் கூறியதெல்லாம் உண்மை என்று நினைத்துக் கொண்டு விடாதே'' என்றான் வசந்தன்.

''அப்படியானால் எழுந்திருந்துபோகலாம்.''

''இல்லை, இல்லை. உண்மைதான். நீ கோபித்து விடுவாயோ என்பதற்காகச் சொன்னேன். அன்று உன் நடிப்பு முடிந்ததும் முதலில் கைகொட்டினவன் யார் தெரியுமா? நான்தான். மற்றெல்லோரும் கைகொட்டி முடிந்த பிறகும் கைகொட்டிக் கொண்டிருந்தேனே. நீ பார்த்தாயா?

''அதைமட்டும் பார்த்தேன்.''

அவர்கள் இவ்வாறு சிறிது நேரம கல்லூரியில் நடந்த சம்பவங்களையும், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவிகளைப்பற்றி பொதுவாகப் பேசிக் கொண்டு போனார்கள். வசந்தன் தான் அவள்மீது எப்போதுமே ஒரு கண் வைத்திருந்ததாகவும் தன் உள்ளத்தில் அவள் இடம் பெற்றிருந்ததாகவும் மறைமுகமாகத் தெரிவித்தான்.

"இப்போது எங்கே வந்தீர்கள்" என்று ரேவதி விசாரித்தாள்.

"இதென்ன கேள்வி? உன்னைப் பார்க்கத்தான்" என்றான் வசந்தன்.

"என்னை எதற்காக பார்க்கிறது?"

"அப்பா கடிதம் எழுதி இருந்தார். என் அம்மாவுக்கு உன்னை ரொம்பப் பிடித்துப் போய் விட்டதாம். நான் வந்து பார்க்க வேண்டும் என்று எழுதியிருந்தார்கள்.

"அதற்கு இப்படித்தான் வருகிறதாக்கும்?"

"பின்னே?"

"வருகிறேன் என்று முதலில் ஒரு கடிதம் போட மாட்டார்களா ? அப்பா ஸ்டேஷனுக்கு வந்திருப்பாரே?"

"என்னை எப்படி அடையாளம் கண்டு கொள்வாராம்?"

"நான் சொல்லி அனுப்புவேன்."

"அவரிடம் என்ன விபரம் சொல்வாய்? எங்கே எனக்கு கொஞ்சம் சொல்லேன்."

"போங்கள்."

"கறுப்பாய், கட்டை குட்டையாய், நீண்ட பற்களுடன் முகத்தில் அசடும், விகாரமும் வழிய......"

வசந்தன் மீது ரேவதி எறிந்த ஒரு சிறிய செடி வந்து விழுந்தது. ரேவதி அவனழகைத் தன் இரு கண்களாலும் பருகிக் கொண்டிருந்தாள். "வருகிறேன் என்று ஏன் கடிதம் போடவில்லை? சொல்லுங்கள் திடீரென்று கிளம்பினீர்களா?" என்று கேட்டாள்.

"இல்லை. பத்து நாளைக்கு முன்னாலேயே திட்டம் போட்டுத்தான் புறப்பட்டேன். நான் மற்றவர்களைப் போல் பெண்ணைக் கண்ணை மூடிக் கொண்டு பார்த்து

ஏமாற விரும்பவில்லை'' என்று வசந்தன் சிரித்துக் கொண்டே கூறினன்.

''ஆமாம் எல்லோரும் கண்களை மூடிக்கொண்டுதான் பார்க்கிறார்களா?''

''பின்னே பையன் வரப்போகிறான் என்றதும் நன்றாக அலங்காரம் செய்து கொண்டு சிரமப்பட்டு முகத்தை நன்றாக வைத்துக் கொண்டு......''

''அப்புறம்?''

''அந்த ஐந்து நிமிஷத்தில் பெண்ணைப் பற்றி என்ன தெரிந்து கொண்டு விட முடியும்? அவள் நல்லவளா, பொல்லாதவளா, கோபக்காரியா, சண்டை போடுகிறவளா......''

''உண்மை ஒன்றும் கண்டு பிடிக்க முடியாது. ஆகையினாலே......''

''அவளுக்குத் தெரியாமல் அவளைக் கவனிக்க வேண்டும்.''

''ஓ...அப்படியானல் என்னை வேவு பார்க்க வந்தீர்களா?'' என்று ரேவதி கேட்டாள். அவள் அவ்வாறு வேடிக்கையாய்ச் சொன்ன போதிலும் வசந்தனது முகம் மாறிற்று—அவன் அந்த பழனியப்பனின் அநாமதேயக் கடிதங்களைப் பற்றி உண்மையை அறியத்தானே வந்திருக்கிறான்.

''ஏன் எறும்பு கிறும்பு கடித்து விட்டதா? முகத்தை என்னமோ போல் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே?''

''எறும்பு இருக்கும் போலிருக்குது'' என்று வசந்தன் கூறிக் கொண்டே அவள் பக்கம் சற்று நகர்ந்து உட்கார்ந்தான்.

''நான் உங்களைத் தற்செயலாகப் பார்க்காவிட்டால் நீங்கள் வீட்டுப் பக்கம் சுற்றி வந்து கொண்டு இருப்பீர்கள் இல்லையா?''

"ஆமாம்" என்று வசந்தன் பரிகாசத்தோடு கூறினான்.

"நான் வெளியில் சென்றால் என் பின்னாலேயே வந்து கொண்டிருப்பீர்கள்?"

"ஊம்."

"இரவு வேளைகளிலும் வீட்டுப் பக்கம். வந்து பார்ப்பீர்கள்."

"சொல்ல முடியாது."

"ஜாக்கிரதையாயிருங்கள். வீட்டுப்பக்கம் திருட்டுப் போகிறது என்று ராத்திரி வேளைகளில் போலீஸ்காரர்கள் ரோந்து சுற்றி வருகிறார்கள். சந்தேககப்படும் சூழ்நிலையில் இருந்ததாகப் பிடித்துக் கொண்டு விடப் போகிறார்கள்."

"உடனே டெலிபோன் செய்து எனக்கு ஜாமீன் கொடுக்கச் சொல்வேன்."

"யாரை விட்டு?"

"என் மாமனாரை விட்டு."

"அது யார்?"

"நன்றாயிருக்கிறது. ஒருபெண் சொந்தத் தகப்பனாரையாரென்று கேட்கிறதே."

"போங்கள்."

"வசந்தன் விரல்களை மடக்கிக்கொண்டே "மூன்று" என்று எண்ணினான்."

"என்ன மூன்று?"

"இதுவரை மூன்றுமுறை போங்கள் என்று சொல்லி விட்டாய். இன்னொரு தரம் சொன்னாயோ—ஆமாம் எனக்கு ஏற்கெனவே கோபம்.

"சரிதான்."

''கல்யாணமாகிறதற்கு முன்னாலேயே யார் அந்த உரிமையைக் கொடுத்தது என்கிறாயா? நானாகத்தான் எடுத்துக் கொண்டேன். ஏன் ரேவதி உனக்கு விபத்து நேர்ந்ததாமே அதைப் பற்றி எனக்கு ஏன் தெரிவிக்க வில்லை.''

''விபத்தா? தண்ணீரில் விழுந்ததைச் சொல்கிறீர் களா? அது எப்போதோ நடந்தது. உங்களுக்கு யார் சொன்னது?''

''டில்லியில் கேள்விப்பட்டேன். அந்தக் கேசவன் சௌக்கியமாயிருக்கிறானா?''

''அவன் சௌக்கியத்திற்கு என்ன குறைச்சல்? ஒரு டாக்டர், ஒரு நர்ஸ், அப்புறம் கையாள், ஒருத்தன் வீட்டில் ராஜோபசாரம்'' என்று கோபத்துடனும் வெறுப் புடனும் கூறினாள்.''

''அதென்ன ரேவதி உன் உயிரைக் காப்பாற்றிய வனைப் பற்றி அப்படிப் பேசுகிறாய்? சொல்லப் போனால் நான் கூட அவனுக்கு கடமைப் பட்டிருக்கிறேன்.

''ஒரொரு சமயம் அவன் ஏன் காப்பாற்றினான். மூழ்கிப் போயிருக்கக் கூடாதா என்று கூடத் தோன்று கிறது'' என்று ரேவதி துக்கம் தோன்றக் கூறினாள்.

வசந்தன் அவள் பக்கத்தில் வந்தமர்ந்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு ''அப்படி எல்லாம் சொல் லாதே'' என்றான்.

ரேவதி அவன் தன் கைகளை பற்றியதற்காகக் கோபித்து கொள்ள வில்லை; வெட்கப் படவில்லை; அவற்றை அவன் பிடியினின்றும் இழுத்துக் கொள்ள முயற்சிக்கவுமில்லை.

''நீ இப்படி வருத்தப்படும்படி அவன் என்ன சொல்லுகிறான்?'' என்று வசந்தன் விசாரித்தான்.

''வீட்டில் அட்டகாசம் செய்து கொண்டிருக் கிறான்.''

"அப்படி என்றால்?"

"அப்பா, அம்மா எல்லாரையும் அதிகாரஞ் செய்கிறான். ஒரு சமயம் மரியாதைக் குறைவாக பேசுகிறான்; இன்னொரு சமயம் காலில் விழுந்து கும்பிடுகிறான்."

"பைத்தியமா?"

"எங்களுக்காக தண்ணீரில் இறங்கியபோது மண்டையில் அடிபட்டு விட்டது. அதனால் மூளை பாதிக்கப்பட்டு விட்டது என்கிறான்!"

வசந்தன் யோசனை செய்த வண்ணமிருந்தான்.

"அவனுக்கு ஏதாவது பணத்தைக் கொடுத்து அனுப்பிவிடுகிறதுதானே?"

"அதுவும் சொல்லிப் பார்த்தாயிற்று. ஒரு சமயம் ஒன்றுமே வேண்டாமென்கிறான். இன்னொரு சமயம் லட்சம் ரூபாயைக் கீழே வை" என்கிறான்.

"அவன் இப்படிப் பேசுகிறதற்கு காரணம் மூளையில் அடிபட்டிருப்பது தானாக்கும்?"

"டாக்டர் அப்படித்தான் சொல்கிறார்."

"யார் டாக்டர்? அவனுக்கு உபகாரம் நடத்தியதைப் பற்றி நீ சொல்லுகிறதைப் பார்த்தால் பெரிய டாக்டராக ஏற்பாடு செய்திருப்பீர்கள் போலிருக்கிறதே!"

"அப்பா அப்படித்தான் பெரிய டாக்டராக ஒருத்தரைக் கூப்பிடுவதாக இருந்தார். ஆனால், அவன் தனது சொந்த டாக்டர்தான் பார்க்க வேண்டுமென்று பிடிவாதமாய்க் கூறிவிட்டான்.

"இப்போது அவன் நிலைமை என்ன?"

"காலில் அடிபட்டு இருக்கிறது. எழுந்திருக்சு முடியாது. அப்பா அறையிலேயே படுத்துக் கொண்டிருக்கிறான்

"எப்போது குணமாகும்?"

"சீக்கிரம் ஆகிவிடுமென்று டாக்டர் சொல்கிருர்"

"அப்பா அவனைப் பற்றி என்ன நினைக்கிருர்?"

"அவர் அவனைப் பற்றி ஒன்றே ஒன்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிருர்; அவன் எங்களைக் காப்பாற்றினுன். நான், அம்மா இரண்டு பேரையும்!"

"நீ இப்படி துண்டுதுண்டாகச்சொன்னுல் எனக்குக் குழப்பமாகிறது. முதலில் இருந்து நடந்ததைச் சொல்லு."

ரேவதி தன் தாயாரின் பிறந்த தினமன்று தானும், அவளும் குரோம்பேட்டைக்குச் சென்றது முதல் அன்று வரை நடந்த விஷயங்களை விபரமாகக் கூறினுள். வசந்தன் இவற்றை கவனமாகக் கேட்டு வந்தான்.

"அப்பாவுக்கு இந்த நன்றியறிதல் பைத்தியம் அதிகம். அத்துடன் நாலு பேர் என்ன சொல்வார்களென்ற கவலை வேறு. ஆகையால்தான் அவனிடம் கடுமையாகவும், கண்டிப்பாகவும் நடந்து கொள்ளவில்லை. தவிரவும் அப்படி நடந்து கொள்ளவும் அவருக்குத் தெரியாது" என்று ரேவதி தன் அபிப்பிராயத்தை கூறினுள்.

"அவன் எந்த ஊராம்?" என்று வசந்தன் விசாரித்தான்.

"என்னமோ சொல்லுகிருன். அவனைப் பற்றி ஒன்றும் நிர்ணயமாய்த் தெரிந்து கொள்ள முடியவில்லை!"

"அந்த டாக்டர்?"

"மார்த்தாண்டம் என்று பெயர்!"

"அவர் எங்கே வசிக்கிருர்? அவருக்கு டெலிபோன் இருக்கிறதா?"

"அதெல்லாம் தெரியாது. வேளா வேளைக்கு வந்து பார்த்துவிட்டுப் போகிறார்."

"நர்ஸ்?"

"ராதாபாய் என்று பெயர். அவளை அவர்தான் ஏற்பாடு செய்தார்."

"அவனுக்கு உறவு யாருமில்லையா?"

"இது வரையில் யாரும் வந்து பார்க்கவில்லை"

"அவனுக்கு இந்தக் கல்யாண விஷயம் தெரியுமோ?"

"என்னைப் பார்க்க வந்து இருந்தபோது அவன் மயக்கமாய் இருந்தான். அவனிடம் சொல்லவில்லை பிறகுதான் சொல்லிற்று; அதற்காக வேறு அமர்க்களப் படுத்தினான்."

"பேஷ்! என்னைப் பற்றிய விவரம் அவனுக்குத் தெரியுமா?"

"அப்பா சொல்லியிருப்பார். உங்கள் ஜாதகம், விலாசம் எல்லாம்கூட கேட்டு வாங்கிக்கொண்டானும்."

"எதற்காகவாம்?"

"அவனுக்குச் ஜாதகம் பார்க்கத் தெரியுமாம். டில்லியில் தனக்குத் தெரிந்த ஒருவரைக் கொண்டு உங்களைப்பற்றி......"

"வேவு பார்த்து உளவு விசாரிக்க ஏற்பாடு செய்கிறுனுக்கும்?"

"ஏன் அதிலென்ன தப்பு?"

"ஓ...நான் வேவு பார்க்க வந்தேன் என்பதைச் சொல்கிறுயா? நான் நேரே வீட்டிற்குள்தான் வரவிருந்தேன். நீதான் என்னை விரட்டியடித்து இங்கே வரும்படி

செய்துவிட்டாய்'' என்று சிரித்துக்கொண்டே சொன்ஞன்.

''நீங்கள் வந்தசமயம் மாதவன் வாசற்பக்கம் வந்து நின்று கொண்டிருந்தான்.

''புதிதாகச் சொல்லுகிருயே, அது யாரு மாதவன்?''

''அவன் கேசவனுக்கு வேண்டியவன். அடிக்கடி வந்து அவனைக் கவனித்துக் கொள்கிருன். சில நாள் கூடவே தங்கியிருக்கிருன்.

''நான் என் மனத்தில் படுவதைச் சொல்லட்டுமா?'' என்று வசந்தன் கேட்டான்.

''தாராளமாகச் சொல்லுங்கள். தாங்கள் வந்திரா விட்டால் நான் ஒரு வேளை இதைப் பற்றியெல்லாம் தங்களுக்குக் கடிதம் எழுதுவேனே என்னமோ?

''அடடா, தெரியாத்தனமாக வந்துவிட்டேனே! உன் கடிதத்தைப் பெறும் பாக்கியத்தை இழந்து விட்டேனே!''

ரேவதி ''போ......'' என்று ஆரம்பித்தவள் சட்டென்று வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.

வசந்தன் மெதுவாக அவள் கையை வாயினின்று எடுத்து விட்டான். பிறகு இருவரும் நீண்டநேரம் பேசிக்கொண்டு இருந்தனர். கால்வாசி விஷயங்கள் கேசவனைப் பற்றியவை. மீதமுள்ளது பரஸ்பர காதலைப் பற்றித்தான். வசந்தன் அவளுடன் அவள் வீடு இருந்த தெரு முனை வரை வந்தான். அவர்களிருவரும் ஒருவரிடம் மற்றெருவர் விடைபெற்றுக் கொண்டு இருந்த போது ரேவதி தனக்கு எதிரே தூரத்தில் கூர்ந்து கவனித்தாள்.

அதோ அந்த மாதவன் வந்து கொண்டிருக்கிருன். பச்சை ஷர்ட் போட்டுக் கொண்டு சிகரெட் பிடித்துக்

கொண்டு வருகிறுனே அவன் என்று கூறிவிட்டு 'வேக மாகச் சென்ருள்.

ஒரு நாள் காலை கேசவன் படுக்கையில் தன் கால் களை நீட்டிய வண்ணம் உட்கார்ந்திருந்தான். பாதங்களி லிருந்து இடுப்பு வரை போர்வையால் மூடிக்கொண் டிருந்தான். அவன் முகம் மிகவும் தெளிவுற்றிருந்தது. அவன் முன் வந்தபோது இருந்ததைவிட அதிகப் பல மாகக் காணப்பட்டான்.

மாதவன் அவனுடைய கால்களை அமுக்கிவிட்டுக் கொண்டே அவனிடம் மெதுவாகப் பேசிக்கொண்டிருந் தான். நர்ஸ் ராதாபாய் அவன் தலையை வாரிவிட்டுக் கொண்டிருந்தாள். கேசவன் தன் கழுத்தைச் சற்று நிமிர்த்திக்கொண்டு தன் இரண்டு கைகளாலும் அவன் கன்னத்தை மெதுவாக இழைத்துக் கொண்டிருந்தான்.

அப்போது சாத்தி வைக்கப்பட்டிருந்த கதவை யாரோ விரலால் தட்டும் சப்தம் கேட்டது.

வாருங்கள் என்ருன் கேசவன். ஆனுல், அவன் இன் னும் தன் கைகளை ராதாபாயின் கன்னத்தினின்றும் எடுத்துக் கொள்ளவில்லை.

கதவைத் திறந்து கொண்டு துரைசாமி உள்ளே நுழைந்தார். கேசவனது சிங்கார லீலையைப் பார்த்த போது அவர் திடுக்கிட்டு பின்வாங்கி வெளியே போகக் கிளம்பினுர்.

கேசவன் தன் கைகளைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஏன் போகிறீர்கள்? ''வாருங்கள்'' என்று கூப்பிட்டான்.

ராதாபாய் தன் முகத்தில் கோபம் தோன்ற விர் ரென்று அந்த அறையை விட்டு வெளியே சென்ருள்.

துரைசாமி உட்காருவதற்காக மாதவன் ஒரு நாற் காலியை இழுத்துப் போட்டான். அவர் அதில் போய் தயக்கத்துடன் உட்கார்ந்தார்.

''நான் தினமும் ஏதாவது தேகப் பயிற்சி செய்கிற வழக்கம். இங்கு வந்தது முதல் ஒன்றுமே செய்யவில்லை.

இன்றைக்குத்தான் கைகளை உயரே நீட்டி மடக்கி, நீட்டி மடக்கிப் பார்த்தேன்'' என்று கேசவன் தன் செய் கைக்குச் சமாதானம் கூறினுன்.

துரைசாமி தலையை ஆட்டி விட்டுப் பேசாமலிருந் தார்.

''ஏய் மாதவா! கொஞ்சம் இங்கே பிடித்துவிடு'' என்று கேசவன் கூறி தன் மண்டையின் பின் பக்கத்தைக் காண்பித்தான்.

''மாதவன் அப்படியே செய்து கொண்டிருந்த போது நர்ஸ் ஒருத்தி வருவாளே அவள் எங்கே காணும்?'' என்று கேசவன் விசாரித்தான்.

''அவள் இத்தனை நேரமாக இங்கே தானே இருந் தாள். இப்போதுதானே வெளியில் போனுள்.''

''இருந்தாளா'' என்று கேசவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

அவனுக்குப் பின்புறம் நின்றிருந்த மாதவன், துரை சாமியிடம் தான் பிடித்துக் கொண்டிருந்த இடத்தைக் காண்பித்து, அது பாதிக்கப்பட்டிருப்பதால்தான் இப் படிப் பேசுகிறுர் என்று சைகையால் தெரிவித்தான். தன் கண்ணையும் துடைத்துவிட்டுக் கொண்டான்.

கேசவன் துரைசாமியை உற்றுக் கவனித்துக் கொண் டிருந்தான்.

''எனக்கு எப்போது உத்தரவு கொடுக்கிறீர்கள்?'' என்று அவன் அவரைக் கேட்டான்.

''உத்தரவாவது, கொடுக்கவாவது? இன்னுங் கொஞ்ச நாளைக்குப்போகிறதைப் பற்றி வாயே திறக்கக் கூடாது. நன்றுகக் குணம் ஆனுல்தான் நான் போக விடுவேன்'' என்ருர் துரைசாமி.

''இப்போது எத்தனையோ தேவலை, நான் வந்து கிட்டத்தட்ட ஒரு மாதமாகிவிட்டது.''

''ஒரு வருஷந்தான் ஆனுல் என்ன?''

''அப்படியா உங்களுக்கு ஏற்கனவே கொடுத்த தொந்தரவு போதாதென்று உங்கள் அறையில் வேறு வந்து உட்கார்ந்திருக்கிறேன். இதை நினைத்துப் பார்த்தால் எனக்கு அவமானமாக இருக்கிறது. நான் ஏதாவது ஒரு நர்ஸிங் ஹோமில் போய்ச் சேருகிறேன்.

அப்போது ராதாபாய் உள்ளே வந்தாள். அவள் முகத்தில் அருவருப்பும் கோபமும் இன்னும் இருந்தன. ''இதென்ன இப்படிச் சொல்கிருரே, ராதாபாய்'' என்று துரைசாமி அவளிடம் கூறினர்.

''முதலில் நர்சிங்ஹோமில் சேர்த்துவிட்டு மறு காரியம் பாருங்கள். அவருக்கு இங்கு எல்லாம் சரிப்பட்டு வராது'' என்று அவள் வெடுக்கென்று சொன்னுள்.

அவள் தன்னிடம் விரசமாக நடந்து கொண்டதற்காகக் கோபித்து அப்படிக் கூறுகிருள் என்று துரைசாமி நினைத்தார். ''பாருங்கள், அவளே அப்படிச் சொல்கிருள்'' என்ருன் கேசவன்.

''யாரு என்ன சொன்னுலும் சரி. உங்கள் கால்கள் தலை இரண்டும் நன்ருக குணமாகிற வரையில் நான் உங்களை விடப்போவதில்லை'' என்று துரைசாமி கூறினர்.

''அவர் சொல்வதை கேட்டீர்களல்லவா? மாதவன் —ராதாபாய்—நீங்கள் இரண்டு பேருஞ் சாட்சி'' என்று கேசவன் சிரித்துக்கொண்டே கூறினுன். பிறகு துரைசாமியைப் பார்த்து ''அம்மா ஊரிலில்லை போலிருக்கிறது'' என்ருன்.

''எந்த அம்மா'' என்று அவர் விசாரித்தார்.

''எந்த அம்மாவாவது, நம்ம வீட்டு எஜமானி அம்மாள்தான்''

''யாரு, மரகதத்தைச் சொல்கிருயா? அவள் ஓரிடத்திற்கும் போகவில்லை.''

''என்னது? இன்ெனாரு தரம் சொல்லுங்கள்.''

''ஏன் சந்தேகம்?''

''மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பார்கள். நான் இப்படி மாதக் கணக்காக இருந்தால் அலுத்துப் போய் இருக்கும். இனிமேல் நான் இந்த வீட்டில் இருப்பது மரியாதைக் குறை'' என்று கேசவன் கோப மாய்க் கூறி கால்களின் மீது போர்த்தி இருந்த போர்வையை எடுத்தெறிந்தான். படுக்கையை விட்டு எழுந்திருக்கப் போனான்.

துரைசாமி அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு ''நான் அவளை இப்போது வரச் சொல்கிறேன். கோபித் துக்கொள்ளாதீர்கள்'' என்று கெஞ்சினார். ராதாபாயை, தன் மனைவியை அழைத்துவர அனுப்பினார்.

கேசவன் உலகத்தையே வெறுத்து விட்டவன்போல் முகத்தை வைத்துக் கொண்டிருந்தான். அவன் மரகதத்தினிடம் பேசியதிலிருந்து அவள் அவன் இருந்த அறைப் பக்கம்கூட அவள் வருவதில்லை.

மரகதம் ராதாபாயுடன் வந்தாள். அவள் கேசவனைப் பார்த்து, ''எப்படி இருக்கிறீர்கள்?'' என்று விசாரித்தாள்.

''நான் ஏதாவது தவறாகப் பேசியிருந்தால் மன்னித்து விடுங்கள்'' என்று கேசவன் கண்களில் நீர் பெருகக் கூறினான்.

''நான் தினமும் வந்து பார்த்து விட்டுப் போய்க் கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் அசந்து தூங்கிக் கொண்டிருந்தீர்கள்'' என்றுமரகதம் பொய் சமாதானம் கூறினாள்.

''இதைக் கேட்க சந்தோஷமாயிருக்கிறது மனதுக்கு. ஆறுதலாயிருக்கிறது. நான் ஒரு நர்ஸிங் ஹோமுக்குப் போகிறேன் என்றேன். அண்ணா கூடாது என்றார்'' என்று

கேசவன் துரைசாமியைப் பற்றிக் குறை கூறுவதுபோல் சொன்னான்.

அவன் முதல் முதலாக அண்ணா உறவு கொண்டாடியது கணவருக்கும் மனைவுக்கும் ஆச்சர்யத்தை அளித்தது.

''நன்றாயிருக்கிறது. ஓரிடத்திற்கும் போகக்கூடாது'' என்று மரகதம் மரியாதைக்குச் சொல்லி வைத்தாள்.

''நீங்கள் இரண்டுபேரும் இப்படி வற்புறுத்திச் சொல்லும்போது நான் என்ன பண்ணுகிறது? அந்தக் குட்டியும் நான் இங்கேயே எப்போதும் இருந்து கொண்டிருக்கணும் என்று பிடிவாதம் பிடிக்கிறது. இப்படி எல்லாம் சேர்ந்து சொல்லும்போது தட்ட மனசு வரவில்லை. இருக்கிறேன் என்று கேசவன் கால் மனத்துடன் தன் சம்மதத்தைத் தெரிவிப்பதுபோல் கூறினான்.

தன் பெண் அவன் தெரிவித்ததுபோல் அவனை இருக்கும்படி ஒருநாளும் வற்புறுத்தியிருக்க மாட்டாள் என்று அவளுக்குத் தெரியும். அவள் அவன் வாய் கூசாமற் பொய் கூறுவதைக்கேட்டுத் திகைத்துப் போயிருந்தாள். அவள் பிறகு சென்று விட்டாள்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு துரைசாமியும் கிளம்பினார். அவர் கதவுவரை போனவர் சற்றுத் தயங்கி நின்றார். திரும்பிக் கேசவனைப் பார்த்தார். ''என்ன சொல்லுங்கள்'' என்றான் கேசவன்.

''ஒன்றுமில்லை...'' என்று இழுத்தார்.

''சும்மா சொல்லுங்கள். என்னிடம் பேசுவதற்கு இத்தனை யோசனையே வேண்டியதில்லை.''

''ஒன்றுமில்லை. இரண்டு நாள் முன்னாடி இங்கே வந்திருந்தபோது பீரோ சாவி கையிலிருந்தது.''

கேசவன் முகத்தில் கோபக்குறி தோன்றியிருந்தது. ''கையிலிருந்தது என்றால் ... அதை இங்கே வைத்து

விட்டுப் போய்விட்டேனே என்று... சந்தேகம் இல்லையா?'' என்று கேசவன் பல்லைக் கடித்துக் கொண்டு விட்டான்.

''நான் உங்கள்மீது சந்தேகம் என்று சொல்ல வில்லையே'' என்றார் துரைசாமி.

''அது வேறு சொல்ல வேண்டுமா? இங்கே வைத் திருந்தால் நான் எடுத்துக் கொடுத்திருக்க மாட்டேனா? கொடுக்கவில்லை என்றால் நான் அதை ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றுதானே அர்த்தம்?'' என்று கத்தினான்.

''இதோ இங்கே இருக்கிறதா பாருங்கள்'' என்று தனக்குப்பின் இருந்த தலையணைகளை எடுத்து அப்பால் வீசி எறிந்தான்.

''இங்கே இருக்கிறதா பாருங்கள்'' என்று மெத்தை யைத் தூக்கப்போனான்.

துரைசாமி அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு ''நான் உங்களைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே. கம்பெனிக்கு மறுசாவி அனுப்பும்படி எழுதி விடுகிறேன். நாலு நாளில் வந்து விடும்'' என்றார்.

''இருந்தாலும் நீங்கள் அப்படிக் கேட்டது என் மனத் தைப் புண் படுத்தி விட்டது'' என்று கேசவன் கூறிக் கொண்டிருந்த போது டாக்டர் வரவே சாவி சம்பந்த மான பேச்சு அத்துடன் நின்றது.

பிறகு டாக்டரும், துரைசாமியும் அறைக்கு வெளியே சென்று பேசிக் கொண்டிருந்தபோது நீங்கள் காலை நன்றாகக் கவனித்து வருகிறீர்கள். குணமாகி வருகிறது என்றார்.

''இன்னும் என்ன கவனிக்கணும்'' என்று டாக்டர் கேட்டார்.

"தலையைச் சொல்கிறேன். மூளையிலடிபட்டதா?"

"அதைப் பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு பிரத்தியேகமாக நல்ல சிகிச்சை செய்தாகணும்" என்று கூறி விட்டுச் சென்றார். துரைசாமிக்கு கேசவன் கூச்சலிடுவதும் கூத்தடிப்பதும் உள்ளூரத் திகிலை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது. அதற்காகத்தான் அவர் அவனுக்கு உடனே மூளை சிகிச்சை செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றி டாக்டரிடம் வற்புறுத்திப் பேசியது.

இதற்குப் பிறகு இரண்டு மூன்று தினங்கள் அவன் மிகமிக நல்ல பிள்ளையாக நடந்து கொண்டான். கோபப் பேச்சு, மரியாதைக் குறைவான வார்த்தை ஒன்று கூடக் கிடையாது. எப்பொழுதும் சிரித்தமுகத்துடனிருந்தான். இன் சொற்களே அவன் வாயினின்றும் கிளம்பின. ஒரு நாள் நடுநிசியில் அவன் அறையினின்றும் பாட்டுச் சப்தம் கிளம்பியது. நேரமாக ஆக அந்தச் சப்தம் அதிகரித்தது. துரைசாமிக்கு அது என்ன ஏது என்று போய் விசாரிக்கத் தைரியம் இல்லை. ஒரு வேளை ரேடியோவைத் திருப்பியிருப்பானோ என்றுசந்தேகம். ஆனால் இரவு ஒருமணிக்கு நிகழ்ச்சி எதுவும் இராதே. ரேவதி தன் தந்தையைக் கேசவன் அறைக்கு இழுத்துக் கொண்டு வந்தாள்.

துரைசாமி மெதுவாகக் கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தபோது கேசவனும், மாதவனும் சேர்ந்து பாடிக் கொண்டிருக்கக் கண்டார். கேசவன் தன் கண்களை மூடிய வண்ணம் கைகள் கூப்பித் தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்தான். துரைசாமி வந்ததை அவன் பார்க்கவில்லை. மாதவன் மட்டும் கவனித்து அவர் இடைஞ்சலாயிருக்க வேண்டாமென்றும், போய் விடலாமென்றுஞ் சைகை காட்டினான்.

துரைசாமி பின் வாங்கிச் சென்றபோது தமக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ரேவதி மீது இடித்துக் கொண்டார். என்னப்பா இது என்றாள். மறுகணம் பாட்டு நின்றது. யாரது என்று கேசவன் உரக்கக் கேட்

டான். துரைசாமி தன் பெண்ணுடன் பதிலளிக்காம லேயே சென்று விட்டார். யாராவது மூளை சிகிச்சை நிபுணரான டாக்டரைத் தருவித்துப் பார்க்கச் சொல்ல வேண்டுமென்று துரைசாமி தீர்மானித்தார். மறுநாள் பகல் துரைசாமி, கேசவனைப் பார்க்க வந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். ''அண்ணா ஒரு சின்னஞ் சிறிய வேண்டுகோள்'' என்று கேசவன் மிகவும் பணிவான குர லில் கூறினான்.

''சொல்லுங்கள்'' என்றார் துரைசாமி.

முதலில் அடியேனை இப்படி ''ங்கள்'' போட்டுக் கூப் பிட்டு அவமரியாதை செய்யாதீர்கள் அண்ணா. ஏழையின் மனத்தை அது மிகவும் புண்படுத்துகிறது.

''அப்படிக் கூப்பிடவில்லை.''

''தாங்கள் கூறுவது உண்மையானால் என்னைக் கேசவா என்று அழையுங்கள்.''

''கேச...வா''

''ஏன் தயக்கப்படுகிறீர்கள். டேய் கேசவா என்று கூப்பிடுங்கள் அண்ணா.''

''டேய் கேசவா ங்கள் என்று துரைசாமி கூறியபோது கேசவன் வாய்விட்டுச் சிரித்தான்.

அப்போது ராதாபாய் உள்ளே வந்து தன் கையில் இருந்த ஒரு கவரை கேசவன் இடம் நீட்டினாள். அவன் அவளைப் பார்க்காமலேயே ''அப்படிக் கீழே வை, கையில் கொடுப்பது மிகவும் கெட்ட வழக்கம்'' என்று கூறினான்.

அவள் அப்படியே செய்தாள். கேசவன் அந்தக் கவரை எடுத்து உடைத்து உள்ளிருந்த கடிதத்தை எடுத் துப் படித்தான். முதற்பக்கத்தைப் படித்தபோது அவன் முகத்தில் புன்னகை தோன்றிற்று. இரண்டாவது பக்கத் தைப் படித்தபோது அவன் முகத்தில் வருத்தந் தோன் றிற்று. அவன் யோசனை செய்து கொண்டே எதிரே

நோக்கிய வண்ணம் கவலையே உருவாக உட்கார்ந்திருந்தான். கையிலிருந்த கடிதம் நழுவி விழுந்தது.

''என்ன விசேஷம்?'' என்று துரைசாமி கேட்டார்.

''ஒரு சிறிய விஷயந்தான்அண்ணு. ஆனுலும் மனது கஷ்டப்படுகிறது.''

''யார் எழுதியிருக்கிருர்கள்?''

''என் தம்பி கோவிந்தன்.''

''அவருக்கு உடம்பு ஒன்றும் இல்லையே?''

''அவனுக்கோ எனக்கோ உடம்புக்கு வந்தால் நான் கவலையே படமாட்டேனே. அதைவிட பெரிய விஷயம்.''

என்னிடம் சொல்லலாம் என்ருல் சொல்லுங்...... சொல்லு என்று துரைசாமி கேட்டார்.

''நீங்களே படித்துப் பாருங்கள் அண்ணு என்று கேசவன் கடிதத்தை எடுத்துத் தன்னிரு கைகளாலும் அவரிடம் பய பக்தியுடன் கொடுத்தான்.''

துரைசாமி படித்தார். '' என் அருமைத் தமையனுருக்குத் தெண்டனிட்டு எழுதிக்கொண்டது. என்று ஆரம்பித்திருந்தது. முதற்பக்கம் முழுவதும் பொதுவான விஷயங்களாயிருந்தது. இரண்டாவது பக்கத்தில் எழுதியிருந்தது.

சங்கத்தின் ஆதரவில் ஆயிரம் பேருக்குச் சாப்பாடு போடப்பட்டது. வெள்ளத்திஞல் குடிசைகளை விட்டு வெளியேற நேர்ந்த ஏழைகளுக்குத் துணிமணிகள் வாங்கி வினியோகமு் செய்யப்பட்டன.

தாங்கள் இது போன்ற தர்மச் செலவுகளுக்கெல்லாம் ஏற்கனவே சொத்தின் மீது பணம் வாங்கியது சம்பந்தமாகக் கோர்ட்டில் நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள். நில புலங்கள் அடுத்த வாரம் ஏலத்துக்கு வரவிருக்கின்றன. தாங்களிருக்குமிடம்

இதுவரை தெரியாததால் உடனே கடிதம் எழுதவில்லை. நானாகவே தங்கள் பெயரைச்சொல்லி பணம் புரட்டிக் கட்டிவிடலாமென்று பார்த்தேன். முடியவில்லை. தற்போதைக்கு நாற்பதினாயிரம் ரூபாயாவது கட்டினால்தான் ஏலத்தை நிறுத்த மனுச்செய்து கொள்ளலாம். பாக்கித் தொகையைப் பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். மாதவன் தான் தாங்கள் தங்கியிருக்கும் விலாசத்தைத் தெரிவித்தான். அது விஷயத்தில் அவன் தங்கள் உத்தரவை மீறி எனக்கு எழுதியதற்காக அவனைக் கோபியாதேயுங்கள். தாங்கள் தங்கியிருக்கும் வீட்டுக்காரரான திரு. துரைசாமி அவர்கள் பெரிய கனவானென்றும், உத்தம சீலரென்றும், பெரிய தர்மிஷ்டரென்றும் மாதவன் தெரிவித்திருந்தான். அந்தப் புண்ணியவானை வேண்டுமானாலும் கேட்டுப்பாருங்களேன். ஒரு மாதத்தில் வேறு ஏற்பாடு செய்து தொகையைத் திருப்பிக் கொடுத்து விடலாம்.

மாதவன் தாங்கள் அங்கிருப்பதைப் பற்றிப் பொதுவாகத் தெரிவித்தானேயன்றி ஏன்? எதற்காகத் தங்கியிருக்கிறீர்கள் என்ற விபரங்கள் தரவில்லை. தயவுசெய்துஉங்கள் உடல்நலனைப் பற்றி விவரமாகத் தெரிவியுங்கள்.

துரைசாமி கடிதத்தைப் படித்து முடிப்பதற்கும் கேசவன் இந்த மாதவன் வரட்டும் சொல்லுகிறேன் என்று சொல்லிப் பல்லைக் கடிப்பதற்கும் சரியாயிருந்தது.

உன் தம்பிக்குக்கூடத் தெரிவிக்காதிருந்தது தவறு' என்றார் துரைசாமி.

நான் தம்பி உறவு கொண்டாடுவதில்லை. அதனால் தான் எனக்கு உறவினரே யாருமில்லை என்று உங்களிடம் சொன்னேன். அந்தப் பயல் இப்போது என்ன அசட்டுத்தனமான யோசனை சொல்ல வந்துவிட்டான் பார்த்தீர்களா?

துரைசாமி தலையை அசைத்தார்.

உங்களைக் கேட்டு நாற்பதினாயிரம் ரூபாய் வாங்குகிறதாம்.

துரைசாமி வாயைத் திறக்கவில்லை.

''இவனுக்குக் கணக்கு வழக்குக்கூடத் தெரியாது. பாங்கியில் ஒரு பத்தாயிரம் ரூபாய் இருக்கிறது. அது போகப் பாக்கி தேவைப்படுவது முப்பதினாயிரம் ரூபாய் தான்.''

துரைசாமியின் எண்ணங்கள் எங்கோ போய்க் கொண்டிருந்தன.

''அடடா மறந்தே போய் விட்டது. சேவிங்ஸ் பாங்கில் ஐயாயிரம் இருக்கிறது. ஆகையால் இருபத்தையாயிரம் இருந்தால் போதுமானது. இன்றைக்கு என்ன அக்டோபர் மாதம் ஏழாந்தேதியா? சரியாக நவம்பர் மாதம் ஏழாந்தேதி அன்று உங்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட ஏற்பாடு செய்கிறேன்.''

இதைக் கேட்டுத் துரைசாமி இடி விழுந்தவர் போலானார். அவருக்கு முடியாது—என்னிடம் இவ்வளவு பணம் இல்லை—எதற்காகக் கொடுப்பது என்பது போன்ற பதில்கள் சொல்லவேண்டுமென்று தோன்றின. ஆனால் அப்படி எல்லாம் சொல்ல வாயெழவில்லை. தைரியமுண்டாகவில்லை.

அவருக்குத் தலை சுற்றிற்று.

15

''அப்பா! உங்கள்மேல் எனக்குக் கோபம்!'' என்று ரேவதி தன் தந்தையைப் பார்த்துக் கூறினாள்.

''ஏன் அம்மா! கல்யாணம் சீக்கிரம் பண்ணி வைக்கவில்லை என்றா? அந்தப் பையன் சீக்கிரம் பார்க்க வந்து விடுவான், கவலைப்படாதே. நான் அவன் அப்பாவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்'' என்று துரைசாமி சிரித்துக் கொண்டே கூறினார்.

"நீங்கள் சிரிக்கிறீர்கள். அம்மா சிரித்து எத்தனை நாளாச்சு தெரியுமா?" என்று ரேவதி கூறிய போது தந்தையின் முகம் சுண்டிவிட்டது.

"பைத்தியம். அப்பாவிடம் இப்படியெல்லாம் பேசுவார்களா" என்று மரகதம் பெண்ணைக் கடிந்தாள்.

"பின்னே பாரேன் அம்மா. அந்தக் கேசவன் விஷயத்தில் பட்டுக்கொள்ளாமல் பேசாதிருக்கிறார்."

"ஓ! அவரைப் பற்றிச் சொல்கிறாயா?"

"என்ன 'அவர்' வேண்டியிருக்கிறது" என்றாள் ரேவதி.

"நாம் எதற்காகவும் மரியாதைக் குறைவாகவும் நடந்துகொள்ளக்கூடாது" என்றாள் மரகதம்.

"எதற்காகவாவது அவர் ஏதாவது சொன்னாரா?" என்று துரைசாமி சற்றுக் கோபமாகவே சொன்னார்.

"இனிமேல்தான் புதிதாகச் சொல்லணுமாக்கும்? இதுவரை என்னென்ன பேசியிருக்கிறார், என்னென்ன செய்திருக்கிறார், அது போதாதா? எடுத்ததெற்கெல்லாம் கோபம். உங்களை எத்தனை தரம் விரட்டியிருக்கிறார்? உங்கள் அறையில் அவரை இருக்கச் சொன்னது பிசகு. நினைத்தபோது போய் டெலிபோனில் பேசினோம் என்கிறதில்லை. பிறர் கூப்பிட்டாலும் பயந்துகொண்டே பேசவேண்டியிருக்கு. தூங்குகிறது போல் விழித்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருக்கிறார்........என்று ரேவதி புகார் செய்தாள்.

"இதுதானே. நான் அதற்கு வேறு ஏற்பாடு செய்திருக்கிறேன். இன்னும் நாலைந்து நாளில் கீழே ஹாலுக்கு டெலிபோன் எக்ஸ்டென்ஷன் வந்துவிடும். கவலைப் படாதே."

"அப்படி என்றால் கவலைப்படவில்லை அப்பா! அந்த மனுஷன் ஹாலுக்கு வந்து முகாம் போட்டால் நாம்

அப்புறம் 'ஔட் ஹௌஸுக்குக்' குடிபோய் விடலாம் இல்லையா?'' என்று ரேவதி கிண்டலாகக் கேட்டாள்.

''ஆமாம்!'' என்று துரைசாமி பதில் சொல்லி விட்டார். அப்புறம்தான் அவருக்கு அவள் பரிகசித்ததை உணர்ந்தார். ஒருநாளும் தம் மகளைக் கோபித்திராத அவருக்கு இப்போது அவள் மீது கோபம் வந்தது.

அதைக் கவனித்த மரகதம் ''நீங்கள் இப்படிப் பல விதத்திலும் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறீர்களே என்று அவள் மனவருந்தித் தாங்கமாட்டாமல் அப்படி பேசுகிறாள்'' என்று சமாதானம் கூறினாள்.

''ரேவதி சொல்லுகிறதெல்லாம் உண்மைதான். இருந்தாலும் நாம் இதையெல்லாம் கஷ்டம் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. கஷ்டமாயிருந்தாலும் பொறுத்துக்கொண்டுதான் போகவேண்டும்'' என்று துரைசாமி தமது பெண்ணைப் பார்த்துக் கூறினார்.

''ஆனால் அதற்கு ஒரு எல்லை கிடையாதா'' என்று ரேவதி கேட்டாள். அவள் தனது தாயைப்போல் தனது தந்தையின் கோபத்திற்காகப் பயந்து கொண்டிருக்கவில்லை. கேசவனைப் பற்றிய விஷயத்தில் தன் தந்தையை ஒரு முடிவுக்கு வரச் செய்யவேண்டுமென்று தீர்மானித்திருந்தாள்.

எல்லை! எல்லை! என்று துரைசாமியின் வாய் சொல்லிக் கொண்டிருந்தது. அவர் கண்கள் பாதி மூடின. அவர் என்னமோ சிந்தித்துக் கொண்டிருந்தவர் போலிருந்தார்.

எல்லை கிடையாதா? என்று கேட்கிறாள்? கிடையாது என்கிறேன். இந்தப்பூமி என்னிடமிருந்தால் அதை கொடுத்திருப்பேன். வானுலகம் இருந்தால் அதையும் கொடுத்திருப்பேன். அவை இரண்டும் என்னிடம் இல்லையே. என்ன செய்கிறது மரகதம் நீ சொல்லு என்று தமது மனைவியைப் பார்த்துக் கேட்டார்.

மரகதமும் வருத்தந் தோன்ற தலையாட்டினுள். ரேவதியைப் பார்த்து வாயையே திறக்காதே என்று சைகை காட்டினுள். துரைசாமி சொன்னுர்:

''செய்யாமற் செய்த
உதவிக்கு—வையகமும்
வானகமு மாற்ற லறிது.''

என்று யார் சொல்லியிருக்கிருர் தெரியுமா? என்று ரேவதியைப் பார்த்துக் கேட்டார்.

திருவள்ளுவ நாயனுர் என்ருள் ரேவதி.

அவர்தான். கீழுலகம், மேல் உலகையும் இரண்டையும் கொடுத்தாலும் போதாது என்கிருர். எதற்குக் கொடுத்தால்? செய்யாமல் செய்த உதவிக்கு இப்படி நமக்கு யார் உதவி செய்தார்கள். இந்தக் கேசவனிடம் நீங்கள் இரண்டு பேருஞ் சென்று நாங்கள் குரோம்பேட்டை குளத்தில் தண்ணீரில் மூழ்கி விடப் போகிருேம் என்று முதலிலேயே போய்ச் சொல்லிவிட்டு வந்தீர்களா? என்று மனைவியையும் பெண்ணையும் பார்த்துக் கேட்டார். அவர்கள் பதிலுக்காகக் காத்திருந்தார்.

அவர்கள் சொல்லாதிருக்கவே சொல்லிவிட்டா வந்தீர்கள்? என்று மறுபடியும் வினவினுர்.

இல்லை! என்று அவ்விருவரும் ஒரே சமயத்தில் பதிலளித்தார்கள்.

''ஆகையினுலே கேசவன் செய்யாமல் உதவி செய்தார்.''

''அவருக்குக் கொடுக்க இரண்டு உலகங்களும் போதா!''

''இப்பொழுதுதான் புதிசு புதிசா உலகங்கள் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிருர்களே அவற்றில் இரண்டை...'' என்று மெதுவாக ஆரம்பித்தாள்.

''என்ன சொல்கிறாய்'' என்று துரைசாமி கேட்கவே, ''ஒன்றுமில்லை. நீங்கள் சொல்லுகிறதெல்லாம் சரி. திருவள்ளுவர் கூறியபடிதான் செய்ய வேண்டும் என்றேன் என்றாள்.''

''இன்னொரு விஷயம் ரேவதி. அதுவும் சரியான சமயத்தில் செயயப்பட்ட உதவி. எவ்வளவோ பெரியது எத்தனை பெரியது தெரியுமா? என்று துரைசாமி தன் பெண்ணைக் கேட்டார்.

அவள் யோசனை செய்த வண்ணமிருந்தாள்.

''என்ன பதில் சொல்லவில்லையே'' என்று துரைசாமி கேட்டார்.

''கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறேன். வரவில்லை அப்பா!''

''நான் சொல்லுகிறேன் ரேவதி உலகத்தைவிட மிகவும் பெரியது. காலத்திற்கு செய்த நன்றி சிறிதென்று, ஞாலத்தின் மாணப் பெரிது என்று வள்ளுவர் கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார் சரிதானே!''

''சரிதான் அப்பா!''

''மரகதம் நாம் எத்தனை நல்லவர்களா இருந்தாலும், எத்தனை தர்மஞ் செய்தாலும் ஒரே ஒரு விஷயத்தில் சரியாக நடந்துகொள்ளா விட்டால் நமக்கு என்ன கிடைக்குது தெரியுமா?''

''சொல்லுங்கள்!''

''நல்ல கதி கிடைக்காது. 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டு, உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு' என்று பொய்யாமொழிப் புலவர் கூறியிருக்கிறார். இன்னும் பயன் கருதாது செய்த......''

துரைசாமி திருவள்ளுவரின் ''நன்றி மறவாமை'' குறள்களை எடுத்துவீசி அவற்றைப்பற்றி வியாக்கியானஞ் செய்யத் தொடங்கி விட்டார்.

அவருக்கு நன்றியறிதல் பைத்தியம் எப்பொழுதுமே அதிகம் என்று மரகதத்திற்கும், ரேவதிக்கும் தெரியும். அதைப்பற்றி அவர் எத்தனையோ பிரசங்கங்கள் செய்திருக்கிறார்; கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அனுபவத்திலும் அதற்கேற்ப நடந்து கொண்டிருக்கிறார். அவரிடம் இந்தச் சமயத்தில் பேச்சுக் கொடுத்தாலும்சரி, அல்லது குறுக்குக் கேள்விகள் கேட்டாலுஞ்சரி அவர் இன்னும் பெரிதாக ஆரம்பித்துவிடுவார் என்று பயம். சிரமப்பட்டு வாய் திறவாமலிருந்தார்கள்.

''என்ன பேசாதிருக்கிறீர்களே!'' என்று துரைசாமி கேட்டார்.

''நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான்'' என்றாள் மரகதம்.

மனிதன் சரியாக நடந்து கொள்ளவில்லை என்றால்? கெட்டவனாயிருந்தால்? அப்பொழுது என்ன செய்வது? அத்தகைய மனிதனைப் பற்றித் திருவள்ளுவர் ஒன்றும் கூறவில்லையே ஏன் தெரியுமா? அவன் எப்படியிருந்தாலும் செய்தாக வேண்டு மென்பதற்காகத்தான் அதைப் பற்றிச் சொல்லாமலேயே விட்டு விட்டார்; என்ன சொல்கிறீர்கள்?''

''ஆமாம்!''

''ஆனால் ஒரு மனிதன் எவ்வளவு கெட்டவனாயிருந்தாலுஞ்சரி...என்ன?''

''ஆமாம்!''

''அவன் ஒரு ஸ்திரீயின் கர்ப்பத்தைச் சிதைத்த மகா பாதகனாயிருந்தாலுஞ்சரி அதற்காக அவன் செய்த நன்றியை மறக்கக்கூடாது என்று வேறு சொல்லப்பட்டிருக்கிறது எதில்?''

இதற்குப் பதில் தெரியாமல் தாயும் மகளும் விழித்தார்கள்.

''புறநானூறு என்ற அருமையான பாடல்களில்!''

''இப்போது ஞாபகம் வருகிறது,'' என்றாள் ரேவதி.

''அப்படிச் சொல்லு ரேவதி! என் பெண் என்மாதிரி தான் இருப்பாள்,'' என்று துரைசாமி தம் பெண்ணைப் பார்த்துப் பெருமையுடன் கூறினார்.

துரைசாமி சாந்தமடைந்து இருந்தார். அவருக்கு ஏற்பட்டிருந்த ''நன்றியறிதல்'' பிரசங்க உணர்ச்சி வெறியடங்கிப் போயிருந்தது. ரேவதி எழுந்து நின்று ''நான் கொஞ்சம் கீழே போய் வருகிறேன் அப்பா!'' என்று கிளம்பினாள்.

''இரு, இரு! என்னமோ பேச ஆரம்பித்தாயே!'' என்றார்.

''அதுதான் பேசியாகி விட்டதே!'' என்றாள் ரேவதி.

''பேசி முடிக்கவில்லையே. கேசவனைப்பற்றி என்னமோ சொன்னாயே?'' என்றார்.

''நான் என்ன சொன்னேன்? நான் எதற்காகச் சொல்கிறேன்?''

''ரேவதிக்குக் கோபம்போல் இருக்கிறது. அவரால் 'நமக்குத் தொந்திரவுதான். இருந்தாலும் இன்னும் கொஞ்ச நாளைக்குப் பொறுத்துக் கொண்டிருப்போமே என்கிறது. உங்கள் சௌகரியப்படி செய்யுங்கள்'' என்றாள் மரகதம்.

''என் சௌகரியம் என்ன? உங்களுக்காகத்தானே நான் அவனுக்கு நன்றியறிதலுள்ளவனாக இருக்கிறது.''

''இருங்களேன்!''

"இருந்துதான் வருகிறேன். அவரைக் கண்டுபிடிக்க விளம்பரம் செய்தது, கண்டுபிடித்த மாதவனுக்கு இனும் கொடுத்தது, இதிலே ஒரு இரண்டாயிரம் ரூபாய் செல வழிந்தது. டாக்டர் ஐயாயிரம் ரூபாய் வரை வாங்கிக் கொண்டு இருக்கிறார்......

இதைக் கேட்டுத் தாயும் பெண்ணும் ஆச்சரிய மடைந்தனர்.

"அவ்வளவுதானே!" என்றாள் ரேவதி.

"நேற்று ஒரு முப்பதினாயிரம் ரூபாய் கேட்டார்."

"முப்பதினாயிரமா? கொடுத்தாய்விட்டதா?" என்று இருவரும் கேட்டனர்.

"இன்னும் முழுதும் கொடுத்து விடவில்லை. பத்தா யிரம் ரூபாய் முதலில் கொடுப்பதாகச் சொல்லியிருக் கிறேன்."

"சரிதான்!" என்றாள் மரகதம்.

"மேலே என்ன செய்யலாம்? யோசனை சொல்லு!"

"உங்களுக்குத் தெரியாததற்கு நாங்கள் என்ன சொல்லப் போகிறோம்?" என்றாள் ரேவதி.

"சில சமயம் தெரியாமல் ஏதாவது செய்து விடு கிறேன். நீ கெட்டிக்காரியாச்சே ரேவதி, உன் யோசனை களைச் சொல் பார்க்கலாம்."

"சொல்வேன். ஆனால் இந்த நன்றியறிதல் வந்து குறுக்கிடுகிறதே!" என்றாள்.

"அதற்குத்தான் அவருக்குச் சிகிச்சை செய்து வரு கிறோம். பணமும் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப் போகி றீர்கள். அத்துடன் நிறுத்திக் கொண்டு விட்டால் போகி றது," என்றாள் மரகதம்.

"இன்னும் அம்மா சொல்லி வந்து கொண்டிருப்பது போல அவரை ஒரு நர்ஸிங் ஹோமில் கொண்டு சேர்த்து

விடுவோமே. அவரேதான் அதுமாதிரி இடத்திற்குப் போய் விடுகிறேன் என்கிறாரே'' என்றாள் ரேவதி.

''ஏதோ பேச்சுக்குச் சொல்கிறார். ஆனால், உண்மையாகவே அப்படிக் கிளம்புவாரா?'' என்று துரைசாமி கேட்டார்.

தன் தந்தை மனத்தில் கேசவனைப் பற்றி இத்தகைய சந்தேக உணர்ச்சி ஏற்பட்டதில் ரேவதிக்கு மகிழ்ச்சி.

''கிளம்ப மாட்டாரென்று உங்களுக்குத் தோன்றுகிறதாக்கும்!'' என்று அவள் அந்த விஷயத்தையே அடித்துக் கேட்டாள்.

''ஆமாம்!'' என்றார் துரைசாமி.

''இன்னும் உங்களுக்கு என்ன தோன்றுகிறது?''

''நம்மிடமிருந்து எத்துணை பணம் வாங்கமுடியுமோ அத்தனையும் வாங்கிக் கொண்டுதான் கிளம்புவார் என்று தோன்றுகிறது.''

''அப்பா, தேவலையே! என்னமோ பேசாதிருக்கிறாரே என்று எண்ணிக் கொண்டிருந்தோமே. ஆளைச் சரியானபடி எடை போட்டு வைத்திருக்கிறாரே'' என்று ரேவதி தன் தந்தையை வேண்டுமென்றே புகழ்ந்தாள் அவருக்கு கேசவனைப் பற்றி ஏற்பட்டிருந்த அந்த மனப்பான்மை அப்படியே மனத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்பது, ரேவதியின் ஆவல்.

''அவர் ரொம்பப் பொறுமைசாலி. அவரை மிகவும் சோதிக்கிறார் அந்த மனுஷன்'' என்றாள் மரகதம்.

''நான் அவர் விஷயத்தில் இத்தனை கவலை எடுத்துக் கொள்வதற்கு ஓரளவு நீங்கள்தான் காரணம்!'' என்று துரைசாமி கூறினார்.

அவர் தங்கள் மீது இப்படிக் குற்றச் சாட்டுச் செய்யாதிருப்பதற்காகத்தான் அவர்கள் கேசவனைப் பற்றி அதிகமாகப் புகார் செய்து சண்டை போடாதிருந்தது.

''உண்மைதான்'' என்று மரகதம் அவர் கூறியதை ஒப்புக் கொண்டாள்.

''ஒரொரு சமயம் எனக்கு அளவுக்கு மீறிய கோபம் வரும். அவனை வீட்டைவிட்டுத் துரத்தியடித்துவிடலாம் என்று நினைப்பேன். அப்படிச் செய்வதற்காகக் கிளம்பியும் விடுவேன். உடனே உங்கள் இரண்டு பேர் ஞாபகமும் வரும். அவரால்தானே நீங்கள் உயிரோடிருக்கிறீர்கள் என்றெண்ணியதும் அவருக்கு அடிமையாயிருக்கத் தோன்றிவிடும்!''

''எங்களால் நீங்கள் சிக்கலான நிலைமையில் மாட்டிக் கொண்டு விட்டீர்கள்'' என்று ரேவதி உண்மையாகவே பரிதாபப்பட்டுக் கூறினாள்.

''மாட்டிக் கொள்கிறது என்ன? உதவி செய்ததற்குப் பதிலுதவி செய்து வருகிறேன். ஆனால் இப்போது கடுமையாக நடந்து கொண்டால் நாலு பேர் என்ன சொல்வார்கள்?''

''நாலு பேரா?'' என்றாள் ரேவதி.

''ஆமாம்! அவர் போகத் தகராறு செய்கிறார் என்று வைத்துக் கொள்ளலாம். கட்டாயப் படுத்திப் போகச் சொல்ல வேண்டியிருக்கும். அப்பொழுது கலாட்டா செய்யலாம். அப்புறம் ஊர் உலகம் என்ன சொல்லும்! பெண்டாட்டி பிள்ளைகளைக் காப்பாற்றியவனை அடித்துத் துரத்திவிட்டான் என்று புரளி கிளப்பும். அது மனதுக்குக் கஷ்டமாயிருக்கும். தவிர நான் வெளியில் வேறு தலை காட்ட முடியாது. அத்தோடு என் கௌரவமே போய் விடும்!'' என்றார் துரைசாமி.

'இந்த நாலு பேர் என்ன சொல்வார்கள் என்பது வேறு கிளம்பிவிட்டதா' என்று தாயும் பெண்ணும் பயந்தார்கள்.

''அப்புறம் என்ன சொல்லப் போகிறீர்கள்?'' என்று ரேவதி கேட்டாள்.

"இன்றைக்கு என்ன திங்கட்கிழமையா? இந்தச் சனிக்கிழமைக்குள் ஏதோ ஒருவிதமாக முடிவுசெய்து விடுகிறேன். அதற்குப் பிறகு அவன் இந்த வீட்டில் இருக்கப்போவது இல்லை. பல்லைக் கடித்துக் கொண்டு ஐந்து நாள் பொறுத்திருங்கள், ஐந்தே நாள்!" என்றார் துரைசாமி.

"என்னால் ஒரு நிமிஷம்கூடப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது" என்று அழுது கொண்டே யாரோ கூறுவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். நர்ஸ் ராதாபாய் உள்ளே வந்து கொண்டிருந்தாள். அவள் கண்களில் நீர் ததும்பிக் கொண்டிருந்தது.

"என்ன, என்ன?" என்று துரைசாமி பதறிக் கேட்டார்.

"எனக்கு சொல்லவும்...வரவில்லை. அந்த···அந்தப் பாவி என்னைக் கையைப் பிடித்திழுத்தான்···" என்று ராதாபாய் கூறிவிட்டு விசும்பி விசும்பி அழுதாள்.

16

நர்ஸ் ராதாபாய் கூறிய விஷயங்களைக் கேட்டும் அவள் அழுததைப் பார்த்தும், துரைசாமி திகைத்துப் போய் நின்றார். மரகதம் ஆச்சரியப்பட்டவள் போலிருந்தாள். ரேவதி அதை மிகவும் சாதாரண சம்பவமாகக் கருதியவள் போல் அலட்சியமாய் இருந்தாள்.

தாயும் மகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ராதாபாய் தெரிவித்ததைவிட அவளது மனப்போக்குத்தான் அவர்களுக்கு ஆச்சரியத்தை யளித்திருக்க வேண்டும்.

தன் பெண் பதறிப் போகாமல் பேசாதிருக்கிறாளே, ஒருவேளை அந்தக் கேசவன் அவளிடமும் விஷமத்தனமாக

நடந்து கொண்டிருப்பாளோ என்று மரகதம் எண்ணினாள். தன் தாயார் வாய் திறந்து ஒன்றும் சொல்லவில்லையே. ஒரு வேளை அவன் அவளிடமும் அயோக்கியத்தனமாக நடந்து கொள்ள முயற்சித்திருப்பானோ என்று ரேவதி மனத்தில் சந்தேகம் தோன்றிற்று. ஏனென்றால் கேசவன் பெண்பிள்ளைகள் விஷயத்தில் ஒழுங்காக நடந்து கொள்பவனல்ல என்று அவர்கள் மனத்தில் நன்றாகப் பட்டிருந்தது. ஆனால் அவர்கள் தங்களுக்குள் அதைப் பற்றிப் பேசிக் கொண்டதே இல்லை. அவர்கள் இத்தகைய மனிதனால் தண்ணீரிலிருந்து தூக்கி வரப்பட்டோமே என்று நினைத்து அருவெறுப் படைந்து தங்களைத் தாங்களே வெறுத்துக் கொண்டனர்.

துரைசாமிதான் கோபம் அடைந்து கொண்டிருந்தார். ஏனென்றால், அவருக்குச் சட்டென்று எளிதில் கோபம் வந்து விடுவதில்லை. அவர் ராதாபாயைப் பார்த்து, "என்ன சொல்கிறாய்? உண்மையாகவா?" என்று கேட்டார்.

"பின்னே பொய்யா சொல்கிறேன்? இது வாயில் வைத்துப் பேசக் கூடிய வார்த்தையா? வேறு வழியில்லாமல் வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன்" என்று கூறி அவள் மேலும் அழுதாள்.

மரகதம் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு "இந்தா அழாதே" என்றாள்.

"நானாகவா அழுகிறேன். அடக்க அடக்க வந்து விடுகிறதே" என்றாள்.

"அவரைப்போய் அப்புறம் விசாரிக்கலாம்?" என்று ரேவதி சொல்லி வைத்தாள்.

"இந்த மானங்கெட்ட காரியத்தைப்பற்றி விசாரிக்கிறது வேறே! எனக்கு அந்த மனுஷனை முதலிலே பார்த்த போதே பிடிக்கவில்லை. நான் நூற்றுக்கணக்கான பேருக்கு நர்ஸாயிருந்திருக்கிறேன். ஆனால், இந்த

ஆளைத் தொட்டு சிகிச்சை செய்கிறதுக்கோ வேதனையா யிருக்கிறது. டாக்டர் மார்த்தாண்டம் பிடிவாதமாகச் சொன்னார். நீங்களும் நல்ல மனுஷங்களாயிற்றே என்று ஜமீந்தாரிணி அம்மா வீட்டிற்குக் கூடப் போகாமல் இங்கிருக்க ஒப்புக் கொண்டேன். இனிமேல் இங்கே ஒரு நிமிஷம் என்னால் வேலை செய்ய முடியாது'' என்று ராதாபாய், நடுவில் நடுவில் தேம்பித் தேம்பி அழுது கொண்டே கூறினாள்.

ரேவதிக்கு அவள் கூறிய விஷயங்களைவிட அவள் பேசியவிதம் புதுமையாயிருந்தது. அதைக் கவனித்து அவள் ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருந்தாள்.

விஷயம் அம்பலமாகி வீட்டிலுள்ள வேலைக்காரர்களும், மற்றவர்களும் கூடி விடுவார்களே என்று மரகதம் தவித்தாள். அவள் ராதாபாயினிடம் ''இரண்டே இரண்டு நாளைக்குப் பொறுத்துக் கொண்டிரு'' என்று கேட்டுக் கொண்டாள்.

''அப்புறம்?'' என்று ராதாபாய் விசாரித்துப் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பவள் போலிருந்தாள்.

இதைக் கவனித்த ரேவதி குறுக்கிட்டு, ''அப்புறம் அதைப்பற்றிப் பார்த்துக் கொள்ளலாம்'' என்றாள்.

ராதாபாய் இந்தப் பதிலைக் கேட்டு ரேவதியைக் கூர்ந்து கவனித்தாள். ''என்னால் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது'' என்றாள்.

இந்தப் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டு நின்றிருந்த துரைசாமியின் கோபம் உச்ச நிலையை அடைந்து கொண்டிருந்தது. அவருக்கு இது போன்ற கோபம், அவர் சிறு பையனாக இருந்தபோது ஒரே ஒரு முறை தான் தலை காட்டிற்று. அப்போது ஒரு பையன் அவர் மீது ஒரு கருந்தேளைப் போட்டுவிட்டான்.

''விஷயம் அவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டதா?'' என்று துரைசாமி உறுமினார். அவர் கண்கள் கோவைப்

யழம்போல் சிவந்திருந்தன. அவர் கைகால்கள் கோபத்தால் உதறிக் கொண்டிருந்தன.

"நான் அவனை என்ன செய்கிறேன் பாரு?" என்று கூறிக்கொண்டே அவர் கிளம்பினார்.

"வேண்டாம், பேசாதிருங்கள்!" என்று ராதாபாய் வழிமறித்து நின்று அவரைத் தடுத்தாள்.

"என் வீட்டில் இப்படி நடந்துகொள்ள அவனுக்கு எத்தனை துணிச்சல் இருக்க வேண்டும்" என்று துரைசாமி கூறி ராதாபாயைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டு மறுபடியும் கிளம்பினார்.

"நீங்கள் இப்போது போகக்கூடாது. அவன் ஒரு முரட்டு ஆள்!" என்று ராதாபாய் கூறிக்கொண்டே துரைசாமியை தன் இரு கைகளாலும் பிடித்தணைத்து ஸோபாவில் உட்காரச் செய்தாள்.

"முரட்டு ஆளாக இருந்தால் என்னை என்ன பண்ணி விடுவான்?" என்று துரைசாமி மறுபடியும் பாய்ந்து எழுந்து புறப்பட்டார்.

ராதாபாய் மறுபடியும் அவரைப் பிடித்தணைத்து உட்காரச் செய்தாள். அவருக்கு இத்தகைய கோபம் வந்து பார்த்திராத அவரது மனைவியும், மகளும் வியப்படைந்து நின்றனர்.

"அவன் என் மேல் கையைப் போட்டு விடுவானா? அவனைப் போலீஸில்..." என்று துரைசாமி கூறிக்கொண்டே மறுபடியும் எழுந்து அவன் அறையை நோக்கிப் புறப்பட்டார்.

"உங்களை நான் போகவிடப்போவதில்லை" என்று ராதாபாய் கூறி அவரைக் கட்டிப் பிடித்து இழுத்து வந்து மறுபடியும் ஸோபாவில் உட்காரச் செய்தாள். அவர் எழுந்திருப்பதற்காக அவள் தன் அணைப்பை இன்னும் விடாமல் அவர் பக்கத்திலேயே தானும் உட்கார்ந்திருந்தாள்.

மரகதத்திற்கும், ரேவதிக்கும் நர்ஸ் இப்படி நடந்து கொண்டது முதலில் சர்வ சாதாரணமான செய்கையாகவே தோன்றிற்று. பிறகு விரசமான செய்கைகளாக மனத்தில் பட்டது. அங்கே மூன்ருவது மனிதர் யாராவதிருந்து பார்த்திருந்தால் துரைசாமி வேண்டும் என்றே அப்படிக் கிளம்பி, ராதாபாய் அணைத்துப் பிடிக்கச் செய்கிருரோ என்று சந்தேகப்பட்டிருப்பார்.

ரேவதி தன் தந்தையினிடம் வந்து "இது என்னப்பா இது? பேசாதிருக்கப் போகிறீர்களா இல்லையா?" என்று அதட்டும் தோரணையில் கேட்டாள்.

ராதாபாயின் கைகள் துரைசாமியின் உடலை விட்டுவிட்டன. அவரது கோப வெறி ஓரளவு அடங்கி, ஸோபாவில் ராதாபாயினின்றும் சற்று அப்பால் நகர்ந்து உட்கார்ந்தார். ராதாபாய் உடனே எழுந்திருந்து நின்ருள்.

"இன்னும் எத்தனை நாளைக்கு இருக்கச் சொல்கிறீர்கள்?" என்று ராதாபாய் மரகதத்தைப் பார்த்துக் கேட்டாள்.

"சரியாக நான்கு தினங்கள். ஐந்தாவது நாள் அந்த ஆள் இந்த வீட்டிலிருக்கப்போவது இல்லை!" என்று துரைசாமி அந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார்.

"அப்புறம்?"

"எங்கேயாவது நர்ஸிங் ஹோமில் சேர்த்துவிடப் போகிறேன்" என்ருர் துரைசாமி. அந்தக் கோபத்திலுங்கூட அவருக்கு அவனைச் சிகிச்சை செய்யாமல் அனுப்பிவிடத் தோன்றவில்லை.

"சரி! உங்களுக்காக நானும் இன்னும் நான்கு நாள் பல்லைக் கடித்துக்கொண்டு எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு இருக்கிறேன்" என்று ராதாபாய் கூறிவிட்டு சென்ருள்.

அவள் தலை மறைந்த பிறகு அவர்கள் மூவரும் மறு படியும் பேசிக்கொண்டிருந்தனர். "பணம் தொலைந்து போகிறது. ஆனால், இது மாதிரி அயோக்கியத்தனமாக நடந்து கொண்டதைக் கேட்டதும் என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை" என்றார் துரைசாமி.

மரகதம் அப்போது தன்னை அறியாமல் திரு திரு என்று விழித்துக் கொண்டிருந்தாள். கேசவன் தன்னைப் பார்த்துக் கண்ணடித்ததையும் பெயரைச் சொல்லி 'மரகதம்' என்று பலவித அர்த்தங்கள் தோன்றக்கூடிய முறையில் கூப்பிட்டதைப் பற்றியும் தன் கணவனிடம் தெரிவித்திருந்தால் பெரிய அமர்க்களமாகி இருக்கு மென்று தோன்றிற்று. ஆயினும் தான் அவரிடம் அதைப்பற்றிச் சொல்லாதது தவறுதான் என்று எண்ணி மனம் வருந்தினாள்.

அவர்கள் ராதாபாய் வருவதற்கு முன்னால் பேசிக் கொண்டிருந்த விஷயத்தை மேலும் தொடர்ந்து பேசி னார்கள். கேசவனுக்கு ஏதோ பணத்தைக் கொடுத்து வீட்டை விட்டு வெளியேற்றி விடுவதென்றும், அது வரையில் பொறுத்துக் கொண்டிருப்பதென்றும் முடிவு செய்தனர்.

ஆனால், துரைசாமி அப்படி முழுதும் பொறுத்துக் கொண்டிருக்கத் தயாராய் இல்லை. தான் அவனைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கவில்லை என் பதை அவனுக்கு தெரிவித்துவிட வேண்டும் என்று விரும் பினார். அதற்காக அவனிடம் என்ன என்ன பேச வேண்டும் என்றுகூட மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டிருந்தார். தட தடவென்று போய் அவன் அறைக் கதவைப் படாரென்று திறந்துகொண்டு நுழைய வேண்டும், அவன் எதிரில் போய் இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு நின்று அவனை மேலும் கீழும் ஒரு தரம் முறைத்துப் பார்க்க வேண்டும். பிறகு 'என்ன கேசவன்' என்று அவனைத் தூக்கிவாரிப் போடும்படியான தோரணையில் கேட்க வேண்டும் என்றெல்லாம் ஒத்திகை

கூடச் செய்து பார்த்துக் கொண்டார். பிறகு அவன் அறையை நோக்கிச் சென்றார்.

ஆனால், அறை வாசற்பக்கம் சென்றதும் தடதட வென்று போகத் துணிவில்லை. சப்தமிடாமல் அடி மேலடி எடுத்து வைத்துச் சென்றார். அறைக் கதவு ஒருக்களித்து வைக்கப்பட்டிருந்தது.

கேசவன் கோபமாகக் கூறிக்கொண்டிருந்தது அவர் காதில் விழுந்தது:—''நீ என்னை யாரென்று நினைத்துக் கொண்டாய்? உன் மயக்குகிற வேலை எல்லாம் என்னிடமா காண்பிக்கிறாய்? நான் பிறந்தது முதல் என் தாயார் தவிர வேறு யார் கையும் என்மீது பட்டதில்லை. இந்த ஸ்திரீகளின் உயிரைக் காப்பாற்றுவதற்காக நான் அவர்களைத் தொட்டுத் தூக்கும்படியாகி விட்டது. டாக்டர் மார்த்தாண்டத்தினிடம் நர்ஸ் வேண்டாமென்று சொன்னேன். அவசியமானால் ஆண் நர்ஸ் தான் வேண்டுமென்று படித்துப் படித்துக் கூறினேன். அவர் உன்னை ஏற்பாடு பண்ணிவிட்டு போய் விட்டார். நீ என்னோடு சிரித்து சிரித்துக்கொண்டு பேசுகிறதும் எனக்கு முன்னால் நடனமாடுகிறதும் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.

துரைசாமி இந்தப் பேச்சை கேட்டு பிரமித்துப் போய் நின்றிருந்தார். கேசவனைப் பற்றி ராதாபாய் தன்னிடம் புகார் செய்வதற்கு நேர் விரோதமாக இப்போது அவனன்றோ அவள் தவறாக நடக்கிறாளென்று குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறான். அவருக்கு முழுச் சம்பாஷணையையும் கேட்டுவிடவேண்டும் என்று ஆவல் உண்டாகவே அவர் அறைக்கு வெளியே நின்றுகொண்டிருந்த இடத்தில் சிலைபோல் நின்றிருந்தார்.

அதே சமயம் கீழே பால்கனி பக்கம் நின்று கொண்டிருந்த ரேவதி யாரோ தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டாள். அவன், அவள் முன் பார்த்திராத ஒரு வாலிபன்.

அவன் மிகவும் ஒய்யாரமாக குஷால் நடை போட்டு நடந்து வந்துகொண்டிருந்தான். பான்ட்ஸ் தரித்து பச்சை சட்டை போட்டு இருந்தான். அவன் சமீபத்தில் வந்தபோது அவனை அவள் கவனித்தாள். அவன் சிவப் பாய்ப் பார்ப்பதற்கு நன்றாயிருந்தான். ஆனால், அவன் கண்கள் திருதிரு என்று விழித்தன.

அவன் ரேவதி இருந்த இடத்திற்குச் சற்று தூரத் தில் வரும்போதே 'வணக்கம்' என்று கைகூப்பிக் கொண்டே வந்தான். ரேவதி பதிலுக்குக் கைகூப்பவில்லை. தலையை மட்டும் ஆட்டினாள். அவன் அவள் சமீபம் வந்து நின்றபோது அவன் அமைச்சூர் நடிகன் மாதிரி அவளுக்குத் தோன்றிற்று.

''இதுதானே மிஸ்டர் துரைசாமியின் பங்களா?'' என்று அவன் விசாரித்தான்.

''ஆமாம்'' என்றாள் ரேவதி.

''புகழ்பெற்ற தர்மவான் துரைசாமி!''

ரேவதி தலையை ஆட்டினாள்.

''நான் கோவிந்தன்'' என்று அவன் தன்னை அறி முகப்படுத்திக்கொண்டான். அவன் தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்த விதம் ரேவதிக்குச் சற்றும் பிடிக்க வில்லை. அவள் பின்னடைந்து நின்றாள்.

''என்ன விசேஷம்?'' என்று கேட்டாள்.

''பார்ப்பதற்காக வந்தேன்'' என்றான்.

அவன் தன்னுடன் வேண்டுமென்றே பேச்சை வளர்த்துகிறான் என்பதை உணர்ந்த ரேவதி ''நான் போய என் தகப்பனாரை வரச் சொல்லுகிறேன்'' என்று கிளம்பினாள்.

''இந்த வீட்டில் விருந்தாளியாக ஒருவர் வந்திருக் கிறார!'' என்று கேட்டான் அவன்.

''விருந்தாளியா?''

''ஆம், ஒரு மாதமாக இருக்கிறார். கேசவன் என்று பெயர்!''

''அவரா! இருக்கிறார்! அவருக்கு உடம்பு சரியாயில்லாதிருந்து குணமாகிக் கொண்டு வருகிறார்.''

இதைக் கேட்டதும் கோவிந்தனின் முகத்தில் கலவரம் தோன்றிற்று.

''உடம்பு சரியாகவில்லையா? படுத்த படுக்கையா இருக்கிறாரா?'' என்று அவன் தொண்டையடைக்க விசாரித்தான்.

''ஒன்றுமில்லை, கீழே விழுந்து கால் நரம்பு கொஞ்சம் பிசகிக் கொண்டு விட்டது அவ்வளவுதான்!''

''அவ்வளவுதானா! அது போதாதா? அவர் எங்கே இருக்கிறார்? ஆஸ்பத்திரியிலா?''

''இல்லை. இங்கேதான் மாடியில்.''

மறுகணம் அவன் ''அண்ணா! அண்ணா! உன் கால் போய்விட்டதா?'' என்று கண்ணீர் விட்டுக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்து மாடிப்படிகளில் ஏறிச்சென்றான்.

ரேவதியும் பின் தொடர்ந்தாள்.

துரைசாமி இன்னும் கேசவன் அறைக்கு வெளியேதான் நின்றிருந்தார்.

''நான் காஷாயம் தரிக்கவில்லையே தவிர, நான் ஒரு சன்னியாசி. நீ நர்ஸ் வேலை செய்வதாகச் சொல்லிக் கொண்டு அநாவசியமாக என் உடம்பை அடிக்கடி தீண்டுவது எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. நீ என்னைத் தொட்டாலோ...''

இவ்வாறு கேசவன் கூறிக்கொண்டிருந்தபோது மாடிப்படிகளில் தடதடவென்று ஏறி வேகமாக வரும் சப்தம் கேட்டது. உடனே ராதாபாய் அறையிலிருந்து வெளியே வந்தாள்.

வாசற்படியோரம் நின்றிருந்த துரைசாமியைக் கண்டதும் அவள் ஆச்சர்யப்பட்டாள். தாம் 'இப்படிக் கையும் களவு'மாகப் பிடிக்கப்பட்டதைக் கண்டு துரைசாமி தவித்துப் போனார். நீண்ட நேரம் நின்று கொண்டிருந்ததால் அவர் கால்கள் மரத்துப்போய் அவர் நிலை தவறிக் கீழே விழவிருந்தார்.

மறுகணம் ராதாபாயின் கரங்கள் அவரை அணைத்துக் கொண்டன. அவர் கீழே விழாதிருப்பதற்காகத் தான்.

அப்பொழுது" அண்ணா! அண்ணா!" என்று கோவிந்தன் வேகமாக ஓடிவந்தான்.

ராதாபாயும் துரைசாமியும் இருந்த நிலைமையைப் பார்த்தும் பார்க்காததுபோல் அவன் அறைக்குள் நுழைந்தான். சற்றுத் தூரத்தில் ரேவதியும் வந்து கொண்டிருந்தாள். ராதாபாய் அப்பொழுதுதான் துரைசாமியைக் கீழே விழாமல் நிறுத்திவிட்டுக் கைகளை எடுத்ததை அவள் கவனிக்காமலில்லை. இந்தக் காட்சியைப் பார்த்த அவளுக்குத் தலை சுழன்றது. ஆனால், அவளை துரைசாமி பார்க்கவில்லை.

"அண்ணா உன் உடம்பைப்பற்றி நீ ஏன் எனக்கு எழுதவில்லை. ஒரு தந்தி அடித்திருந்தால் ஓடி வந்திருப்பேனே" என்று கோவிந்தன் கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருந்தான்.

ராதாபாயும் துரைசாமியும் உள்ளே நுழைந்தார்கள். ரேவதி வந்த வழியே திரும்பிப் போய்விட்டாள்.

கேசவன் வந்திருந்த வாலிபனைத் தன் அருமைத் தம்பி கோவிந்தன் என்று துரைசாமிக்கும் ராதாபாய்க்கும் அறிமுகப்படுத்தி வைத்தான். துரைசாமி அந்தத் தம்பிக்கு ஆறுதல் கூறினார். அண்ணனுக்கு இன்னும் சில தினங்களில் குணமாகிவிடும் என்று தைரியங் கூறி அவன் கண்ணீர்விடுவதை நிறுத்தச் செய்தார்.

பிறகு அவர் அண்ணனையும் தம்பியையும் தனித்துப் பேச விட்டுவிட்டுக் கிளம்பினார். அவர் அறையை விட்டு வெளிச்சென்றபோது ராதாபாயும் பின் தொடர்ந்து வந்தாள்.

''அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கேட்டுச் சொல்கிறேன்'' என்று அவள் துரைசாமியின் காதில் ரகசியமாய்க் கூறிவிட்டு அறைக்கு வெளியே அவர்கள் கண்ணில்படாதபடி நின்று கொண்டாள்.

துரைசாமி அவள் தன்னிடம் அப்படி ரகசியமாகப் பேசியதைக் கேட்டு ஆச்சர்யப்பட்டார். அவள் தன் விஷயத்தில் மிகவும் சிரத்தை எடுத்துக் கொள்வதில் அவர் மகிழ்ச்சியடைந்தார்.

அவள், அவரைக் கேசவனைப் பார்க்கச் செல்லவொட்டாமல் திரும்பத் திரும்பப் பிடித்துக் கீழே உட்கார வைத்ததிலிருந்தே அவளிடம் அபிமானம் ஏற்பட்டுவிட்டது. அது சரியா, சரியல்லவா என்று அவர் சிந்தித்துப் பார்த்துக்கொண்டிருக்கவில்லை.

அன்று பகல் கேசவன் படுத்திருந்த அறையில் துரைசாமியும் வந்திருந்தார். எல்லோருமாகக் கேசவனது நிலம் ஏலத்திற்குப் போகாமல் மீட்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

கேசவன் துரைசாமியைப் பார்த்து ''உங்களைக் கேட்பதற்கே எனக்கு இஷ்டமில்லை. இருந்தாலும் வேறு வழியில்லை'' என்றான்.

அவர் யோசனை செய்த வண்ணம் இருந்தார்.

''ஏன் தம்பி! உடனடியாக எவ்வளவு வேண்டியிருக்கும்?'' என்று கேசவன் கோவிந்தனை விசாரித்தான்.

''நீங்கள் எழுதியிருந்தபடி தனகோடியைப் பார்த்தேன். ஐயாயிரம் கொடுப்பதாகச் சொன்னார். அலிகாரைப் பார்த்தேன். அவர், ''என் கையில் இப்பொழுது அதிகம் இல்லை. இருந்தால் எல்லாக் கடனையும் நானே

கொடுத்துத் தீர்த்துவிடுவேன். இருந்தாலும் கேசவஜி கேட்கும்போது இல்லை என்று சொல்ல வாய் வரவில்லை. வைர நகைகளைப் பாங்கில் வைத்து ஐயாயிரம் கொடுக்கிறேன்'' என்றார். இன்னும் பதினைந்தாயிரம் வேண்டும்'' என்று தம்பி விவரங்கள் கூறினான்.

''இந்தப் பணம் கிடைத்து விட்டால் நான் இப்போதே எழுந்திருந்து விடுவேன். அந்தக் கவலைதான் பாதி என்னைப் படுக்க வைத்திருக்கிறது'' என்றான் கேசவன்.

துரைசாமி அவனைக் கவனித்துப் பார்த்தார்.

''நீ என்றைக்குப் புறப்படப்போகிறாய்?'' என்று கேசவன் தன் தம்பியைக் கேட்டான்.

''இன்றைக்குத் தேதி இருபத்தேழா? நாலு நாள் கழித்து முதல் தேதியன்றைக்கு''!

''அப்போது நானும் வந்து விடுகிறேன்.''

''இந்த உடம்புடனா?'' என்றார் துரைசாமி.

''அதற்குள் சரியாய்ப் போய்விடாதா?''

''பணம் கிடைத்துவிட்டால் அண்ணனுக்கு அதுவே பெரிய மருந்தாகிவிடும். பிறருக்கு உதவி செய்யப் போக அவர் இப்படிப் பணத்திற்குக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது'' என்றான் தம்பி கோவிந்தன்.

துரைசாமி தலையை அசைத்தார். ''எல்லாம் உங்களைத்தான் பொறுத்திருக்கிறது. என் அண்ணனைக் காப்பாற்றுங்கள்'' என்று கோவிந்தன் கூறி துரைசாமியின் கால்களைப் பிடித்துக் கொள்ளப் போனான்.

அவர், அவன் அப்படிச் செய்வதினின்றும் தடுத்து தொகை பெரிதாயிருக்கிறது. தான் இதைப்பற்றி யோசனை செய்ய வேண்டும் என்றார்.

''ஏய்! அவரைத் தொந்தரவு செய்யாதே'' என்று கேசவன் தன் தம்பியைக் கடிந்து கொண்டான்.

''என்னுலானதைச் செய்கிறேன்,'' என்று துரைசாமி கூறிவிட்டுச் சென்ருர்.

கோவிந்தன் வந்த மறுதினம் துரைசாமி கேசவன் அறைக்கு வந்து வழக்கம்போல் அவன் உடல் நலத்தைப் பற்றி விசாரித்தார்.

''எனக்கு உடம்பு என்னமோ உங்கள் புண்ணியத்தில் குணமாகிக் கொண்டு வருகிறது. ஆனுல் மனம் தான் வேதனைப்படுகிறது'' என்ருன் கேசவன்.

''ஏன்!''

''ஏனு! உங்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் என்னை மரியாதைக் குறைவாய் நடத்துகிருர்கள். பாருங்கள் ரேவதி இங்கே வந்து இரண்டு தினங்களாயிற்று'' என்று கேசவன் புகார் செய்தான்.

''அவள் சிநேகிதைகள் பேச வந்து விடுகிருர்கள். அவளை வரச் சொல்கிறேன்,'' என்று துரைசாமி கூறி அறைக்கு வெளியே வந்து அவளைக் கூப்பிட்டார்.

ரேவதி உடனே அங்கே வந்தாள். கேசவன் உடம்பைப் பற்றி விசாரித்தாள். அவன் தன் தம்பியை அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

''இவனும் உன் மாதிரி பி. ஏ. பரீட்சை கொடுத்திருக்கிருன்,'' என்ருன்.

''சரிதான்,'' என்ருள் ரேவதி.

கேசவன் துரைசாமியினிடம் இந்தக் குட்டியின் ஜாதகத்தை நான் பார்த்திருக்கிறேன். இவர்கள் இரண்டுபேர் ஜாதகமும் மிகவும் பொருத்தமா யமைந்திருக்கின்றன. இரண்டுபேரும் சரியான ஜோடி!'' என்று கூறி அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

*

17

கேசவன், தன் தம்பி கோவிந்தனுக்கும், ரேவதிக்கும் படிப்புப் பொருத்தம், ஜாதகப் பொருத்தம் எல்லாம் சரியாயிருக்கிறதென்று கூறி அவர்களிருவருக்கும் திருமணஞ் செய்விக்கலாமென்பதை மறைமுகமாகக் குறிப்பிட்டபோது அந்த அறையில் நிசப்தம் குடிகொண்டது.

ரேவதி விர்ரென்று அந்த அறையைவிட்டு வெளியேறினாள். கோவிந்தன் அவள் அப்படிச் செல்வதை உதட்டில் அயோக்கியத்தனமான புன்னகை ததும்பக் கவனித்துக் கொண்டிருந்தான்.

துரைசாமி கோபித்துக் கொள்வதைப் பற்றி யோசனை செய்து கொண்டிருந்தார். கோபம் வந்து கொண்டிருந்தது.

''என்ன சொன்னாய்!'' இன்னொருதரம் சொல்லு!'' என்று துரைசாமி பல்லைக் கடித்துக்கொண்டு கேட்டார்.

''நான் சொன்னது காதில் விழவில்லையா? தவறாக ஒன்றும் சொல்லவில்லையே'' என்று கேசவன் மிகவும் நிதானமாகப் பணிவுடன் பதிலளித்தான்.

கோவிந்தன் தன் சட்டையை மடக்கிவிட்டுக்கொண்டிருந்தான்.

கதவுக்கு வெளியே நின்றுகொண்டு அறையில் நடந்தவற்றை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்த ராதாபாய் உடனே உள்ளே வந்தாள்.

''உடம்பை அலட்டிக் கொள்ளாதீர்கள். படுத்துக் கொள்ளுங்கள்'' என்று கேசவனிடம் கூறி அவனைப் படுக்க வைத்தாள்.

பிறகு துரைசாமியினிடம் வெகு நேரம் உட்கார்ந்திருந்ததால் மறுபடியும் மூளை பாதிக்கப்பட்டிருக்கும் என்று கூறினாள்.

கேசவன் படுத்த மாத்திரத்தில் குறட்டைவிடத் தொடங்கினான்.

''பார்த்தீர்களா! தலை மயக்கத்தினால்தான் ஏதோ பேசுகிறார்'' என்றாள்.

இந்தப் பேச்சுக்களைக் கவனித்துக் கொண்டிருந்த கோவிந்தன், 'கால் மட்டும் தான் சரியாயில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தேன், தலையில் என்ன?'' என்று கவலையுடன் விசாரித்தாள்.

ராதாபாய் அந்தக் கோளாறைப் பற்றி சுருக்கமாகத் தெரிவித்தாள்.

துரைசாமி அறையைவிட்டு வெளியே சென்ற போது ராதாபாயும் அவரைப் பின் தொடர்ந்தாள்.

''இதுமாதிரி மூளைக் கோளாறு என்று எத்தனை தரம் தான் அவன் கன்னா பின்னா என்று பேசுவதை எல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கிறது?'' என்று துரைசாமி அவளைக் கேட்டார்.

''நானே கடமையை உத்தேசித்து எத்தனையோ பொறுத்துக் கொண்டிருக்கிறேனே'' என்றாள் ராதாபாய். பிறகு அவள் அவர் கையைப் பிடித்துக்கொண்டு ''உங்களோடு தனியாகப் பேசவேண்டும். எனக்குத் தெரிந்ததை உங்களிடம் சொன்னால்தான் எனக்கு மன நிம்மதி ஏற்படும். எப்போது சாவகாசமாக இருப்பீர்கள்?'' என்று கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்தபோது அறைக்குள் டெலிபோன் மணி அடிக்கும் சப்தம் கேட்டது.

''நீயே போய்க் கேள்!'' என்றார் துரைசாமி.

''இங்கேயே இருங்கள் வந்து விடுகிறேன்'' என்று ராதாபாய் கூறிவிட்டுச் சென்றாள்.

அவள் செல்வதையே பார்த்துக்கொண்டிருந்த துரைசாமிக்கு அவளிடம் ஒருவிதமான வாஞ்சையும், சிரத்தையும் ஏற்பட்டது. அவள் அவரோடு ஓரளவு எல்லை மீறிப் பழகியதே அவரை அப்படி எண்ணச்செய்து வருகிறதென்பதை அவர் உணரவில்லை. அவள் தன்னை உத்தேசித்தே இன்னும் நாலு தினங்கள் தங்கியிருக்க ஒப்புக் கொண்டிருப்பதாக அவர் நினைத்தார்.

ராதாபாய் வேகமாக வந்தாள், 'உங்களைத்தான் யாரோ கூப்பிடுகிறார்கள்'' என்று தெரிவித்தாள்.

''யாராம்?'' என்று துரைசாமி விசாரித்தார்.

''கோபதி என்று சொன்னார்!''

''அது யாரோ! நான் வீட்டில் இல்லை என்று சொல்லி விடு. அந்த அறையில் வந்து அவன் முகத்தைப் பார்க்க விரும்பவில்லை!'' என்று வெறுப்புடன் கூறினார்.

''சரி! அவர் பம்பாயிலிருந்து வருகிறாராம். யாரோ சிதம்பரமாமே அவருக்கு உறவாம்!'' என்று கூறிய வண்ணம் ராதாபாய் போய்க் கொண்டிருந்தாள்.

''பம்பாயிலிருந்தா! சிதம்பரத்திற்கு உறவா?'' துரைசாமி கேட்டுக் கொண்டே வேகமாய் ராதாபாயையும் தள்ளிக் கொண்டு அறைக்குள் சென்றார்.

டெலிபோனை மிகவும் மரியாதையுடன் கையிலெடுத்துச் சிரித்த வண்ணம் ''நான் துரைசாமி பேசுகிறது, வணக்கம்!' என்று பயபக்தியுடன் சொன்னார். ஏனென்றால், டெலிபோனில் இன்னொரு கோடியில் நின்று பேசுகிறவர் தனக்கு மாப்பிள்ளையாகப் போகும் வசந்தனின் தந்தையான சிதம்பரத்தினிடமிருந்து வந்தவர் என்றதால் ஏற்பட்ட மனக் கிளர்ச்சி.

''அனேக வணக்கங்கள் மாமா! நான் பம்பாயிலிருந்து வருகிறேன். கோபதி என்று பெயர். மிஸ்டர் சிதம்பரத்திற்கு உறவு கூட'' என்று பதில் வந்தது.

''அப்படியா, சந்தோஷம்!'' எங்கிருந்து பேசுகிறீர்கள்?''

"மலபார் ஹோட்டலில் இருந்து. நான் இந்த ஊருக்குப் படிப்பு சம்பந்தமாக வந்தேன். ஒரு வாரம் தங்கியிருப்பேன். தாங்கள் எப்போது சாவகாசமென்று சொன்னால் வந்து பார்க்கிறேன்."

"நீங்கள் எதற்காக ஹோட்டலில் தங்க வேண்டும்! இங்கேயே வந்து விடுங்கள். எந்த ஹோட்டல்! வண்டி அனுப்புகிறேன் வந்து விடுங்கள்" என்றார் துரைசாமி.

"என்னைத் தாங்கள், நீங்கள் என்று சொன்னால் எனக்கு என்னவோ போலிருக்கிறது. நான் தங்கள் வசந்தனைப் போல் ஒரு பையன் தான் என்றான்.

"சரி! வசந்தன் டில்லியில்தானே இருக்கிறான்!"

"ஆமாம்!"

"இங்கே பெண் பார்க்க வருகிறதாகச் 'சொல்லியிருந் தார். அவரை எந்த நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறோம்."

"லீவு கிடைத்திராது!"

"நானும் லீவு கிடைக்காததனால் வரவில்லை என்று நினைத்தேன். நீங்கள்—இல்லை. நீ இப்போதே வந்துவிட வேண்டும் பெட்டி படுக்கையுடன். இன்று இராத்திரி சாப்பாடு நம்ப வீட்டில்தான். நீ, தம்பிக்கு எப்படி உறவு?"

"அத்தான் முறை!"

"அத்தானா! நான் வண்டியை அனுப்புகிறேன்."

"வேண்டியதில்லை. எனக்குக் கொஞ்சம் வேலையிருக் கிறது. சாயங்காலத்திற்கு மேலே வருகிறேன்."

"அவசியம் வரணும். இல்லாவிட்டால் நானே ஹோட்டலுக்கு வந்து விடுவேன்" என்று துரைசாமி பேச்சை முடித்தார். பிறகு அறையைவிட்டு வெளியே சென்றார்.

அவர் பேசியதை ஒரு வார்த்தைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்த கேசவன் திரும்பிப் படுத்தான். அவன் முகத்தில் கவலை படர்ந்திருந்தது.

அவன் தன் தம்பியைக் கதவைச் சார்த்தித் தாளிட்டு வரச் சொன்னான். பிறகு இருவரும் வெகு நேரம் வரை மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அன்று மாலை கோபதி அவன் ஒப்புக் கொண்டபடி துரைசாமியின் வீட்டுக்கு வந்துவிட்டான். அவன் பெட்டி படுக்கையுடன் ஒரு டாக்ஸியில் வந்திறங்கினான்.

அப்போது வாசலில் நின்றிருந்த துரைசாமி அவனைப் பலமாக வரவேற்று வீட்டிற்குள் அழைத்துச் சென்றார்.

கோபதி, டெலிபோனில் அவரிடம் தெரிவித்தது போல் இருபத்தைந்து வயதான வாலிபன். அவன் பார்ப்பதற்கு லட்சணமாய் இருப்பதாகத் துரைசாமி எண்ணினார். மிகவும் நல்லவனென்றும் அவர் மனத்தில் பட்டது. அவனைப் பார்த்ததுமே அவருக்குப் பிடித்துவிட்டதென்று சொல்லவேண்டும்.

ஹாலில் நின்றிருந்த மரகதத்திடம், ''சம்பந்தி வந்திருக்கிறார்!'' என்று அறிமுகப்படுத்தி வைத்தார். அதைக் கேட்டு கோபதி வெட்கப்பட்டு தலைகுனிந்து கொண்டு புன்னகை புரிந்தான்.

''ரேவதி எங்கே?'' என்று துரைசாமி விசாரித்தார்.

''உள்ளே இருக்கிறாள் என்றாள் மரகதம்.

ரேவதி ஓர் அறையில் கதவு ஓரம் பாதி முகம் மட்டும் தெரியும்படி வைத்துக்கொண்டு நின்றிருந்தாள்.

''ரேவதி இங்கே வா!'' கோபதி வந்திருக்கிறான் என்றார்.

அவள் நாணிக்கோணிக்கொண்டு வந்து நின்றாள். கோபதி கூடியவரை அவளைப் பார்க்க முயலாதிருந்தான்.

''வசந்தனுக்கு உறவு என்றாலே இப்படி வெட்கப்பட வேண்டுமா?'' என்று துரைசாமி பரிகசித்தார்.

பிறகு எல்லோரும் சோபாக்களில் உட்கார்ந்து பேசலானார்கள். கோபதி தான் வைத்தியப் பரீட்சையில் தேறியிருப்பதாகவும் கூடியவரையில் வைத்தியத் தொழில் நடத்தப்போவதாகவும் கூறினான். வசந்தன் ஒரு சோம்பேறி என்றும் அவனுக்குத் தான் கடிதம் எழுதியதாகவும் தெரிவித்தான்.

''அவனுக்கு நான் என்ன எழுதப் போகிறேன் தெரியுமா? நீ டில்லியிலிருந்து மெனக்கெட்டுப் பார்க்க வரவேண்டிய அவசியமில்லை. உன் சார்பில் நான் பார்த்து விட்டேன். முகூர்த்தத் தேதி வைக்கும்படி அப்பாவுக்குத் தந்தியடி. அல்லது டிரங்க் போனில் பேசு! என்று எழுதப்போகிறேன்!'' என்று கூறியபோது எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

ரேவதி மட்டும் வாயைப் பொத்திச் சிரிப்பை அடக்கிக்கொண்டு எழுந்து சென்று விட்டாள்.

''ஆமாம்! கோபதியை எந்த அறையில் இருக்கச் சொல்லலாம்?'' என்று துரைசாமி மரகதத்தைக் கேட்டார்.

''அவருக்கு எங்கே சௌகரியமோ அங்கே இருக்கட்டும். மாடியில் எந்த அறையிலாவது இருக்கலாம். நிம்மதியாக இருக்க வேண்டுமானால் 'ஔட் ஹவுஸி'ல் இருக்கலாம்'' என்றாள் மரகதம்.

''ஏன் அம்மா! மாடியில் என் அறை சும்மாத்தானே இருக்கிறது! அது வசதியாய் இருக்குமே!'' என்று அறைக்குள்ளிருந்து ரேவதி கூறினாள்.

''அதுவும் நல்ல யோசனைதான்'' என்று துரைசாமி கூறிவிட்டு கோபதியைப் பார்த்து ''இவள் அறை என்

அறைக்கு எதிர்த்தாற்போல் இருக்கிறது. ஆனால், என் அறையில் ஒரு விருந்தாளி தங்கியிருக்கிறார். ஆகையினால் ரேவதி அவளறையை உபயோகப்படுத்துவதில்லை. அந்த அறை பாதகமில்லையே'' என்று துரைசாமி கோபதியைக் கேட்டார்.

''எனக்கு எதுவாயிருந்தாலும் சரிதான். ஆனால், என்னால் உங்களுக்குத் ''தொந்தரவு கூடாது'' என்றான் கோபதி.

''தொந்தரவு என்ற வார்த்தையை உபயோகிக்காதீர்கள்'' என்றார் துரைசாமி.

''யார் அந்த விருந்தாளி?'' என்று கோபதி விசாரித்தான்.

''அவர் உடம்பு பார்த்துக் கொள்ளுவதற்காக வந்திருக்கிறார். நாலு நாளில் போய் விடுவார்'' என்று துரைசாமி தெரிவித்துவிட்டு கோபதியை மாடிக்கு அழைத்துச் சென்றார்.

அங்கே கேசவனிருந்த அறைக் கதவு திறந்திருந்ததால் துரைசாமி, கோபதியை அழைத்துக்கொண்டு உள்ளே போனார்.

கோபதி கேசவனை நன்றாகக் கவனித்துப் பார்த்தான். கேசவனும் அவனைக் காலில் இருந்து தலைவரை கவனித்தான். துரைசாமி இருவரையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வைத்தார்.

''கேசவன் கால் தவறிக் கீழே விழுந்ததில் அடிபட்டு விட்டது. அதனால் நரம்பு பிசகிப் போயிருக்கிறது. எழுந்திருக்க முடியாமலிருந்தார். இப்போது குணமாகிக்கொண்டு வருகிறது'' என்று துரைசாமி கேசவனது வியாதியைப்பற்றித் தெரிவித்தார்.

கோபதி அவர் கூறிய விவரங்களைக் கேட்டுத் தலையாட்டினான். யாரு டாக்டர்?'' என்று விசாரித்தான்.

டாக்டர் மார்த்தாண்டம் என்றார் துரைசாமி.

"அந்தப் பெயர் சொண்டவர்கள் நாலைந்து பேர் இருக்கிறார்கள். எஸ். மார்த்தாண்டம் என்று ஒருவர் இருக்கிறார்; கே. மார்த்தாண்டம் என்று ஒருவர் இருக்கிறார்; இவர் முதலெழுத்து என்ன?

"எனக்குத் தெரியாது. கேசவனுக்குப் பரிச்சய மான டாக்டர்."

"யாரு ஸார் அவர்?" என்று கோபதி கேசவனைக் கேட்டார்.

"அவர் டபிள்யூ மார்த்தாண்டம். அவருக்கு இந்த ஊரில்லை. திருவனந்தபுரம்" என்று அவன் தெரிவித்தான்.

"எனக்குத் திருவனந்தபுரத்திலும் சில டாக்டர்களைத் தெரியும்" என்று கோபதி கூறினான். பிறகு 'எனக்கு நரம்பு சம்பந்தமான வியாதிகளைப் பற்றிக் கொஞ்சம் தெரியும். அந்த வைத்தியத்தில்தான் எனக்கு அதிகப் பயிற்சி. நான் அப்புறம் வந்து பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு கோபதி அறையைவிட்டுப் புறப்பட்டான்.

கேசவன் ஒன்றும் பதிலளிக்கவில்லை. கோபதியையே உற்று நோக்கிக்கொண்டு பேசாமலிருந்தான். துரைசாமி கோபதியை அவன் தங்குவதற்கான அறையைக் காண்பித்தார். அதற்குள் அவனுடைய பெட்டி படுக்கை எல்லாம் கொண்டு வந்து வைக்கும்படி ஆளை அனுப்பினார். தான் பிறகு வந்து பார்ப்பதாக அவனிடம் கூறி விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

கோபதி அறைக் கதவை சாத்திவிட்டு ஒரு சோபாவில் உட்கார்ந்தான். அறையைச் சுற்றிக் கவனித்தான். பல போட்டோக்கள் தென்பட்டன. உடனே எழுந்து சென்று பார்த்தான்.

முதலில் ஒரு நாலு வயதுப் பெண் குழந்தையின் படம் இருந்தது. குழந்தை அழகாக புறுபுறுவென்று

சிரித்துக் கொண்டிருந்தது. அது ரேவதி சிறுமி யாய் இருந்தபோது எடுத்த படமாயிருக்க வேண்டு மென்று ஊகித்தான். கறுப்புக் கௌனுடனும் தலையில் குல்லாயுடனும் ஒரு பெண்ணின் படம் இருந்தது. அது ரேவதி சர்வகலாசாலைப் பட்டம் பெற்றபோது எடுத்துக்கொண்ட படம் என்பதில் அவனுக்குச் சந்தேக மில்லை. அந்தப் படத்தையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு தன் பெட்டியில் இருந்து ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு படிக்கத் தொடங்கினான். ஆனால், படிப்பில் புத்தி செல்லவில்லை. அவன் கண்கள் சுவரில் மாட்டப்பட்டிருந்த ரேவதியின் மற்ற படங்களையும் பார்க்க முயன்றது. அவன் மனமோ முற்றிலும் வேறான விஷயத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

அன்று அவனுக்கு பலத்த விருந்து சாப்பாடு. ரேவதி கூட நடுவே நடுவே வந்து பரிமாறினாள். சிறிது சிறிதாக அவனுடன் பேசக்கூட முயன்றாள். ஆனால், கோபதி அவளுடன் மிகவும் அன்போடு பேசினான்; அவளுடன் பேச்சுக் கொடுக்கத் தானாக முயலவில்லை.

உணவருந்திய பிறகு துரைசாமியோடு நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தான். கேசவனைப் பற்றிய பிரஸ்தாபமும் வந்தது. துரைசாமி அவன் தன் வீட்டிற்கு வந்து தங்க நேர்ந்ததற்கான காரணத்தையும் பிறகு நடந்த நிகழ்ச்சிகளையும் கூறினார். இதுவரை அவர் வெளியார் யாரிடமும் கேசவனைப்பற்றி அதிகம் பேசியதில்லை. ஆனால், கோபதியினிடம் சொன்னால் மன ஆறுதல் ஏற்படும்போல் இருந்தது.

''நாளைக்கு நான் அவர் காலை பார்க்கிறேனே!'' என்று கோபதி கூறினான்.

நீ அவசியம் பார்க்கவேண்டும்! ஒரே நாளில் அவனைக் குணப்படுத்தி விட்டாலுஞ் சரி, நல்லதுதான். அவன் உடனே கிளம்பிப் போய் விடுவான் என்று அழாக்குறை யாக கூறினார்.

பிறகு கோபதி தன் அறைக்குச் செல்வதற்காக மாடிப் படிகளண்டை சென்றபோது அங்கே ரேவதி நிற்கக் கண்டான்.

"அறை சௌகரியமாக இருக்கிறதா?" என்று விசாரித்தாள்.

"அதெப்படி சௌகரியமில்லாமலிருக்கும்? ஆனால் அங்கே படிக்கக்கிடிக்க ஒன்றும் ஓடமாட்டேன் என்கிறது! சுவரில் எங்கு திரும்பினாலும் உன் படங்கள்; உள்ளே எல்லாம் உன் சாமான்களே இருக்கின்றன. அவற்றைப் பார்த்துக் கொண்டே இருக்கும்போது புத்தி வேறு எதில் செல்ல முடியும்?" என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டுப் படிகளில் ஏறிச்சென்றான்.

அவன் கூறியதைக் கேட்டு ரேவதி முகம் மலர்ந்தாள். கோபதி கடைசிப் படி தாண்டிச் செல்லும்வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு மனத் திருப்தி அடைந்தவளாய் திரும்ப ஹாலுக்கு வந்தாள்.

அவர்களிருவரும் பேசிக் கொண்டது சற்றுத் தூரத்திலிருந்த மரகதத்தின் காதில் விழுந்தது என்பது அவளுக்குத் தெரியாது. மரகதமோ கோபதி அவள் போட்டோவைப் பார்த்ததைப் பற்றி போக்கிரித்தனமாகப் பேசியதைக் கேட்டு அவள் இடி விழுந்தவள் போலானாள். வீட்டில் இன்னொரு கேசவன் வந்து சேர்ந்து விட்டானே என்று எண்ணி ஏங்கினாள். தன் பெண் அவனுடன் சிரித்துக் கொண்டு பேசினாளே! அதை நினைத்த போது அவளுக்கு வயிறு பகீரென்றது. அன்றிரவு முழுதும் அவள் சரியாகத் தூங்கவேயில்லை.

ஃ ஃ ஃ

மறுநாள் காலை துரைசாமி கோபதியிடம் வந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். பிறகு இருவரும் கேசவனைப் பார்க்கச் சென்றார்கள்.

கேசவன் அவர்களைப் புன்னகை புரிந்தவண்ணம் வரவேற்றான். அவன் உற்சாகமும் நோயற்றவன் போலும் காணப்பட்டான்.

''நேற்று நீங்கள் வந்து பார்த்ததிலிருந்து எனக்குக் கால் நோவு பாதி தீர்ந்து விட்டது போலிருக்கிறது!'' என்று கோபதியைப் பார்த்துக் கூறினான்.

''அப்படியா! சந்தோஷம்! என்றான் கோபதி. பிறகு தங்கள் உடம்பைப் பரிசோதிக்கலாமா? என்று கேட்டான்.

''இதற்கு என்னைக் கேட்க வேண்டுமா! என்றான் கேசவன். பிறகு கதவைச் சாத்தி விடுங்கள்'' என்றான். துரைசாமி சாத்திவிட்டு வந்தார்.

கோபதி கேசவனது இடது காலை முதலில் பரீட்சித்தான். நரம்புகளை விரல்களால் தொட்டுப் பார்த்தான். அப்போதெல்லாம் கேசவன் முகம் சிணுங்காது முழங்கால் பக்கம் தட்டிப் பார்த்தபோது கேசவன் பல்லைக்கடித்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான். அப்பாடா, அப்பாடா என்று முண முணத்துக் கொண்டிருந்தான்.

இடது கால் பரீட்சை முடிந்தது. கோபதி வலது கால் விரல்களைச் சொடுக்கிப் பார்த்தான்.

''அம்மா, அம்மா!'' என்று கேசவன் புலம்பினான். அவன் முகம் பார்ப்பதற்குப் பயங்கரமாகிக் கொண்டு வந்தது.

அவன் துரைசாமி எதிரே நின்று கொண்டிருப்பதை அப்போதுதான் பார்த்தவன் போல ''நீங்கள் கொஞ்சம் போய்விட்டு வாருங்கள். உங்கள் எதிரில் வலிதாங்காமல் முகத்தைக் கோரமாக வைத்துக் கொள்ள கூச்சமாயிருக்கிறது'' என்றான்.

''அதற்கென்ன!'' என்று துரைசாமி கூறிவிட்டு அறைக்கு வெளியே சென்றார்.

கோபதி வலது காலின் கணுவைத் தட்டிப் பார்த்தான். பிறகு முழங்காலுக்குக் கீழுள்ள நரம்புகளைத் தடவிப் பார்த்தான். கேசவன் புலம்பல் அதிகமாயிற்று.

அவன் கோபதியைப் பார்த்த வண்ணம், தன் கையால் அவன் கைகளைத் தள்ளித் தள்ளி விட்டுக் கொண்டிருந் தான்.

"அவ்வளவு வலியா?" என்று கோபதி கேட்டான்.

"தாங்க முடியவில்லை. உயிர் போகிறது. நான் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொண்டிருக் கிறேன்" என்று கேசவன் கதறினான்.

"முழங்கால் பக்கம் எப்படி யிருக்கிறது?"

"இந்த முழங்கால் நரம்புதான் ஒடிந்துவிட்டது போலிருக்கிறது" என்றான் கேசவன்.

கோபதி முழங்காலைத் தொட்டுப் பார்த்துவிட்டு யோசனை செய்த வண்ணம் இருந்தான்...பிறகு கால் பக்கம் சென்று கணுக்குமேலே காலைப் பிடித்துக் கொண் டான்.

"கால் சரியாக இருக்கிறாப்போல்தானே தெரிகிறது" என்று மெதுவாகக் கூறிக் கொண்டே பிடித்து இழுக்க முயன்றான்.

"உயிர் போகிறதே!" என்று கேசவன் அலறினான்.

மறுகணம் அவன் கால் கோபதி பிடியினின்றும் விடுபட்டுக் கொண்டது. அது விண்ணென்று அவன் கன் னத்தை நோக்கி வந்தது; மிக வேகமாக வந்தது. நல்ல வேளையாக கோபதி சட்டென்று தன் கையைக் கன்னத் தின் பக்கம் வைத்துக் கொண்டு சற்றுப் பின்னடைந் தான்.

அப்படியும் அந்தப் பலத்த உதை அவன் கைமீது கொஞ்சம் பட்டது.

அதன் தாக்குதலால் அவன் சத்றுத் தூரம் அப்பால் போய் விழுந்தான்.

கோபதி ஒரு கணம் திகைத்துப்போய் நின்றான். கேசவன் விட்ட உதை அவன் முகத்தில்

முழுதும் தாக்கி இருந்தால் அவன் பற்கள் எல்லாம் உதிர்ந்துபோயிருக்கும். முகத்தின் நரம்புகள் நொறுங்கிப் போயிருக்கும். கேசவனுடைய உடம்பு இரும்பைப் போலிருந்ததை அவன் கவனித்திருக்கிறுன்.

கோபதி சட்டென்று சமாளித்துக் கொண்டான். தான் அதிர்ச்சியடைந்திருப்பதை வெளிக்குக் காண்பித்துக் கொள்ளாமல் கேசவனைத் திரும்பிப் பார்த்தான்.

''அம்மாடி வலி தாங்க முடியவில்லையே. காலை என்னமோ செய்து விட்டாரே!'' என்று முகத்தில் தாங்க முடியாத வேதனை தோன்ற முனகினுன். காலை மடக்கிக் கையால் பிடித்து விட்டுக் கொண்டிருந்தான்.

கோபதியைப் பார்த்து ''ஏன், சார் கால் மேலே பட்டு விட்டதோ?'' என்று அனுதாபமும் வருத்தமும் தோன்ற விசாரித்தான்.

''இல்லையே!'' என்ருன் கோபதி.

''தாங்கள் நரம்புகளை அமுக்கி, அமுக்கிச் சோதனை செய்து பார்த்தபோது என்னுல் பொறுக்க முடியவில்லை. பிராணன் போய், பிராணன் வந்து கொண்டிருந்தது!'' என்று கேசவன் சமாதானம் கூறினுன்.

''சரிதான்!'' என்ருன் கோபதி.

இவர்கள் பேசும் சப்தத்தைக் கேட்டு வெளியே நின்றிருந்த துரைசாமி உள்ளே வந்தார்.

''கால் எப்படி இருக்கிறது?'' என்று கோபதியை விசாரித்தார்.

''காலை 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்தால்தான் நன்ருகத் தெரியும். என் நண்பர் ஒருவர் என்ன நரம்புக் கோளாறு இருந்தாலும் குணப்படுத்தி விடுவார். அவர் வெளியூர் போயிருக்கிருர். அவர் அடுத்த வாரம் வருவார்.''

"வந்ததும் அவசியம் அழைத்துக் கொண்டு வாருங்கள்! உங்களுக்குப் புண்ணியம் உண்டு" என்றான் கேசவன்.

இதற்கு முன்னெல்லாம், தனக்கு ஒரு வைத்தியமும் வேண்டாமென்றும் தான் வீட்டை விட்டுச் சென்று விடுவதாகவும் கூறிக் கொண்டிருந்த கேசவன் இப்போது இப்படிப் பேசியதைக் கேட்டுத் துரைசாமி சிறிது ஆச்சரியப்பட்டார்.

அப்போது அங்கே கோவிந்தன் வரவே, துரைசாமி அவனையும் கோபதியையும் ஒருவருக்கொருவர் அறிமுகப் படுத்தி வைத்தார்.

கோவிந்தன், கோபதியைச் சற்று நேரம் கவனித்துப் பார்த்துவிட்டு "உங்களை எங்கேயோ பார்த்திருக்கிறேன். சட்டென்று ஞாபகமில்லை" என்றான்.

"பார்த்திருக்கலாம்!" என்றான் கோபதி.

"கல்கத்தாவிலா? நாகபுரியிலா? டெல்லியிலா?" என்று நிச்சயமாகத் தெரியவில்லை.

"நான் அங்கே எல்லாம் அதிகம் தங்கியிருந்ததில்லை."

"அப்படி என்றால் பம்பாயிலே இருக்குமோ?"

"இருக்கலாம்!"

"இப்போது ஞாபகம் வருகிறது. நீங்கள் வைத்தியக் கல்லூரி ஓட்டப் பந்தயங்களில் எல்லாம் முதற் பரிசு பெற்றவரல்லவா? உங்கள் போட்டோவைப் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன். என்றான் கோவிந்தன்.

கோபதி இதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் சிரித்து வைத்தான்.

"அவர் எம். ஏ. வரையில் படித்திருக்கிறார்" என்று துரைசாமி, கோவிந்தனைப்பற்றி அவன் அண்ணன் தெரிவித்த தகவலைக் கூறினார்.

''அப்படியா? எந்த ஊரிலேயோ?'' என்று கோபதி கேட்டான்.

''பங்களூரில்!'' என்முன் கோவிந்தன்.

''எந்தக் காலேஜில்?'' என்று கோபதி விசாரித்த போது கோவிந்தன் 'வந்து...வந்து...' என்று இழுத்தான்.

''ஏதோ ஒரு காலேஜ்!'' என்று கேசவன் குறுக்கிட்டுக் கூறினான். எதுவாக இருந்தால் என்ன? எல்லாவற்றிலும் படிப்புச் சொல்லிக் கொடுப்பது ஒரே அழகாகத் தானிருக்கிறது என்று மேலும் கூறினான்.

இந்தச் சம்பாஷணைகளின் போக்கு முதலில் துரைசாமிக்கு விளங்கவில்லை. பிறகுதான் அவர்கள் ஒருவரையொருவர் ஆழம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். என்று ஊகித்தார்.

அப்போது அங்கே டாக்டர் மார்த்தாண்டம் வந்தார். துரைசாமி, முகத்தில் வேதனை தோன்ற தன் காலைப் பிடித்துக் கொண்டு விட்டிருப்பதைக் கண்டு ''ஏன் மிஸ்டர் கேசவன் நேற்றெல்லாம் சந்தோஷமா இருந்தீர்களே; இரண்டு நாளைக்குள் எழுந்திருந்து விடப் போவதாகச் சொன்னீர்களே இப்போது ஏன் இப்படி இருக்கிறீர்கள்!'' என்று கேட்டார்.

''ஒன்றுமில்லை அந்த டாக்டர் ஸார் என் காலைத் தொட்டும் இழுத்துப் பார்த்தார்...'' என்று அவன் ஆரம்பித்துக் கொண்டிருந்தபோதே 'என்னது டாக்டர்? நான் சிகிச்சைசெய்து கொண்டிருக்கும்போது இன்னொருவர் தலையிடுவதா?' என்று மார்த்தாண்டம் கோபமாகக் கேட்டு கோபதியை முறைத்துப் பார்த்தார்.

கோபதி சொன்னான்: கோபித்துக் கொள்ளாதேயுங்கள் முதலில் அவர் சொன்னது போல் நான் காலை இழுத்துப் பார்க்கவில்லை. இரண்டாவதாக நான் அவருக்குச் சிகிச்சை செய்யவும் முயலவில்லை. எப்படியிருக்கிறதென்று பார்த்தேன்.''

''அதெப்படி நீங்கள் பார்ப்பது? ஒரு டாக்டரின் நோயாளியை, இன்னொரு டாக்டரின் சம்மதமில்லாமல் சிகிச்சை செய்யக் கூடாது என்ற சம்பிரதாயத்திற்கு விரோதமாக நடந்து கொண்டு விட்டீர்.''

''இது மிஸ்டர் துரைசாமியின் ஏற்பாடு போலும்...''

''இல்லே, இல்லே...'' என்று துரைசாமி கூறினர்.

''நான் இனிமேல் இவருக்கு வைத்தியம் செய்ய முடியாது'' என்று மார்த்தாண்டம் கூறி அறையை விட்டுச் செல்லத் தயாராஞர்.

''அப்படிச் சொல்லக் கூடாது. நீங்கள்தான் பார்க் கணும்'' என்று துரைசாமி கெஞ்சினர்.

''அதெல்லாம் முடியாது. இது வரை வைத்தியம் செய்ததற்கு ஏதாவது கொடுப்பதாயிருந்தால் கொடுத்து விடுங்கள், நான் போகிறேன்'' என்று மார்த்தாண்டம் படபடப்புடன் கூறினர்.

''மார்த்தாண்டம்! எனக்காகப் பொறுத்துக்கொண் டிருங்கள்!'' என்று கேசவன் அவரைக் கேட்டுக் கொண் டான்.

''கோபதி இனிமேல் தலேயிடமாட்டார்'' என்று துரைசாமி கூறிய பின்னர்தான் டாக்டர் மார்த்தாண் டம் சாந்தமடைந்தார்.

இதுவரை வாயைத் திறக்காதிருந்த கோபதி. அவ ரைப் பார்த்து மன்னிக்கணும். நான் இனிமேல் இவரைத் தொடமாட்டேன். ஆனல் நான் சோதனே செய்தபோது தெரிந்த விஷயம் ஒன்றை உங்களிடம் சொல்லவேண்டும். உங்களே எந்த இடத்தில், எப்போது சாவகாசமாகப் பார்க்கலாம்!' என்று கோபதி கேட்டான்.

மார்த்தாண்டம் அவனே விழித்துப் பார்த்துவிட்டு பதில் சொல்லாமலிருந்தார்.

"ஜெனரல் ஆஸ்பத்திரியிலா, அல்லது உங்கள் வீட்டிலா. எங்கு சந்திக்கலாம்!" என்று கோபதி மேலும் கேட்டான்,

"என்னுடைய நோயாளிக்குச் சிகிச்சை செய்வதைப் பற்றி எனக்கு ஒருவர் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை" என்று மார்த்தாண்டம் அகம்பாவத்துடன் கூறினர்.

"தம்பி! நீங்கள் ஏன் தொந்தரவு செய்து கொள்கிறீர்கள்?" என்று துரைசாமி, கோபதியைப் பார்த்துக் கூறினர்.

"உங்களுக்கு வேண்டியவராயிற்றே என்று சொல்ல வந்தேன்" இல்லாமல் போனுல் எனக்கென்ன?" என்று கோபதி கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்று விட்டான்.

துரைசாமி, டாக்டருக்குச் செக் அனுப்புவதாகச் சொல்லிவிட்டு வெளியே சென்றுர்.

கோபதி தன் அறையில் நீண்ட நேரம் யோசனை செய்த வண்ணம் இருந்தான். அப்போது பரிசாரகன் கையில் ஒரு கூஜாவுடன் உள்ளே நுழைந்தான்.

"என்னது?" என்று கோபதி கேட்டான்.

"காப்பி" என்றுன் பரிசாரகன்.

"நான் கேட்கவில்லையே?" என்றுன் கோபதி.

"அம்மா கொடுக்கச் சொன்னுங்க" என்று பரிசாரகன் சொல்லிவிட்டு 'சின்ன அம்மா' என்று விளக்கமும் கூறினுன்.

"அப்படியானுல் கொஞ்சம் கொடு!" என்று கோபதி கூறி அரை டம்ளர் காப்பி வாங்கிச் சாப்பிட்டுவிட்டு உடனே வெளியில் செல்வதற்கான உடைகளைத் தரித்துக் கொண்டு கிளம்பினுன். அவன் கையில் ஒரு சிறிய தோல் பெட்டி இருந்தது.

வெளியே வந்தபோது எதிரிலிருந்த கேசவன் அறைக்குள் பேச்சுச் சப்தம் கேட்டுக் கவனித்தான். பிறகு அறைக் கதவைத் திறந்தான்.

மார்த்தாண்டமும், கோவிந்தனும் கேசவன் தலைப் பக்கம் நாற்காலிகளை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து மிகவும் மெதுவாகப் பேசிக்கொண்டிருக்கக் கண்டான்.

''துரைசாமி இல்லை!'' என்று அவர்களைக் கேட்டான்.

''அப்போதே போய்விட்டாரே!'' என்ருன் கோவிந்தன்.

''இங்கிருக்கிருராக்கும் என்று நினைத்தேன்'' என்று கோபதி சமாதானம் கூறிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு சென்ருன்.

அப்போது டாக்டர் மார்த்தாண்டம் 'காலை மாஸேஜ் பண்ணிஞல் சரியாய் விடலாம்!'' என்று சற்று உரக்கவே கூறிக் கொண்டிருந்தது அவன் காதில் விழுந்தது.

கோபதி மாடியிலிருந்து கீழ் இறங்கி வந்துவாசல் 'பால்கனி' பக்கம் சற்று நின்ருன். அங்கே வந்து துரைசாமியினிடம் தான் வெளியில் சென்று வருவதாகக் கூறி மிக வேகமாகச் சென்ருன்.

வீட்டிற்குள் ஹாலிலிருந்த ரேவதியையும், மரகதத்தையும் அவன் பார்க்கவில்லை. பார்க்க முயற்சிக்கவில்லை.

கோபதி பங்களாவைவிட்டு வெளியேறித் தெருவில் சென்றபோது அவன் நடை வேகம் குறைந்தது. அடிமேல் அடி எடுத்து வைத்து நடப்பதுபோல் அவ்வளவு மெதுவாக நடந்து சென்ருன். சிறிது தூரம் சென்றதும் நின்று திரும்பிப் பார்த்தான்.

ரேவதி வந்து கொண்டிருந்தாள்.

கோபதி பிறகு சாதாரணமாக நடந்து தெருக் கோடியை அடைந்து அங்கே இருந்த டாக்ஸி ஸ்டாண்ட் பக்கம் நின்று கொண்டிருந்தான். சில நிமிஷங்களுக் கெல்லாம் ரேவதி வரவே இருவரும் ஒரு டாக்ஸி வண்டியி லேறிக் கொண்டனர்.

"எங்கே போகப் போகிறோம்?" என்று ரேவதி கேட்டாள்.

"குரோம்பேட்டைக்கு" என்றான் கோபதி.

"சீக்கிரம் திரும்பி வந்துவிட வேண்டும். நான் அம்மாவினிடம் எங்கே போகிறேன் என்று சொல்ல வில்லை."

"பாதகமில்லை. என்னோடு கூடத்தானே வருகிறாய்?" என்று கோபதி கூறிக்கொண்டே அவள் பக்கத்தில் வந்து நெருங்கி உட்கார்ந்து கொண்டான்.

"உஸ்!" என்று ரேவதி கூறி அவன் மீது இடித்துக் கொள்ளாமல் சற்று நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

"நீங்கள் யார் தெரியுமா?" என்று கேட்டாள்.

"கோபதி!"

"என்ன உத்தியோகம்?"

"டாக்டர்!"

"எனக்கு எப்படி உறவு?"

"நீ கல்யாணஞ் செய்து கொள்ளப் போகிற வசந்த னுக்கு உறவு...ஆகையால்..."

"சரியாய்ப் பதில் சொல்கிறீர்கள். நல்ல பிள்ளை யாய் அது மாதிரி உறவுக்காரனாகவே நடந்து கொள் ளுங்கள்" என்று ரேவதி முகத்தைக் கடுமையாய் வைத்துக் கொள்வதுபோல் கூறிவிட்டுச் சிரித்தாள்.

கோபதியும் சிரித்தான். "நீ கூறுவதுபோல் இந்த விஷயங்களை எல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியதுதான்" என்று கூறி அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"ஆமாம்! மேலே அவன் அறையில் என்ன நடந்தது அப்பா கீழே வரும்போது மிகவும் கவலையுடன் இருந்தாரே. செக் புத்தகம் எடுத்துக்கொண்டு போனாரே!" என்று கேட்டாள் ரேவதி.

கோபதி, தான் கேசவன் காலைப் பரிசோதித்ததைப் பற்றிய விவரங்களைக் கூறியபோது ரேவதியின் கை தன்னையுமறியாமல் சென்று அவன் கன்னங்களைத் தடவிக் கொடுத்தது. "நல்லவேளை முன் ஜாக்கிரதையாயிருந்தீர்கள். உதை நன்றாகப் பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்?" என்று கவலையுடன் கூறினாள்.

"ஒரு உண்மை வெளியாயிற்று. அவன் வேண்டும் என்றேதான் உதைத்திருக்கிறான்" என்றான்.

"இனிமேல் அவனிடம் இந்தப் பரீட்சை எல்லாம் செய்யாதீர்கள். ஆமாம், இப்போது குரோம்பேட்டைக்கு எதற்காகப் போகிறோம்?" என்று ரேவதி கேட்டாள்.

குரோமேசுவரரைத் தரிசனம் செய்வதற்காக. அத்துடன் அந்தக் குரோமோ தீர்த்தத்தில் மூழ்கிவிட்டு வரலாமென்று உத்தேசம். அதிலிருந்துதானே அந்தக் கேசவன் உன்னைக் காப்பாற்றினான்" என்று கோபதி கூறினான்.

"ஆமாம்! ஆனால் அந்தச் சம்பவத்தை எல்லாம் மறுபடியும் ஏன் ஞாபகப்படுத்துகிறீர்கள்?" என்று ரேவதி அருவெறுப்புடன் கூறினாள்.

அவர்கள் அவனைப்பற்றிய மற்ற அம்சங்களைப் பேசிக்கொண்டே போனார்கள். குரோம்பேட்டையில், குரோமேசுவரர் கோயிலுக்கு வந்ததும் அவர்களிருவரும்

வண்டியிலிருந்து இறங்கிக்கொண்டனர். கோபதி சிறிய கைப் பெட்டியுடன், ரேவதியுடன் திருக்குளத்திற்குச் சென்றான்.

"நீயும் அம்மாவும் எந்த இடத்தில் படிகளில் இறங்கினீர்கள், கேசவன் எங்கே இருந்தான். பாம்பு எங்கிருந்து வந்தது?" என்று கோபதி கேட்டான்.

ரேவதி, அவன் கேட்ட விவரங்களை, அந்தந்த இடத்தில் நின்று நடித்தே காண்பித்தாள்.

"ஆனால் நீ உண்மையாகவே குளத்தில் விழுந்து காண்பிக்க வேண்டாம். அப்புறம் நான் உன்னைக் காப்பாற்றும்படி நேரிடும்" என்று பரிகசித்தான்.

பிறகு அவன் பெட்டியைத் திறந்து ஒரு துண்டை எடுத்துக் கட்டிக்கொண்டு குளத்தில் இறங்கினான்.

"ஜாக்கிரதையாய்ப் போங்கள். அங்கே ஒரு பாறை இருக்கிறது. அதில்தான் அவன் மோதிக்கொண்டானும்!" என்று ரேவதி எச்சரித்தாள்.

கோபதி குளத்தில் இறங்கி நீந்திச் செல்லவில்லை. நடந்தே சென்றான். ஏனென்றால் தண்ணீர் எந்த இடத்திலும் அவன் மார்புக்கு மேல் போகவில்லை.

ரேவதி அவன் இப்படி நடந்து செல்வதைக் கண்டு வியப்புற்று நின்றிருந்தாள்.

கோபதி தன் இரண்டு கைகளையும் தண்ணீருக்குள் விட்டுத் துழாவித் துழாவிப் பார்த்தான். அவன் கைகளில் ஒன்றும் தட்டுப்படவில்லை. சந்தேகத்திற்கிடமின்றி குளத்தைச் சோதனை செய்த பின்னர் கோபதி கரையேறினான்.

அவன் உடை மாற்றிக்கொண்ட பிறகு இருவரும் டாக்ஸியிலேறிக்கொண்டு சென்னை திரும்பினர். வழியில் கோபதி பலத்த யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

"எனக்குக் கொஞ்சம் நீந்தத் தெரியுமே. நான் எப்படி முழுகினேன்!" என்று ரேவதி கேட்டாள்.

"மனப் பிராந்திதான். பாம்பைக் கண்டதனால் ஏற்பட்ட பீதிதான். அப்போது நீ முழங்கால் ஆழமுள்ள தண்ணீரில் விழுந்திருந்தால் கூடத் தத்தளித்துத்தான் போயிருப்பாய்' என்றான் கோபதி.

ரேவதி இதைக் கேட்டுப் பெருமூச்செறிந்தாள். அவளுக்குத் தான் செய்ததெல்லாம் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றிற்று. வழியில் கோபதி அவளிடம் அதிகம் பேச்சுக் கொடுக்கவில்லை. வண்டி சென்னையை வந்ததும் அவன் "எனக்குக் கொஞ்சம் பாங்கியில் வேலையிருக்கிறது. போய்விட்டு சாயங்காலத்திற்கு மேல் வருகிறேன்" என்று ரேவதியினிடம் கூறிவிட்டு வண்டியை நிறுத்தச் செய்து இறங்கிக்கொண்டான்.

"எப்படியும் அவன் 2,3 நாளில் போய்விடப் போகிறான். நீங்கள் தொந்திரவு படுத்திக்கொள்ள வேண்டாம்" என்று ரேவதி சொன்னாள்.

"பாவம்! அவனுக்குக் காலிலும் மண்டையிலும் அடிபட்டிருக்கிறது. குணப்படுத்தித்தான் அனுப்பணும். அது ஒரு டாக்டரின் கடமை. எப்படி அந்த விபத்து நடந்திருக்கக் கூடும் என்றுதான் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறேன். வேறு ஒன்றுமில்லை" என்று கோபதி சிரித்துக்கொண்டே கூறிவிட்டு அவளிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

கோபதி, ரேவதி செல்வதையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். அவள் தலை மறைந்ததும் ஒரு டாக்ஸி பிடித்துக்கொண்டு குபேரா பாங்கிக்குச் சென்றான். அங்கே பாங்கு ஏஜண்டைச் சந்தித்தான். சென்ற இரண்டு மூன்று தினங்களுக்குள் துரைசாமியின் செக்கைக் கொடுத்துப் பணம் வாங்கிக்கொண்டு போனவர்களைப் பற்றிய விவரங்களை விசாரித்தான். அந்தப் பாங்கில்தான் துரைசாமி கணக்கு வைத்துக்கொண்டிருந்தார்.

சாதாரணமாக பாங்கு அதிகாரிகள் இதுபோன்ற தகவல்களை யாரிடமும் தெரிவிக்கமாட்டார்கள்; தெரிவிக்கவும் கூடாது. ஆனால் கோபதி கூறிய சில விஷயங்கள் அவரைத் திடுக்கிட செய்தனவாதலால் அவர் அவன் வேண்டுகோளுக்கு இணங்கினார்.

ஒரு பெரிய தொகைக்கான ஒரு செக்கின் பின்புறம் போட்டிருந்த கை எழுத்து பணம் வாங்கியவரின் விலாசம் முதலியவற்றை கவனித்தபோது அவன் ஆச்சரியமடைந்தான். அதே சமயத்தில் அவன் முகத்தில் ஒரு திருப்திக் குறியும் தோன்றிற்று. பிறகு அவன் ஏஜண்டுக்கு வந்தனம் கூறிவிட்டு வெளியேறினான்.

பிறகு அவன் ஒரு பொதுஜன வாசகசாலைக்குச் சென்றான். அங்கே வைத்தியர்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய அகில இந்திய வைத்திய டைரக்டரியை வாங்கிப் புரட்டிப் பார்த்தான். அதில் மார்த்தாண்டம் என்ற பெயருள்ள பதினெட்டு டாக்டர்களைப் பற்றிய குறிப்புகள் இருந்தன. கோபதி அவர்களுடைய விலாசங்களை ஒரு காகிதத்தில் குறித்துக்கொண்டான்.

அவன் வாசகசாலையை விட்டுக் கிளம்பித் தான் ஏற்கனவே தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றான். அங்கே அவன் முதன் முதலில் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்த அறையை இன்னும் காலி செய்யவில்லை. அது எப்போதாவது தனக்குத் தேவைப்படக் கூடுமென்றெண்ணி அதை வைத்துக்கொண்டிருந்தான். அவன் அன்றிரவு அங்கேயே தங்கிவிட்டான். துரைசாமியை டெலிபோனில் கூப்பிட்டுத் தான் ஒரு நண்பர் வீட்டில் தங்கியிருப்பதாகவும் மறுநாள் காலை வருவதாகவும் அவரிடம் தெரிவித்தான்.

அவன் சாப்பிட்ட பிறகு தன் அறையிலிருந்த சன்னல் பக்கம் நின்று தெருவைப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது எதிர்த்த சாரியில் யாரோ நின்று தன் அறையைக் கவனித்துக்கொண்டிருப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

அவன் ஒருவேளை தன் மனப்பிரமையாயிருக்குமோ என்று எண்ணிக்கொண்டு இருந்தபோது படாரென்று சப்தம் கேட்டது.

கோபதி திடுக்கிட்டுப் பின் வாங்கினான். சன்னல் கம்பிகளில் பட்டு உடைந்த ஒரு கல் பின் தூள்கள் அவன் மீது சிதறின. அந்தக் கல் மட்டும் அவன்மீது பட்டிருந்தால் அவன் முகமிருந்த இடம் உருத் தெரியாமல் போயிருக்கும் என்று நினைத்தபோது அவன் நடுங்கினான்.

சற்று அப்பால் நகர்ந்து சென்று இன்னொரு சன்னல் வழியாக வெளியே கவனித்தான். எதிர்த்த சாரியில் நின்றிருந்த ஆள் விரைந்து சென்றுகொண்டிருப்பதைக் கண்டான். அவன் செல்வதையே கோபதி கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான்.

கோபதி இதைப்பற்றி ஹோட்டல்காரரிடம் கூறி விஷயத்தைப் பெரிதாக்க விரும்பவில்லை.

அவன் சன்னல்களை சாத்திவிட்டு வந்து படுத்துக் கொண்டான்.

மறுநாள் காலை அவன் துரைசாமியின் வீட்டிற்குச் சென்றான். அவரும், அவர் மனைவியும் அவன் இரவு வெளியே தங்கியதற்காக அவனை அன்புடன் கடிந்தனர். ரேவதி ஒன்றுமே சொல்லவில்லை.

கோபதி மாடியில் தன் அறைக்குச் சென்றான். தான் எழுதிவந்த தகவல்களைப் பத்திரமாய் வைப்பதற்காகப் பெட்டியைத் திறக்க அதன் துவாரத்தில் சாவியை நுழைத்தான். அது வழக்கம்போல் சுலபமாகத் திறக்காமல் மக்கர் செய்தது. பிறகு சிரமப்பட்டு பூட்டைத் திறந்து பெட்டிக்குள் அடியில் காகிதங்களை வைத்தான். அப்போது திடீரென்று அவனுக்கு ஒரு சந்தேகம் தோன்றிற்று. பெட்டியில் சாமான்கள் சில அவை முன் வைக்கப்பட்டிருந்த இடத்தில் இல்லை. ஆனால் எந்த சாமானும் காணாமற்போகவில்லை.

பெட்டியின் பூட்டைக் கவனித்தான். அதில் கீறல்கள் இருந்தன. அறைக்குள் யார் வந்திருப்பார்களென்பதைப் பற்றி இப்போது சந்தேகப்படவில்லை!

19

துரைசாமி தமது அறைக்குள் மிக வேகமாக அங்குமிங்கும் உலவிக்கொண்டிருந்தார். அவருக்கு இப்போது அந்தக் கேசவனை வீட்டைவிட்டு வெளியேற்றுவதைப் பற்றிய ஞாபகந்தான். நன்றி மறவாமல் இருப்பதைப் பற்றிய அவருடைய தீவிரமான கொள்கையும், நாலு பேர் என்ன சொல்லுவார்களென்ற பயமுந்தான் அவரை இதுவரை கேசவன் விஷயத்தில் பொறுமையோடு இருக்கச் செய்தது. அவர் அந்த சகிப்புத்தன்மையை சிறிது சிறிதாக இழந்து வந்து கொண்டிருந்தார். அவன் ரேவதியை கோவிந்தனுக்கு திருமணம் செய்து கொடுப்பதை மறை முகமாகக் கூறியதிலிருந்து அவருக்கு அவன் விஷயத்தில் ஏற்பட்டிருந்த அனுதாபம் அடியோடு மறைந்துவிட்டது. அவன் மறுமுறை அது மாதிரி பேச்செடுத்தால் போலீஸுக்குப் புகார் செய்ய வேண்டும் என்றுகூட நினைத்தார்.

அவர் இத்தகைய எண்ணங்களில் ஈடுபட்டிருந்த போது அறைக்குள் ராதாபாய் நுழைந்தாள். அவள் வெளியில் தலையை நீட்டி யாராவது வருகிறார்களா என்று இரண்டு பக்கமும் பார்த்துவிட்டுக் கதவை மெதுவாகச் சாத்தினாள்; ஆனால் தாளிடவில்லை. அவள் இப்படியெல்லாம் செய்வதைத் துரைசாமி பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டு அவளை "ஏன் அப்படிச் செய்கிறாய்?" என்று கேட்கலாமா வேண்டாமா என்று எண்ணிக்கொண்டு இருந்தபோது அவள் புன்னகை புரிந்த வண்ணம் அவரை நெருங்கி வந்தாள்.

"அன்று முதல் உங்களோடு தனியாகப் பேசவேண்டும் என்பது; சந்தர்ப்பமே ஏற்படவில்லை!" என்ருள் ராதாபாய்.

"என்ன விசேஷம்?" என்று அவர் சற்றுக் கோபமாகவே கேட்டார். மிக மிக யோக்கியரான அவருக்கு இதுபோன்று ஒரு ஸ்திரீ தன்னிடம் தனித்துப்பேச வருவது இதுதான் முதல் தடவை. அவரது உடல் அந்தச் சூழ்நிலையை விரும்பியதாயினும் அவர் மனம் அதை வெறுத்தது.

"எல்லாம் அந்தக் கேசவன் விஷயந்தான்! வேறு என்ன இருக்கிறது?" என்ருள்.

பிறகு "நிற்கிறீர்களே!" என்று கூறி அவரைக் கையை பிடித்து ஸோபாவில் உட்காரச் செய்தாள்; பக்கத்தில் தானும் உட்கார்ந்து கொண்டாள். துரைசாமி வெட்கம், கூச்சம், கோபம், உடலின்பம் ஆகிய உணர்ச்சிகளிலீடுபட்டு மெய்மறந்திருந்தார்.

"கேசவனைப் பற்றிய சில விவரங்கள் என் காதில் விழுந்தது; அதைச் சொல்வதற்காகத் தான் வந்தேன்."

"என்ன என்ன சொல்லு?" என்று துரைசாமி ஆவலுடன் கேட்டார்.

"அவன் ஒரு காலத்தில் நல்ல பணக்காரனுய் இருந்தவன்தானும். இப்பொழுதும் சொத்து இருக்கிறதாம். ஆனுல் பெரிய காலாடியாம். அடி பிடி சண்டை, கொலை ஒன்றுக்கும் அஞ்சமாட்டானும்!"

இதைக் கேட்டபோது துரைசாமிக்கு ஏற்பட்டிருந்த உற்சாகம் குறைந்தது. "அவன் ஏதோ அனுதைகளுக்காக உதவி செய்வதாகக் கூறினுனே!" என்ருர்.

"அதெல்லாம் சுத்தப் பொய்!"

"அவனைப் பற்றிப் போலீஸில் புகார் செய்தால் என்ன என்று யோசனை செய்து கொண்டிருந்தேன்."

"அவன் எத்தனையோ போலீஸ் ஸ்டேஷன்களைப் பார்த்திருக்கிறான். எத்தனையோ கோர்ட்டுகளுக்குப் போயிருக்கிறான்; அவனுக்கு இதெல்லாம் தண்ணீர்பட்ட பாடு! அவன் மீது யாராவது வழக்குத் தொடுத்தால் அவன் அவருடைய மனைவி, மகன் மகள் எல்லோரையும் சாட்சியாக வரும்படி செய்துவிடுவானாம். கூண்டிலேற்றிக் கன்னாபின்னா என்று கேள்விகள் கேட்பானாம்."

"அப்படியா?"

"ஆமாம்! ஆனால் அவன் தம்பி கொஞ்சம் யோக்கியனாம். அதனால் அண்ணனுக்கும் தம்பிக்கும் அவ்வளவாக ஒத்துக் கொள்கிறதில்லையாம். இருந்தாலும் இப்போது திடீரென்று அண்ணனுக்குத் தம்பிமீது கரிசனம் ஏற்பட்டிருக்கிறது. அவனுக்கு கல்யாணம் செய்து வைக்க ஆசைப்படுகிறான்! அதைப் பற்றித்தான் இரண்டு நாளாகப் புலம்பிக் கொண்டிருக்கிறான்! ரேவதி அம்மா ஜாதகம் சரியா இருக்கிறதென்று வேறு சொல்லிக் கொண்டிருக்கிறான்......'

இதைக் கேட்ட துரைசாமி ஒரு துள்ளுத் துள்ளி எழுந்தார்; ராதாபாய் அவரைக் கையைப் பிடித்திழுத்து உட்காரச் செய்தாள்.

நீங்கள் கோபித்துக்கொண்டு பிரயோசனமில்லை. அவனோடு தகராறு செய்து கொண்டால் கோர்ட்டிற்கு போகும்படியாகும். நீங்கள் உங்கள் பெண்ணைக் கொடுப்பதாகக்கூறி ஒப்பந்தம் செய்துகொண்டு பிறகு ஏமாற்றி விட்டதாக வழக்குத் தொடுப்பான்!

துரைசாமி இதைக் கேட்டு பெருமூச்சு விட்டார். அந்தக் கேசவனிடமிருந்து தப்பவே முடியாது போலிருக்கிறதே என்றெண்ணி ஏங்கினார்.

"ஆனால், அவனைச் சரிப்படுத்த ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அவனுக்கு தன் பூர்வீக சொத்தின் மீது

பிராணன். அது கையை விட்டுப் போகாதிருக்க என்ன வேண்டுமானாலும் செய்ய தயாராய் இருப்பான். அவன் நிலம் ஏதோ ஏலம் போகவிருக்கிறதாம். நீங்கள்கூட அதற்காக ஏதோ பணம் கொடுத்தீர்களாமே!......''

''உன்னிடம் சொன்னானா?''

''நன்றாயிருக்கிறது? அன்று உங்களிடம் அவன் அயோக்கியத்தனமாக நடந்துகொண்டதைப்பற்றிச் சொன்னது எப்படியோ தெரிந்துவிட்டது. அதிலிருந்து என்மீது எரிந்து விழுகிறான். அவனும் அவன் தம்பியும் பேசிக் கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்டேன்—எல்லாம் உங்களுக்காகத்தான்!''

துரைசாமி யோசனை செய்த வண்ணமிருந்தார்.

''கேசவனுக்கு இனிமேல் ஒரு தம்பிடி கொடுக்காதீர்கள். கொடுக்கக் கொடுக்க அவன் மேலும் மேலும் கேட்டுக்கொண்டே இருப்பான். அவன் தம்பியை சரிப் படுத்தி விடலாம் என்று நினைக்கிறேன்.''

''எப்படி?''

''சொல்கிறேன்'' என்று ராதாபாய் சற்று நாணந் தோன்றக் கூறினாள்.

''அதற்கு முதலில் நான் இந்தவீட்டைவிட்டு வெளியேற வேண்டும்! வந்து......''

''உனக்குச் சேரவேண்டியதைக் கொடுத்து விடுகிறேன்.''

''ஏ அப்பா! நீங்கள் இவ்வளவு கெட்டிக்காரர்களாயிருக்கிறீர்களே! என் மனத்தில் இருப்பதைக் கண்டுபிடித்துச் சொல்லி விட்டீர்களே!'' என்று ராதாபாய் புகழ்ந்த போது துரைசாமியின் வாயெல்லாம் பல்லாய்த் தெரிந்தது.

''அதைப்பற்றிநான் கவலைப்படவில்லை; நான்சொல்ல வந்த விஷயமே வேறு. வாயைவிட்டு வரமாட்டேன் என்

கிறது. வெட்கமாயிருக்கிறது'' என்று நாணிக்கோணி தலைகுனிந்தாள்.

இதைக்கேட்டு துரைசாமி திடுக்கிட்டார். அவள் ஏதோ விபரீதமாகச் சொல்லப்போகிருளென்று அவர் பயந்தார். அவள் தன்னை ஏதாவது செய்து விடுவாளோ என்று சற்று நகர்ந்துகூட உட்கார்ந்து கொண்டார்.

''அவர் தம்பியும் நானும்...நானும் அவர் தம்பியும்'' ......என்று ராதாபாய் ஆரம்பித்தாள்.

இதைக் கேட்டதும் துரைசாமிக்கு ஏற்பட்டிருந்த படபடப்பு அடங்கியது.

''கல்யாணம் செய்துகொள்ளப் போகிறோம்''...என்ருள்.

''என்னது''? என்று ஆச்சர்யத்துடன் துரைசாமி கேட்டார்.

''அவர் வந்து இரண்டு நாள்தானே ஆயிற்று: அதற்குள் எப்படித் தீர்மானித்தீர்கள் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? ஒரு வருஷமாகவே எங்களுக்குள் பழக்கமுண்டு! கல்யாணம் செய்து கொள்வதைப் பற்றி நாங்கள் ஏற்கனவே தீர்மானித்து விட்டோம்.''

''கேசவன் அவருக்கு அண்ணு என்று எனக்குத் தெரியாது; இப்போதுதான் அவர் சொன்ஞர்! ஆனுல் எங்கள் கல்யாண விஷயத்தை ரகசியமாக வைத்துக்கொண்டிருக்கிறோம்.''

துரைசாமி இந்தக் காதல் கதையைக் கேட்டனுபவித்தார்.

''ஆனுல் இப்போது கேசவன் அவரிடம் ரேவதியைப் பற்றி பிரஸ்தாபித்திருக்கிருராம். என்ன செய்கிறது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கிருர். அவருக்குக் கொஞ்சம் பண வசதியிருந்தால் இந்த அண்ணனுக்குப் பயப்பட்டுக் கொண்டிருக்கமாட்டார். போடா போ! என்று சொல்லி விட்டுப் போய்விடுவார்.''

மறுபடியும் பணப் பேச்சு தலையிடுவதைக் கேட்டுத் துரைசாமி அதிருப்தியடைந்தார். ஆனாலும் கேசவனுக்கு விரோதமாக ஏதாவது செய்ய வேண்டுமென்ற பழி வாங்கும் உணர்ச்சி அவரிடம் தோன்றிக் கொண்டிருந்தது. அதே சமயத்தில், கேசவனை வெளியேறச் செய்ய வேண்டியது அவசியமென்றும் நினைத்தார்.

"அவருக்கு அதிகம் தேவை இல்லை. ஒரு ஐயாயிரம் ரூபாய் இருந்தால் போதும். ஒரு சின்ன வியாபாரம் ஆரம்பித்து விடுவார்" என்றாள் ராதாபாய்.

ரேவதிக்கும் அவனுக்கும் கல்யாணம் நடத்துவதைப் பற்றிய பேச்சை கேசவன் கிளப்பாதிருக்க ஓர் ஐயாயிரம் ரூபாய் பெரிய தொகையல்ல என்று துரைசாமிக்குத் தோன்றிற்று.

"நாளைக்குள் கொடுக்க ஏற்பாடு செய்தால் நாங்கள் இருவரும் சென்று விடுகிறோம்." என்று ராதாபாய் கூறியதற்கு துரைசாமி தலையை அசைத்தார். பிறகு அவள் "நான் திடீரென்று கிளம்ப முடியாது. துணிமணிகள் வாங்க வேண்டும்" என்றாள்.

"உனக்குக் கொடுக்க வேண்டியதை இப்போது வாங்கிக் கொள்ளேன்" என்று துரைசாமி கூறி பீரோவினிடம் சென்று அதைத் திறந்து பணத்தை எடுத்துக்கொண்டிருந்தபோது ராதாபாய் அவர் பின்னால் போய் அவர் மீது சற்று இடித்துக் கொண்டு நின்றாள்.

"இந்தா உனக்கு ஐந்நூறு ரூபாய் கொடுக்கலாமென்றிருந்தேன். உன் கல்யாணத்திற்காக என் சன்மானம் ஐந்நூறு. ஆக ஆயிரம்!" என்று கூறிப் பத்து நூறு ரூபாய் நோட்டுக்களை அவள் கையில் கொடுத்துக்கொண்டிருந்தார்.

அப்போது கதவு திறந்தது. கோவிந்தன் உள்ளே பார்த்து விட்டு "மன்னிக்கணும்! தெரியாமல் திறந்து விட்டேன்" என்று கூறி மறுபடியும் கதவைச் சாத்திக் கொண்டு போய்விட்டான்.

அதே சமயம் ரேவதி தன் தாயுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

"ஏன், அம்மா! என்னமோ போலிருக்கிருய்?" என்று ரேவதி கேட்டாள்.

"எனக்கு நான் ஏன் பிறந்தோமென்றிருக்கிறது! அந்தப் பிறந்த நாளைக் கொண்டாடப் போகத்தானே இப்படி எல்லாம் வந்து முடிந்திருக்கிறது" என்று துக்கம் தொண்டையடைக்கக் கூறிஞள்.

"வருத்தப்படாதே; இரண்டு மூன்று நாளிலே அந்த அவன் வீட்டை விட்டுப் போய்விடுவான்" என்ருள்.

"அதைவிடப் பெரிய கவலை ஒன்று இப்போது புதுசாக ஏற்பட்டிருக்கிறது" என்று மரகதம் கூறித் தன் பெண்ணை உற்றுப் பார்த்தாள்.

"அதென்ன புதுக் கவலை?"

"உன் கல்யாணத்தைப் பற்றித்தான்."

"அதற்குக் கவலைப்படுவானேன்?"

"டில்லியிலிருந்து அந்தப் பிள்ளை வரக் காணும். இந்த கோபதி கூட நல்ல பையனுகத்தான் இருப்பான் போல் இருக்கிறது!" என்று மரகதம் தயங்கிக்கொண்டே கூறிஞள்.

ரேவதி தன் தாயை அணைத்துக்கொண்டாள்.

"அம்மா! உன் மனத்தில் இருக்கிறது எனக்குத் தெரிகிறது. நீ என்னைப் பற்றி என்னென்னமோ நினைத்துக் கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருய்!" என்ருள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்ருள் தாய்.

"இந்தக் கோபதி என்கிறவரோடு தாராளமாய்ப் பழகுகிறேனே என்று கவலைப்படுகிருய். எல்லாம் காரணமாகத்தான். இந்தக் கேசவனை வெளியேற்றுவதைப்

பற்றித்தான் அடிக்கடி பேசிக்கொண்டிருக்கிறோம். அவருக்கு நடந்த விஷயங்கள் எல்லாம் நன்றாகத் தெரியுமாம்.''

''அப்படியா! என்ன செய்யப் போகிறீர்கள்?''

''அப்புறம் சொல்லுகிறேன். அவரே என்னிடம் முழு விஷயங்களையும் தெரிவிப்பதில்லை. அவர் இந்தக் கேசவனைப் பற்றி டில்லிக்குக்கூட எழுதியிருக்கிறாராம்!''

''சரிதான். அதுதான் அவர் வந்து பார்க்க வரவில்லை போலிருக்கிறது.''

''இன்னும் பத்துத் தினங்கள் கழித்து வரக்கூடும்'' என்று சொன்னார்.

மரகதம் தலையை அசைத்தாள்.

''அவர்களிருவரும் பிராண சிநேகிதர்களாம். கொஞ்சங்கூட வித்தியாசமில்லாமல் பழகிக் கொள்வார்களாம். நீ என்னைப் பற்றி எந்தவிதமான கவலையும் படாதே. ரேவதி ஒரு நாளும் தவறாக நடந்து கொண்டுவிடமாட்டாள்'' என்று ரேவதி தன் தாயிடம் கூறியபோது அவள் பெருமையடைந்தாள்.

''அப்பாதான் இதைப்பற்றி இராத் தூக்கம் இல்லாமல் இருக்கிறார்'' என்று மரகதம் கூறி வருத்தப்பட்டாள்.

''எல்லாம் இன்னும் இரண்டு மூன்று நாளைக்குள் சரியாகப் போய்விடும். நான் எங்கேயாவது அடிக்கடி போய்விட்டு வருகிறேன் என்பதைப் பற்றித் தொந்தரவு செய்து கொண்டிராதே, என் அம்மாவோணு!'' என்று ரேவதி தன் தாயினிடம் கொஞ்சிப் பேசி அவளுக்கு உற்சாகத்தையும், தைரியத்தையும் ஊட்டினாள்.

தன் பெண் ஒரு நாள் மாடிப்படியில் நின்று கோபதியுடன் சிரித்துப் பேசியது மரகதத்திற்குப் பிடிக்கவில்லை. பிறகு அவள் அவனுடன் வெளியில் செல்லுகிறாளென்

றும் சந்தேகப்பட்டாள். இதை எல்லாம் ரேவதி ஊகித்துத்தான் தன் தாயின் இடம் இவ்வாறு பேசினாள்.

அன்று அவர்கள் எல்லோரும் ஒரு உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது.

துரைசாமி, ராதாபாயைத் தனியாகக் கூப்பிட்டு, வீட்டைக் கவனித்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டுப் போனார்.

அன்று இரவு துரைசாமி மட்டும் தான் திரும்பி வந்தார். மரகதமும், ரேவதியும் கல்யாண ஊர்வலத்திற்காக இரவு தங்கி விட்டு மறுநாள் காலையில் வருவதாக இருந்தார்கள்.

துரைசாமி தமது அறையில் தூங்கிக்கொண்டிருந்தார். ராதாபாயும், கோவிந்தனும் ஒரு ரிஜிஸ்ட்ரார் ஆபீஸுக்குப் போய் பதிவுத் திருமணம் செய்து கொள்வது போல் கனவு கண்டு கொண்டிருந்தார்.

அப்போது திருடன், திருடன் என்று சப்தம் கேட்டது.

துரைசாமி கண் விழித்துக் கொண்டு எழுந்தார். உள்ளே வெளிச்சத்தைப் போட்டார். அவருக்கு வெளியே செல்வதற்குப் பயம்.

அப்போது வேலை ஆட்களின் பேச்சுச் சப்தம் கேட்கவே தைரியமடைந்து தம் அறையை விட்டு வெளியே வந்தார்.

கேசவன் அறையில் பேச்சுச் சப்தம் கேட்டது. துரைசாமி அங்கே விரைந்து சென்றார்.

அறைக்குள் அவர் கண்ட காட்சி அவரைத் திகைக்கச் செய்தது. கேசவன் கதவு ஓரமாகத் தரையில் படுத்திருந்தான். இரும்பு அலமாரியின் கதவுகள் இரண்டு நன்றாகத் திறந்து கிடந்தன. கீழே சாமான்கள் விழுந்து கிடந்தன.

துரைசாமி வாயைப் பிளந்த வண்ணம் ஒரு கணம் நின்ருர்.

பிறகு நேரே அலமாரியினிடம் சென்று அதன் டிராயர் ஒன்றை இழுத்தார். உள்ளே இருந்த ஒரு நகைப் பெட்டியை வெளியிலெடுத்துத் திறந்து பார்த்தார்.

அந்த அட்டைப் பெட்டி அவர் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது.

அது வைர அட்டிகை வைக்கப்படும் பெட்டி. அது காலியாக இருந்தது.

"அறையிலிருந்து ஏதாவது திருட்டுப் போயிருக்கிறதா?" என்று கோபதி கேட்டான்.

"வைர அட்டிகை போய்விட்டது" என்று துரைசாமி கூறிஞர்.

"நான் நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தபோது ஏதோ சப்தம் கேட்டது. விழித்துக் கொண்டு பார்த்தேன். பீரோ பக்கம் ஓர் ஆள் நின்றிருந்தான் அவனைப் பிடிப்பதற்காக படுக்கையிலிருந்து தாவினேன். அதற்குள் அவன் போய்விட்டான். 'நான், திருடன், திருடன்' என்று அப்புறம் கூச்சல் போட்டேன். நகர்ந்து, நகர்ந்து கதவண்டை வந்தேன்" என்று கேசவன் கூறிஞன்.

"அவன் எப்படி இதைத் திறந்திருக்க முடியும்? சாவி ஏது?" என்ருர் துரைசாமி.

"இந்தக் காலத்துத் திருடர்களுக்கு எந்தப் பூட்டும் பிரமாதமில்லை!" என்ருன் கேசவன்.

"உள்ளே சிறு பல்ப் எரிந்துகொண்டுதானே இருந்தது. திருடனைப் பார்த்திருப்பீர்களே!" என்று கோபதி கேட்டான்.

"நான் நன்ருகக் கண் விழித்துக்கொள்வதற்குள் அவன் கதவண்டை போய்விட்டான். ஆனல் அவன்

முதுகுப் பக்கம் நன்றாகத் தெரிந்தது. அதிலிருந்து அந்த ஆளை நான் ஓரளவு அடையாளம் கண்டுபிடிக்க முடியும். கண்டுபிடிக்கத்தான் போகிறேன். நான் இருந்த அறையிலிருந்து திருட்டுப் போனதால் நான் தான் அதற்குப் பொறுப்பாளி'' என்று கூறியதைக் கேட்டு துரைசாமி ஆச்சரியப்பட்டார்.

அவன் ஏன் இப்படித் தன்மீதே குற்றத்தைச் சுமத்திக்கொள்கிறான் என்று துரைசாமிக்குப் புரியவில்லை.

அப்போது விடியற்காலம் நான்கு மணி இருக்கும். துரைசாமி ''போனது போய்விட்டது காலையில் பார்த்துக்கொள்ளலாம்'' என்று கூறிச் சென்றுவிட்டார்.

o o o

காலையில் எல்லோரும் காப்பி சாப்பிட்ட பிறகு திருடன் வந்ததைப் பற்றிப் பேசத் தொடங்கினர். அப்போது கோவிந்தன், ராதாபாய் முதலியவர்களும் வந்து விட்டார்கள்.

கேசவன் துரைசாமியினிடம் ''தாங்கள் என் பெட்டி படுக்கைகளை எல்லாம் சோதனை செய்ய வேண்டும்!'' என்று கேட்டுக்கொண்டான்.

''நன்றாயிருக்கிறது! நீங்கள்தான் திருடன் வந்ததைப் பார்த்தீர்கள்'' என்றார் துரைசாமி.

''இருந்தாலும் ஒரு வீட்டில் சாமான் திருட்டுப் போனால், அப்போது அங்கே இருந்தவர்கள் எல்லோரும் தான் அதற்குப் பொறுப்பாளியாவார்கள். ஆகையால் எல்லார்மீதிலும் சந்தேகப்படுவது நியாயம்தான். அவர்கள் பெட்டி படுக்கைகளைச் சோதனை போடுவதும் முறையாகும்'' என்று கேசவன் கூறினான். பிறகு தன் தம்பியையும் பார்த்துக் ''கோவிந்தன் என் பெட்டியை எடுத்துக் கொண்டு வா!'' என்று கூறினான்.

அவன் எடுத்துவந்ததும் அவன் அதிலிருந்தவற்றை எல்லாம் வெளியே எடுத்துப் போட்டான். பிறகு தன்

கட்டிலிலிருந்த மெத்தை, தலையணை இவற்றையும் எடுத்துக் காண்பிக்கச் செய்தான். ஒன்றும் அகப்படவில்லை.

பிறகு அவன் கோபதியைப் பார்த்து "உங்கள் அறையைச் சோதிப்பதில் உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே?" என்றான்.

"எதற்காக ஆட்சேபம்! வாருங்கள் பார்க்கலாம்!" என்று கோபதி கூற, கோவிந்தனும், ராதாபாயும் அவனுடன் அவன் அறைக்குச் சென்றார்கள்.

துரைசாமி வேண்டாம் என்று கூறியும் கோபதி கேட்கவில்லை.

அவன் தன் பெட்டியைத் திறந்து தலை கீழாகக் கவிழ்த்தான். சட்டை, வேஷ்டி முதலியன கீழே விழுந்தன.

"டங்" என்ற சப்தம் கேட்டது. எல்லோரும் அது என்ன என்று பார்த்தார்கள்.

அது ஒரு இரும்புச் சாவி!

"இது என் பீரோ சாவியல்லவா?" என்றார் துரைசாமி.

20

தன் அறையில், தன் பெட்டியில், துணிமணிகளுக்கடியில் துரைசாமியின் இரும்பு பீரோவின் சாவி இருந்ததைப் பார்த்துக் கோபதி திகைத்துப்போய்விட்டான்.

"இது எப்படி இங்கே வந்தது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

அவனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. தலை சுற்றியது. பிறர் சந்தேகப்படுவதற்கும், கையும்

களவுமாய்ப் பிடிக்கப்படுவதற்கும் இதைவிடத் தகுந்த சூழ்நிலை இருக்க முடியாதென்று அவனுக்குத் தோன்றிற்று.

அவன் சாவியையே ஒரு நிமிடம் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். தன் பெட்டியைத் தானில்லாத சமயத்தில் யாரோ சோதனை செய்து பார்த்திருக்கிறார்கள் என்று அவன் சந்தேகப்பட்டது இப்போது அவனுக்கு நிச்சயமாயிற்று. விஷயங்கள் இப்படி, இப்படி நடந்திருக்கக் கூடுமென்று ஊகித்துக்கொண்டான்.

துரைசாமி அவன் என்ன சமாதானம் சொல்லப் போகிறனென்று எதிர்பார்த்து, அவனையே நோக்கியவண்ணமிருந்தார். அவன் முகத்தைப் பார்த்தால் அவருக்கு அவன்மீது சந்தேகப்படவே தோன்றவில்லை.

கேசவன் தரைமீதே நகர்ந்து, நகர்ந்து வந்து கோபதிக்கு எதிரே வந்து உட்கார்ந்து தலை நிமிர்ந்து அவனைப் பார்த்து உதடுகளில் விஷமப் புன்னகை ததும்பியவண்ணமிருந்தான். பிறகு "என்ன தம்பி!" என்று கோபதியைக் கேட்டான்.

"நீங்கள் தான் சொல்லணும்!" என்றன் கோபதி.

"என் பெட்டியில் அகப்பட்டிருந்தால் நான் சொல்லுவேன்" என்று கேசவன் கூறிவிட்டு "அது உங்கள் சாவி தானே? இல்லை கள்ளச் சாவியா பாருங்கள்?" என்று துரைசாமியினிடம் சொன்னன்.

துரைசாமி சாவியைக் கையிலெடுத்துப் பார்த்தார். அது கம்பெனியில் செய்த சாவி போலன்றி மிகவும் மோட்டாவாக இருந்தது.

"இது என்னுடையதல்ல, கம்பெனி சாவியில் நெம்பர் இருக்கும். அது இதில் இல்லையே" என்றர்.

கேசவன் அதைத் தன் கையில் வாங்கிப் பார்த்து "இது யாரோ சாவி போடுபவன் தயார் செய்தது" என்றன்.

"அதற்கு முதலில் பீரோ சாவித் துவாரத்திற்கு அளவு எடுத்துக்கொள்ள வேண்டாமா?" என்று கோபதி கேட்டான்.

"அதென்ன பெரிய காரியம்? நான்தான் பாதி நேரம் மயக்கமாகப் படுத்திருக்கிறேன். என் அறையினுள்ளே டெலிபோன் பேச வருகிறது போல் வந்து சமயம் பார்த்து சாவித் துவாரம் அடையாளம் எடுத்துக் கொண்டு போனால் போச்சு" என்று கேசவன் கூறினான்.

"ஆனால் இது முதல்தரப் பெட்டியாயிற்றே. பிரத்தியேகமான பூட்டுப் பொருத்தியிருப்பார்கள். சாவியும் 'காபி' அடிக்க முடியாதபடி இருக்குமே" என்றான் கோபதி.

"எந்தப் பூட்டாயிருந்தாலும் மறு சாவி போட்டு விடலாம் பத்து சாவிகள் வைத்திருந்தால் ஏதாவது ஒன்று சரியாய்ப் பொருந்துகிறது."

"ஓஹோ, அப்படியா?"

இவர்களிருவரும் இப்படி மிகவும் நிதானமாய்ப் பேசிக்கொண்டிருப்பதைக் கண்ட துரைசாமி தமது பொறுமையை இழந்தார்.

"எப்படியோ திறந்தான்! அது யார் திறந்தது என்று தான் தெரியவேண்டும்" என்று துரைசாமி கூறிவிட்டு, 'என்ன கோபதி!' என்று கேட்டு அவன் பதிலை எதிர் பார்த்து நின்றார்.

"இது யாரோ செய்த வேலை!"

"யாரோ என்றால்?"

"அநேகமாக இந்த வீட்டைப் பற்றிய தகவல்கள் எல்லாம் தெரிந்தவனாகத்தான் இருக்க வேண்டும். என் பெட்டியில் சாவி இருப்பதனால் என் மேல் நீங்கள் சந்தேகப்படுவது நியாயம். ஆனால், சத்தியமாகச் சொல்கிறேன் எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் வெளியில் சென்றிருக்கும் சமயம் பார்த்து இந்த அறைக்

குள் யாரோ வந்து பெட்டி, படுக்கை எல்லாம் சோதனை செய்து பார்த்திருக்கிறார்கள். திருடிவிட்டுச் சாவியை என் பெட்டியில் ஒளித்து வைத்திருக்கிறார்கள்'' என்றான் கோபதி.

இதைக் கேட்டுக் கேசவன் வாய் விட்டுச் சிரித்தான்.

''ஏன் தம்பி! நீ சொல்கிறதைப் பார்த்தால் அந்தத் திருடன் பைத்தியம் பிடித்தவனாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சமான்களைத் திருடியவன் ஓடப் பார்ப்பானா, இல்லை நிதானமாக உன் அறைக்கு வந்து சாவியை ஒளித்து வைத்துக்கொண்டிருப்பானா?'' என்று கேட்டான்.

இந்தக் கேள்வி கோபதியின் ஆத்திரத்தைக் கிளறி விட்டது. தனக்குத் தெரிந்த விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்று வாயெடுத்தான். ஆனால், சட்டென்று தன்னை அடக்கிக் கொண்டான்.

''நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் அவன் நகையை மட்டும் எங்கே ஒளித்து வைத்திருப்பான்? என்று கேட்டான்.

''அதுதான் அவன் சாமர்த்தியம்'' என்று கேசவன் கூறிவிட்டு ''துரைசாமி தங்கமான மனிதர். நடந்ததை நடந்தபடி சொல்லிவிட்டால் அவர் ஒன்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள மாட்டார்'' என்றான்.

''நடந்ததை யார் சொல்ல வேண்டுமென்பதுதான் கேள்வி'' என்றான் கோபதி.

''தம்பி, அதைப் பற்றி அவருக்குச் சந்தேகமே கிடையாது. நீ என்னமோ, அவருக்கு மாப்பிள்ளையாக வரப்போகிற பையனுக்கு வேண்டியவன் என்று சொல்லிக் கொண்டு வந்தாயே'' என்று மிகவும் பொறுமையாயிருக்கிறார். அவர் பொறுமையைச் சோதனை செய்யாதே!'' என்றான்.

''சோதனை செய்வதற்கு நீ இன்னும் ஏதாவது பாக்கி வைத்திருக்கிறாயா?'' என்று கோபதி நக்கலாகக் கேட்டான்.

இந்தக் கேள்வி கேசவனைச் சிறிது தடுமாறச் செய்தது. அவன், ''நான் நோயாளியாய்ப் படுத்துவிட்டேன். இல்லாமல் போனால் இங்கே ஒரு வினாடிகூட அனாவசியமாக தங்கியிருக்க மாட்டேன். அதுவும் அவர் தொந்தரவின் மேல் இருந்து வருகிறேன். அதைப் பற்றிக் கேட்க நீ யார்?'' என்று கேட்டான்.

''இந்தத் திருட்டைப் பற்றி விசாரிக்க நீ யார்?'' என்று பதிலுக்கு வினவினான்.

''நான் படுத்திருந்த அறையிலிருந்து திருட்டுப் போனதால் அதைப் பற்றி எனக்குக் கொஞ்சம் பொறுப்பு உண்டு.''

''கொஞ்சம் என்ன? நிறைய உண்டு! இந்தச் சாவியைப் போட்டுத்தான் பீரோவைத் திறந்திருப்பார்கள் என்று உனக்கு எப்படித் தெரியும்?''

கோபதியின் இந்தக் கேள்விக்குக் கேசவன் பதில் சொல்ல முடியாமல் தயங்கினான்.

''இது பீரோவிற்கு சரியாய் இருக்குமென்று உனக்கு முன்னாலேயே தெரியுமா? நீ பீரோ சாவியை முன்னாடியே பார்த்திருக்கிறா யல்லவா!'' என்று கோபதி கேட்டான்.

துரைசாமி, ''சாவி பீரோ இருக்கிற அறையிலிருந்து காணமற் போய்விட்டது!'' என்றார்.

''ஓ! அப்படியா! எப்போது?''

''இந்தக் கேசவன் வருகிறதற்கு முன்னால் தானிருக்கும்.''

''இல்லை, வந்த பிறகுதான். ஒருநாள் அறையில் வைத்துவிட்டுப் போனேன். பிறகு காணவில்லை!''

'ஓ!' என்று கோபதி கேசவனைப் பார்த்து ஒருவிதமாகக் கூறினான்.

"என்ன துரைசாமி! என்ன சொல்லுகிறீர்?" என்று கேசவன் அவரைப் பார்த்துச் சீறினான்.

"ஒன்றுமில்லையே. சாவி கெட்டுப் போய்விட்டது என்று சொன்னேன். அவ்வளவுதான்" என்று துரைசாமி சமாதானம் கூறினார்.

"அவன், தன் பெட்டிக்குள்ளிருந்த சாவி, பீரோவிற்குச் சரியாக இருக்குமா என்று கேட்கிறான் அல்லவா? அதை முதலில் பார்த்து விடுவோம். வாருங்கள் அந்த அறைக்கு" என்று கேசவன் கூறி நகர்ந்து, நகர்ந்து தன் அறைக்குச் சென்றான். மற்றவர்களும் அவனைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

சாவி, கேசவன் கையிலேயே இருந்தது. அதை அவன் துரைசாமியினிடம் கொடுத்துப் பீரோவைப் பூட்டித் திறந்து பார்க்கச் சொன்னான்.

அவர் அப்படியே செய்தார். சாவி அதன் துவாரத்தில் பொருத்தமாக அமைந்து சுலபமாகப் பூட்டித் திறந்தது.

இதையெல்லாம் கோபதி வேடிக்கை பார்ப்பது போல் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

"இப்போது என்ன சொல்லுகிறாய்?" என்று கேசவன் கோபதியைக் கேட்டான்.

"சாவி சரியாயிருக்கிறது என்று சொல்லுகிறேன்" என்றான் கோபதி.

"என்ன தம்பி தமாஷ் செய்கிறாய்?" என்று கேசவன் கோபமாகக் கேட்டான்.

கோபதி, அவனை அலட்சியமாகப் பார்த்து "ஆமாம்! வீட்டுக்காரர், சொத்துக்குடையவர் இதோ இருக்கிறார்—

அவர் கேட்கட்டும் நான் பதில் சொல்லுகிறேன். அவ ருக்கில்லாத சிரத்தை உனக்கு எங்கிருந்து வந்தது?'' என்றான்.

''அவர் சாது. ஒரு அப்பாவி. அவரை ஏமாற்றி விடலாம் என்று பார்க்கிறாயா? அவர் விட்டாலும் நான் விடப் போவதில்லை'' என்று கேசவன் கூறித் தானிருந்த இடத்திலேயே உடலை உயரே தூக்கிப் போட்டுக் கொண்டு கூச்சலிட்டான்.

துரைசாமிக்கு முதலில் தன் மீதே கோபம் வந்தது. தாம் ஒரு சாது. அப்பாவி என்று பரிகசிக்கப்பட்டு பரி தாபப் படும்படியாகவா இருக்கிறோம் என்று எண்ணிய போது அவருக்கு அவமானமா யிருந்தது. உடல் துடித் தது.

தாம் அப்படி ஏமாற்றப்படக் கூடியவர் அல்ல என்று நிரூபிக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றிற்று. முக்கியமாகக் கேசவன் தன்னைப் பற்றி பயப்படச் செய்ய வேண்டுமென்று விரும்பினார்.

அவர் தமது பல்லைக் கடித்தார். ''என்னை அப்பாவி என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதுதான் என்னை ஏமாற்றிச் சுரண்டப் பார்க்கிறீர்கள்! இது நல்ல தற்குக் காலமில்லை. ஏதோ மரியாதைக்குக் கட்டுப்பட் டுப் பொறுமையுடனிருந்தால் உங்கள் கைவரிசையை என்னிடமா காட்டுகிறீர்கள்?'' என்று உரக்கப் பேசிக் கொண்டே போனார்.

இதைக் கேட்டுக் கேசவன் பிரமித்துப் போனான். அவர் இந்தச் சந்தர்ப்பத்தை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு தன்மீதும் இப்படி மறைமுகமாகப் பாய்வா ரென்று அவன் எதிர்பார்த்து இருக்கவில்லை. கோப திக்கோ அவர் இவ்வளவு தன்னம்பிக்கையுடனும், தைரியமாகவும் பேசியது திருப்தியை அளித்தது. அந் தத் திருப்தி அவன் உதடுகளில் ஒரு புன்னகையாக அரும்பி வெளிப்பட்டது.

அதைப் பார்த்த துரைசாமியின் கோபம் பன் மடங்கு அதிகமாயிற்று. அவர் தம் கால்களை கீழே உதைத்துக்கொண்டு கோபதியை வெறித்துப் பார்த்து ''ஏய் சிரிக்கிருயா? என்னைக் கண்டால் உனக்கு அவ்வளவு கேவலமாகத் தோன்றுகிறதா? என் வீட்டிலேயே என்னைப் பரிகசிக்கிருயா?'' என்று கேட்ட வண்ணம் அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தார். ஒன்றும் கண்ணில் தென்படவில்லை. பீரோவிற்குள் ஒரு சிறிய கைப் பெட்டி இருந்தது. அதை எடுத்துக்கொண்டு அவன்மீது எறிவதற்காகத் தம்மிரண்டு கைகளையும் உயரே தூக்கினுர்.

அப்போது அந்தக் கைகளை யாரோ பின்பக்கமிருந்து பிடித்துக்கொண்டார்கள். ''என்ன அப்பா, இது?'' என்று கேட்டவண்ணம் ரேவதி அவர் கைகளினின்றும் பெட்டியைப் பிடுங்கிக் கொண்டாள்.

''என்னை விடு! அந்த இரண்டு பயல்களையும் என்ன பண்ணுகிறேன் பார்!'' என்று துரைசாமி கூறிக் குதித்துக் கொண்டிருந்தார்.

''இப்படி வாருங்கள்!'' என்று அவர் மனைவி மரகதம் அவரை ஓரமாக இழுத்துச் சென்ருள். தாயும் மகளும் அப்போதுதான் உள்ளே நுழைந்தார்கள்.

''மாலை திருட்டுப் போனதைப் பற்றிக் கேள்விப்பட்டேன்; போனுல் போகிறது'' என்ருள் மரகதம்.

''போனுல் போகிறதாவது! அது என் அம்மா போட்டுக்கொண்டு இருந்ததாக்கும். ரேவதி கல்யாணத்திற்கு அதைப் போட்டுக் கொண்டாகணும். யார் எடுத்திருந்தாலும் சரி, மரியாதையாகக் கொடுத்துவிடுங்கள்!'' என்று துரைசாமி கூறி கேசவன், கோபதி இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

ரேவதி கோபதியை ஒரு விதமாக உற்று நோக்கினுள். ''உண்மையில் என்ன நடந்தது?! என்று அந்தப் பார்வைக்கு அர்த்தம். கோபதி அந்தக் கேள்வியை

ஊகித்துத் தன் முகத்தைக் கவலையில்லாதவன் போலவும், மிகவும் திருப்தி அடைந்திருப்பவன் போலவும் வைத்துக்கொண்டான்; இதைக் கவனித்த ரேவதி மன நிம்மதி அடைந்தாள்.

கேசவனுக்குத்தான் துரைசாமி பேசிய விதம் ஒரு புதிராயிருந்தது. அவர் பேச்சுவாக்கில் பொதுப்படையாகப் பேசுகிறாரா, அல்லது வேண்டுமென்றே தன்னையும் சேர்த்து சேர்த்து 'பயல்கள்...யாராயிருந்தாலும் சரி...' என்றெல்லாம் குறிப்பிடுகிறாரா என்று அவனுக்குப் புரியவில்லை.

''நீங்கள் அவனை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். உண்மையைக் கக்கச் சொல்கிறேன்'' என்று துரைசாமியிடம் கூறிவிட்டு கோபதி நின்று இருந்த இடம் நோக்கி நகரலானான் கேசவன்.

துரைசாமியின் மனம் குழம்பிப் போயிருந்தது. அப்போதிருந்த சூழ்நிலையில் அவர் கோபதி மீதுதான் சந்தேகப்பட்டிருக்க வேண்டியதாயினும் பீரோ சாவி அந்த அறையிலிருந்து காணமற்போய்விட்டதை அவர் மறநது விடவில்லை. கேசவனே அதை எடுத்து வைத்திருக்கக் கூடும் என்ற சந்தேகம் உள்ளூற இருந்துவந்தது.

''ஏன் கேசவன்! என் சாவியை நான் இங்கே வைத்து விட்டுப் போனது மாயமாய் மறைந்துவிட்டதே! அது அப்புறம் அகப்பட்டதா?'' என்று கேட்டார்.

''அதைப்பற்றி நான் மறந்தே போய்விட்டேன். அதைத்தான் இந்த உள்ளிலிருந்து எடுத்துக்கொண்டு போயிருக்க வேண்டு...என்று கேசவன் கூறிக்கொண்டிருந்தபோது கோபதி குறுக்கிட்டு 'எடுத்துக்கொண்டு போய்?' என்றான்.

அதிலிருந்த எண்ணை அரம்போட்டு ராவி, பழசு மாதிரி செய்திருக்கணும்?''

''எதற்காகவோ?''

''அந்த ரகசியம் உனக்குத் தெரியும்!''

ரேவதி ''அவர் ஒன்றும் அப்படிச் செய்யமாட்டார் செய்வதற்கும் அவகாசமில்லை!'' என்ருள்.

''ஓ!...அவனுக்குப் பரிந்து பேச நீ ஒருத்தி இருக்கிருயா? அதை மறந்துவிட்டேன். இப்போது என்மீது அநாவசியமாக சந்தேகமேற்பட்டிருக்கிறது. இதை என்னுல் சகித்துக்கொண்டிருக்க முடியாது. எப்படியும் உண்மை வெளியாக வேண்டும்! நான் அவனை விடப் போவதில்லை!'' என்று கேசவன் ஆவேசம் வந்தவன் போல் கூறிஞன்; சிரமப்பட்டு எழுந்து நிற்க முயற்சி செய்துகொண்டிருந்தான்.

கோபதி ''நாஞே, அல்லது நீயோ, யாராயிருந்தாலும் சரி, நீ அநாவசியமாகத் தொந்தரவு செய்துகொள்ளவேண்டியதில்லை. நானே போலீசைச் கூப்பிடுகிறேன்'' என்று கூறிக்கொண்டே டெலிபோனிருந்த இடம் சென்ருன்.

மறுகணம் கேசவன் அவனை நோக்கிப் பாய்ந்தான். அவனுடைய கால்சுளுக்கெல்லாம் எங்கேயோ போய்விட்டதைக் கண்டு துரைசாமி, முதலியவர்கள் தங்கள் கண்களை நம்ப முடியாமல் திகைத்துப்போய் நின்றிருந்தனர்.

''போலீஸ்காரர்களிடம் நீ பொய் சொல்லி ஏமாற்றி விடுவாய். உன்னைப் போன்ற அயோக்கியனை நான் அப்படி தப்பவிடப்போவதில்லை'' என்று கூறியவண்ணம் கேசவன் கோபதி கையிலெடுத்த டெலிபோன் குழாயைக் கையால் தட்டிஞன். குழாய் தூரக் கீழே விழுந்தது. மறுகணம் அவன் கைகள் கோபதியின் மென்னியைப் பிடிக்கப் போயின. ஆனுல் கோபதி முன் ஜாக்கிரதையாகப் பின்னடைந்து சென்ருன். கேசவன் கையை ஓங்கிக் கோபதியை அறைவதற்காகப் பாய்ந்தான்.

அவன் கால்கள் திடீரென்று குணமாகிவிட்டதைக் கண்டு பிரமிப்படைந்திருந்த ரேவதி இந்தச் சண்டையைக் கவனித்ததும் ஓடிப்போய் கோபதிக்கும் கேசவனுக்குமிடையில் நின்ருள்.

"ரேவதி! நீ அந்தண்டை போ! நீ இதிலெல்லாம் தலையிடக் கூடாது. என் தம்பிக்குப் பெண்டாட்டியாய் வரப்போகிறவளாய் லட்சணமாய் நடந்துகொள்!" என்றான்.

"என்னடா சொல்கிறே?" என்று துரைசாமி கூச்சலிட்டார்.

கேசவன் நன்றாக நிமிர்ந்து அறையிலிருந்தவர்களை எல்லாம் அலட்சியமாகப் பார்த்தான். ஆறடி உயர முள்ளவனாய்—ஒரு குஸ்தி வீரனைப்போல் உடலமைப் புள்ள அவனைக் கண்டு கோபதியைத் தவிர மற்றவர்கள் நடுங்கிப்போயிருந்தனர்.

மரகதம் "ரேவதி, நீ இங்கே வா! என்று கூப்பிட் டாள். தன் கணவன் சண்டையிலீடுபடாதிருப்பதற்காக அவரைத் தன்னிரு கைகளாலும் பிடித்துக்கொண்டாள். கோபதியைப் பற்றி அவள் அவ்வளவாகக் கவலைப்பட வில்லை.

கோபதி ரேவதியைத் தன் கைகளால் மெதுவாய்ப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டு கேசவனை எதிர்க்கத் தயா ரானான். கேசவன் அவன்மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளினான். ஆனால் கோபதி உடனேயே சமாளித்துக் கொண்டெழுந்து விட்டான். ரேவதி மேஜையின் மீதி ருந்த ஒரு நல்ல கழியை எடுத்துக் கேசவன் தலையிலடித் தாள். அவன் அதை லட்சியம் செய்யவில்லை. அவளைத் திரும்பிப் பார்த்து "இவனைத் தீர்த்துக் கட்டிவிடுகிறேன். உன்னையும் உன் அம்மாவையும் அன்று கட்டியணைத்துக் கொண்டு வந்ததை மறந்துவிட்டாய் போலிருக்கிறது" என்று கூறிக்கொண்டே கோபதியைப் பிடிப்பதில் ஈடு பட்டான்.

கோபதி அவனிடம் அகப்படாமல் இருக்கப் பின்ன டைந்து சென்றவன் சோபாவில் கால் தடுக்கித் தடுமா றிப் போனான். கேசவன் அவன் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளினான்.

அவன் மார்புமீது ஏறி உட்கார்ந்து அவன் கழுத்தை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு தலையைத் தரையில் மோதலானான்.

ரேவதி "ஐயோ கொல்கிறானே! என்று கூறிய வண்ணம் ஒரு முக்காலியை எடுத்துக் கேசவன்மீது வீசி எறிந்தாள். துரைசாமி ஒரு நாற்காலியைத் தூக்கி அவன் மண்டையில் போட்டார். மரகதம் தன் கையில் அகப்பட்ட கூஜாவை அவனை நோக்கி எறிந்தாள்.

ஆனால் கேசவன் இத்தனைக்கும் அசைந்துகொடுக்கவில்லை. அவன் கைகள் கோபதியின் கழுத்தை மேலும் பலமாகப் பிடித்தன. கோபதியின் கண்கள் வெளியே பிதுங்கிக்கொண்டு வந்துவிடும்போல் இருந்தன. கோபதி தன்னிரு கைகளாலும் கேசவன் இடுப்பை நோக்கி அறைந்துகொண்டிருந்தன.

அப்போது அறைக்குள் நர்ஸ் ராதாபாய், டாக்டர் மார்த்தாண்டம், கேசவனது தம்பி கோவிந்தன் முதலியவர்கள் நுழைந்தார்கள். ராதாபாய் கீழே கோபதி கிடப்பதையும், அவன்மீது கேசவன் உட்கார்ந்திருப்பதையும் பார்த்ததும் கீச்சென்று கத்தினாள்.

"போலீசைக் கூப்பிடாமல் பேசாமலிருக்கிறீர்களே இந்த ராட்சஸன் அந்தப் பிள்ளையைக் கொன்று விடுவானே!" என்று கூறி தவித்துத் தன் கையிலிருந்த பையால் கேசவன் தலையில் அடித்தாள்.

கோபதியின் கைகள் கேசவனது மார்புப் பக்கம் மெதுவாகச் சென்றன. அவன் விரல்கள் ஹிருதயமிருந்த பக்கத்தைத் தடவிக் கொடுப்பதுபோலிருந்தன. பிறகு மணிக்கட்டால் தக், தக் என்று தட்டும் சப்தம் கேட்டது.

மறுகணம் கேசவன் கைகள் கோபதியின் கழுத்தை விட்டகன்றன. அவன் கண்கள் மூடின. உடல் தள்ளாடிற்று. அவன் ஒரு பக்கமாகச் சாய்ந்து விழுந்தான்.

ரேவதி உடனே ஓடிப்போய் கோபதியின் கைகளைப் பிடித்துத் தூக்கினாள். அவன் உட்கார்ந்ததும், அவன் கழுத்தைத் தடவிக்கொடுத்தாள். அவள் கண்களில் நீர் வழிந்துகொண்டிருந்தது.

'ஒன்றுமில்லை. பயப்படாதே என்று கோபதி கூறி, தலையை நாலுமுறை இப்படியும், அப்படியுமாக ஆட்டி சரிப்படுத்திக்கொண்டு எழுந்து நின்றான்.

மரகதத்திற்குத் தன் பெண் கோபதியினிடம் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்து வெறுப்படைந்திருந் தாள். பிறகு ஆபத்துக்குப் பாபமில்லை' என்று எண்ணி தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். மார்த் தாண்டமும், கோவிந்தனும் கோபதி இன்னும் உயிரோ டிருப்பதைப் பார்த்து ஆச்சர்யமடைந்தவர் போலிருந் தனர். துரைசாமியோ கேசவனைத் தாக்குவதற்காக சுவர் மூலையில் ஒரு முக்காலி மீதிருந்த பூ செருகி வைக் கும் 'வெஸ்' பாத்திரத்தைத் தூக்கி வந்து கீழே கிடந்த கேசவன் தலையில் அடித்தார்.

கேசவன், திடீரென்று எழுந்து தங்களை எல்லாம் தாக்குவான் என்று எல்லாரும் சற்று அப்பால் சென்று நின்றனர்.

கேசவன் புரண்டு கொடுத்தான். இன்னும் கண்கள் திறக்கவில்லை. அவன் மல்லாந்து படுத்தான். அவன் நீட்டியிருந்த கைகள் தளர்ந்துபோய் தொங்கிக்கொண் டிருப்பது போலிருந்தன.

அவன் தலை ஒரு பக்கம் சாய்ந்தது. அப்புறம் அது அசையவில்லை.

எல்லாரும் விழித்த கண் விழித்தபடி அவனைப் பார்த்து நின்றிருந்தார்கள்.

டாக்டர் மார்த்தாண்டம் அவனருகில் சென்று மூக் கில் கையை வைத்துப் பார்த்தார்.

''அண்ணு! உன்னைக் கொன்று விட்டார்களே!'' என்று கூவிக்கொண்டே கோவிந்தன் கேசவன் உடல்மீது விழுந்தான்.

21

அறையில் கோவிந்தன் கேசவனது பக்கத்திலமர்ந்து அவனைப் பார்த்துப் பார்த்துப் புலம்பும் சத்தம் மட்டுமே கேட்டது.

அவன் முதலில் 'அண்ணு!; அண்ணு!' என்று திரும்பத் திரும்பக் கதறிக்கொண்டிருந்தான். பிறகு ''என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாயே!'' என்று கூறிக் கத்தினுன். பிறகு ''இனி அண்ணு! என்று யாரைக் கூப்பிடுவேன்!'' என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

துரைசாமி இடிவிழுந்தவர்போல் நின்றிருந்தார். அவர் கைகளும், கால்களும் நடுங்கிக்கொண்டிருந்தன. படுக்கையிலிருந்த கேசவனது உடலைப் பார்ப்பதும், பிறகு முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொள்வதுமாக இருந்தார். அவருக்குத் தம் மனைவியையும், மகளையும் பார்ப்பதற்குக் கஷ்டமாயிருந்தது.

மரகதம் கண்களைப் பாதி மூடியவண்ணம் இடது கையை நெற்றியில் வைத்துக்கொண்டிருந்தாள். தன் குடும்பத்தில் இதுபோன்ற காரியங்கள் ஏன் நிகழ்கின்றன என்று அவளுக்குப் புரியவில்லை.

ரேவதி, கோபதியைப் பார்த்தபடி திகைத்துப்போய் நின்றிருந்தாள். நடைபெற்ற சம்பவம் அவள் மனத்தில் நன்ருக உறைக்கவில்லை. எல்லாம் ஏதோ துப்பறியும் நாவல்களில் வருவதைப்போலத் தோன்றிற்று.

டாக்டர் மார்த்தாண்டம் இடது கையால் தமது பின் கழுத்துப் பட்டையைத் தடவி விட்டுக்கொண்டே சிந்தித்தவண்ணமிருந்தார். கேசவனது இருதயம் திடீரென்று எப்படி நின்றுபோயிற்று என்பதைப்பற்றி அவர் வியந்துகொண்டிருப்பவர்போல் தோன்றிற்று.

சம்பிரதாயமான வாக்கியங்களைக்கூறிஅழுதுகொண் டிருந்த கோவிந்தன் திடீரென்று கைகளால் தன் தலை யில் போட்டுக்கொண்டான். ''நீ என்னைத் தம்பியாகவா வளர்த்தாய்; பாலூட்டிச், சாதமூட்டி, தொட்டியில் போட்டு, பாட்டுப் பாடி தூங்கச் செய்வாயே, எனக்கு நயமான வார்த்தைகள் சொல்லி விளக்கெண்ணெய் குடித்துவிடச் செய்வாயே! என் மூக்கைச் சிந்திவிடு வாயே, அண்ணா! இதோ மூக்கைச் சிந்திக்கொண்டிருக் கிறேன். கண்களைத் திறந்து பார்!...'' என்றெல்லாம் சொல்லிக்கொண்டே போனான்.

இந்தப் புலம்பல் வசனங்களை எல்லாம் 'உடன் பிறந் தான்' என்ற சினிமாப் படத்தில் ஒருவர் பேசிக்கேட்டது ஞாபகம் வந்தது.

திடீரென்று, கோவிந்தன் தன் இரு கைகளாலும் மார்பில் பலமாக அடித்துக்கொண்டு பலாக்கணம் பாடத் தொடங்கிவிட்டான்.

டாக்டர் மார்த்தாண்டம் அப்பொழுதுதான் அசைந்து கொடுத்தார். ''என்ன இது பெண்பிள்ளை மாதிரி?'' என்று கோவிந்தனை அதட்டினார். அவன் பாடு வதை நிறுத்திக்கொண்டான்.

உள்ளே வந்த ராதாபாய், ''நீங்கள் எதற்காக இங்கே நின்றுகொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே மரகதத்தையும் ரேவதியையும் அறையை விட்டு வெளியே இழுத்துச் சென்றாள்.

''எல்லாக கூத்தையும் நான் பார்த்துக்கொண்டுதா னிருக்கிறேன்'' என்று அவள் கூறி அவர்களை கோபதி தங்கியிருந்த அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

துரைசாமியும் அவர்கள் பின்னால் வந்தார். ''டாக் டர் என்னை அங்கே இருக்க வேண்டாமென்று சொல்லி விட்டார். மறுபடியும் சோதனை செய்து பார்க்கப்போகி றாராம்'' என்று அவர் கூறினார்.

அப்போது 'நர்ஸ்!' என்று மார்த்தாண்டம் கூப்பிடும் சப்தம் கேட்கவே ராதாபாய் ''இன்னும் என்ன தொல்லை! நான் அந்த ஆளைத் தொட்டு ஒன்றும் செய்யப்போவதில்லை!'' என்று முணுமுணுத்தாள்.

''நர்ஸ் ராதாபாய்!'' என்று டாக்டர் உரக்கக் கூப்பிட்டுக்கொண்டிருந்தார்.

''நான் இப்படியே வீட்டுக்குப் போய்விடப் போகிறேன்!'' என்று கூறி அவள் கிளம்பினாள்.

''அப்படிச் செய்வது நன்றாயிராது. போய் டாக்டருக்கு உதவி செய். ஒருவேளை அவர் பிழைத்துக்கொண்டாலும் பிழைத்துக்கொள்ளலாம்!'' என்று துரைசாமி அவளைக் கெஞ்சினார்.

''அவன் எதற்காக உயிரோடிருக்கிறது? இன்னும் நாலு குடும்பங்களைக் கெடுக்கவா? இவனைப் போன்றவர்களுக்கு உதவி செய்து பிழைக்க வைப்பது மகா பாவம்'' என்று ராதாபாய் கோபத்துடனும் அருவெறுப்புடனும் கூறினாள்.

''நர்ஸ் ராதாபாய் அம்மாள்!'' என்று டாக்டர் கூப்பிடுவது கேட்டது.

''கொஞ்சம் போ அம்மா! எனக்காகப் போ!'' என்று துரைசாமி கூறி ராதாபாய் முதுகைப் பிடித்துக் கொண்டு அறைக்கு வெளிப்பக்கம் தள்ளிச் சென்றார்.

''உங்களுக்காக வேண்டுமானால் போகிறேன்'' என்று ராதாபாய் சொல்லி விட்டுச் சென்றாள்.

மரகதம், இந்தக் காட்சியைப் பார்த்துச் சிலைபோல் இருந்தாள். ஆனால் ரேவதி, தன் தந்தை ராதாபாய் போன்ற ஒரு நர்ஸைத் தொட்டதைப் பெரிய விஷயமாக நினைக்கவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் யாரும் அப்படிச் செய்வது சகஜம் என்று நினைத்திருந்தாள்.

ராதாபாய் சென்றதும், ரேவதி ''டாக்டர் தனியாக இருக்க விரும்புகிறார்போல் இருக்கிறது. கோபதியையும் அனுப்பிவிடுவார். அவர் வந்தால் இப்போது நகை திருட்டுப் போனதைப் பற்றிய பேச்சையே எடுக்கவேண்டாம். பிறகு பேசிக்கொள்ளலாம்'' என்று தன் பெற்றோர்களைக் கேட்டுக்கொண்டாள்.

''ஏன்!'' என்று கேட்க மரகதம் வாயெடுத்தாள்.

அப்போது கோபதி வந்துவிடவே, அவள் அப்படிக் கேட்கவில்லை. ''நானும் உதவிக்காக இருக்கிறேன் என்றேன். ஆனால், டாக்டர் சோதனையின்போது அறைக்குள் யாரும் இருக்கக் கூடாதென்று என்னைக் கட்டாயப்படுத்திப் போகச் சொல்லிவிட்டார்'' என்று அவன் துரைசாமியைப் பார்த்துக் கூறினான். அப்போது கேசவனிருந்த அறைக் கதவு சாத்தித் தாளிடப்படும் சப்தம் கேட்டது.

''நாம் இருந்தால் என்னவாம்?'' என்றாள் ரேவதி.

''அந்தக் கண்றாவியை நாம் எதற்காகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று சொல்லியிருப்பார்?'' என்று துரைசாமி கூறினார்.

''உயிர் போய்விட்டதற்கான குறிகள் எல்லாம் இருக்கிறதே இன்னும் சோதனை எதற்கு?'' என்று மரகதம் கேட்டாள்.

''ஏதாவது செய்ய முடியுமா என்று பார்ப்பதற்குத் தான். சில சமயங்களில் தப்பித் தவறி பிழைத்துக் கொள்கிறதும் உண்டல்லவா? டாக்டர் அப்படித்தான் சொன்னார்'' என்றார் துரைசாமி.

''ஒன்றுக்கு மேல் ஒன்று நமக்குச் சோதனையாக நடந்து கொண்டிருக்கிறது'' என்று மரகதம் கூறி பெருமூச்சு விட்டாள்.

''எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. விஷயம் வெளியானால் பல தொந்தரவுகளுக்குள்ளாகும்படி நேரிடும். வெட்கக்கேடு வேறே. நாலுபேர் தம்மைப்

பற்றி என்ன சொல்வார்கள்? அதைப்பற்றி நினைத்துப் பார்க்கவே சகிக்கவில்லை'' என்று துரைசாமி மனம் நொந்து கூறினார்.

''எல்லாம் என்னால் வந்தது. பிறந்த நாளும், அதுவும் இதுவும் எனக்கெதற்கு? நான் என்ன குழந்தையா? அதைக் கொண்டாடப் போகத்தானே இப்படி எல்லாம் வந்து முடிந்தது. நீங்கள் சொன்னதைக் கேட்காமல் வெளியூர் சென்றதில் ஆரம்பித்தது'' என்று மரகதம் தன் கணவனைப் பார்த்துத் தொண்டை அடைக்கக் கூறினாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ நான் சொன்னபடி கேட்டிருந்தால் இதைவிட மோசமாக ஏதாவது நடந்திருக்குமா? என்னவோ'' என்று துரைசாமி அவளுக்குத் தேர்தல் கூறினார்.

ரேவதியும், கோபதியும் இந்தச் சம்பாஷணையைக் கேட்ட வண்ணம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு நின்றிருந்தனர்.

''ஒருவர்மேலும் தப்பில்லை. நாம் இரக்கப்பட்டவர்கள். தாட்சண்ய சுபாமுள்ளவர்கள். அதனால் யார் எது பேசினாலும், எது செய்தாலும் பொறுத்துக்கொண்டு பேசாதிருந்துவிடுகிறோம். மற்றவர்கள் நம்மை விரட்டிக் காரியத்தைச் சாதித்துக்கொள்கிறார்கள். கடைசியில் நாம் அகப்பட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது!'' என்று ரேவதி கூறினாள். அவள் தன் தந்தையின் சுபாவத்தைப் பற்றித் தன் மனதில் வைத்துக்கொண்டிருந்ததை இப்போது பச்சையாக எடுத்துச் சொல்லிவிட்டாள்.

துரைசாமி, தம் மகள் இப்படிக் கூறியதைக் கேட்டுக் கோபமோ, ஆச்சரியமோ அடையவில்லை. அவரே தம்மைத்தாம் நொந்துகொண்டிருந்தார்.

''ஆமாம் அம்மா! நீ சொல்வது சரிதான். நான் ஒரு பைத்தியம்! நன்றி உணர்ச்சி, நாலுபேர் என்ன

சொல்வார்கள் என்று உளறிக்கொண்டு ஏதாவது செய்துவிடுகிறேன்'' என்றார்.

''நல்ல குணமுள்ளவர்களா யிருப்பதற்காக தண்டனையா?'' என்று மரகதம் கேட்டாள்.

''நான் வராதிருந்தால் இட்படி எல்லாம் ஒன்றும் நேர்ந்திராது'' என்று கோபதி வருத்தந் தோய்ந்த குரலில் கூறினன்.

நீங்கள் ஹோட்டலில் தங்குவதாகத்தானே சொன்னீர்கள். நான்தானே உங்களை வற்புறுத்தி இங்கே வந்திருக்கச் செய்தேன். நீங்கள் வராதிருந்தால் அவனை வீட்டை விட்டே கிளப்பியிருக்க முடியாது. அவன் போகிற வழியாகவே இல்லையே'' என்றார் துரைசாமி.

''இப்போது இந்த உலகத்தை விட்டே போய்விட்டானே! அது எதில் வந்து முடியப்போகிறதோ?'' என்று மரகதம் திகிலுடன் கூறினள்.

''பார்க்கலாம்! டாக்டர் மறுபடியும் சோதனை செய்து பார்க்கிறார்! ஏதோ நம்பிக்கை இல்லாமலா அப்படிச் செய்வார்?'' என்று ரேவதி கூறினள்.

''ஆமாம்! காலை நீட்டவும் முடியாமல் மடக்கவும் முடியாமல் தவித்துக்கொண்டிருந்தவன் எப்படிப் பாய்ந்து பாய்ந்து ஓடிச் சண்டை போட்டான்?'' என்று மரகதம் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''ஆரம்பத்திலிருந்தே அந்த மனுஷன் சம்பந்தப்படுவது எல்லாம் அதிசயமாகத்தான் இருக்கிறது'' என்றாள் ரேவதி.

கொஞ்சம் இருங்கள், இதோ வந்துவிடுகிறேன் என்று கோபதி கூறிக்கொண்டே அறையைவிட்டு வெளியே சென்றான்.

துரைசாமியும், மரகதமும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். அதைக் கவனித்த ரேவதி அவர் ஒன்றும் தப்பியோடிவிட மாட்டார் என்று கூறினள்.

பிறகு தானும் அறைக் கதவருகில் சென்று கோபதி என்ன செய்கிறான் என்று கவனித்தாள்.

அவன் அடிமேல் அடி வைத்துச் சப்தப்படாமல் நடந்து சென்று கேசவன் அறைக் கதவுக்கு வெளியே நின்றான். காதைக் கதவு ஓரம் வைத்துக்கொண்டு நின்றிருந்தான். பிறகு கதவிடுக்கு வழியாக உள்ளே கவனித்தான்.

ரேவதி வந்த சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அவளைத் தன் பக்கம் வரும்படி சைகை காட்டினான். அவளும் சப்தப்படாமல் அவனருகில் சென்றாள். அவள் அவன் தோளைப் பிடித்துக்கொண்டே உட்பக்கம் எட்டிப் பார்த்தாள்.

தங்கள் பெண் கோபதியைப் பின்தொடர்ந்து சென்றதைக் கண்ட துரைசாமியும், மரகதமும் ஒரு பெருமூச்சு விட்டார்கள். அவள் தங்களுக்கு மாப்பிள்ளையாக வரப்போகிறவனின் நண்பனுடன் இப்படி பழகுவது அவர்களுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவர்களும் ரேவதி அவனுடன் போய்விடப் போகிறாளே என்று பயப்பட்டு அவளைப் பார்ப்பதற்காக கதவருகில் வந்தார்கள். அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிடச் செய்தது. ரேவதி கோபதிமீதிருந்த தன் கையை சட்டென்று எடுத்துக்கொண்டாள். அவள் அவன் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு கரகரவென்று தன் அறைக்குத் திரும்பினாள்.

தன் பெற்றோர்கள் தன்னை கவனித்துக்கொண்டிருந்துவிட்டு அப்போதுதான் மறுபடியும் உள்ளே செல்வதைக் கண்ணுற்ற ரேவதி ஆச்சர்யப்படவில்லை; தான் ஏதோ தவறு செய்துவிட்டதாகவும் உணரவில்லை.

அவள் கோபதியுடன் உள்ளே வந்ததும் கோவிந்தன் கதவுப் பக்கம் வந்துகொண்டு இருந்தான். அதற்காகத்தான் உங்களை இழுத்துக்கொண்டு வந்தேன் என்று ரேவதி அவனிடம் கூறினாள்.

மரகதம் தான் தன் பெண்ணை வேவு பார்த்ததைக் காண்பித்துக்கொள்ளாதிருக்க என்ன என்ன என்று விசாரித்தாள்.

கதவிடுக்கு வழியாக உள்ளே எட்டிப் பார்த்தோம். கேசவன் தானுகவே அசைந்துகொடுப்பதுபோலிருந்தது என்று ரேவதி மெதுவான குரலில் கூறினுள்.

ஆமாம் என்று கோபதி அவள் கூறியதை ஆமோதித்தான். பிழைத்துக்கொண்டு இருக்கிருனு? நல்லவேளை என்றுர் துரைசாமி.

அப்போது கதவு அழுத்திச் சாத்தப்படும் சப்தம் கேட்டது.

அவன் நல்ல பலசாலி? காண்டா மிருகம் மாதிரி அல்லவா தாக்கினுன் என்றுன் கோபதி.

உங்களை அடித்தபொழுது என் உயிர் எனக்கில்லை. கையில் குத்துவிட்டானே! வீங்கியிருக்கிறது போலிருக்கிறதே என்று ரேவதி கூறி கோபதியின் வலது கையைத் தடவிக்கொடுத்தாள். அவன் கையில் பனியனுக்குக் கீழே ஒரு முண்டுமாதிரியிருந்ததே.

அதெல்லாம் ஒன்றுமில்லை! நீ சாமான்களை எடுத்து அவன் மீதடித்தாயே! அந்த வேகத்தில் உன் கை சுளுக்கிக்கொண்டிருக்குமோ என்று எனக்கும் பயம். சாமான்களை பலமாகக் கையில் பிடித்ததில் உள்ளங்கை காய்ச்சிப் போய் இருக்குமோ? என்று கோபதி பரிதாபம் தோன்றக்கூறி ரேவதியின் கைகளைப் பிடித்துப் பார்த்தான்.

ரேவதி வெட்கப்பட்டவளாய் புன்னகை புரிந்த வண்ணம் ஒன்றுமில்லை என்று கூறிக் கையை அவன் பிடியினின்றும் இழுத்துக்கொண்டாள்.

துரைசாமி தன் தலையை நிமிர்த்தி உயரேயிருந்த உத்திரக்கட்டைகளை எண்ணலானுர். மரகதமோ சுவர் பக்கம் திரும்பி வெள்ளையடிக்கப்பட்டது நன்ருக இருக்கிறது என்று கவனித்துக்கொண்டு இருந்தாள். அவர்களிருவருக்கும் அங்கேயிருப்பது தர்மசங்கடமாக இருந்தது. ரேவதியும் கோபதியும் நடந்துகொள்ளும் விதம் பிடிக்கவில்லை-பிடிக்காமலுமில்லை! ஆனுல் அவர்களிரு

வரும் ஒருவர்மீது ஒருவர் ஆசைப்பட்டால் கல்யாணம் செய்துவைத்துவிடலாமே என்றுதான் அவர்கள் தங்கள் மனத்திற்குள் திட்டமிட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது டாக்டர் மார்த்தாண்டம் உள்ளே வந்தார். அவர் முகத்தில் சிறிது உற்சாகம் காணப்பட்டது.

என்ன நல்ல சேதிதானே என்று துரைசாமி விசாரித்தார்.

கொஞ்சம் நம்பிக்கைக்கு இடமிருக்கிறது. என்னிடம் சில பிரத்தியேக மருந்துகள் இருக்கின்றன. அவற்றை கொடுத்து பார்த்தேன்; மனுஷன் கைகால் அசைந்து கொடுத்தது.

நீங்கள் என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள்! என்றாள் மரகதம்.

அதற்குள்ளே அவசரப்படாதீர்கள்! இப்போது உயிர்போய்விட்டது என்று முடிவு செய்யவேண்டியதில்லை! அவ்வளவுதான் சொல்லலாம்! என்றார் மார்த்தாண்டம்.

அதுவே எவ்வளவோ பெரிதாயிற்றே! ஆண்டவன் எப்படியும் அவனைக் காப்பாற்றிவிடுவான் என்று தமக்குத்தானே தைரியம் கூறிக்கொண்டார்.

அப்படியே நம்புவோம்; ஆனால் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசி முடிவு செய்யவேண்டும்.

வேறு டாக்டரை வேண்டுமானாலும் உதவிக்குக்கூப்பிட்டுக்கொள்ளுங்கள்! நல்ல நர்ஸிங் ஹோமில் சேர்க்கலாம்! பணம் எத்தனை செலவழிந்தாலும் பாதகமில்லை என்றார் துரைசாமி.

நான் எது கூடாதென்று நினைக்கிறேனோ அதையே செய்யும்படியே சொல்கிறீர்களே! நீங்கள் விரும்புவது போல் செய்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபமில்லை; ஆனால் விஷயம் நாலுபேருக்குத் தெரிந்தால் என்ன

ஆகும். போன இடத்தில் உயிர்போய்விடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்! என்ன வியாதி—யார் சிகிச்சை செய்தார்கள் என்ற கேள்வி எழும். அப்போது நான் உள்ளதைச் சொல்லும்படி நான் நேரும். நான் ஒரு வைத்தியன். உண்மையை மறைப்பது என் வழக்கமில்லை.

"ஆகையினால் என்ன செய்யலாமென்கிறீர்கள்?" என்று ரேவதி கேட்டாள்.

அவன் உடலில் உயிர் இன்னும் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. அவனை இந்த இடத்தைவிட்டு முதலில் எடுத்துக்கொண்டு போய்விடுவோம்! பிறகு மற்ற விஷயங்களைப் பற்றி யோசனை செய்துகொள்ளலாம்!

எங்கே அழைத்துக்கொண்டு போகலாமென்கிறீர்கள் என்று துரைசாமி ஆவலுடன் கேட்டார்.

ஏற்கனவே பழைய மாம்பலத்தில்தங்கியிருந்தானே, நாம் போய் அழைத்துக்கொண்டு வந்தோமே, அதே இடத்திற்கு! அது ஒதுப்புறமாய் இருக்கிறது. அக்கம் பக்கத்தில் வீடுகள் ஒன்றும இல்லை. சரிதானே! என்று டாக்டர் கூறினார்.

துரைசாமி தலையை அசைத்துத் தம் சம்மதத்தை தெரிவித்தார். பிறகு அவர் தம்பி என்ன சொல்லுகிறாரோ? என்று கேட்டார்.

"நான் அவனைக் கலாட்டா செய்யாமலிருக்கச் சொல்லி இருக்கிறேன். வாயைத் திறக்கமாட்டான்."

"பணம் வேண்டுமானாலும் கொடுத்துவிடலாம்" என்றார் துரைசாமி.

"ஒரு தம்பிடி கொடுக்கக்கூடாது. அப்படி மிகவும் அவசியமானால் பிறகு நான் சொல்லுகிறேன்."

"டாக்டர்! நீங்கள் எனக்கு இவ்வளவு உதவி செய்வதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். இதற்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும்......" என்று

துரைசாமி கூறப்போனவர் தற்செயலாகத் தம் மகளின் முகத்தைப் பார்த்தார்.

அவள் முகத்தில் கோபம் தோன்றியதைக் கண்டதும், தாம் கேசவனுக்கு நன்றி செலுத்த முயற்சித்ததில் படும் கஷ்டங்கள் ஞாபகம் வந்ததும் அவர் தமது வாக்கியத்தை முடிக்காமல் "ஆமாம்! அந்த வரதன் எங்கே காணோம்! அவன் வீடுதானே மாம்பலத்திலிருப்பது!" என்று துரைசாமி டாக்டரை விசாரித்தார்.

"அவன் வீடுதான். அவனும் வந்திருக்கிறான். அவனிடம் நடந்ததை தெரிவித்திருக்கிறேன். வாயை மூடிக் கொண்டு பேசாமலிருக்கவேண்டும் என்றும் எச்சரித்திருக்கிறேன்" என்றார் டாக்டர்.

"தேவலையே! நீங்கள் சொன்னபடி எல்லோரும் கேட்கிறார்களே" என்று கோபதி அவரைப் பார்த்து ஒரு விதமாகப் புன்னகை புரிந்துகொண்டே கேட்டான்.

மார்த்தாண்டத்திற்கு அவன் கிண்டலாகவும், விஷமத்தனமாகவும் அப்படிக் கேட்கிறான் என்று தெரிந்தும் அதைக் காட்டிக்கொள்ளாமல் "இரண்டு பேரும் நல்ல பையன்கள்" என்று பதில் கூறி வைத்தார்.

"எப்போது கிளம்பலாம்" என்று துரைசாமி கேட்டார். "இன்னும் அரைமணிக்கெல்லாம் புறப்பட்டுவிடலாம். கோவிந்தன் சாமான்களை எல்லாம் மூட்டை கட்டிவைத்துக்கொண்டிருக்கிறான்" என்றார் டாக்டர்.

"ஓ! டோவனைப்பற்றி முன்னமேயே தீர்மானித்து விட்டீர்களா?" என்று கோபதி அவரைக் குத்திக்காட்டுவதுபோல் கேட்டான்.

மார்த்தாண்டம் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பயந்துவிடவில்லை. "எல்லாம் இந்தக் குடும்ப நன்மையை உத்தேசித்தேதான் செய்கிறேன். முக்கியமாக உன் நன்மையை உத்தேசித்துத்தான்" என்று பதிலளித்த வண்ணம் டாக்டர் அறையை விட்டுக் கிளம்பினார். போகும் போது மற்றவர்களைப் பார்த்து "நீங்கள் யாரும் வர

வேண்டியது இல்லை. இங்கேயே இருங்கள். நான் அவரை வண்டியில் ஏறத் தயாராக டிரெஸ் செய்துவைத்துவிட்டு வந்து சொல்கிறேன். அப்புறம் வரலாம்'' என்று கூறிவிட்டுப் போனார்.

ஆனால் கோபதி அவரைப் பின்தொடர்ந்து சென்றான். கேசவனது அறைக்குள்ளும் நுழைந்துவிட்டான். கேசவன் அன்றைய சம்பவம் நடப்பதற்கு முன்னால் எப்படிப் படுத்திருந்தானோ, அதேவிதம் கட்டிலில் படுத்திருந்தான். அவன் கண்கள் மூடி இருந்தன. கோவிந்தனும் வரதனும் அவன் கால்மாட்டில் துக்கமே உருவெடுத்து வந்தவர்கள்போல் நின்றிருந்தனர். ராதாபாய், கேசவனது மார்பில் ஒத்தடம் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

தன் வேண்டுகோளை மீறிக் கோபதி வந்ததைப் பார்த்து டாக்டர் ஆச்சரியப்பட்டார்.

''என்ன?'' என்று கேட்டார்.

''நீங்கள் என்னுடைய நன்மையை உத்தேசித்து ஏற்பாடுகள் செய்வதாகச் சொன்னீர்களே, அதற்காக என் நன்றியறிதலைத் தெரிவிக்க வந்தேன்'' என்றான்.

'அப்படியா?' என்று மார்த்தாண்டம் தலையை ஆட்டினார்.

''ஆனால் என் மனச்சாட்சி என்னை வாட்டிக்கொண்டிருக்கிறது. கேசவன் அவர்கள் இப்படிப் படுத்திருப்பதற்கு, பொறுப்பாளி நான்தான்'' என்று துக்கத்துடன் கோபதி கூறினான்.

அறையிலிருந்த மற்ற மூவரும் கோபதியைக் கண் கொட்டாமல் கவனித்துக்கொண்டிருந்தனர்.

''அவன் உங்களைத் தாக்கியதும் தவறுதானே'' என்றார் டாக்டர்.

''இருந்தாலும் கடைசியில் என்னுடைய அடியின் பலனாகத்தான் அவர்க்கு இந்த நிலைமை ஏற்பட்டு

விட்டது'' என்று கூறியவண்ணம் கோபதி கேசவனது படுக்கையின் சமீபம் வந்தான்.

வரதனும், கோவிந்தனும் அவன் பக்கமாக வந்தார்கள்.

கோபதி கேசவனது முகத்தைப் பார்த்து கைகளைக் கூப்பிய வண்ணம் ''என்னை மன்னித்துவிடுங்கள், மன்னிக்கத்தான் வேண்டும்'' என்று தழதழத்த குரலில் வேண்டி நின்றான்.

பிறகு ''நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டுக் கிளம்பினான்.

கதவுவரை சென்றவன் மறுபடியும் ''கடவுள் அருளால் அவர் பிழைத்துவிடட்டும் அவர் உயிர் துறந்தால் அதற்கு நான் ஜவாப்தாரி. நான்தான் குற்றவாளி, கொலைபாதகனானவன்' என்று பைத்தியம் பிடித்தவன் போல கத்தினான்.

டாக்டரும், மற்றவர்களும் வாய் திறவாமல் அவனையே கவனித்துக்கொண்டிருந்தனர். அவன் அந்த அறையில் இங்குமங்கும் நடந்து சென்றான். மார்த்தாண்டம் அவனிடம் வந்து ''நீ இப்படி எல்லாம் பேசி சப்தம் போட்டால் நோயாளிக்கு ஹிருதயத்தில் அதிர்ச்சி ஏற்படும். உயிரைக் காப்பாற்றக் கொஞ்ச நஞ்சமுள்ள சந்தர்ப்பமும் போய்விடும். நீ வெளியில் போய்விடு'' என்று கூறி அவனை மெதுவாகப் பிடித்து அறைக் கதவுப் பக்கம் தள்ளினார்.

கோபதி திரும்ப அவரைப் பார்த்தான். ''டாக்டர் ஸார் நான் ஒரு காரியம் அவசியம் செய்தாக வேண்டும். அது என் கடமையும் கூட, இல்லாவிட்டால் இந்த வீட்டுக்காரர் துரைசாமி அநாவசியமாகத் தொந்தரவுக்குள்ளாக நேரிடும். ஆகையால் நான் என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?'' என்று கேட்டார்.

பிறகு திடீரென்று டெலிபோன் இருக்குமிடம் பாய்ந்து சென்றான். ''நான் கேசவனைத் தாக்கியதில்

அவர் குற்றுயிரும் கொலையுயிருமா இருக்கிறார் என்று போலீசாருக்குத் தெரிவிக்கப்போகிறேன்'' என்று கூறிய வண்ணம் பேசும் குழாயைக் கையிலெடுத்தான்.

மறுகணம் வரதன் பாய்ந்து அந்தக் குழாயைத் தன் கையால் தட்டிவிட்டான்.

கோபதியோ அதை லட்சியம் செய்யாதவனாய்க் கேசவனைப் பார்த்தவண்ணமிருந்தான்.

கேசவன் உடல் எழுந்து உட்கார்ந்தது.

22

கட்டிலில் அசைவற்றுக் கிடந்த கேசவனது உடல் எழுந்திருந்து உட்கார்ந்ததைக் கண்ட கோபதி கட்டில் பக்கம் விரைந்து வந்தான். வரதன், தன் கையில் இருந்த டெலிபோன் குழாயைத் தட்டிவிட்டதைக் கூட அவன் அப்போது பெரிதாகக் கருதவில்லை.

''நல்லவேளை! பிழைத்துக்கொண்டுவிட்டார். கடவுள் காப்பாற்றிவிட்டார்''என்று கூறியவண்ணம் கேசவனைத் தொட்டுப் பார்ப்பதற்காகத் தன் கையை நீட்டினான்.

''தொடாதேடா, கொலைகாரா!'' என்று கோவிந்தன் அவனை அப்பால் பிடித்துத் தள்ளினான். அதேசமயம் கேசவனது உடல் பொத்தென்று படுக்கையில் விழுந்தது.

''யாரும் தொடக்கூடாது''என்று டாக்டரும் கூறிக் கொண்டிருக்கும்போது கேசவனது உடல் மறுபடியும் எழுந்து உட்கார்ந்தது.

இதைப் பார்த்து டாக்டரும், நர்ஸும் ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்தபோது அது விழுந்துவிட்டது.

"இது மாதிரி கேஸ் நான் பார்த்ததில்லை. ஆனால் சில தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களின் உடல் விறைத்துக் கொண்டு உட்காருமென்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றாள் நர்ஸ்.

"அபூர்வமாக இதுமாதிரியும் நிகழ்வதுண்டு. உயிர் போவதற்கு முன்னால் துடிப்பது உண்டே, அதில் இது ஒரு வகை. தவறான முறையில் யோகப்பயிற்சி செய்தால் இந்த அவஸ்தை உண்டாகும்" என்று டாக்டர் கூறி விட்டு, "அவருக்கு வலிப்புமாதிரி ஏதாவது வருவது உண்டா?" என்று விசாரித்தார்.

"சிறுவயதில் இருந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றான் கோவிந்தன்.

"பிறகு?"

"எனக்குத் தெரியாது. நான் அநேகமாக அவரோடு சேர்ந்து வசித்ததில்லை."

கோபதி இந்தச் சம்பாஷணையைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கு எதிரில் சற்றுத்தூரத்தில் வரதன் அவனை எந்தக்கணமும் தாக்கத் தயாராக இருப்பவன்போல் நின்றுகொண்டிருந்தான்.

டாக்டர் கேசவனது மூக்கில் விரலை வைத்துப் பார்த்துவிட்டு, அவன் நாடியையும், இருதயத்தையும் சோதனை செய்தார். அவர் முகத்தில் வியப்பும், மகிழ்ச்சியும் தோன்றின.

"இந்தக் கேஸ் என்னைப் பைத்தியம்பிடிக்க அடித்து விடும். உயிர்போய்விட்டதுபோலும் தோன்றுகிறது. ஊசலாடிக்கொண்டிருக்கும்போலும் இருக்கிறது!" என்றார்.

"ஊசலாடிக்கொண்டிருக்கிறதா? எப்படியாவது பிழைக்க வைத்துவிடுங்கள் டாக்டர்!" என்று அப்போது அறைக்குள் நுழைந்த துரைசாமி கெஞ்சினார்.

ரேவதியும், மரகதமும் அவருக்குப் பின்னால் வந்து கொண்டிருக்கிறார்களா என்று கோபதி கவனித்தான். அவர்களிருவரும் அறைக்கு வெளியிலேயே நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

''அவன் எப்படிப் பிழைப்பான்! அவன் எவ்வளவோ பலசாலி! ஆனால் இந்த மகாபாபிகள் எல்லோரும் சேர்ந்து அவனைக் கொன்றுவிட்டார்களே!'' என்று கோவிந்தன் அழுதான்.

கோபதி, கேசவனையே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான். துரைசாமி, படுக்கையில் கிடந்தவனைப் பார்ப்பதற்காகச் சற்று முன்னால் வந்தபோது ''அப்பாடா!'' என்று வலது காலைத் தூக்கி உள்ளங்காலைத் தடவிவிட்டுக்கொண்டார்.

கீழே கிடந்த டெலிபோன் குழாய் விளிம்பு உடைந்த துண்டு ஒன்று அவர் காலில் குத்திவிட்டது. அவர் டெலிபோன் இருக்குமிடத்தை நோக்கினார். குழாய் கீழே சற்றுத் தூரத்தில் கிடந்தது கண்ணில் பட்டது.

''என்ன இது?'' என்று கோபதியைக் கேட்டார்.

''அந்த ஆளைக் கேளுங்கள்'' என்று அவன் வரதனைச் சுட்டிக் காண்பித்தான்.

''எல்லாம் இவனால்தான் வந்தது. சும்மா, சும்மா போலீசுக்கு டெலிபோன் பண்ணுகிறேன் என்று ஓடுகிறான். அவன் எப்படியாவது உங்களை மாட்டிவைக்கப் பார்க்கிறான். தன்மேல் பழி வராதிருப்பதற்காக உங்களைக் காட்டிக்கொடுக்கப் போகிறான். அதற்கு நான் விட்டுவிடுவேனா?''

''உங்கள் கௌரவமென்ன? அந்தஸ்தென்ன? நீங்கள் கோர்ட்டில் போய் நிற்கலாமா!'' என்று வரதன் ஆத்திரத்துடன் மேலும் கேட்டான்.

அவன் கடைசியில் கூறிய இரண்டு வாக்கியங்களையும் ஆமோதிப்பவர்போல துரைசாமி தலையை ஆட்டினார்.

கோபதி, துரைசாமியையும் வரதனையும் மற்றவர்களையும் ஒவ்வொருவராகப் பார்த்தான். கேசவனையும் கவனித்தான். அவன் மூளை தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தது. அவன் துரைசாமியிடம் "இந்த ஆசாமி சொல்றது சரிதான் என்று தோன்றுகிறது. நான் உங்கள் நிலைமையைப்பற்றி அடியோடு மறந்து விட்டேன். விருந்தினனாக வந்திருக்கும் என்னால் உங்களுக்குக் கெட்ட பெயர் ஏற்படக்கூடாது. நான் இனி மேல் போலீசுக்கு டெலிபோன் செய்ய முயற்சிக்கமாட்டேன். மேலே செய்யவேண்டிய காரியங்களைக் கவனிக்கலாம்" என்றான்.

"என்ன செய்யவேண்டும்?" என்று துரைசாமி கேட்டார்.

"நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் அதைப் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதில் பயனில்லை. இதற்கெல்லாம் ஏதோ சடங்குகள் என்று பெரியவர்கள் ஒன்று வைத்திருக்கிறார்களே. அதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம்?"

"என்னது?" என்று கோவிந்தன் திகைப்புடன் கேட்டான். டாக்டரும், ராதாபாயும் கோபதி கூறியது என்னவென்று புரிந்துகொள்ளாதது போல் அவனை விழித்துப் பார்த்தனர்.

"போன உயிர் அப்பா என்றால் வரப்போகிறதா, ஐயா என்றால் வரப்போகிறதா? அடக்கஞ் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம் என்று கோபதி மிகவும் நிதானமாய்க் கூறினான்.

இதைக்கேட்டபோது டாக்டர் விழித்த கண் விழித்தபடி நின்றிருந்தார். கோவிந்தனும், வரதனும் கோபதியை வெறித்துப் பார்த்தனர். துரைசாமி பிரமை பிடித்தவர் போலிருந்தார்.

நர்ஸ் ராதாபாயின் உடல் பதறிற்று. அவள் கண்களில் இருந்து நீர் பொல பொலவென்று உதிர்ந்தது,

அவள் துக்கமும் கோபமும் நெஞ்சை அடைக்க "என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

அறையிலிருந்த ஒவ்வொருவரின் போக்கையும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த கோபதிக்கு, ராதா பாயின் கேள்வியும், அவள் அதைக் கேட்ட விதமும் ஆச் சரியமளித்தன.

"நீங்கள் மிகவும் இரக்க குணமுள்ள நர்ஸ். அது தான் இப்படி மற்றவர்களைவிடத் துக்கப்படுகிறீர்கள். நான் கேசவனது உடலை அடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பதை ஞாபகப்படுத்தினேன்" என் ருன். அவன் கடைசி வாக்கியத்தை வார்த்தை வார்த் தையாக அழுத்தந்திருத்தமாகச் சொன்னான்.

டாக்டருக்குத் திடீரென்று இருமல் உண்டாயிற்று. அவர் லொக், லொக் என்று தொடர்ந்து பலமுறை இருமினார். ராதாபாய் தன் கண்களைத் துடைத்துவிட் டுக்கொண்டாள். மறுபடியும் பழைய நர்ஸ் ஆனாள்.

அவள் மீதிருந்து தன் கண்களை எடுக்காமலேயே கவனித்துக்கொண்டிருந்த கோபதி "அவருக்கு இன்னும் நெருங்கிய பந்துக்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று அவளை விசாரித்தான்.

"அவருக்கு..." என்று ஆரம்பித்த ராதாபாய் திடீரென்று கோபமுற்று "இதெல்லாம் என்னைக் கேட் டால்?" என்று வினவினாள்.

"பின்னே யாரைக் கேட்கணும்?" என்றான் கோபதி.

"என்னை!" என்றான் கோவிந்தன்.

"மன்னிக்கணும். நீங்கள், அவர் தம்பி இருப்பது மறந்துபோய்விட்டது. உங்களைத் தவிர வேறு அண்ணன் தம்பி, அக்கா—தங்கைகள் இருக்கிறார்களா? தாயார் தகப்பனார் உண்டா? இன்னும் நெருங்கிய பந்துக்கள் யார் இருக்கிறார்கள்?"

"இதை எல்லாம் கேட்க நீ யார்? எதற்காக விசாரிக்கிறாய்?" என்றான் கோவிந்தன்.

"அவர் இப்படிப் படுத்திருப்பதற்கு நான் ஓரளவு காரணம். ஆகையால் என்னாலான உதவியைச் செய்ய விரும்புகிறேன். உங்களுடைய பந்துக்கள் விலாசம் தெரிவித்தால் அவர்களுக்கெல்லாம் தந்தி கொடுப்பேன். ஆனால் அவர்கள் வரும்வரையில் நாம் காத்திருக்கவேண்டியதில்லை. முக்கியமான பேர்வழி, அவர் தம்பி நீங்கள் இருக்கிறீர்கள்! நீங்களே அவருக்குக் கடைசி காலக் கடன்களை எல்லாம் செய்து முடித்துவிடலாம்," என்று கோபதி பதிலளித்துவிட்டு "நீங்கள் என்னம்மா சொல்கிறீர்கள்?" என்று ராதாபாயைப் பார்த்துக் கேட்டான்.

அவள் பதில் சொல்ல முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தாள். அவள் முகத்தைப் பார்த்தால், அவள் எந்த நிமிடமும் 'கோ' என்று வாயைவிட்டுக் கதறி அழத் தயாராயிருப்பவள் போல் தோன்றிற்று. டாக்டர் அவளைக் கோபமாகப் பார்த்தார். "இதுமாதிரி கோழை மனது உள்ளவர்கள் இந்தத் தொழிலுக்கு வந்திருக்கக்கூடாது. உங்களை எந்த மடையன் பரீட்சை தேறச் செய்தான் என்று தெரியவில்லை. உங்களைப்பற்றி நான் ரிப்போர்ட் செய்யப்போகிறேன்" என்று பயமுறுத்தினார்.

ராதாபாய் "சரியாய்த்தானே நடந்து கொள்கிறேன்" என்று முனகினாள்.

"பாவம்! அந்த அம்மாளை ஒன்றும் சொல்லாதீர்கள். இந்தக் கேஸ் ஒருவிதமாக முடிந்துவிட்டால் அவர் மன நிம்மதியாய் இருப்பார்!" என்று கோபதி டாக்டரிடம் கூறினான்.

பிறகு துரைசாமியினிடம் "நீங்கள் பேசாமல் போய்ப் படுத்திருங்கள். ஆகவேண்டியதெல்லாம் நானே பார்த்துக்கொள்கிறேன். கொத்தவால்சாவடி கடைகளில் எல்லா சாமான்களும் விற்கிறார்கள். இந்தமாதிரி

துக்க காரியத்துக்கு வேண்டிய ஆட்களெல்லாம் அங்கேயே கிடைப்பார்கள். இப்போதிருந்தே ஏற்பாடு செய்தால்தான் பகல் மூன்று மணிக்காவது உடலை எடுத்துச்செல்ல முடியும். நான் போய் வருகிறேன்'' என்று கோபதி கூறிக்கொண்டே அறையைவிட்டுப் புறப்பட்டான்.

அவனை இரண்டு கைகள் பிடித்துத் தடுத்தன. அந்தக் கைகள் ஒரு பெண்ணின் கைகளாயிருந்ததைக் கண்டு கோபதி ஆச்சர்யப்பட்டான். நர்ஸ் ராதாபாய் வழி மறித்து நின்றிருந்தாள். ''நீ யாரையா இதிலெல்லாம் தலையிடுவதற்கு? டாக்டர் இன்னும் அவரைப்பற்றி முடிவான அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அதற்குள் எதற்காக இப்படி எல்லாம் பேசிக் கூத்தடிக்கிறாய்?'' என்று அவனைக் கோபித்தாள்.

அப்போது அறைக்கு வெளியே வந்து நின்றிருந்த ரேவதியும், மரகதமும் இந்தக் காட்சியைப் பார்த்து தாடையில் கை வைத்து ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு யார் பேசுவதையும் செய்வதையும் நம்ப முடியாமலிருந்தது.

கோபதி தலையை நீட்டி ரேவதியை எட்டிப் பார்த்தான். ''என்ன ரேவதி! டாக்டர் இன்னும் கேசவனைப் பற்றி முடிவான அபிப்பிராயம் ஒன்றும் சொல்லவில்லையாம்! அதுவரைக்கும் நாம் அவர் உயிரோடிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்க வேண்டுமாம்!'' என்று பரிகசிக்கும் தொனியில் கூறினான்.

அந்தச் சூழ்நிலையில் கோபதி அப்படி வேடிக்கையாகப் பேசியது ரேவதிக்குப் பிடிக்கவில்லை. பிறகுதான் அவன் வேண்டுமென்றே ஏதோ ஒரு காரணத்திற்காக கூறியிருக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றிற்று. ''எப்படியாவது உயிரோடிருக்கிறார் என்று டாக்டர் சொன்னால் சரிதான். அப்படிச் சொல்லவேண்டுமென்று தானே நாமெல்லோரும் கடவுளை வேண்டிக்கொண்டிருக்கிறோம்'' என்றாள்.

இதுவரை வாய் திறவாது இருந்த டாக்டர் மாரத் தாண்டம் இப்போது ''அப்படிச் சொல்லு அம்மா. நான் எதற்கும் கடைசியாக ஒரு முறை சோதனை செய்து பார்த்துவிடுகிறேன். முன்போல் நீங்கள் எல்லாம் வெளி யில் போயிருங்கள்'' என்றார்.

''வாருங்கள்!'' என்று கோபதி துரைசாமியினிடம் கூறி அவரைக் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு அறையைவிட்டு வெளியேறினான்.

''நீங்களும் போங்கள்!'' என்று டாக்டர் கூறுவது அவன் காதில் விழுந்தது. மறுகணம் கோவிந்தனும், வரதனும் வெளியே வந்து அறைக்கு அப்பால் சற்றுத் தூரம் சென்றுநின்று பேசிக்கொண்டு இருந்தனர்.

கோபதியின் அறைக்குள் இருந்த துரைசாமி, மர கதம், ரேவதி ஆகியவர்கள் அவன் என்ன யோசனை சொல்லப்போகிறானென்று எதிர்பார்ப்பதுபோலிருந் தனர்.

''பாவம் கேசவனுக்கு உடலில் ஏதோ கோளாறு இருக்கிறது. அது நரம்பு சம்பந்தப்பட்டதாக இருக்கும் போல் இருக்கிறது! நான் அவரைப் பார்க்கச் சென் றேன...''என்று கோபதி ஆரம்பித்து தான் டெலிபோன் செய்ய முயற்சித்ததும் கேசவனது உடல் விறைத்து உட் கார்ந்ததைப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும் விவரமாகக் கூறினான்.

இந்த விவரங்களைக் கேட்டு மரகதமும் ரேவதியும் மனோ வேதனையடைந்தனர். கோபதி அளவுக்கு மீறி உரக்கப் பேசியது அவர்களுக்கு ஆச்சரியமாய் இருந்தது. அவனோ முன்னைவிடச் சப்தம் போட்டுச் சொல்ல லானான்.

''தம்பி கோவிந்தன் அண்ணன்மீது பிராணனை வைத் திருக்கிறான். அவனைப் பார்த்துப் பார்த்து மனமுருகிப் போகிறான். டாக்டர் மிகவும் கெட்டிக்காரரர்; மற்றவர் களைப்போல் கைவிட்டுவிடாமல் பிழைக்க வைக்கத் தன்

ஞல் ஆனதைச் செய்து வருகிருர். வரதனுக்கு உங்கள் குடும்ப விஷயத்தில் மிகவும் சிரத்தை போலிருக்கிறது. கேசவன் பிழைக்கிருர், பிழைக்கவில்லை என்பதைப் பற்றி அவர் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. மாமாவின் பெயர் இதில் அடிபடக் கூடாதென்று வரதன் பயப்படு கிருர். அதற்காக அவர் என்னைத் தாக்கக் கூடத் தயா ராயிருக்கிருர்...''

கோபதி எதற்காக இப்படி உரக்கப் பேசுகிரு னென்று புரியாமல் ரேவதி விழித்துக்கொண்டிருந்த போது அவன் திடீரென்று அறை வாசற்படிக்குச்சென்று வெளியே எட்டிப் பார்த்தான்.

''ஏன் இங்கே நிற்கிறீர்கள்? உள்ளே வாருங் களேன்!'' என்று அறை சமீபம் வெளியே நின்று கொண்டு இருந்த கோவிந்தனையும் வரதனையும் கூப்பிட் டான்.

''ஒன்றுமில்லை! கோவிந்தனுக்கு உங்களிடமெல்லாம் ...அந்த நர்ஸ் அம்மாளில்லாத சமயம் பார்த்துப் பேச வேண்டுமென்கிறது. அதற்காக உள்ளே வரவிருந்தவர் தயங்கிக்கொண்டு நிற்கிருர்'' என்று வரதன் தட்டுத் தடுமாறிக்கொண்டு சமாதானம் கூறினுன்.

''இதற்கு யோசனை என்ன? அவளைப் பற்றி எனக் கும் உங்களை விசாரிக்க வேண்டுமென்கிறதுதான். உள்ளே வாருங்கள்!'' என்று கோபதி கூறிக்கொண் டிருந்தபோது கேசவனது அறைக் கதவு திறந்தது. டாக்டர் வெளியே வந்து ''துரைசாமி எங்கே?'' என்று கேட்டார்.

''ஏன்?''என்று துரைசாமியே பதிலளித்துக்கொண்டு வந்தார்.

''கடவுளின் திருவிளையாடலை என்ன என்று சொல் வது?'' என்ருர் மார்த்தாண்டம். அவர் முகத்தில் சிறிது உற்சாகம் காணப்பட்டது.

"பிழைத்துவிட்டாரா?" என்று துரைசாமி ஆவலுடன் விசாரித்தார்.

"நல்ல சேதி சொல்லுங்கள்!" என்றான் கோவிந்தன்.

"இலேசாக—மிக மிக இலேசாக மூச்சு ஓட ஆரம்பிக்கிறது" என்று டாக்டர் கூறினார்.

துரைசாமியும் மரகதமும் தங்கள் கவலை அப்போதே தீர்ந்துவிட்டதுபோல் ஒரு பெருமூச்சு விட்டனர்.

"ஆனால் ஒன்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாது! எதற்கும் நாம் முன் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது! பெரிய ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு போகலாம்" என்றாள் மரகதம்.

"அந்தப் பேச்சே பேசக்கூடாது" என்றான் வரதன்.

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அது இரண்டு விதத்தில் நல்லது; ஒன்று நான் நிம்மதியாக வைத்தியம் செய்ய வசதியாயிருக்கும். இரண்டாவது ஆண்டவன் சித்தம் வேறாயிருந்து ஏதாவது நிகழ்ந்துவிட்டால் கூடியவரையில் விஷயம் வெளிவராமல் மற்ற காரியங்களைச் செய்து முடிக்கலாம். உங்கள் பெயர் அடிபடாமலுமிருக்கும்" என்றார் மார்த்தாண்டம்.

"அப்படியே செய்யுங்கள் டாக்டர்" என்றான் வரதன்.

"அதற்காகக் கேசவனை இங்கிருந்து எடுத்துக் கொண்டு போக வேண்டுமென்கிறீர்களாக்கும்?" என்று கோபதி கேட்டான்.

"ஆமாம்"

"எந்த இடத்திற்கு?" என்று துரைசாமி விசாரித்தார்.

"முன்னே அவர் வசித்திருந்தாரே பழைய மாம்ப லத்தில் அந்த இடத்திற்கு!" என்று வைத்தியர் தெரி வித்தார்.

"அது தனிமையான இடம்!" என்றான் வரதன்.

"ஆமாம்! அதுவும் இப்போது பெய்துகொண்டிருக் கிற மழையால் வீட்டைச் சுற்றிலும் தண்ணீர் தங்கி இருக்கும்—யாரும் அந்தப் பக்கம் வரமாட்டார்கள்!" என்று கோபதி கூறினான்.

"உங்களுக்கு அந்த இடம் தெரியுமா?" என்று கோவிந்தன் அவனைக் கேட்டான்.

"நான் இடத்தைப் பார்த்ததில்லை! ஒரு நாள் மாமா உங்கள் அண்ணனை வண்டியில் அழைத்துக்கொண்டு வந்ததைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். அதி லிருந்து உத்தேசமாகச் சொன்னேன்" என்றான் கோபதி.

"எப்போது கொண்டுபோகலாம்?" என்று கோவிந் தன் கேட்டான்.

"சாயங்காலம் வரை பார்க்கலாம். இருட்டியதும் ஒரு மோட்டார் வானில் ஏற்றிச் செல்லலாம். யாராவது கேட்டால் மயக்கம் என்று எல்லோரும் ஒரேவிதமாகச் சொல்லுங்கள்" என்றார் டாக்டர்.

எல்லோரும் தலையை ஆட்டினர்; "ஆமாம் ராதா பாய் அம்மாள் எங்கே? அங்கே தனியாகவா இருக்கிறார்?" என்று கோபதி கேட்டான்.

"நான்தான் நோயாளியின் பக்கத்தைவிட்டு அசை யக் கூடாது என்று சொல்லி உட்கார வைத்திருக்கி றேன்" என்றார் டாக்டர்.

"முதலில் அவளைப் போகச் சொல்லிவிட்டு வேறு நல்ல நர்ஸுக்கு ஏற்பாடு செய்யுங்கள்!" என்று கோவிந் தன் கூறினான்.

"அவளேதான் போகிறேன் என்கிருளே! நான் கட்டாயப்படுத்துவதற்காக இருந்துகொண்டிருக்கிருள்" என்றுடாக்டர் சமாதானம் கூறினுர்.

"அவளைப் போகச் சொல்லுங்கள்; எனக்கு எத்தனையோ நர்ஸுகளைத் தெரியும்! இப்போதே டெலிபோனில் பேசி பத்துப்பேரை வரச்சொல்லட்டுமா?" என்று கோபதி கிளம்பினுன்.

"இந்த மனுஷன் எதுக்கு எடுத்தாலும் டெலிபோன் செய்கிறேன் என்று எதற்காகக் கிளம்புகிருர்?" என்று வரதன் கோபமாகக் கேட்டான்.

"அதற்காகத்தான் டெலிபோனை உடைக்கப் பார்த்தாயாக்கும்?" என்று கோபதி வினவினுன்.

"நீங்கள் பேசாதிருங்கள்" என்று ரேவதி கூறி கோபதியின் கையைப் பிடித்து அவனை அப்பாலிழுத்தாள். அவனுக்கும் வரதனுக்கும் மறுபடியும் சண்டை ஏற்படுமே என்ற பயம் அவளுக்கு.

டாக்டர் கோவிந்தனையும், வரதனையும் அழைத்துக் கொண்டு நோயாளியின் அறைக்குச் சென்ருர். மற்றவர்களும் தங்கள் தங்கள் காரியங்களைக் கவனிக்கச் சென்றனர்.

இரவு எட்டுமணி சுமாருக்கு நல்லமழை பெய்து கொண்டிருந்தது. அப்போது கேசவனை கோவிந்தனும் வரதனும் தூக்கிக்கொண்டு வந்து பங்களா போர்ட்டிகோவில் தயாராய் நின்றிருந்த மோட்டார் வானுக்குள் ஒரு பெஞ்சியின்மீது படுக்கவைத்தனர். கோவிந்தனும் ராதாபாயும் அவனருகில் அமர்ந்தார்கள்.

துரைசாமி தாம் காலையில் வந்து பார்ப்பதாகக் கூறி டாக்டரை வழி அனுப்பினுர். ரேவதியும் மரகதமும் ஹாலுக்குள்ளேயே இருந்து வண்டி கிளம்பிச் செல்வதைக் கவனித்தனர்.

கோபதி மாடியிலிருந்து இறங்கி வந்து தனக்கு அவசரமாக வேலை இருக்கிறதென்றும் வெளியிலேயே சாப்பிட்டுவிட்டு வருவதாகவும் கூறினான்.

''மழையில் எப்படிப் போவீர்கள்? வண்டியை எடுத்துக்கொண்டுபோங்கள்'' என்று ரேவதி கூறிக்கொண்டே தன் கையிலிருந்த மோட்டார் வண்டியின் சாவியை அவனிடம் கொடுத்தாள்.

மறு நிமிடம் கோபதி வண்டியில் ஏறிக்கொண்டு அதைக் கிளப்பினான்.

''ஜாக்கிரதையாய்ப் போங்கள்'' என்று ரேவதி கூறினாள்.

வண்டி புறப்பட்டுவிட்டது. தன் மகள் வண்டிச் சாவியைத் தயாராய் வைத்துக்கொண்டிருந்து கோபதியினிடம் கொடுத்ததும் பிறகு ''ஜாக்கிரதை'' என்று கவலை தோன்றச் சொன்னதும் அவருக்கு ஒன்றும் புரிபடாமலிருந்தது.

23

துரைசாமியின் வீட்டினின்றும் கேசவன் மோட்டார் 'வானி'ல் ஏற்றிச் செல்லப்பட்ட பிறகு சில நிமிடங்கள் வரை, அவரும் அவரது குடும்பத்தினரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தனர். ''அப்பாடா!'' என்ற வார்த்தை அவர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொண்டு பெருமூச்சு விட்டனர். அவன் அந்த வீட்டைவிட்டு வெளியேறப் போகிறானா, அவனிடமிருந்து தப்பப்போகிறோமா என்றிருந்த அவர்கள் மனதில் நிம்மதி குடிகொள்ளத் தொடங்கியது.

சமையற்காரன் வந்து அவர்களைச் சாப்பிடக்கூப்பிட்டபோதுதான் அவர்களுக்குக் கோபதியைப் பற்றிய

ஞாபகம் வந்தது. ரேவதி அவனை அழைத்து வருவதற்காக மாடிப்படிகளிலேறச் சென்றபோது அவனே வேகமாகக் கீழே இறங்கி வந்தான்.

''எனக்குக் கொஞ்சம் அவசர வேலையிருக்கிறது நான் வெளியிலேயே சாப்பிட்டுக்கொள்கிறேன்'' என்று கூறியவண்ணம் அவள் பதிலை எதிர்பாராமலேயே வெளியில் சென்றுவிட்டான்.

அவன் அப்படிப் போய்விட்டதைப்பற்றி ரேவதி ஆச்சர்யப்படவில்லை. துரைசாமியும், மரகதமுமோ அதைப் பற்றிக் கவலைப்பட்டதாகக் காண்பித்துக் கொள்ளவில்லை.

அவர்கள் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்ளச் சென்றார்கள். யாரும் கேசவனைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை. அதைப் பற்றியே அவர்கள் மறந்திருக்க விரும்பினர்.

ரேவதி தான் வழக்கமாகப் படுக்கும் அறைக்குச் சென்றாள். துரைசாமியும் மரகதமும் கேசவன் பல வாரங்களாக ஆக்கிரமித்துக்கொண்டிருந்த தங்கள் அறைக்குச் சென்று பார்த்தனர். அவர்களுக்கு உள்ளே நுழையவும் அருவருப்பாயிருந்தது. ஆனால், கேசவன் மறுபடியும் திரும்ப வந்து அங்கே படுத்துக்கொண்டு விட்டானானால் என்ன செய்வதென்ற பயம் திகில் மரகதத்திற்கு. உடனேயே அறையை நன்றாக சுத்தம் செய்யச் செய்தாள். கணவனும் மனைவியும் அன்று தங்கள் அறையிலேயே படுத்துக்கொண்டனர். தலைசாய்ந்த சில நிமிடங்களுக்கெல்லாம் துரைசாமி குறட்டைவிடலானார். கேசவனிடமிருந்து தப்பிவிட்டோமென்ற மனத் திருப்தி அவருக்கு.

ஆனால், அவர் அவனைப்பற்றி கனவு காணாமலிருக்க முடியவில்லை. அவன் ஆவி அந்த அறைக்குள் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருப்பதுபோல் தோன்றிற்று. ஒரு சமயம் அது டெலிபோன் குழாயை எடுத்துப் பேச முயன்றதைக் கண்டதும் அலறிப் புடைத்துக்கொண்டு

எழுந்தார். அதே சமயத்தில் அறையிலிருந்த டெலி போன் மணி அலறிற்று.

மரகதம் விழித்துக்கொண்டு துரைசாமி உளரும லிருக்கும்படி செய்துவிட்டு டெலிபோன் குழாயை எடுத்துக் கேட்டாள்.

''நான்தான் ராதாபாய் பேசுகிறது'' என்று மரகதத்தின் காதில் விழுந்தது.

''என்ன, என்ன?'' என்று மரகதம் படபடப்புடன் விசாரித்தாள்.

''ஒன்றுமில்லை. எப்படியிருக்கிறீர்கள்? நிம்மதியாய் இருக்கிறீர்களா? என்று விசாரிக்கத்தான்.''

''அவர் உடம்பு குணமானால் எங்களுக்குக் கவலையில்லாமலிருக்கும். இப்பொழுது எப்படியிருக்கிறது?'' என்று மரகதம் விசாரித்தாள்.

''தேவலை. வண்டியில் வரும்போதுதான் அமர்க்களப்படுத்திவிட்டார். எழுந்திருந்து உட்கார்ந்து கொண்டு என்னை எங்கே தூக்கிப் போகிறீர்கள்?'' என்று கூச்சலிட்டார். வண்டிக் கதவைத் திறப்பதற்காகப் பாய்ந்தார். நானும் டாக்டரும் அவரை அடக்கிப் படுக்கவைப்பதற்குள் போதும், போதுமென்று ஆகிவிட்டது. 'என் சிநேகிதர் துரைசாமி வீட்டிற்குப் போகணும்' என்று புலம்பிக்கொண்டே இருந்தார். அந்த வீட்டிற்குப் போகிற வழியில் தண்ணீரும் சேறுமாக இருந்ததால் போய்ச் சேர மிகவும் சிரமப்பட்டது...''

''என்ன சொல்கிறாள்?'' என்று துசைராமி கவலையுடன் விசாரித்தார். மரகதம் ஒரு கையைக் காண்பித்து அவரைப் பேசாதிருக்கும்படி சைகை செய்தாள்.

''இப்போது எப்படியிருக்கிறார்?''

''தேவலை என்றே சொல்ல வேண்டும்''

''நல்ல வேளை!''

''நாடி சரியாக இருக்கிறது. முகம் தெளிவு கொடுத்திருக்கிறது. நன்ருகப் புரண்டு புரண்டு படுக்கிருர்.''

''நாடி சரியாக இருந்தால் ஆபத்து இல்லை என்று நிச்சயமாய் நம்பலாம். இல்லையா?''

மரகதம் இவ்வாறு டெலிபோனில் கூறியதைக் கேட்டு துரைசாமி தைரியமுற்ருர்.

''ஆமாம்! ஆனுல் அந்த மனிதனுக்கு உதவி செய்வதே பாவம். சுத்த முரடன்; என்னை எத்தனையோ முறை தொந்தரவுபடுத்த முயற்சி செய்திருக்கிருன். நான் உங்கள் வீட்டில் எதுவும் கலாட்டா ஏற்பட்டு விஷயம் அம்பலமாகக் கூடாதென்று பேசாதிருந்தேன். உங்களுக்காக நான் பொறுத்துக்கொண்டு இருந்து வந்தேன். நாளைக்கு நான் போய்விடப் போகிறேன்.''

''போவதற்கு முன்ஞல் இங்கே கட்டாயம் வந்து போகவேண்டும்.''

''வருகிறேன் மிஸ்டர் துரைசாமியைக் கவலையின்றித் தூங்கச் சொல்லுங்கள். நான் சொன்னேன் என்று சொல்லுங்கள்'' என்று ராதாபாய் கடைசியில் கூறிவிட்டுப் பேச்சை முடித்தாள்.

மரகதம் தன் கணவரிடம் ராதாபாய் கூறிய விவரங்களை எல்லாம் தெரிவித்தாள்.

''எல்லாம் முருகன் செயல்!'' என்ருர் துரைசாமி.

''என்னென்னமோ பயங்கரக் கனவு கண்டுகொண்டிருந்தேன். இந்தச் செய்தி கேட்ட பிறகு நன்ருகத் தூங்கலாம் போலிருக்கிறது.''

''ராதாபாய் உங்களைத் தூங்கச் சொல்லியிருக்கிருள்'' என்று மரகதம் விஷமத்தனமாகக் கூறிஞள்.

துரைசாமிக்கு இவள் இப்படிக் கூறியதின் அர்த்தம் விளங்கவில்லை. அவர் மூளை இப்போது எந்த விஷயத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. கேசவனுக்கு

நாடி ஓட்டம் சரியாய் இருக்கிறது. அவன் பிழைத்துக் கொண்டுவிடப்போகிறுன் என்ற நல்ல செய்திதான் அவர் மனத்தில் நிறைந்திருந்தது. இதே எண்ணத்துடன் அவர் படுத்து நன்ருகத் தூங்கலாஞர்.

இரவு சுமார் மூன்று மணி இருக்கும். டெலிபோன் மணி அடிக்கும் சப்தம் கேட்டு விழித்தெழுந்தார். மரகதம் நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தாளாதலால் அவரே எழுந்திருந்து சென்று குழாயை எடுத்துக் கேட்டார்.

''டாக்டர் மார்த்தாண்டம் பேசுகிறேன்'' என்பது காதில் விழுந்ததும் துரைசாமிக்குத் திகில் ஏற்பட்டது. பொழுது விடிவதற்கு முன்ஞல் அவர் தம்மை எதற்காகத்தான் கூப்பிடுவார்?''

''என்ன, என்ன?'' என்று துரைசாமி கேட்டார்.

''வந்து...கேசவன் இறந்துவிட்டார்''

''என்னது?''

''ஆமாம்!''

"குணமாயிருக்கிறதென்று ராதாபாய் சொன்ஞளே!''

''அதைப்பற்றி எல்லாம் நேரில் பேசிக்கொள்ளலாம். உடனே கிளம்பி வாருங்கள். நீங்கள்மட்டும் வந்தால் போதும்; விஷயத்தை அம்பலப்படுத்த வேண்டாம்!''

துரைசாமி குழாயை வைத்துவிட்டு நின்ற இடத்திலேயே நின்றிருந்தார். அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

பேச்சு சப்தத்தைக் கேட்டு எழுந்திருந்துவிட்ட மரகதம் என்ன செய்தியாய் இருக்கக்கூடும் என்று ஊகித்துக் கொண்டிருந்தாள். அவள் தன் கணவனைப் பிடித்து படுக்கைக்கு அழைத்து வந்து உட்காரச் செய்தாள். அவனையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த துரைசாமியின் கண்களில் நீர் ததும்பிற்று. ''கேசவன்...கேசவன்

போய்விட்டான்'' என்றுகூறி அழத்தொடங்கிவிட்டார். மரகதம் மிகவும் சிரமப்பட்டு அவர் அழுகையை நிறுத்தி நிதானமடையச் செய்தாள்.

''டாக்டர் என்னை உடனே வரச்சொன்னார்'' என்று துரைசாமி கூறி உடையுடுத்திக்கொண்டு கிளம்பினார்.

''இருட்டாய் இருக்கிறதே! நானும் வருகிறேன்'' என்றாள் மரகதம்.

வேண்டாம்! டாக்டர் என்னைமட்டும்தான் வரச் சொல்லியிருக்கிறார். விஷயம் ஒருவருக்கும் தெரியவேண்டாமென்றார். நீ ரேவதியினிடம் கூடச் சொல்லாதே!'' என்று கூறிவிட்டு துரைசாமி புறப்பட்டார்.

அவர் தமது சொந்த வண்டியை எடுத்துக்கொண்டு போக விரும்பவில்லை. வாசலில் தற்செயலாய் போய்க் கொண்டிருந்த ஒரு சைக்கிள் ரிக்ஷா வண்டியிலேறிச் சென்றார்.

அவர் பழைய மாம்பலத்திற்கு வருவதற்கு கிட்டத் தட்ட ஒருமணி நேரம் பிடித்தது. இரவெல்லாம் மழை பெய்திருந்ததால் அவர் செல்லவேண்டிய தெருவில் சேறும் தண்ணீருமாயிருந்தது. ரிக்ஷாவைத் தெருமுனையிலேயே நிறுத்தி அதற்கான வாடகையைக் கொடுத்து விட்டு நடந்து சென்றார்.

கேசவன் முதன்முதல் நோயாளியாய்ப் படுத்திருந்தானே அந்த வீட்டை மிகவும் சிரமப்பட்டு அடையாளங் கண்டுபிடித்துச் சென்றார்.

வீட்டு வாசலில் ஒரே இருட்டாய் இருந்தது. வெளியில் யாரும் மனிதர்கள் கண்ணில் படவில்லை. வீட்டுக் கதவருகில் செல்வதற்கும் அவருக்குத் தைரியமில்லை. இருந்தாலும் துணிந்து அடிமேலடி எடுத்து வைத்துச் சென்றார்.

கதவைத் தட்டினார் ஆனால், கதவு தானாகவே திறந்து கொண்டது. வீட்டுக்கு முன்பக்கத்திலேயே இருந்த

ஹாலுக்குள் எட்டிப் பார்த்தார். ஒரு மூலையில் ஹரிக்கேன் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அங்கிருந்த கட்டில் காலியாக இருந்தது. அதன்மீதுதான் முன்னர் கேசவன் படுத்துக்கொண்டிருப்பான். தலையை உள்ளே நன்ருக நீட்டி நாலு பக்கமும் பார்த்தார். யாருமே இல்லாததைக் கண்டு அவருக்கு உடல் நடுக்கமேற்பட்டது. கேசவன் பிசாசாக அங்கே சுற்றிக்கொண்டிருப்பாஞ என்று எண்ணவே சட்டென்று பின்வாங்கிச் சென்ருர்.

அப்போது ஏதோ தன்மீது இடித்துக்கொள்வது போல் உணரவே அது பிசாசுதான் என்று நிச்சயித்துக் கூச்சல் போடவிருந்தார்.

நான்தான் ராதாபாய்! என்று அவள் கூறியதைக கேட்டதுந்தான் அவருக்கு உயிர் வந்தது. அவள்தான் அங்கிருந்தாள்.

''எப்போது வந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''இப்போதுதான்! ராதாபாயா? நீ குணமாகிவிட்டது என்று போன் செய்தாயே!'' என்று கேட்டார்.

''ஆமாம்! அப்போது அப்படி இருந்தது. பிறகு அவர் நன்ருகக் கண்விழித்து எங்களோடு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார். உங்களைப் பற்றி மிகவும் புகழ்ந்து பேசிஞர். நீங்கள் தங்கமான மனிதர் என்ருர். பிறகு நன்ருகத் தூங்கிவிட்டார். ஒரு மணிக்கு கூக்குரலிடும் சப்தம் கேட்டது. அவர் உடலில் இழுப்புக்கண்டுவிட்டது. டாக்டர் என்னென்னமோ மருந்துகள் எல்லாம் கொடுத்துப் பார்த்தார்; பலனில்லை! உயிர் போய் விட்டது! உடனேதான் உங்களுக்குப் போன் செய்தார்'' என்ருள் ராதாபாய்.

துரைசாமி இந்த விவரங்களைக் கேட்டுக்கொண்டே சிலைபோல் நின்றிருந்தார். அவரை இங்கே அழைத்துக் கொண்டு வரவில்லையா! காணுமே! என்று கேட்டார்.

"இங்கே—இந்த அறையில்தான் ஒரு மணி நேரத்துக்கு முன் படுத்திருந்தார்" என்று ராதாபாய் பதிலளித்துவிட்டு "மேலே நடந்ததைச் சொல்கிறேன் வாருங்கள்" என்று கூறினாள்.

அவள் கையிலிருந்த ஒரு டார்ச்லைட் வெளிச்சத்தை காட்டிக்கொண்டே வீட்டின் பக்கமிருந்த தோட்ட வழியாகச் சென்றாள். துரைசாமி பின் தொடர்ந்தார்.

தோட்டத்தின் கடைசியில் மரங்களும், புதர்களும் அடர்ந்த ஒரு சிறிய தோப்பு இருந்தது. அதற்குள் ஒரு சிறு வெளிச்சம் மினுமினுத்தது.

ராதாபாய் சொல்லிக்கொண்டே நடந்தாள்.

"டாக்டர் உங்களுக்கு டெலிபோன் செய்த பிறகு நீங்கள் வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். வரதன் மருந்து வாங்கிக்கொண்டு உங்கள் பங்களா வாசல் பக்கம் வந்துகொண்டிருந்தான். அப்போது வீதிக்கு எதிர்பக்கம் நின்றிருந்த இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்ததில் கேசவன் பெயரும் உங்கள் பெயரும் அதிகம் அடிபட்டதாம். இதைக் கேட்டபோது டாக்டருக்கு யோசனை வந்துவிட்டது. அவர் மிகவும் கவலைப்பட்டார். தன்னைப்பற்றி அல்ல—உங்களைப்பற்றித்தான். எந்தக் காரணத்தைக்கொண்டும் உங்கள் பெயர் சந்தியிலிழுக்கப் படக் கூடாது என்று கூறினார். நீங்கள் வருவதற்குத் தாமதமாகவே பொழுது விடிந்துவிட்டால் என்ன செய்கிறது என்று தவித்தார். அவர் தம்பி கோவிந்தனிடம் உங்களுக்காக மிகவும் பரிந்து பேசினார். அவனை எவ்வளவோ வேண்டிக்கொண்டு தான் சொல்வது போல் மேலே காரியங்களைச் செய்வதற்குச் சம்மதிக்கும்படிச் செய்தார். கடைசியில் அவன் ஒருவாறு ஒப்புக் கொண்டான். பிறகுதான் கேசவன் உடலை எடுத்துக் கொண்டு போனார்கள்."

துரைசாமியும் ராதாபாயும் டாக்டர் நின்றிருந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள். வரதனும் அங்கே

இருந்தான்; அங்கே ஒரு சிறிய மின்சார பாட்டரி வெளிச்சம் தெரிந்தது.

அவர்களிருவர் கையிலும் மண்வெட்டிகள் இருந்தன. இருவரும் அதனுல் மண்ணை வெட்டிப் பக்கத்திலிருந்த பள்ளத்தில் போட்டுக்கொண்டிருந்தனர். துரைசாமிக்கு அவர்கள் முதுகுப் பக்கம்தான் தெரிந்தது.

''சீக்கிரம் ஆகட்டும் யாராவது வந்துவிடப் போகிருர்கள். வெளிச்சமாகிக் கொண்டு இருக்கிறது'' என்று டாக்டர் வரதனைத் துருசுப்படுத்திக் கொண்டிருந்தார்.

''என்ன செய்கிறீர்கள்!... என்ன செய்கிறீர்கள்!... என்று துரைசாமி வாய்குழறக் கேட்டார்.

''ஓ... நீங்கள் வந்துவிட்டீர்களா? இன்னும் கொஞ்சம் மண் போட்டால் நன்ருக மறைந்துவிடும்!''என்று கூறிக்கொண்டே மண்வெட்டியால் வெட்டினுர்.

அவர் இடுப்பில் பைஜாமா தரித்திருந்தார். மேல் சட்டையை முழங் கை வரை மடித்துக்கொண்டிருந்தார். அவர் உடம்பெல்லாம் வியர்வை ஓடிக்கொண்டிருந்தது. வரதனும் இதே மாதிரி காட்சியளித்தான். அவன் மண்ணை வெட்டிப் போடுவதில் மும்முரமாக இருந்தான்.

அவர்கள் நிரப்பிக்கொண்டு இருந்தது ஒரு குழி. துரைசாமி ஒரு பக்கமாகப் போய் நின்று உள்ளே எட்டிப் பார்த்தார். தலைமயிர் மாதிரித் தெரிந்தது. தோள் பட்டை மீது சட்டை காணப்பட்டது—அந்தச் சட்டை கேசவன் கடைசியாகத் தரித்திருந்ததுதான்.

துரைசாமிக்கு இப்போது சந்தேகத்துக்கிட மில்லாமல் விஷயம் புரிந்தது. அவர் வாய்விட்டுக் கதற முயன்ருர். பக்கத்தில் நின்றிருந்த ராதாபாய் இந்தச் செய்கையை எதிர்பார்த்ததுபோல் உடனே அவர் வாயைப் பொத்தினுள்.

சப்தம் போட்டால் கூட்டம் கூடிவிடும்! என்று ராதாபாய் மெதுவாக அவர் காதில் கூறினுள்.

''வரதன்! நான் துரைசாமியை அழைத்துக் கொண்டு போகிறேன். நீ நன்ருக மூடிவிடு. கடைசியில் மண்மேல் நன்ருகக் காலால் மிதித்துவிடு. புது மண் போட்ட அடையாளம் தெரியாமல் செய்துவிட வேண்டும். தழைகளைப் போட்டு மூடி வை. பிறகு நாலு கொடிகளை நட்டுவிடலாம்'' என்று மார்த்தாண்டம் வரதனுக்கு விவரமாகக் கூறினுர்.

பிறகு ராதாபாய் பக்கம் திரும்பி ''கோவிந்தன் அதோ அந்த மரத்தடியில் சோகம் போட்டுப் படுத்திருக்கிருன்; அவனைக் கவனி. அவனை எழுப்பி அழைத்துக் கொண்டு வா! நாங்கள் முன்ஞல் போகிறேம்!'' என்று மார்த்தாண்டம் அவளிடம் கூறிவிட்டுத் துரைசாமியின் கையைப் பிடித்துக் கொண்டு புறப்பட்டார்.

''இது என்ன காரியம்?'' என்று துரைசாமி கோபமாகவும், அழாக் குறையாகவும் கேட்டார்.

''ராதாபாய் உங்களுக்கு எல்லா விவரங்களும் சொல்லி இருப்பாளே. எல்லோருடைய நன்மையையும் உத்தேசித்து இப்படிச் செய்ய வேண்டியதாயிற்று. உங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தேன். உங்களிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு செய்யவேண்டுமென்பது. ஆஞல் நீங்கள் வராதிருந்து, பொழுதும் விடிந்துவிட்டால் என்ன செய்வது?'' என்ருர் டாக்டர்.

''எதற்காக இப்படித் திருட்டுத் தனமாகக் காரியங்கள் செய்யவேண்டும்? நாம் என்ன அவரைக் கொன்ருேமா?'' என்று துரைசாமி கேட்டார்.

''ஒரு மனிதன் இறந்தான் என்ருல் வேண்டுமென்று கொல்லப்பட்டாரா, வேண்டாமென்று கொல்லப்பட்டாரா என்று யாரும் கேட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள்.''

''அவன் தற்செயலாகத்தானே இறந்தான்''

''அதை யார் நிருபிப்பது? அவனுக்கும் கோபதிக்கும் தகராறு ஏற்பட்டு சண்டை நடந்தது. அவன் அவ

உடம்பில் குத்திஞன். ஆஞல் நாற்காலியாலும் மற்ற சாமான்களாலும் தாக்கியது நீங்களும் மற்றவர்களும் தானே!''

''என்னது?''

''ஆமாம்! நீங்கள் அடித்த அடி கேசவனது நெற்றிப் பொட்டில் பலமாகத் தாக்கிவிட்டது. உங்கள் மனைவி அடித்தது அவர் ஹிருதயத்தில் பட்டுவிட்டது. ரேவதி வீசியெறிந்த குறிப்புப் புத்தகம் அவர் முதுகு நரம்பை உடைத்துவிட்டது. இப்படியாகக் கோபதிதான் கேச வனது மரணத்திற்கு முக்கியமாகப் பொறுப்பாளியாக இருந்தாலும், உங்கள் எல்லோருக்கும் அதில் பங்கு உண்டு. கொலை செய்வதற்கு உடந்தையாயிருந்த குற் றம் ஏற்படும்.''

''அப்படியா?''

''ஆமாம்! நான் அசட்டுத்தனமாக ஒரு காரியம் செய்துவிட்டேன். அவனை உங்கள் வீட்டிலிருந்து அப்பு றப் படுத்தியதற்கு உடந்தையாயிருந்திருக்கக் கூடாது. நியாயமாக நான் அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்துச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அல்லது போலீசுக்கு ரிப்போர்ட் கொடுத்திருக்க வேண்டும். ஏதோ உங்களிடம் ஏற்பட்ட ஒரு பாசம் எனக்கு நீங்கள் போலீ சாரிடம் அகப்பட்டுக்கொள்வது பிடிக்கவில்லை.' எப்படி யாவது உங்கள் நல்ல பெயரைக் காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானித்துவிட்டேன். இதில் நீங்கள் மட்டுமா மாட்டிக்கொள்வீர்கள்? உங்கள் மனைவி, பெண் எல்லோ ரும். ஆகையிஞல்தான் அமுக்கிவிட முயற்சி செய் தேன்.

துரைசர்மி மார்த்தாண்டம் கூறியதைக் கவன மாகக் கேட்டு வந்தார். அவருக்கு டாக்டர் சொல்லிய காரணங்கள் சரியானவை என்று மனதில் படத் தொடங்கியது.

''கோவிந்தன் என்ன சொன்ஞன்?''

"அவன் காலில் விழுந்து இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொள்ளச் செய்தேன். அவனுக்கு ஏதாவது கொடுத்து அடக்கிவிடலாம். அதைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

துரைசாமி யோசனை செய்தவண்ணமிருந்தார். பிறகு திடீரென்று நான் இந்தத் தில்லுமல்லு காரியங்களுக்கு உடந்தையாயிருக்க மாட்டேன். சட்டப்படிதான் நடக்கப் போகிறேன். எனக்கு என்ன நிகழ்ந்தாலும் பாதகமில்லை. இதைப் பற்றி போலீசாருக்கு உடனே தகவல் கொடுத்தாக வேண்டும்" என்றார் துரைசாமி.

"சரி, செய்யுங்கள். ஆனால் நான் என்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா? ஆகையால் உங்களுக்கு முன்னால் நானே இப்போதே நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்கிறேன். நான் கேசவனுக்கு வைத்தியம் பார்த்ததாகவும், ஆனால் இந்தக் காரியங்கள் எல்லாம் உங்கள் ஏற்பாடு என்றும் தான் தெரிவிக்கும்படியாய் இருக்கும்" என்று நிதானமாய்க் கூறினார். பிறகு துரைசாமியின் கைகளை விட்டுவிட்டு தாம் மட்டும் போலீஸ் ஸ்டேஷன் போவதாகக் கூறிக் கிளம்பினார்.

துரைசாமி அவர் செல்வதைத் தடுத்தார். "எனக்கு ஒன்றுமே புரியவில்லை. வீட்டிற்குப் போய் மரகதத்திடம் சொல்கிறேன்" என்றார்.

"நான் கூறியதை அப்படியே சொல்லுங்கள், அந்த அம்மாள் என் யோசனையை ஒப்புக்கொள்வாள்" என்றார் மார்த்தாண்டம்.

பிறகு அவர் துரைசாமியைத் தமது மோட்டார் வண்டியிலேற்றி அவர் பங்களா வாசலில் விட்டுச் சென்றார். போகும்போது "இந்த விவரங்களை உமது மனைவியிடம் தவிர வேறு யாரிடமும் கூற வேண்டாம்" என்று எச்சரித்துவிட்டுச் சென்றார்.

டாக்டர் மார்த்தாண்டம் ஒரு பெரிய சிக்கலான காரியத்தை முடித்துவிட்ட திருப்தியுடன் திரும்பிச் சென்றுகொண்டிருந்தார்.

அப்போது எதிரே வந்த ஒரு டாக்ஸியிலிருந்தவர் வெளியே தலையை நீட்டித் தம்மைக் கவனிப்பதைக் கண்டார்.

அப்படிப் பார்த்தது கோபதி என்று தெரியவே அவ ருக்குத் திடுக்கிட்டது.

24

மரகதம் இருட்டில் எழுந்து சென்று தன் கணவன் திரும்பி வருவதைக் கவலையுடன் எதிர்பார்த்தாள். கேசவன் இறந்ததனால் விடுதலை பெற்றுவிட்டதுபோன்ற ஒரு வித மகிழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும், அதனாலேற் படக்கூடிய விளைவுகளைக் கற்பனை செய்து பார்த்துத் தன் மனத்தைச் சித்ரவதை செய்துகொண்டு இருந்தாள். அவனைப் பற்றி எண்ண அவளுக்கு ஒரு முடிவுதான் தோன்றிற்று. கூடியவரை அவன் சம்பந்தமாகப் பின்னால் எந்தச் சிக்கலிலும் மாட்டிக் கொள்ளாது இருக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று.

அவள் இவ்வாறெல்லாம் எண்ணிய வண்ணம் அயர்ந்து தூங்கிப் போய்விட்டாள்.

"என்ன அம்மா! மணி ஏழாகிறது. சாப்பிட வேண் டாமா?" என்று ரேவதி கேட்டுக்கொண்டே அறைக் குள் வந்த போதுதான் அவள் கண் விழித்தெழுந்தாள்.

"அப்பா எங்கே" என்றாள் ரேவதி.

"டாக்டர் மார்த்தாண்டம் டெலிபோன் செய் தார். கொஞ்சம் வந்துவிட்டுப் போகச் சொன்னார். அதற்காகப் போய் இருக்கிறார்"

"அவனுக்கு ஒன்றுமில்லையா!"

"இல்லை போலிருக்கிறது. அவர்தான் எங்கோ ஊருக்குப் போக வேண்டுமாம். பீஸ் சம்பந்தமாகப் பேச வரச் சொல்லியிருப்பார் போல் இருக்கிறது" என்று மரகதம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு சொன்னாள்.

"ஓ" என்றாள் ரேவதி. பிறகு "வண்டி, டிரைவர் இல்லையே எப்படிப் போனார்?" என்று கேட்டாள்.

"டாக்ஸி வைத்துக்கொண்டு போயிருப்பார்"

"எத்தனை மணிக்குச் சென்றார்?"

"நான் மணி பார்க்கவில்லை"

"அது கெடக்கட்டும். நீ ஏன் இப்படி இருக்கிறாய்?"

"எப்போதும் போலத்தானே இருக்கிறேன்" என்று மரகதம் கூறியபோது அவளுக்கு அழுகை வந்துவிட்டது.

ரேவதி அவளை அணைத்துக்கொண்டு தேற்றினாள். "அம்மா, கேசவன் உயிரோடு இருந்தாலும் சரி, செத்துத் தொலைந்து விட்டிருந்தாலும் சரி, நமக்கு எந்த விதத் தொந்தரவும் ஏற்படாது. அதைப் பற்றி நீ கவலைப் படாதே" என்று தைரியம் கூறினாள். பிறகு கடியாரத்தைப் பார்த்துவிட்டு "நான் ஒரு சிநேகிதியைப் பார்த்து விட்டு வருகிறேன். நீ எழுந்திருந்திருந்து போய்க் காப்பி சாப்பிடு" என்று கூறினாள். அவசரம் அவசரமாக மாற்றுடை தரித்துக்கொண்டு புறப்பட்டாள்.

அவள் வாசற்படியைத் தாண்டி வந்த பொழுது மரகதம் "கோபதியைப் பார்க்கவா?" என்று கேட்டாள்.

"இல்லை" என்று தலையை ஆட்டிவிட்டு ரேவதி சென்றுவிட்டாள்.

ரேவதிக்குத் தான் தன் தாயின் மனம் கஷ்டப்படும் படி நடந்துகொள்ளவேண்டி யிருக்கிறதே என்று வருத் தப் பட்டாள். வசந்தனை விவாகம் செய்துகொள்ளவிருக் கும் தான் கோபதியுடன் பழகுவது தன் தாய்க்குப் பிடிக்கவில்லை என்றும் அவள் எண்ணினாள்.

ஆனால், இது விஷயத்தில் மரகதத்தின் மனப் பான்மை மாறிவிட்டிருந்தது. ரேவதியும் கோபதியும் நெருங்கிப் பழகுவது என்னமோ அவளுக்கு முதலில் பிடிக்கவில்லைதான். ஆனால் பிறகு, "குழந்தைக்குப் பிடித்தவனைக் கல்யாணம் செய்துகொள்ளட்டுமே!" என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள். தன் கணவனிடமும் மறைமுகமாகத் தனது இந்த அபிப் பிராயத்தைத் தெரிவித்திருக்கிறாள். இனி கேசவனை அடி யோடு மறந்துவிட்டு ரேவதியின் கல்யாணத்திற்கு ஏற் பாடு செய்ய வேண்டுமென்று தீர்மானித்துக் கொண் டாள்.

துரைசாமி திரும்பி வந்து நேரே மாடியில் தமது அறைக்குச் சென்றார். மரகதம் அவரைப் பார்த்துத் திடுக்கிட்டாள். அவர் பேயறையப் பட்டவர் போலிருந் தார். மரகதம் கதவைச் சாத்திவிட்டு வந்து "அதற் குள் திரும்பிவிட்டீர்களே?" என்று கேட்டாள்.

"போன காரியம் முடிந்துவிட்டது. அவர்கூட இல்லை" என்றார் துரைசாமி.

"எழுந்திருந்து ஓடிப்போய்விட்டானா?" என்று மரகதம் கேட்டாள். கேசவன் எது வேண்டுமானாலும் செய்வான் என்பது அவளுக்குத் தெரியும்.

துரைசாமி தான் சென்றது முதல் நடந்த விஷயங் களைக் கூறியபோது, மரகதம் அவற்றை நம்பமுடியாமல் கேட்டு வந்தாள். அவர் எல்லாவற்றையும் கூறி முடித்த தும், "அவர்கள் உங்களிடம் சொல்லாமல் எப்படிச் செய்வது?" என்று கேட்டாள்.

"என்னிடம் எதற்காகச் சொல்வது, அவன் தம்பி ஒருத்தன்தான் இருக்கிறானே"

''அவன் உடனே அடக்கஞ் செய்வதற்கு ஒன்றும் ஆட்சேபம் சொல்லவில்லையா?''

''இல்லை அந்தக் கேசவன் அப்படித்தான் செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே கூறியிருக்கிறானும்.''

''அவனுக்குத் தான் இப்படி இறக்கப் போகிறோ மென்று முன்னமேயே தெரியுமா?''

இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை.

''அந்தத் தம்பி கோவிந்தன் இங்கே எத்தனை அமர்க்களப் படுத்தினான். அண்ணன் புதைக்கப் படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மாவா இருந்தான்?'' அவனுக்குத் துக்கம் தாங்காமல் பைத்தியம் பிடித்தவனைப் போலிருப்பதாக டாக்டர் சொன்னார். அவனுக்கு ஏதாவது பணம் கொடுத்து சரிப்படுத்தி விடலாமென்று சொன்னார். ஆனால் நான் அப்படி எல்லாம் ஒன்றும் செய்யப் போவதில்லை. என் கடமையைச் செய்யப் போகிறேன்'' என்றார்.

''கடமையா?''

''ஆமாம்! நான் யார் தெரியுமா?'' என்று துரைசாமி ஆவேசம் வந்தவர்போல் கேட்டார்.

மரகதம் பதிலளிக்கவில்லை ''சேத்துப்பட்டு செங்கல்வ ராயன் மகனுக்கும். எங்கள் குடும்பத்தில் யாரும் பொய் சொல்லி வழக்கமில்லை. தப்பு தண்டாவில் ஈடுபட்டது கிடையாது. என்னைப் பற்றி எல்லாம் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், தெரியுமா?''

நினைத்துக் கொண்டிருக்கிறது என்ன.? நீங்கள்தான் உண்மையிலேயே தங்கக் கம்பியாச்சே.. எத்தனையோ சங்கங்களுக்கு உங்களைத் தலைவராக பொறுக்கி எடுத்திருக்கிறார்கள். மந்திரிகள் எல்லாரும் உங்களுக்குச் சிநேகிதம்.''

"அவ்வளவுதானு? முக்கியமானதை மறந்துவிட்டாயே. நான் பல தடவைகளில் கௌரவ மாஜிஸ்டிரேட்டாகவு மிருந்திருக்கிறேனே."

' ஆமாம்!"

"அப்படிப்பட்ட நானே ஒரு குற்றத்தை மறைக்கலாமா?"

இதைக் கேட்டபோது மரகதத்துக்குத் திகீர் என்றது.

"அதுவும் ஒரு கொலைக் குற்றத்தை, அதுவும் திருட்டுத் தனமாக ஒரு உடலை அடக்கம் செய்ததை என் மனச் சாட்சி ஒரு நாளும் அதற்கிடங் கொடாது. ஆகையால் நான் இதைப் பற்றிப் போலீசுக்குத் தெரிவிக்கப் போகிறேன்." என்று துரைசாமி கூறினுர். கடைசி வாக்கியத்தின் வார்த்தைகளை அழுத்தந் திருத்தமாகச் சொன்ஞர்.

"என்ன சொல்லுகிருய்? என்று கேட்டார்.

"நீங்கள் சொல்வது நியாயம்தான்" என்ருள் மரகதம்.

"துரைசாமியின் மனைவி மரகதம் அப்படித்தான் சொல்வாள்?" என்று அவர் தம் மனைவியைப் புகழ்ந்தார்.

"இது விசாரணைக்கு வந்தால் என்ன ஆகும்?" என்று அவள் நாசுக்காக விசாரித்தாள்.

"சிறைவாசத் தண்டனை கிடைக்கும்" "ஆனுல், நீங்கள் முழுதும் பொறுப்பாளி இல்லையே. அவனை எல்லோருந்தானே அடித்தோம்? கோபதிதானே அவனை நன்ருக மார்பில் குத்தினுன்?"

"இருந்தாலும் நான் வீசி எறிந்த முக்காலி என்ற பெட்டி பலமாகப் பட்டதனுல்தான் மரணம் ஏற்பட்ட

தென்று மார்த்தாண்டம் கூறுகிறர். ஆகையால், முழுக் குற்றத்தையும் நானே ஏற்றுக் கொள்ளப் போகிறேன். தற்காப்புக்காகச் செய்த காரியமாதலால் மரண தண்டனை விதிக்கமாட்டார்கள். ஆனல் மூன்று வருஷச் சிறை வாசமாவது இருக்கும்.''

தன் கணவன் தான் சிறைப் படுவதைப் பற்றி இவ்வளவு நிதானமாகப் பேசி வந்தது மரகதத்தைப் பைத்தியமாகச் செய்துவிடும் போலிருந்தது. ஆனல் அவள் தன்னை அடக்கிக் கொண்டு தானும் நிதானமாகப் பேசி வந்தாள். அந்தச் சந்தர்ப்பத்தில் ஏதாவது ஆட்சேபம் கூறினல், துரைசாமி மறுகணம் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றுவிடக் கூடும் என்று பயந்தாள்.

''நீங்கள் சொல்வது நியாயமாகத்தான் படுகின்றது. ஆனல் கொஞ்சம் பொறுத்து பார்க்கலாமா'' என்றள்.

''எதற்காக?''

'ரேவதிக்குக் கல்யாணத்தை முடித்துவிட்டால் அப்புறம் எது நடந்தாலும் பாதகமில்லை.' அதற்கிடையே ஏதாவது நேர்ந்தால் அவளை யார் மணம் செய்துகொள்வார்கள்?''

''அந்தக் கோபதியோடுதான் சுற்றுகிறளே? அவன் கட்டிக் கொள்கிறன். அவனுக்கும் இதில் பொறுப்பு உண்டல்லவா?''

''கோபதியா? அப்படியானல்......''

''வசந்தன் என்கிறவனைப்பற்றிச் சொல்லுகிறயா?' அந்தப் பயலுக்கு அவள்மீது ஆசையிருந்தால் இத்தனை நாள் வந்திருக்க மாட்டானு? பெரிய உத்தியோகம் பண்ணிக் கிழிக்கிறன். இவனுக்கு லீவு அகப்படவில்லையாம்'' என்று துரைசாமி அருவருப்புடன் கூறினர்.

''எனக்கு என்னமோ கோபதியைப் பிடித்திருக்கிறது. அவன் வைர மாலையைத் திருடியதைப் பற்றி எனக்குத் தப்பாகவே தோன்றவில்லை!'' என்று மேலும்

தன் கணவன் கூறியதைக் கேட்டு மரகதம் ஆச்சரியப் பட்டாள். ஏனென்றால் அவள் மனத்திலும் அதேவித அபிப்பிராயம் தானிருந்தது.

''சரி, நேர்மையாக என்ன செய்யலாம் சொல்லுங் கள்'' என்றாள் மரகதம். துரைசாமி சிறிது யோசனை செய்த வண்ணமிருந்தார். அவரது கௌரவ மாஜிஸ் திரேட் துணைப் பகுதி தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியது. அவர் சொன்னார்:—

''இந்த விஷயம் எப்படியாவது வெளியே வந்தே தீரும். நான் என்னதான் நடந்ததை மறைத்தாலும் கேசவன் இறந்துபோனது என்னமோ உண்மை; அவன் உடல் ஒரு வீட்டிற்குப் பின்புறத் தோட்டத்திலிருப்ப தும் உண்மை. அவர்கள் இருட்டில் குழியில் மண்ணை வெட்டிப் போட்டுக் கொண்டிருந்த போது ஒரு சிறிய பாட்டரி விளக்கு வைத்துக் கொண்டிருந்தார்கள். தூங்கி எழுந்து யாராவது அதைப் பார்த்திருக்கலாம். அவர்கள் போலீசுக்கு மொட்டை மனு எழுதிப் போட லாம். இடத்தை தாங்கள் கிளறிப் பார்க்கலாம். நான் ஏறிச் சென்ற சைக்கிள் ரிக்ஷா வண்டிக்காரனுக்கு ஏதா வது சந்தேகம் தோன்றியிருக்கலாம்...

''போதும்! கேட்கக் கஷ்டமாயிருக்கிறது'' என்று மரகதம் கூறி அவர் மேலும் சொல்லாதிருக்க அவர் வாயைப் பொத்தினாள். ரேவதியுடன் பேச்சுக் கொடுத் துக் கல்யாணத்தைப் பற்றி முதலில் நிச்சயம் செய்து கொள்ளலாம்'' என்றாள்.

அப்போது ஒருக்களித்து வைக்கப் பட்டிருந்த அறைக் கதவு திறந்தது. ரேவதி உள்ளே நுழைந்தாள். ''எங்கே அப்பா போயிருந்தீர்கள்! எப்போது வந்தீர் கள்?'' என்று கேட்டாள். ஆனால் அவர் பதிலை எதிர் பார்க்காமலேயே ''தபாலில் இந்தக் கடிதம் வந்தது'' என்று ஒரு கார்டை அவரிடம் கொடுத்தாள்.

''யார் எழுதியிருக்கிறார்கள்?'' என்று மரகதம் கேட் டாள்.

"நான் பார்க்கவில்லை. வேலைக்காரன் இப்பொழுது தான் கொடுத்துவிட்டுப் போனான்!" என்றாள் ரேவதி. பிறகு "நீங்கள் ஏதோ மும்முரமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நான் அப்புறம் வருகிறேன்" என்று ரேவதி சிரித்துக்கொண்டே கூறியவண்ணம் அறையை விட்டுச் சென்று விட்டாள்.

கல்யாணத்தைப் பற்றித் தாங்கள் பேசிக்கொண்டிருந்தது அவள் காதில் விழுந்திருக்கக் கூடுமென்றும், அதனால் நாள் வெட்கப்பட்டுக் கொண்டு உடனே போய் விட்டாளென்றும் மரகதம் நினைத்தாள்.

மரகதம், கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்த தன் கணவனைக் கவனித்தாள். அவர் முகத்தில் பயம் தோன்றிற்று. பிறகு கார்டைப் பிடித்துக்கொண்டிருந்த அவர் கைகள் நடுங்கின. அந்தக் கடிதம் அவர் கைகளி னின்றும் நழுவி விழுந்தது. அவர் என்னமோ சொல்ல வாயெடுத்தார்; வார்த்தைகள் கிளம்பவில்லை.

"என்ன என்ன?" என்று பதறிக் கொண்டு கேட்டாள்.

"நீயே படித்துப் பார்!" என்றார் துரைசாமி. மரகதம் படித்தாள். அதில் எழுதப்பட்டிருந்தது:-

> திரு கேசவன் அவர்களுக்கு, சௌக்கியம் என்று நம்புகிறேன். தாங்கள் சென்ற வாரம் எழுதிய கடிதம் கிடைத்தது. தங்கள் வார்த்தையில் இனிமேல்தான் நம்பிக்கை வைக்கத் தயாராய் இல்லை.
>
> தாங்கள் ஒரு கம்பெனி ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லி அதற்காகப் பங்குகளுக்காக என்னிடம் பத்தாயிரம் வாங்கிக் கொண்டீர்கள். பிறகு அதைப் பற்றித் தகவல் இல்லை. நேரில் பார்த்துக் கேட்ட போது தப்பு சால்சாப்பு சொன்னீர்கள். நான் கம்பெனி ரிஜிஸ்திரார் ஆபீஸில் விசாரித்ததில் தாங்கள் கூறியது போன்ற கம்பெனி எதுவும் இல்லை.

அது சம்பந்தமான மனுக்கூட வரவில்லை என்றும் தெரியவருகிறது.

கம்பெனி என்று இருந்தால் கூட எனக்கு அதில் பங்குகள் தேவை இல்லை. மரியாதையாக என் பணத்தை இந்தக் கடிதம் கண்ட இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் திரும்பக் கொடுத்து விட வேண்டும். தவறினால் உடனே போலீசுக்குச் சென்று மோசடி செய்ததாகப் புகார் செய்வேன். இது சத்தியம்.

தங்களை எதிர்பார்த்து நான் நாளைக் காலை ஏழு மணி முதல் பன்னிரண்டு மணிவரை மேல் குறிப்பிட்டிருக்கும் ஹோட்டலில் இருப்பேன். தாங்கள் பணத்துடன் வரத்தவறினால் பன்னிரெண்டு ஐந்துக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் முன் புகார் மனு தாக்கல் செய்துகொண்டிருப்பேன்.

இப்படிக்கு,
நம்பீசன்.

கடிதத்தைப் பார்த்து முடித்த மரகதமும் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் இருந்தாள்.

துரைசாமி தம் தலையை இப்படியும் அப்படியுமாகச் சில முறை ஆட்டிவிட்டுக் கொண்டு தம் மனத்திலிருந்த பயத்தை உதறித் தள்ளினார். பிறகு எழுந்திருந்து அறையில் அங்கும் இங்குமாக உலவினார்.

"நீ அமுக்கிவிடலாம் என்றாயே! பார்த்தாயா?" என்றார்.

"இதற்கும், அதற்கும் என்ன சம்பந்தம்?"

"என்ன சம்பந்தமா அந்த நம்பீசன் போலீசில் புகார் செய்தால் உடனே அவர்கள் அவனைத் தேடிக்கொண்டு இங்கே வருவார்கள். விசாரணை நடக்கும். அவர்கள் மடக்கிக் கேள்வி கேட்பார்கள். எனக்கோ விளையாட்டுக்குக் கூடப் பொய் சொல்லிப் பழக்கமில்லை. நான் திண

டாடிப் போவேன். ஏதாவது முன்னுக்குப் பின் விரோதமாக உளறி வைப்பேன். கடைசியில் என் வாயாலே தான் மாட்டிக் கொள்வேன்.''

அவர் கூறியபடிதான் நடக்கும் என்று மரகதத்திற்குத் தெரியும். ''ஆமாம் அவருக்கு நம்ம விலாசம் எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டாள்.

''இவன்தான் எழுதியிருப்பான்.''

''இப்போது என்ன செய்கிறது?''

''நீ சொல்வதுபோல் குழந்தையின் கல்யாணம் முடியும்வரை விஷயம் வெளிவராதிருக்க வேண்டுமென்றால் ஒரே ஒரு வழிதானிருக்கிறது. நான் நாளைக்குப் போய் அந்த நம்பீசனைப் பார்த்துப் பேசிவிட்டு வருகிறேன். கேசவன் கொடுக்கச் சொன்னான் என்று பணத்தைக் கொடுத்துவிட்டு வருகிறேன்.''

மரகதம் தலையை அசைத்து அந்த ஏற்பாட்டிற்குத் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். ''அவனுக்கு வேண்டியது அவன் பங்கு வாங்கக் கொடுத்த பணம் திரும்பி வர வேண்டியதுதானே'' என்றாள்.

இதற்குமேல் வேறொன்றும் புதிதாகக் கிளம்பாதிருக்கும்படி கடவுள்தான் பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்றார் துரைசாமி.

அப்போது அவரைப் பார்க்கச் சில நண்பர்கள் வந்திருந்ததால், கேசவனைப் பற்றிய பேச்சோ அத்தோடு முடிந்தது.

அன்று மாலை ஆறு மணி இருக்கும். சென்னையில் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த பிரபல பீமண்ணா சர்க்கஸ் கொட்டகைக்குள் ஆட்டம் நடந்து கொண்டிருந்தது. சிங்கம் நெருப்புப் பந்தத்தில் பாய்வது, யானை மீது நரி சவாரி செய்வது முதலிய வேடிக்கைகள் நடைபெற்றன.

பிறகு சிங்கத்தை 100 வட்டத்தைச் சுற்றி நடந்து வரச் செய்தார்கள். அது கர்ஜித்துக்கொண்டே நடந்து

வந்தது. ஓரிடத்தில் நின்று கூட்டத்தினரைப் பார்த்து உறுமிற்று. அது சோபாவின் முன் நின்று சற்று பலமாகக் கர்ஜித்தது. அதில் அமர்ந்திருந்த யுவதி பயந்து பக்கத்திலிருந்த வாலிபனை அணைத்துக்கொண்டாள். சிங்கம் அப்பால் ஓடிவிட்டது.'' அது இங்கே இன்னும் கொஞ்ச நேரம் நின்று கொண்டிருக்காமல் போய்விட்டதே ரேவதி!'' என்றான் கோபதி. அவர்களிருவரும் தான் சோபாவில் உட்கார்ந்திருந்தனர்.

ரேவதி அவனை அணைத்துக்கொண்டிருந்த கைகளை எடுத்துவிட்டு வெட்கத்தினால் தலைகுனிந்து கொண்டிருந்தாள். பிறகு நீங்கள்தான் அதை இங்கே வந்து என்னைப் பயமுறுத்த ஏற்பாடு செய்தீர்கள்போலிருக்கிறது'' என்றாள்.

''நான் வேடிக்கைக்காகச் சொன்னேன். இதைவிட உன் காதல் இருக்கும்போது சிங்கத்தின் உதவி எனக்கு எதற்கு?'' என்றான் கோபதி.

அவர்களிருவரும் இந்தத் தோரணையில் தங்களுக்குள் மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பின் வரிசைகளிலிருந்த சிலர் சர்க்கஸ் வேடிக்கையைக் காட்டிலும் தாங்கள் பேசிப் பழகும் வேடிக்கைகளைக் கவனித்துப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களென்று அவர்களுக்குத் தெரியாது.

சர்க்கஸின் நட்சத்திர வித்தை ஆரம்பமாயிற்று. இரண்டு பபூன்கள் ஒரு மனிதனை ஒரு இரும்புப் பீப்பாய்க்குள் உட்கார வைத்தார்கள். அவனைச் சுற்றிலும் மரத்தூள், காகிதம் முதலியன போட்டுப் பார்சல் செய்வது போல் செய்தார்கள். பிறகு பீப்பாயை ஓர் ஓரமாக தலைகீழாகப் போட்டு வைத்தார்கள். இந்த வித்தை சர்க்கஸ் முடிவதற்கு முக்கால் மணிக்கு முன்னால் ஆரம்பமாயிற்று. பிறகு மற்ற வித்தைகள் நடந்துகொண்டிருந்தன. வேடிக்கை பார்ப்பவர்கள் பீப்பாய்க்குள்ளிருக்கும் மனிதன் என்ன ஆனானோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆட்டம் முடிவதற்குப் பத்து நிமிடம் முன்னால் இரண்டு பபூன்களும் பேசிக்கொண்டார்கள்.

''ஏண்டா'' அந்த ஆளைப் பார்சலில் அனுப்பினோமே?'' என்பான் ஒருவன்.

''சரியாகப் போய்ச் சேர்ந்தானே, போய்ப் பார்க்கலாம். போய்ப் பார்க்கலாம்'' என்று இருவரும் கை கோர்த்துப் பாடிக்கொண்டே போய்ப் பீப்பாயைத் திருப்பிப் போட்டுத் திறந்தார்கள். அதில் திணிக்கப் பட்டிருந்த மரத் தூள் முதலியவற்றை வெளியிலெடுத் தார்கள்.

இருவரும் உள்ளே எட்டிப் பார்த்தார்கள். கொட்டகையிலிருந்த எல்லோரும் தங்கள் தங்கள் தலையை நீட்டினர்.

ஒரு பபூன் முகத்தில் கலவரம் தோன்றிற்று. ''சொர்க்கத்திற்கு அவன் மட்டும் தனியாய்ப் போய் விட்டாண்டா. நம்மை விட்டுவிட்டு போய்விட் டாண்டா'' என்று கூறி அழத் தொடங்கினான். மற்றவனும் 'கோ' என்று அலறினான்.

மறுகணம் பீப்பாய்க்குள் சத்தம் ஏற்பட்டது. ''யாருடா தூக்கத்தைக் கலைக்கிறது?'' என்று கூறிக் கொண்டே உள்ளே இருந்த ஆள் எழுந்து நின்றான்.

கொட்டகையில் ஒரே கரகோஷம். ரேவதியும் கைகளைத் தட்டினாள்.

கோபதி லயித்திருப்பதைப் பார்த்து ''என்ன நல்ல வித்தை. கை தட்டாதிருக்கிறீர்களே?'' என்றாள்.

''உத்தரவுப்படி நடக்கிறேன்'' என்று கோபதி சிரித்துக்கொண்டே கூறி கைகளைத் தட்டினான். அப்போது கரகோஷம் ஓய்ந்திருந்தது.

''என்ன யோசனை செய்கிறீர்கள்?'' என்று ரேவதி கேட்டாள்.

''அப்புறம் சொல்கிறேன்'' என்றான் கோபதி.

*

25

"வித்தைகள் எல்லாம் மிகவும் நன்ருக இருந்தன" என்று கோபதி தான் அன்று பார்த்த சர்க்கஸைப்பற்றி அதன் மானேஜர் தாமோதரனிடம் புகழ்ந்து கூறிக் கொண்டிருந்தான். பகல் ஆட்டத்திற்கு வந்திருந்த அவன் ரேவதியுடன் தாமோதரனின் கூடார அறையில் பேசிக்கொண்டிருந்தான்.

"ஆனால் இந்தக் காலத்தில் இதையெல்லாம் யார் பார்க்க வருகிருர்கள்? இதையே படம் பிடித்து சினிமாக் கொட்டகையில் காண்பித்தால் அதைப் பார்ப்பதற்கு கூட்டம் கூட்டமாகப் போவார்கள்" என்று தாமோதரன் சற்று வருத்தத்துடன் கூறி விட்டு "உங்களுக்கு எதெது பிடித்திருந்தது?" என்று விசாரித்தார்.

"எல்லாமேதான்! பார் விளையாட்டுக்கள். டிரபிசியப் பாய்ச்சல் கச்சிதமாக இருந்தன. ஓரிடத்தில் ஒரு தவறுதல் கிடையாது. யானை, குதிரை, புலி, சிங்கம், கரடி, வித்தைகளெல்லாம் முதல் தரம். நான் எத்தனையோ சர்க்கஸ்கள் பார்த்திருக்கிறேன். அவற்றில் வித்தை செய்யும் மிருகங்கள் உயிரைவிட்டுக்கொண்டிருப்பது போல் அவ்வளவு பலகீனமாயிருக்கும். நீங்கள் நல்ல தீனிபோட்டு அவற்றைக் கொழுகொழு வென்று வைத்திருக்கிறீர்கள்.

இந்தப் புகழ்ச்சியைக் கேட்டுத் தாமோதரன் மகிழ்ச்சி அடைந்தார்.

"எனக்கு மிகவும் பிடித்த வித்தை, பெட்டிக்குள் மனிதன் ஒரு மணி நேரம் அடைபட்டுக்கொண்டிருந்தது தான்! அது எப்படி முடிகிறது?" என்று கோபதி கேட்டான்.

"தாங்கள் யார் என்று தெரியவில்லை?" என்று தாமோதரன் அப்போதுதான் அவனைப்பற்றி நாசுக்காக விசாரித்தார்.

"நான் ஒரு எழுத்தாளன். 'இந்தியாவில் சர்க்கஸ் வளர்ந்த சரித்திரம்' என்று ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறேன்" என்று கோபதி பதிலளித்ததைக் கேட்டு ரேவதி ஆச்சரியப்பட்டாள்.

"இவர்?" என்று ரேவதியைக் காண்பித்துக் கேட்டார் தாமோதரன்.

"என் மனைவி!" என்றான் கோபதி. இதைக்கேட்ட ரேவதி தன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள். வெட்கத்தினால் அப்படிச் செய்கிறாளென்று அவர் நினைத்தார். அவள் கோபதி கூறியதைக் கேட்டு கோபமுற்றிருந்தாளென்று அவருக்குத் தெரியாது.

"அப்படியா, சந்தோஷம்," என்றார் தாமோதரன்.

"பெட்டிக்குள் இருந்தவர் பெயர் என்ன?" என்று கோபதி கேட்டான்.

"அவர் பெயர் சங்குன்னி; நாங்கள் ரிஷி என்று கூப்பிடுவது வழக்கம்.

"ரொம்ப நாளாக உங்களிடம் இருக்கிறாரா?"

"இல்லை! வந்து ஒரு வருஷமாயிற்று. இவருக்கு முன்னால் இந்திரஜித் என்று ஒரு பஞ்சாபி இருந்தார்; அதற்கும் முன்பு பரசுராமன் என்று ஒருத்தர் மணிக்கணக்காக அடைபட்டுக் கிடப்பார்."

"அவர்களெல்லோரும் ஏன் போய்விட்டார்கள்?"

இந்திரஜித் வட இந்தியாவில் வேறொரு சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்திருக்கிறார். பரசுராமனும் இன்னும் சிலரும் இங்கே சரியாக நடந்துகொள்ளவில்லை. நான் அவர்களை அனுப்பிவிடும்படி ஆயிற்று!

"உங்கள் ரிஷியின் படம் இருக்கிறதா?"

கொடுக்கிறேன் என்று கூறி ஒரு சிறிய பீரோவைத் திறந்து ஒரு போட்டோ ஆல்பமும், சர்க்கஸ் விளம்பரங்

கள் கோத்துவைக்கப்பட்டிருந்த 'பைல்' ஒன்றும் எடுத்து வந்தார்.

தாமோதரன் ரிஷியின் படத்தைத் தேடிக்கொண்டு இருந்தபோது கோபதி விளம்பர பைலே புரட்டிப்பார்க்க லானுன். "ரேவதி! முன்னே வித்தைகள் காண்பித்தவர் களின் படங்கள் இருக்கிறது பார்! என்று அவளிடம் கூறி ஞன்.

அவள் கோபம் தணிந்து இப்போது முன்போலிருந் தாள்.

இந்திரஜித்தின் படம் விளம்பரத்திலிருந்தது. அவர் குட்டையாய் மிகவும் பருமஞக இருந்தார். கோபதி பரசுராமன் படத்தை உற்று நோக்கியவண்ணம் 'ரேவதி இவர் மீசை வைத்துக்கொண்டிருக்கிருர் பார்த்தாயா?" என்று சற்று அழுத்தந்திருத்தமாகக் கூறிஞன்.

ரேவதி பைலேத் தன் கையில் வாங்கிப் பார்த்தாள்.

தாமோதரனுக்கு ரிஷியின் படம் கிடைத்துவிட்டது. அதை எடுத்துக் கோபதியினிடம் காண்பித்தார். இது ஆல்பத்திற்கு வேண்டும். உங்களுக்கு வேறு பிரதி கொடுக்கிறேன்" என்ருர்.

"அப்படியே செய்யுங்கள்! மற்ற இரண்டுபேரின் பட மும் கிடைக்குமா?

"ஆபீஸில் இருக்கும். தேடி எடுத்துக்கொடுக்கச் சொல்லுகிறேன்" என்ருர்.

கோபதி ரேவதியின் கையிலிருந்த துண்டு விளம்பர 'பைலே' வாங்கி, "பரசுராமன் மீசை வைத்துக்கொண் டிருக்கிருரே! அத்துடன் பெட்டிக்குள் அடைக்கப்பட் டால் அது வேதனையாக இருக்காதா? என்று கேட் டான்.

"இராது. பரசுராமன் பெட்டியிலிருந்து வெளிவந்த தும் ஒரு தரம் தடவிவிட்டு முறுக்கிட்டுக்கொள்வார். அதைப்பார்த்து ஜனங்கள் பலத்த கரகோஷம் செய்வார் கள்."

"நான் கேட்பதைத் தவருக நினைத்துக்கொள்ளா தீர்கள். இதில் ஒன்றும் இரகசியம் இல்லையே?"

தாமோதரன் வாய்விட்டுச் சிரித்து "நீங்கள்தான் எல்லாம் பார்த்துக்கொண்டிருந்தீர்களே. பயூன்கள் பெட்டியின் உள்பக்கத்தை எல்லோருக்கும் நன்ருகக் காண்பித்தார்களே. மூச்சுவிடும்படியாக ஏதாவது ஓட்டை இருக்குமா? அந்த ஓட்டையிலிருந்து மூக்குக்கு குழாய் மாதிரி ஏதாவது போகுமா என்றெல்லாம் நீங் கள் சந்தேகப்படுகிறீர்கள். அப்படி ஏதாவது ஏற்பாடு செய்திருந்தாலும்கூட சுலபமாக மூச்சுவிட முடியாது. இந்த வித்தை செய்பவர்கள் நல்ல பிராணுயாமப் பழக் கக்காரர்கள். மூன்று, நான்கு மணிநேரம்கூட அவர் களால் மூச்சை அடக்கிவைத்திருக்க முடியும். அப்போது அவர்களைப் பார்த்தால் உயிரற்றவர்கள் போலவே காணப்படுவார்கள்.

தாமோதரன் கூறியதை இருவரும் கேட்டு வந்தார் கள். அப்போது சர்க்கஸ் இரண்டாவது கட்ட ஆரம்பத் திற்கான முதல்மணி அடிக்கும் சப்தம் கேட்டது.

"நான் போகவேண்டும். ஒருநாள் காலை சாவகாச மாக பேசலாம்" என்று கூறிக்கொண்டே கிளம்பிவிட் டார்.

"அடுத்த வாரம் வருகிறேன். உங்கள் போட்டோ ஒன்றும் தேவை" என்றுன் கோபதி.

"என்னுடையது கூடவா?" என்று தாமோதரம் மகிழ்ச்சியுடன் கேட்டுக்கொண்டே வெளியில் சென்று விட்டார். "பைல்", 'ஆல்பம்' ஒன்றையும் எடுத்து வைக்கக்கூட அவருக்கு அவகாசமில்லை.

"சர்க்கஸைப்பற்றிய சரித்திரம் எழுத உபயோகப் படும் என்று கோபதி கூறியவண்ணம் விளம்பர 'பைலில்' இருந்து சிலவற்றைக் கிழித்து எடுத்துக்கொண்டான். பிறகு இருவரும் கூடார அறையைவிட்டு வெளியேறி னர்.

பிறகு இருவரும் பக்கத்திலிருந்த பூந்தோட்டத்திற்குச் சென்று புல்தரையில் உட்கார்ந்தனர்.

''ரேவதி!'' என்றான் கோபதி.

''நான் உங்களுடன் பேசப்போவதில்லை.''

''அதுதான் இப்போது பேசிவிட்டாயே! என்மேல் கோபமா?''

''ஆமாம். பின்னே நீங்கள் என்னை...''

''மனைவி என்று சொன்னேன். வருங்கால மனைவி என்று சொல்லியிருக்கவேண்டும். தவறு மன்னிக்க வேண்டும்.''

''அப்படி எல்லாம் ஒன்றுமே இப்போது சொல்லக் கூடாது.''

''ஏன் அப்பா அம்மா சம்மதம் பெறவில்லை என்றா? இல்லை டில்லியிலிருந்து அந்த வசந்தன் என்கிற பயல் வருவான் என்றா?''

இதைக் கேட்டு ரேவதி சிரித்தாள். ''அந்த விளம் பரங்களை எடுங்கள். என் மனசில் ஒன்று பட்டது. அவற்றை இன்னொரு தரம் பார்த்தால் அது சரிதானா என்று நிச்சயம் செய்துகொள்ளலாம்.''

''உன் மனசில் என்னபட்டிருக்கும் என்று எனக்குத் தெரியும். அதுசரிதான்'' இதைக் கேட்டதும் ரேவதி திகைத்தாள்.

''நாம் அதைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாம். வீட்டில் ஏதாவது விசேஷம் உண்டா?

''அப்பா, விடியற்காலம் எங்கேயோ வெளியில் போய்விட்டு வந்திருக்கிறார்போல் இருக்கிறது. ஆனால் அப்பா, அம்மா இரண்டுபேரும் என்னிடம் ஒன்றுமே சொல்லமாட்டேன் என்கிறார்கள். எதையோ மூடி மூடி மறைக்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரியும்! அவர்கள்

இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்ததெல்லாம் என் காதில் விழுந்தது.''

''ரகசியமானால் எனக்குச் சொல்லவேண்டாம். கேசவன் கடைசியில் இறந்துபோய்விட்டான் என்பதைப் பற்றி நீ எனக்குத் தெரிவிக்கவேண்டியதில்லை. பிறகு அவனைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள் என்பதையும் நீ சொல்லி நான் தெரிந்துகொள்ளவேண்டியதில்லை.

''உங்களுக்கு யார் சொன்னார்கள்?'' என்று ரேவதி ஆச்சரியத்துடன் கேட்டாள்.''

''ஏன், நானேதான் இருந்துகொண்டு அவர்கள் காரியங்களைக் கவனித்தேன்.

''அதற்காகத்தான் நேற்று இராத்திரி அவர்கள் போன உடனேயே வண்டியில் சென்றீர்களா!'' என்று கேட்டாள்.

''ஆமாம்!''

''மேற்கொண்டு என்ன நடக்கும்?''

''கேசவன் தம்பி பணம் கேட்பான். அல்லது அதற்கு முன் கல்யாணப் பேச்சு எடுப்பான்.''

''ரேவதி தன் காதுகளைப் பொத்திக்கொண்டாள். அவர்களிடம் இருந்து தப்ப வழியில்லை போலிருக்கிறது. அவன் செத்துத் தொலைந்து போய்க்கூட ஏதாவது புதிதாகக் கிளம்பிக்கொண்டிருக்கிறதே. நம்பீசன் என்று ஒருத்தன் புறப்பட்டிருக்கிறான்'' என்று கவலையுடன் கூறினாள்.

''அது யாரு? என்னிடம் சொல்லவே இல்லையே!''

''நானும் அவனைப் பார்த்ததில்லை. அவனிடமிருந்து கேசவன் பெயருக்கு வீட்டிற்கு ஒரு கார்டு கடிதம் வந்தது. அதை நானே அப்பாவினிடம் கொண்டுபோய்க் கொடுத்தேன். ஆனால் அதற்கு முன்னால் ஒரு நகல் எடுத்

துக்கொண்டேன். உங்களிடம் காண்பிப்பதற்காகத் தான்'' என்று ரேவதி தன் கைப்பையில் வைத்திருந்த அந்த நகலை எடுத்துக் கொடுத்தாள்.

கோபதி அதை இரண்டுமுறை கவனமாகப் படித்து விட்டுச் சிறிது யோசனையில் ஆழ்ந்தான்.

''அப்பா! இந்த நம்பீசனுக்கு கேசவன் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்துவிடப் போகிறார் இல்லையா?'' என்று கேட்டான்.

''ஆமாம். உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''அவர் சுபாவம் எனக்குத் தெரியாதா? நம்பீசன் எழுதி இருக்கிறபடி போலீசில் புகார் செய்தால், அவர்கள் அவனைத் தேடிக்கொண்டு வீட்டிற்கு வந்தால் என்ன செய்கிறது என்று பயப்பட்டுக்கொண்டிருப்பார்.''

''நடுநடுங்கிக்கொண்டிருக்கிறார்'' என்று ரேவதி கூறியபோது அவள் கண்களில் நீர் மல்கிற்று.

கோபதி தன் கைக்குட்டையால் அவள் கண்களைத் துடைத்து விட்டுக்கொண்டே ''நீ கொஞ்சம் பொறுத்துக் கொண்டிரு, அவருக்கு இதைப்பற்றிய கவலையே இல்லாமல் செய்துவிடுகிறேன்!'' என்று தேறுதல் கூறினான்.

பிறகு அவர்களிருவரும் வீடு திரும்பினார்கள்.

மறுநாள் காலை பத்து மணிக்கு நம்பீசன் தங்கியிருந்த அறைக்குள் துரைசாமி நுழைந்தார்.

''நீங்கள்தானே நம்பீசன்'' என்பது என்று விசாரித்தார்.

''ஆமாம் உட்காருங்கள். தாங்கள் யாரோ?'' என்று அவர் கேட்டார்.

''நான் துரைசாமி. கேசவனுக்குச் சிநேகிதம்.'' இதைக் கேட்டதும் நம்பீசன் வெகுண்டெழுந்தார்.

அவர் துரைசாமியை அருவருப்புடன் பார்த்துவிட்டு "அந்த அயோக்கியனுக்குச் சிநேகிதமா?" என்று கேட்டார்.

நம்பீசன் தன்னையும் ஓர் அயோக்கியன் என்று சொல்லாமல் சொல்வதுபோல் துரைசாமிக்குத் தோன்றிற்று.

"சிநேகிதமென்றால் உண்மையான சிநேகிதமில்லை. நடுவில் ஒரு எதிர்பாராத சந்தர்ப்பத்தினால் அவருடன் பழகநேரிட்டது" என்று துரைசாமி சமாதானம் கூறினார்.

"அப்படிச் சொல்லுங்கள்!" என்று நம்பீசன் கூறிவிட்டு மறுபடியும் நாற்காலியில் அமர்ந்தார். "தாங்கள் என்ன விஷயமாக வந்தீர்கள்? நான் இங்கு தங்கியிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

"தாங்கள் கேசவனுக்கு எழுதிய கடிதத்தை நான் படிக்க நேர்ந்தது."

"அவன் அதை உங்களிடம் காண்பித்தானா?"

"இல்லை. அவன் ஊரில் இல்லை."

"எங்கே ஓடிவிட்டான்!"

"காசிக்குப் போவதாகச் சொல்லிவிட்டுச் சென்றான்."

இதைக் கேட்டு நம்பீசன் விழுந்துவிழுந்து சிரித்தார். "காலிப்பயலுக்கு கங்கா ஸ்நானம்" என்று பல்லைக் கடித்துக்கொண்டு கூறினார்.

"நான் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்த விஷயங்களைப் படித்துவிட்டேன். அதற்காக மன்னிக்கணும். அந்த விஷயம் சம்பந்தமாகத்தான் பேசவந்தேன்" என்றார் துரைசாமி.

"எதைப்பற்றி?"

"ஏதோ பணம் பாக்கி என்று குறிப்பிட்டிருந்தீர்களே. அதைக் கொடுத்துவிட்டுப் போகலாமென்றுதான்."

"என்னது! கேசவன் பணத்தை உங்களுக்கு அனுப்பியிருக்கிருனு?"

"இல்லை. அவனுக்காக நான் கொடுக்கப்போகிறேன்!"

நம்பீசன், துரைசாமியின் முகத்தை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

"நீங்கள் எதற்காகக் கொடுக்கிறது?" என்று கேட்டார்.

"காரணமாகத்தான்... ஒரு மாதத்திற்கு முந்தி கேசவன் எனக்கு ஒரு பெரிய உதவி செய்தார்."

"கேசவனு? உதவி செய்தானு? உண்மையாகவா?"

"ஆமாம்! ஒரு குளத்தில் தண்ணீரில் மூழ்கிப்போக இருந்த என் மனைவியையும், பெண்ணையும் காப்பாற்றினுர்."

"நம்ப முடியவில்லையே?"

"அவர்கள் அவரால்தான் இன்று உயிரோடிருக்கிருர்கள். அதற்காக நான் அவருக்குப் பெரிதும் கடமைபட்டிருக்கிறேன். அந்த நன்றிக் கடனைத் தீர்க்க இப்போது எனக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

"இது கதைபோல் இருக்கிறது" என்று நம்பீசன் கூறிவிட்டுத் தன் தலையை அசைத்தார். "உங்களுக்கு அவன் விஷயத்தில் ஏற்பட்டுள்ள சிரத்தை சரிதான். ஆனுல் அதற்காக இப்படி எனக்குப் பணம் கொடுக்க முயல்வது பயித்தியக்காரத்தனம். இப்படிச் சொல்வதற்கு மன்னிக்கவும். நீங்கள் அந்தக் கடிதத்தை முழுதும் படித்துப் பார்த்ததாகச் சொல்கிறீர்கள். அவனைப் பற்றி என்னுடைய அபிப்பிராயத்தைப் பச்சையாகத்

தெரிவித்திருந்தேனே. அவன் ஒரு முதல்தரப் போக்கிரி.''

''போக்கிரி என்பதில் சந்தேகமில்லை. ஆகையினால் தான் அவன் தொடர்பே இனிமேல் வேண்டாமென்று அந்த நன்றிக்குப் பதில் நன்றி செய்துவிடத் தீர்மானித்திருக்கிறேன். என்றென்றைக்கும் ஓர் அயோக்கியனுக்குக் கடமைப்பட்டிருக்க நான் விரும்பவில்லை.''

''நீங்கள் நல்ல மனிதர். ஆனால் அந்தக் கயவன் உங்கள் இரக்கத்திற்குப் பாத்திரமானவனல்ல. அவன் என்னிடம் மிகவும் மோசமாய் நடந்துகொண்டான்.''

''அவனை உங்களுக்கு எப்படிப் பழக்கம்?''

''சொல்லப்போனால் கிட்டத்தட்ட எனக்கும் அவன் ஒரு நன்மை செய்தான்; 'ரயில் விபத்தில் தண்ணீரில் மூழ்கியவர்கள் நிதி ஒன்று ஆரம்பித்தேன். அதற்கு ஆயிரம் ரூபாய் அனுப்பினான். அதிலிருந்து பழக்கம் ஏற்பட்டது. அவன் பெரிய செல்வந்தன், கனவான் என்று எண்ணும்படி நடந்துகொண்டான்....!''

''அப்படித்தான் என்னிடமும் முதலில் நடந்துகொண்டான்.''

''அப்படி நடிப்பது அவனுக்குத் தொழில் போலும். பிறகு ஒரு சமயம் அவன் தான் ஒரு கம்பெனி ஆரம்பிக்கப்போவதாகவும் அதற்கு பங்குதாரராகச் சேரும்படியும் கேட்டான். நூறு ரூபாய் பங்குகள் நூறு எடுத்துக் கொள்ளும்படி கேட்டான். நான் ஒப்புக்கொண்டு உடனேயே பணத்தைக் கொடுத்துவிட்டேன்.''

''எத்தனை நாளாகியிருக்கும்?''

''இரண்டு மாதமிருக்கும். நான் செய்தது முட்டாள் தனம். அதிகம் பழக்கமில்லை. அவனை நம்பி பெரிய தொகையை உடனே கொடுத்துவிட்டிருக்கக்கூடாது தான். ஆனால் அவன் என்னை நம்பும்படி செய்துவிட்டான். அவன் இருநூறு பங்குகள் எடுத்துக்கொள்ளச் சொன்னாலும் அப்படியே செய்திருப்பேன்.''

"பிறகு?"

"இரண்டு கடிதங்கள் எழுதினுன். சீக்கிரத்தில் பங்குப் பத்திரங்களை அனுப்புவதாகக் குறிப்பிட்டிருந்தான். அப்புறம் கடிதமே இல்லை. நான் அவனைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினேன். இது அவனுக்குத் தெரிய வந்திருக்குமோ என்னவோ மூன்ருவது கடிதம் ஒன்று வந்தது. கம்பெனி ஆரம்பிப்பதற்கு சர்க்காரிடமிருந்து அனுமதி வரவில்லை என்றும் தான் டில்லிக்குப் போய்விட்டு வந்து நேரில் சந்திப்பதாகவும் எழுதியிருந்தான்."

"ஒத்திபோட்டுக்கொண்டே போனுல், அதற்குள் ஏதாவது பேத்து, மாத்து செய்யலாமென்றிருக்கும்."

"அப்படித்தான், ஆனுல் நான் இனி சும்மா இருக்கப் போவதில்லை. அதற்காகத்தான் கடைசி முறையாக அவனை எச்சரித்துக் கடிதம் எழுதினேன். அதைத்தான் நீங்கள் பார்க்க நேர்ந்தது."

"அவன் எப்படியாவது தொலைந்துபோகிருன். அவனுல் நீங்கள் நஷ்டமடையவேண்டாம்."

"அவன் வடிகட்டின அயோக்கியன்."

"அவனை நாம் நல்லவனுக்கிவிட முடியாது. அவன் என் வீட்டில் தங்கியிருந்தபோது தங்கள் பெயரைப் பிரஸ்தாபித்தது இப்போறு ஞாபகம் வருகிறது. தயவு செய்து அவன் சார்பில் நான் கொடுப்பதைப் பெற்றுக் கொள்ளுங்கள்."

"எனக்கு என்னமோ பணம் அவசரமாகத் தேவை தான். ஆனுல் உங்களிடமிருந்து வாங்கிக் கொள்ளத் தயக்கமாய் இருக்கிறது. அவனை..."

"தண்டனைக்குள்ளாக்க வேண்டும் என்று துடிக்கிறீர்கள். எனக்குக்கூடத்தான் அப்படித் தோன்றுகிறது. ஆனுல் கடமை என்று ஒன்றிருக்கிறதே, நன்றியை மறக்கலாமா?

''கூடாதுதான். ஒன்று கேட்கிறேன். இத்தனை பெரிய தொகை கொடுப்பதில் தங்களுக்கு அதிக கஷ்ட மாய் இருக்குமே?''

''எனக்கு இது ஒரு பிரமாதமான தொகை அல்ல. நீங்கள் தயவு செய்து இதைப் பெற்றுக்கொண்டால் எனக்குப் பெரிய உதவி செய்தவராவீர்கள்.''

''சரி, கொடுங்கள்?'' என்று நம்பீசன் அரை மனத் துடன் கூறினார்.

துரைசாமி தாம் தயாராக எழுதி வந்திருந்த செக்கை நம்பீசனிடம் கொடுத்தார். அவர் அதைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே கையில் வாங்கி னார். பிறகு அதை அலட்சியமாக அப்பால் போட்டார்.

''என் மனத்திலிருந்து ஒரு பெரிய பாரம் நீங்கிவிட் டது. இனிமேல் நிம்மதியாகத் தூங்குவேன்'' என்று துரைசாமி கூறினார்.

நம்பீசன் எழுந்திருந்து, துரைசாமியின் கைகளைக் குலுக்கினார். ''இனிமேல் இதுமாதிரி ஆட்களுக்கு உதவி செய்யாதீர்கள். இவன் என் மாதிரி எத்தனை பேரிடம் பணம் வாங்கி இருக்கிறானோ'' என்று சொன்னபோது துரைசாமிக்குத் திக்கென்றது.

அவர் நம்பீசனிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பி னார். அவர் தள்ளாடிய வண்ணம் வாசற்படியண்டை வந்தபோது கோபதி உள்ளே நுழைந்தான்.

''யாரு, மாமாவா?'' என்று கேட்டான்.

''கோபதியா? எங்கே வந்தாய்?'' என்றார்.

''நம்பீசனும் நானும் கூடப் படித்தவர்கள்! அவ ருடன் பேசிவிட்டு வருகிறேன்! நீங்கள் போங்கள்!'' என்று அவரை வழி அனுப்பினான்!

அவர் சென்ற பிறகு நம்பீசன் அறைக்குள் அவரும், கோபதியும் ஒருவரையொருவர் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

26

நம்பீசனுக்குக் கேசவன் கொடுக்க வேண்டியிருந்த பணத்தைக் கொடுத்துவிட்டுக் கிளம்பிய பிறகு, துரை சாமியின் மனத்திலிருந்த பெரிய பாரமும், பீதியும் இறங்கிவிட்டது. அவன் சம்பந்தமாக உடனடியாகப் போலீஸ் விசாரணை ஒன்றும் கிளம்பாது என்ற நம்பிக்கை அவருக்கு.

தாம் நம்பீசனைச் சந்தித்து, அவரிடம் சாமர்த்திய மாகப் பேசி அவரை வற்புறுத்தி பத்தாயிரம் ரூபாய் செக்கைப் பெற்றுக்கொள்ளச் செய்துவிட்டதைப் பற்றி அவர் தமது மனைவியிடம் பெருமையாகக் கூறிக்கொண் டார். அந்த அம்மாளும் தான் மகாசாது என்று மதித் திருந்த தன் கணவன் இவ்வளவு திறமையுள்ளவரா என்று வியந்தாள். ஆபத்து ஏற்படும்போது மனித னிடம் மறைந்து கிடக்கும் சக்திகள் வெளியாகின்றன என்று எண்ணினாள். அந்த நிமிடத்திலிருந்து கேசவ னின்று விடுபட்டதாக அவள் உணர்ந்தாள். இருந்தா லும் இப்படிப் பதினாயிரக் கணக்கில் பணம் செலவா கிறதே என்று சிறிது வருத்தம் தோன்றாமலில்லை. அவள் ஒரு பெண்ணல்லவா? தங்களுக்கு ஏராளமான சொத் திருக்கிறது. இந்தத் தொகை ஒன்றும் பிரமாதமில்லை என்று எண்ணித் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

கேசவன் மரணமடைந்தது சம்பந்தமாக இன்னும் சரிக்கட்ட வேண்டியவன் அவன் தம்பி கோவிந்தன் தான். அவனை எப்படிச் சரிக்கட்டுவது என்பதைப்பற்றி துரைசாமி மரகதத்துடன் கலந்தாலோசிக்கலானார். கூடியவரை அவன் பயமுறுத்தல்களுக்கிணங்கிப் பணம் கொடுக்காதிருப்பது என்ற முடிவுக்கு வந்தார்கள். ஏனென்றால், கேசவனை மண்ணுக்குக் கீழ் அடக்கஞ் செய்ததில் அவனும் நேரடியாகச சம்பந்தப்பட்டிருப்ப தால் அதை எடுத்துக் காட்டிப் பதிலுக்குப் பயமுறுத்திப் பார்க்கலாம் என்பது.

தம் மனைவியினிடம் இப்படித் தைரியமாகப் பேசிக்கொண்டிருந்தவர், வேலைக்காரன் வந்து ''தபால்காரன் வந்து காத்துக்கொண்டிருக்கிறான். ரிஜிஸ்தர் வந்திருக்கிறது'' என்று கூறியதைக் கேட்டதும் திடுக்கிட்டார். நம்பீசன் மர்திரி இன்னொரு ஈசன் கிளம்பியிருக்கிறானோ என்ற பயம் அவருக்கு. கேசவன்தான் புதுக் கம்பெனி ஆரம்பிப்பதாகப் பலரை ஏமாற்றிப் பணம் வாங்கிக் கொண்டிருக்கக்கூடுமல்லவா? அத்தனை பங்குதாரர்களுக்கும் தான் லட்சக்கணக்கில் கொடுத்தாகவேண்டிய நிலையைக் கற்பனை செய்துகொண்டு தவித்தார். ஆனால், தபாலில் வந்திருந்தது, ஒரு காலெண்டர்.

துரைசாமி ஒரு பெருமூச்சு விட்டார். இருந்தாலும் கேசவனால் ஏமாற்றப்பட்டவர்களிடமிருந்து கடிதங்கள் வரக்கூடும் என்று ஒரு புதுப் பயம் பிடித்துக்கொண்டு விட்டது.

அவர் அந்தப் பய உணர்ச்சியினின்று தம்மை விடுவித்துக் கொள்வதற்காகவும் ஒரு மாறுதலுக்காகவும் அன்றைய தினசரிப் பத்திரிகையை எடுத்துப் புரட்டலானார். அவர் செய்திகளை மேலெழுந்தவாரியாகப் படித்துக்கொண்டு போனபோது 'மேற்கு மாம்பலத்தில் புதிய பள்ளிக்கூடம்' என்ற தலைப்பைப் பார்த்ததும் அதைப்பற்றிய செய்தியைப் படிக்கவேண்டுமென்று தோன்றிற்று. தான் முந்திய தினம் விடியற்காலைதான் அந்த மேற்கு மாம்பலத்திற்குச் சென்று வந்திருந்ததாலும் அவரது வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய ஒரு பயங்கர அடையாளம் அங்கே மறைத்து வைக்கப்பட்டிருப்பதாலும் அந்த ஊரின் பெயர் அவர் மனத்தில் ஆழப் பதிந்திருந்தது.

துரைசாமி செய்தியைப் படிக்கலானார். அவர் தலை சுற்றிற்று. அவர் கைகள் நடுக்கமெடுக்கவே, பத்திரிகை கீழே விழுந்தது. மரகதம் பதறிப்போய் அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு என்ன என்று கேட்டாள். அவர் 'அதைப் படித்துப் பார்!'' என்று அந்தச் செய்தியைக் காண்பித்தார். அது வருமாறு: